கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி

சி. கோவிந்தராசன்
சி. கோ. தெய்வநாயகம்

பதிப்புத்துறை
மதுரை காமராசர்
பல்கலைக் கழகம்

கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி

சி. கோவிந்தராசன்

சி. கோ. தெய்வநாயகம்

பதிப்புத் துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

© பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை - 625 021

Publications Division,
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

விலை ரூ. 29-00

பதிப்பு எண் : 78

பதிப்பு விவரங்கள் :

1) ஆசிரியர்கள்	:	திரு. சி. கோவிந்தராசன், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம். திரு. சி. கோ. தெய்வநாயகம்.
2) தலைப்பு	:	கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி.
3) பதிப்பு		
அ) இடம்	:	மதுரை காமராசர் பல்கலைக் கழகம் *Madurai Kamaraj University, Madurai - 625 021.*
ஆ) பதிப்பித்தோர்	:	பதிப்புத்துறை (*Publications Division*) *Madvrai Kamaraj University, Madurai.*
இ) ஆண்டு	:	1984 (முதற் பதிப்பு)
4) பக்கம்	:	12+384
5) பொருள்	:	தொல்லியல்
6) அச்சும் அமைப்பும்	:	அருட்பா அச்சகம், மதுரை - 10.

பதிப்புரை

'கரந்தைச் செப்பேடுகள்' சிறந்த வரலாற்றுக் கருவூலங்களாகும். முதல் இராசேந்திர சோழன் காலத்தில் வெளியிடப் பெற்ற இது 57 செப்பேடுகள் கொண்ட ஒரே தொகுதியாம். பிறிதொரு சிறு முகப்பு வளையம் காணப்படினும், அதிற்பொருத்தியிருந்த செப்பேடுகள் காணப் பட்டில. இச் செப்பேடுகளின் சிறப்பை இந்நூல் கீழ்வருமாறு விளக்கு கிறது :

> ''ஏழு ஏடுகளைக் கொண்ட அன்பிற் செப்பேடுகளையும் 21 ஏடுகளைக் கொண்ட ஆனைமங்கலச் செப்பேடுகளையும் 31 ஏடு களைக் கொண்ட திருவாலங்காட்டுச் செப் பேடுகளையும் 7 ஏடுகளைக் கொண்ட சாராலச் செப்பேடுகளையும் 3 ஏடுகளைக் கொண்ட சிறிய லெய்டன் செப்பேடுகளையும் ஏடுகளின் எண்ணிக்கையாலும் நிறையாலும் அளவாலும் விஞ்சி மாபெருந் தொகுதியாக விளங்குவது இக் கரந்தைச் செப்பேடுகளே யாகும்.'' (ப.7)

இடைக்காலச் சோழராட்சி தமிழகத்தின் பொற்காலமாகும். கங்கையும் கடாரமும் கீழ்த்திசை நாடுகளும் தமிழகச் செல்வாக்கில் தழைத்த காலம் அது. முதலாம் இராசராசனும் முதலாம் இராசேந் திரனும் சங்ககாலப் பெருமையையும் விஞ்சி உயர்ந்தனர். ஆனால் அக் கால கட்டத்தில்தான் வடமொழிச் செல்வாக்கு இங்கே மேலும் வேரூன்றியது. பல்லவர்கள் தொட்டதை இவர்கள் தொடர்ந்தனர்; வடமொழியறிந்த பார்ப்பனர்கள் குடியேற்றப் பெற்றனர். சிறிது காலம்

முன்பு ஆங்கிலத்திற்கும், அதற்குப்பின்பு இந்திக்கும் கிடைத்து வந்துள்ள—வருகின்ற அரசியற்செல்வாக்கு, அன்று வடமொழிக்குக் கிடைத்தது. எனினும் இச்சோழப் பேரரசர்கள் தமிழை அறவே மறந்துவிடவில்லை; அன்றைய மக்களும் தமிழை மறக்கவில்லை. இச் செப்பேடுகளை வரன்முறையாகக் கற்றால், தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தெள்ளிதின் உணரலாம்.

இச் செப்பேடு மூன்று பகுதிகளாலானது. கோப்பு வளையத்தின் வட்டமான முகப்பிலேயே கிரந்த எழுத்தாலான வடமொழிச் சுலோகம் பொறிக்கப் பெற்றுள்ளது. முதல் பகுதி 3 ஏடுகள் - 6பக்கங்கள்-78 வடமொழிச் செய்யுட்கள். இவை சோழ மன்னர் மரபுப் புகழ்ச்சி கூறுவன.

இரண்டாம் பகுதி 22 ஏடுகள் - 44 பக்கங்கள் - 1066 வரிகள். எல்லாம் நல்ல தமிழ் நடையிலமைந்தவை. இதில் தானம் கொடுத்த அறவிளக்கமும் அரச ஆணையும் பொறிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதி 30 ஏடுகள் - 60 பக்கங்கள் - 1378 வரிகள். இது தமிழும் கிரந்தமும் கலந்த நடையிலானது. இதில் தானம் பெற்ற 1084 வைணவ அந்தணர்கள் - அவர்கள் குலமரபு, கோத்திரங்கள் யாவும் மிக விரிவாக அமையப் பெற்றுள்ளன.

இவ்வேடுகளைக் கற்பதால் இராசேந்திரன் காலத்திய இடப் பெயர், நிலவியற் பகுப்பு, சோழ நாட்டு அரசியற் பிரிவு, இயற்கை அமைப்பு, சோழ மன்னர் மரபு, அந்தணர் மரபும் அவர்தம் கோத்திர மரபுகளும், தமிழ் எழுத்து நிலை வளர்ச்சி, தமிழகத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்ற பாங்கு போன்ற எத்தனையோ செய்திகளை மேன்மேலும் ஆராயலாம்.

இச்செப்பேட்டுச் செய்திகள் அனைத்தும், செப்பேடுகளைப் பாராமலே ஒருவர் நன்கு தெரிந்துகொள்ளுமாறு, இந்நூலிற் தரப் பட்டுள்ளன. ஆசிரியர்கள் வரலாற்று ஆய்வாளர்க்கு உதவுமாறு தந்துள்ள உரைவிளக்கங்களும் ஒப்புமைப் பகுதிகளும் போற்றற் பாலன. இந்நூலின் இடையிடையே வரும் படவிளக்கங்கள் தெளிவானவை; சிறந்த அமைப்புடையவை.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பதிப்புத் துறைவழி இச்செப்பேட்டுச் செய்தியும் ஆய்வும் வெளிவருவது பாராட்டுக்குரியது. பல்கலைக் கழகத் தமிழியற் புலத்தின் ஆராய்ச்சி அறிஞருள் ஒருவரா கிய பெரும் புலவர் சி. கோவிந்தராசனாரும் அவர் மகன் திரு. சி. கோ-

தெய்வநாயகம் அவர்களும் இந்நூலை அரிதின் முயன்று உருவாக்கித் தந்துள்ளார்கள். அவர்தம் முயற்சியைத் தமிழுலகம் நினைந்து போற்றும் என்பதுறுதி. இதனை வெளியிட இசைவு தந்த முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் நன்றியுடன் நினைவு கூர்தற்குரியராவர்.

இந்நூலை இவ்வளவு சிறப்பாகப் பதிப்பிக்க அரும் முயற்சி எடுத்துக்கொண்டதுடன், மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பதிப்புத் துறைவழி வெளிவரும் அனைத்து நூல்களையுமே அமைச்சர் முதல் அனைவரும் பாராட்டுமாறு நன்முறையில் வெளியிட்டுவரும் டாக்டர் (மேசர்) கதிர் மகாதேவன் அவர்கள் மேன்மேலும் ஊக்கப்படுத்துதற்குத் தகுதியுடையராகின்றார். அருட்பா அச்சக வழி வெளிப்படும் இந்நூலை, திறம்பட அச்சேற்றிப் பிழையின்றி வெளியிட உதவிய டாக்டர் ச. சாம்பசிவனார்க்கும் அச்சகத்தார்க்கும் நன்றியுடையோம்.

துணைவேந்தர் ஜா. இராமச்சந்திரனார் அவர்கள் இத் துறை வளர்ச்சியில் எம்மையெல்லாம் நெறிப்படுத்தி வருகின்றார்கள். அன்னார்க்கும் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவினர்க்கும் யாம் என்றென்றும் கடப்பாடுடையேம். தமிழ்த்தாய்க்கு இந்நூல் சிறந்ததொரு காணிக்கை என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இராம. பெரியகருப்பன்
("தமிழண்ணல்")
பேராசிரியர், தமிழியல் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

மதுரை
10—5—1984

முகவுரை

தமிழக வரலாற்றைக் கணிப்பதற்கமைந்த சான்றுகளுள் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் முதன்மையாக அமைந்துள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மேனாட்டு அறிஞரும் தமிழகச் சான்றோர்களும் தமிழக வரலாற்றைச் சிறந்த முறையிலும் கிடைத்த சான்றுகளளவிலும் உருவாக்கித் தந்துள்ளனர். அச்செயலைப் பின்பற்றிய நிலையில் வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாப்பதும் தக்க முறையில் நூல்வடிவில் வெளியிடுவதும் பொறுப்பமைந்த பணியாகும்.

கல்வெட்டுக்கள் பெரும்பான்மையும் சாசனங்களாகவே அமைந்திருப்பதனால், பொதுமக்கள் வழிவழியாகக் கண்டறிந்து செயல்படுத்தும் நோக்குடன் திருக்கோயில்களிலேயே கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. நிலைப்பான முறையில் அறநிவந்தங்களும் பிறவும் அவ்வக் காலத்து அரசராலும் பிறராலும் கோயில் கட்டடங்களில் அமைந்த கருங்கற்களில் மெய்க்கீர்த்தியுடன் பொறிக்கப் பெற்றதாயினும், காலத்திற்கும் பகைக்கும் இலக்காகி திருத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் போகுங்கால், அதன் நேர் பிரதியாக என்றும் நிலைத்து நிற்கும் பாங்கில் செப்புத் தகடுகளில் சாசனச் செய்திகளை நேர் பிரதியாகச் செதுக்கி வைத்தனர். அவையே, வரலாற்று நோக்கில் 'செப்பேடுகள்' என்று குறிக்கப் பெற்றன.

சாசனங்கள் முதற்கண் ஓலைகளிலேயே எழுதப் பெறுவனவாகும். ஓலைச் சாசனச் செய்திகளின் அமைப்பில் பிற்பகுதியாகும் கட்டளைப் பகுதியில், 'கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும்' என்ற செய்தியினையும் சேர்த்துக் கூறுதல் மரபாகவே அமைந்துளது.

அம்மரபுப்படியே பல்லவர் காலந்தொட்டு, தமிழகத்தில் உருவாக்கம் பெற்ற செப்பேடுகள் தனித்தும், பல ஏடுகளுடைய தொகுதியாகவும் கிடைத்துள்ளன. விசயாலய சோழன் வழித்தொடர்ந்த சோழமன்னர்களில், கி.பி. 957—970 வரையில் சோழநாட்டை ஆட்சிசெய்த சுந்தரசோழன் எனும் இரண்டாம் பராந்தகன் வெளியிட்ட அன்பில் செப்பேடுகளே சோழமன்னர்கள் வெளியிட்ட செப்பேடுகளில் காலத்தால் முதன்மை பெற்றதாகும்.

மற்றும், முதல் இராசராசனின் ஆனைமங்கலச் செப்பேடுகள், முதல் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடுகள், வீரராசேந்திரனின் சாராலச் செப்பேடுகள், முதல் குலோத்துங்கனின் சிறிய ஆனைமங்கலச் செப்பேடுகள் ஆகியவைகளும் கிடைத்துள்ளன.

சோழர் வரலாற்றினை ஓரளவு தெளிவாகக் கணிப்பதற்கு இச்செப்பேடுகள் தரும் செய்திகளுள் முதற்பகுதியாக உள்ள மன்னர் மரபுப்புகழ்ச்சியுரையெனும் பிரசஸ்திப் பகுதிகள் பெருந்துணை புரிந்துள்ளன.

கி.பி. 1949-இல் சோழநாட்டின் படைத்தலைநகரான தஞ்சையின் வடபால் உள்ள கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு, முதல் இராசேந்திர சோழனின் ஆட்சியாண்டு எட்டில் (கி.பி. 1020) மன்னன் தன் தாயின் பெயரால் செய்த, திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கல அமைப்பின் அறவிளக்கமமைந்த செப்பேட்டுத் தொகுதி, சோழவரசின் முத்திரைமுகப்புடன் வார்க்கப்பட்ட உலோக வளையத்துடன் கிடைத்தது. இந்திய நாட்டில் கிடைத்துள்ள செப்பேட்டுத் தொகுதிகளில், இத்தொகுதியே அளவிலும் எண்ணிக்கையிலும் எடையிலும் மிகப்பெரியதாக இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

களிம்பும் மண்பற்றும் செறிந்திருந்த ஏடுகளையும் முகப்புடனமைந்த வளையத்தினையும் 1950-இல் தூய்மை செய்து முறைப்படுத்தி மைப்படிவங்கள் எடுத்ததுடன் பார்வைப் படிவங்களாகவும் உரிய பழைய எழுத்துக்களில் உள்ள அளவில் பிரதி செய்தேன்.

இத்தொகுதியினைக் கண்ணுற்ற இந்திய அரசின் தொல்லெழுத்துப்படிவத் துறையினர் ''கரந்தைச் செப்பேடுகள்'' என்ற பெயரால் தமிழக வரலாற்றில் இடம்பெறச் செய்தனர். பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றாராய்ச்சியாளர் திரு. வை. சதாசிவப்பண்டாரத்தார் முன்னுரையுடன், தமிழ்ப்பொழில்

துணர் 33, மலர் 3-இல் தொடங்கி ஆராய்ச்சியுரையுடன் வெளியிடலானேன். இம்முயற்சியால் முதற்பகுதியளவே வெளிவரலாயிற்று.

இச்செப்பேடுகள் தோன்றிய காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். அக்காலத்தில், தமிழகத்திலும், சோழ நாட்டிலும் நிலவிய அரசியல், சமுதாயம், பொருளாதாரம், அற நிலைகள், சமயவளர்ச்சி, சதுர்வேதி மங்கல அமைப்பு, அறக் கட்டளை ஆய்வுகள், அதிகாரிகளின் செயல், அறவோலை நிறைவேற்றம் பெறும் முறைமை, நாட்டுப் பிரிவுகள், நிலப்பாங்குகள், நீர்ப் பாசன முறைகள் ஆகியவற்றுடன் வழக்கிலிருந்த தமிழ் எழுத்துக்களின் வடிவங்களையும் நன்கு அறிந்து ஆய்வு செய்வதற்கமைந்த சான்றாகவும் இத்தொகுதி அமைந்துள்ளது. மற்றும், இச்செப்பேடுகள் தரும் செய்திகளால், தென்னகத்தில் பெருகிய பிராமணர்களின் கோத்திர சூத்திரங்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சாசனம் வெட்டி, ஏடுகளில் அளவுடன் கோடுகளை வருவித்கொண்டு எழுத்துக்களை முறையாகவும் நேர்வரியாகவும் செதுக்கியுள்ளமை, தமிழெழுத்தின் அக்கால வளர்ச்சித்திறனைக் காட்டுகின்றது.

இதுவரையில், இந்திய கல்வெட்டுத்துறையினர் வெளியிட்டுள்ள செப்பேட்டுத் தொகுதிகளனைத்தும், ஆங்கிலமொழிப் படிகளாகவே அமைந்துள்ளன. வடமொழிச் சொற்களும் அம்முறையிலேயே காட்டப்பட்டுள்ளன.

கரந்தைச் செப்பேடுகள் புதிய திறனாகவும், கலைக் கல்லூரி மாணவர்கட்கும், வரலாற்று ஆய்வாளர்கட்கும் எளிதில் பயன் பெறும் வண்ணமாக, கிரந்த எழுத்துக்களில் வடமொழிச்சுலோகங்களாக உள்ள மன்னர் மரபுப் புகழ்ச்சி உரையாகும் பிரசஸ்திப் பகுதியினைத் தமிழ் உரையாக்கமாகவும், செய்திகளில் கிரந்த எழுத்துக்களிலும், கிரந்த கூட்டெழுத்துக்களிலும் உள்ள சொற்களையும் தொடர்களையும் தமிழெழுத்தாக்கமாகவும் எழுதப்பெற்ற நிலையில், புதிய முயற்சியாக ஆய்வுரையுடனமைந்த நூலாக வெளிவருகின்றது.

செப்பேட்டுச் செய்திகளைப் பிரதி செய்யும்போதும் ஆய்வுரை எழுதும் போதும் துணைநின்றவரும், பிரசஸ்தி உரையில் காணப் பெறும் சோழர்கால வரலாற்றில் புதிய செய்திகளைக் கண்டு விளக்கந் தந்தவரும் திரு கோ. தெய்வநாயகமாவர். சோழ மன்னர் வரலாற்றில் புதிய பல செய்திகளைத்தரும் கூறுகளை ஆய்வுரையுடன் விளக்கமாக எழுதி மூலப்படிகளுடனும், பல படங்களுடனும் ஒரே தொகுப்பு நூலாக வெளியிடும் ஆவல் நிறைவேறாமல் இருந்தது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழியல் புலத்தின் பணியாக, யான் 'கல்வெட்டுக்கலைச்சொல் அகராதி' என்ற சிறந்த நூலினை 5000 சொற்களளவில் உருவாக்கிவருங்கால், பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பெருந்தகை டாக்டர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள் கரந்தைச் செப்பேடுகளை ஆய்வுரைகளுடனும் தமிழாக்கமாகவும், நிறைவாகவும் வெளியிடவேண்டுமென்னும் கருத்தில் பணிப்பித்து ஆணையளித்தார்கள். பெருந்தகை துணைவேந்தரவர்கட்கு எங்கள் முதல் நன்றி உரியதாகும்.

தொல்பொருள்துறை, கல்வெட்டுத்துறை ஆகியவற்றின் செயல் திறனைப் பல்கலைக்கழகங்கள் ஏற்று, வரலாற்றுச் சிறப்பமைந்த சான்றுகளைச் சிறந்த முறையில் பதிப்பிக்கும் நோக்குடன் துணைவேந்தரவர்கள் ஆணைசெய்தார்கள்.

பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தின் வெளியீடாக வருவதற்குப் பரிந்துரை செய்த பதிப்புக்குழுவிற்கும், மூலப்படிகளையும், இருவராலும் எழுதப்பெற்ற ஆய்வுரைகளையும் பல்கலைக்கழகச் சார்பில் ஆய்ந்து சீர்தூக்கியுரைத்த தொல்பழங்கால வரலாற்றுத் துறைப் பேராசிரியர் திரு. டாக்டர் அனுமந்தையா அவர்கட்கும், தமிழியற் புலத்தலைவரும், பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியருமாகிய திரு. டாக்டர் தமிழண்ணல் அவர்கட்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

தமிழியற் புலத்தின்வழி யான் (சி. கோவிந்தராசனார்) மேற்கொள்ளும் கல்வெட்டு, தொல்பொருள் ஆகியவை பற்றிய கள ஆய்வினைக் கண்டும் கேட்டும் அன்புடன் ஊக்கமளிக்கும் பல்கலைக் கழக இணைப்பாளர், டாக்டர் திரு. தி. அழகிய சொக்கலிங்கனார் அவர்கட்கு நன்றியுரித்தாகும். அச்சகப் பணி தொடர்ந்து செயல் பெற ஊக்கமளித்த தமிழியற்புலப் பொறுப்பாளர் திரு. டாக்டர் சி. சுப்பிரமணியம் அவர்கட்கு அன்புடன் நன்றி.

பல்கலைக் கழகப் பதிப்புத் துறையின் பொறுப்பினை ஏற்று, பேராசிரியர்கள் வழங்கும் நூல்களைப் புத்தம் புதிய அமைப்பில் தெளிவான பதிப்பாக உருவாக்கம் செய்து தரும் டாக்டர் கதிர் மகாதேவன் அவர்கட்கும், மதுரை அருட்பா அச்சகத்தார்க்கும், அச்சுப்படிகளை இயன்ற அளவில் பார்வை செய்தளித்த திரு. டாக்டர் ச. சாம்பசிவனார் அவர்கட்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

கரந்தைச் செப்பேடுகள் நூல் வடிவில் வெளி வருவதற்கு ஆணை செய்ததோடல்லாமல், அவ்வப்போது நேரிற் கண்டு ஊக்க மளித்துச் செயலாக்கம் புரிந்த முன்னாள் துணைவேந்தர் திரு டாக்டர். வ. சுப. மாணிக்கனார் அவர்களின் மேலான உள்ளத்திற்கு எங்கள் பணிவு கலந்த நன்றியினை மீண்டும் நவில்கின்றோம்.

உரியகாலத்தில், ஏற்புடைய படங்களுடன் நூல் சிறந்தமுறையில் நிறைவு பெற்று வெளிவருதற்கு அனைத்து உதவிகளும் அன்புடன் நல்கிய, பேராசிரியப் பெருந்தகை துணைவேந்தர் திரு. ஜே. இராமச்சந்திரனார் அவர்கட்கு எங்கள் பணிவமைந்த நன்றி உரித்தாகும்.

நூல் நன்முறையில் அமைய அவ்வப்போது நெறிப்படுத்திய தமிழ்த்துறைத் தலைவர் திரு. டாக்டர் தமிழண்ணல் அவர்கட்கும், தமிழியற் புல இணைப்பாளரும், எங்கள் ஆசிரியப் பெருந்தகையுமான திரு. பேராசிரியர் க. வெள்ளைவாரணர் அவர்கட்கும் எங்கள் உளங் கனிந்த நன்றி உரியதாகும்.

இங்ஙனம்,

சி. கோவிந்தராசன்

சி. கோ. தெய்வநாயகம்

உள்ளுறை

பக்கம்

பதிப்புரை 3

முன்னுரை 6

1. கரந்தைச் செப்பேடுகளின் வரலாறு ௧

2. கரந்தைச் செப்பேடுகள் செய்தியமைப்பு ௧௯

3. செப்பேட்டின் எழுத்து நிலை ௩௪

4. கரந்தைச் செப்பேடுகள் மரபுப் புகழ்ச்சி ௩௭

5. கரந்தைச் செப்பேடுகள் அறவிளக்கம் ௫௰

6. திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் - அறவிளக்கம் ௨௩௬

7. பொருட்பாகுபாடு ௨௪௯

8. முதல் இராசேந்திரன் காலத்தில் அரசியலதிகாரிகள் ௨௬௧

9. செப்பேட்டுச் செய்திகளால் அறியப் பெறும் வளநாடுகளும் ஊர்களும் ௨௭௧

10. சோழர் மரபு விளக்கம் - பகுதி 1 ௨௮௨

11. சோழர் மரபு விளக்கம் - பகுதி 2 ௩௧௩

12. பிற்காலச் சோழமன்னர் மரபு (இராசேந்திரன் I வரை) ௩௨௮

13. முடிவுரை ௩௪௬

பிற்சேர்க்கை ௩௫௰

1

கரந்தைச் செப்பேடுகளின் வரலாறு

அறிமுகம்

தமிழக வரலாற்றில் அடிப்படைச் சான்றுகளாக விளங்கும் செப் பேடுகளுள் புதியதாகவும், இன்றியமையாததாகவும், அளவில் பெரிய தாகவும், எண்ணிக்கையில் இந்தியாவிலேயே மிகப் பெரியதாகவும் கிடைத்திருப்பது முதல் இராசேந்திர சோழனின் கரந்தைச் செப் பேட்டுத் தொகுதியேயாகும். இச் செப்பேட்டுச் செய்திகளை அறிதற்கு முன்னர் அதன் வரலாற்றினை அறிதல் பயன்தரத் தக்கதொன்றும்.

கரந்தை

சோழநாட்டில் தலைநகராகத் திகழ்ந்த தஞ்சை மாநகரின் வடபாற் பகுதியாக இருப்பது ''கருந்தட்டாங்குடி'' எனும் நகர்ப் புறமாகும். இப்பகுதியின் பழம்பெயர் 'கருந்திட்டைக்குடி'' என்ப தாகும். அதன் மரூஉப் பெயரே கரந்தை.

காவிரியின் கிளையாறாகிய வெண்ணாற்றிற்கும், வெண்ணாற் றின் கிளையாறாகிய வடவாற்றிற்கும் இடைப்பட்ட வளவிய சம வெளிப் பகுதியில் இவ்வூரமைந்துளது. இதன் வடவெல்லையாக வெண்ணாறும் தென்னெல்லையாக வடவாறும் அமைந்து ஓடி வளம் பெருக்குகின்றன.

தஞ்சை நகரின் பேருந்துகள் பலவும் இவ்வூரின் வழியே தஞ்சை—சென்னை, தஞ்சை—திருவையாறு ஆகிய நகர்கட்குச் செல் கின்றன. எனவே, போக்குவரத்து நிலையில் கரந்தை சிறந்து விளங்குகின்றது.

பிற்காலச் சோழரின் ஆட்சியில் கரந்தை, ''தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்ப் புறம்படி வடவாற்றின் வடகரைக் கருந் திட்டைக்குடி'' எனக் குறிக்கப்பட்டுள்ளது.[1]

முதல் இராசராசனால் எழுப்பப்பட்ட தஞ்சைப் பெரிய கோயி லுக்கும் காலத்தால் முன்னையதாகவும், சைவ சமய அருட்குரவர் அப்பரடிகளால்,

''நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன்செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட் டியத்தான்குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக் குடிகடையக் குடிகாணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றவிடர் போகுமன்றே''

என்று சிவத் தலங்களுள் 'குடி' என்னும் சிறப்பினைப் பெற்ற இடங்களைத் தொகுத்துரைக்கும் 'அடைவு திருத்தாண்டகத்தில்' பாடப்பெற்றதுமாகிய கருந்திட்டைக்குடியில் அமைந்த கருணாசாமி கோயில் எனப்படும் வசிட்டேசுவரர் கோயில் ஆகிய சிவன்கோயில் இவ்வூரின் நடுவே பெருந்திருக்குளத்தோடு அமைந்து விளங்கு கின்றது.[2] இக்கோயில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சோழர்களின் பல்வேறு காலத்திய கல்வெட்டுக்களையும், அழகிய சிற்பங்களையும் உடையதாகும்.[3]

கரந்தையில் வடகீழ்ப்பகுதி 'சுங்கம் தவிர்த்தான் திடல்' எனும் பெயர் பெற்றதாகும். சோணாட்டில் நிலவிய சுங்கவரியை நீக்கியருளியவன் குலோத்துங்க சோழனாவன். அவனது அருஞ் செயலின் நினைவாக, ''கருந்திட்டைக் குடியான சுங்கந்தவிர்த்த சோழ நல்லூர்'' என்று இப்பகுதியினைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.[4] இவ்வழகிய ஊர்ப்பெயர் சிதைந்த நிலையில் 'சுங்காந்திடல்' என்ற அளவில் கருந்திட்டைக்குடியில் வடகிழக்குப் பகுதிக்குரிய பெயராக வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ச் சங்கச் செப்பேடுகள்

வரலாற்றுத் தொன்மை மிக்க கரந்தையின் தென்னெல்லை யான வடவாற்றின் பழம்பெயர் 'வீரசோழ வடவாறு' என்பதாகும். முதற் பராந்தக சோழனால் வெட்டுவிக்கப்பட்ட இவ்வாற்றின் வட கரையில்[5] தஞ்சை—சென்னை நெடுஞ்சாலையில், 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' அமைந்துள்ளது. கி. பி. 1911ஆம் ஆண்டு தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களால் தலைமையேற்கப்

பெற்ற இச்சங்கத்தின் உடமைகளுள் ஒன்றாக இருப்பது கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடுகளாகும்.

1949இல் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொருளாளரும், நாட்டுத் தொண்டரும், 'கரந்தைக் காந்தி' என்று அழைக்கப்பட்டவருமாகிய காலஞ்சென்ற ச. அ. சாம்பசிவம் பிள்ளை பி. ஏ. அவர்களால் இச் செப்பேடுகள் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கப்பட்டன.

1947 அளவில் தஞ்சை மாவட்ட, சாலிய மங்கலம், அம்மாப் பேட்டைப் பகுதிகளின் வட்டார வளர்ச்சி அதிகாரியாக (Firka Development Officer) திரு. சாம்பசிவம்பிள்ளை இருந்தபோது, இவ் வேடுகளை அம்மாப் பேட்டைக்குத் தென்பாலுள்ள 'புத்தூர்' என்னும் சிற்றூரில் வாழ்ந்த திரு. சேவு பாண்டியரிடமிருந்து பெற்று பாதுகாத்த பின்னர்த் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்துள்ளார்.[6]

புத்தூர் — செப்பேட்டுப் புதைவிடம்

தஞ்சை நாகை புகைவண்டிப் பாதையில், தஞ்சைக்குக் கிழக்கே பதினைந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள 'அம்மாப்பேட்டை' புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் இப்புத்தூர் அமைந்துள்ளது.

இவ்வூரின் தென்புறப் பகுதியில், பல நூற்றாண்டுகளாகத் தூர்ந்து பாழடைந்திருந்த பழங்கிணறு ஒன்றை ஊர் விவசாயிகளுள், சிலர் சீர் செய்ய முனைந்தனர். மண்ணை அகழ்ந்தபோது, இச் செப்பேட்டுத் தொகுதிகள் அடியில் புதைந்திருக்கக் கண்டெடுத்தனர்.

இப்புத்தூரே கரந்தைச் செப்பேடுகள் குறித்திடும் முதல் இராசேந்திர சோழனால் பிராமணர்க்கு அளிக்கப்பட்ட கொடை யூராகிய திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்தின் தலைமை யூராகும். கரந்தைச் செப்பேடுகளில் எட்டாவது ஏட்டின் பத்தொன் பதாவது வரி குறித்திடும் "மூலகுடியாகிய திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்" என்பது இப்புத்தூரேயாகும். இச் சதுர்வேதி மங்கலத்தின் ஊர்ச்சபையும் இவ்வூரிலேதான் இருந்துளது. எனவே, இச்சாசனத்தொகுதி ஊர்ச்சபையாரால் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது புலனாகின்றது. இச்செப்பேட்டினை வெளியிட்ட முதல் இராசேந்திர சோழனின் ஆட்சியாண்டு எட்டிலிருந்து (கி பி. 1020) இரண்டாம் இராசராசசோழனது ஆட்சியாண்டு இருபத்திரண்டு வரையில் (கி. பி. 1168) இவ்வூர்ச்சபை தொடர்ந்திருந்ததற்குக் கல்வெட்டுச் சான்றுள்ளது.

இதனை,

"ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கர வர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 22 ஆவது நித்த விநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு பிரமதேயம் ஸ்ரீபுத்தூரான திருபுவனமாதேவிச் சருப்பேதி மங்கலத்துப் பெருங்குறி மகாஸவையோம்"

என்னும் கல்வெட்டுத் தொடர்கள் உணர்த்துகின்றன.[7]

புதைவின் காரணம்

கி.பி. 1320 அளவில் திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்திலமைந்த சோழநாட்டுப் பகுதிகளில் 'பராக்ரம பாண்டியன்' என்பவன் ஆட்சி புரிந்துள்ளான். அவனது பாண்டியநாட்டரசியலதிகாரிகள் புரிந்த அதிகாரத்தின் விளைவாக இப்பகுதி மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது. புத்தூருக்கு வடகிழக்கே பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வெட்டாற்றின் வடகரையிலமைந்த 'பத்தூரில்' அழிந்து புதைந்துள்ள சிவன் கோயில் கல்வெட்டு இதனைக் குறிக்கின்றது.[8]

கல்வெட்டுப்பகுதி,

"ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திருபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீபராக்ரம பாண்டிய தேவர்க்கு............ இவ்வூர் மேலை மங்கல வீதியில் வடதுண்டம் கீழ் சிறகில் ஒரு மனையைப் பற்றி வழக்கு உண்டென்று இரண்டு கோவிலிலும் பூசை முட்டிக்கிடந்த"

என்பது.

(இதே கல்வெட்டு, பத்தூர் திருமால் கோயிற்கண்ணும் உள்ளது.)

தொடர்ந்து கி. பி. 1325இல் புத்தூரிற்கு நேர் மேற்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவிலமைந்த 'திரிபுவன வீரபுரத்தில்' பாண்டிய மன்னன் பராக்ரம பாண்டியனின் அதிகாரிகள் இப்பகுதி மக்களிடத்தில் பாடிகாவல், மெய்க்காவல், மகமை ஆகிய உரிமைகளைப் பெற முற்பட்டுள்ளனர். சோழ நாட்டில் அன்னியரின் அதிகாரத்தை மக்கள் விரும்பாத நிலையில் கலகம் ஏற்பட்டுளது. இந்நிலையில் நிலவுரிமையாளராகிய வைணவர்களோடு பூசல்கள் மிகுந்து, ஒருவரையொருவர் அழிக்கும் கொடுமைகளும், பொருளழிவுகளும் நடந்திருக்கின்றன. வைணவர் சிலர் கொல்லப்பட்டதுடன் அவர்கட்குரிய விக்ரம சோழ விண்ணகரமும் அழிக்கப்பட்டுள்ளது. இச்செய்தியினைப் பேராசிரியர் சி. கோவிந்தராசனாரால்

கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்ட, அங்கு அழிந்து கிடக்கும் திருமால் கோயில் கல்வெட்டுக்கள் விளக்குகின்றன. அவற்றுள், கலகத்தின் முடிபாக அமைதிபெற்ற பாண்டி நாட்டதிகாரிகள், நாடுகாவல் பெற்று உறுதி செய்தமையைக் குறிக்கும் கல்வெட்டில்,

> *"திருக்கோயில் திருமுற்றத்திலுள்ளாரை நலிதல் அரங்க வரை வெட்டுதல் செய்யக் கடவோமல்லமாகவும் தங்கள் நாடு தந்தபடி இவ்வூர் பூர்ஷித்த நாள் முதல் காவல் பேற்றுக்கு முற்பிலாண்டுகள் எங்கள் தேவரை நோக்க ஒரு அன்னியாயம் அடுத்துச் செய்யாமல் காவற் சொற்படாமல் .... கடவோமானமைக்குச் சேனைப் பெருமாளான சோழ சோழமூவரையர்தம் வாசலிலே பெறவும் படுவோமாக"*
>
> — (தமிழக வரலாற்றுச் செய்திகள்-பக். 72, 73)

என்று குறிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கதாகும்.[9] இவ்வாறான குழப்பம் மிகுந்த காலத்திலேயே, பிராமணரின் தான நிலங்களுக்குரிய சாசனமான இச் செப்பேடுகள் பாதுகாக்கும் முயற்சியாகக் கிணற்றினுள் மறைக்கப்பட்டுள்ளன.

குழப்பம் நீடித்தும், மறைத்தவர்கள் மறைந்தும் போனமையின் எடுப்பாரில்லா நிலையில் அவை கிணற்றினுள்ளேயே புதைந்து போயின எனலாம்.

செப்பேடுகளின் தோற்றமும் அளவும்

திரு. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் இச்செப்பேடுகளைச் சங்கத்திற்கு அளித்தபோது, அவை 57 செப்பேடுகள் கோக்கப்பட்ட பெருஞ் செப்பு வளையத் தொகுதியாகவும் ஏடுகளின்றிச் சிதைந்த வளைய முகப்பளவிலுள்ளதாகவும் இருவகைத்தோற்றத்தில் இருந்தன. வளைய முகப்புக்களில் சோழவரசின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. சிதைந்த வளையத்தின் எஞ்சிய பகுதிகளும் ஏடுகளும் அறியார் கைப்பட்டு அழிந்தன போலும்.

செப்பேடுகள்

முழுமையான தொகுதியாக விளங்கும் 57 செப்பேடுகளுள் எண் 13, 22 ஆகிய இரண்டு செப்பேடுகளின் ஓரங்களில் சிதைவுகள் காணப்படுகின்றன. 12 ஆவது ஏட்டின் மேற்புற விளிம்பில் விரிசல் கண்டுளது. மூன்றாம் பகுதியின் 27,28 ஆவது எண்ணுள்ள ஏடுகளில் ஓரப்பகுதிகளில் சிறு சிறு பிளவுக்ள் கண்டுள்ளன.

செப்பேடுகளின் இடதுபுற மையத்தில், வளையத்தில் கோக்கப் பெறுதற்கான துளைப்பகுதி உள்ளது.

துளையைச் சுற்றிய வெற்றிடத்தில் 'திரிபு' எனும் அடையாளச் சொல்லும் அதன்கீழ் தமிழெண்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

வளையம்

கோப்பு வளையத்தின் சுற்றளவு 1மீ. 64 செ.மீ. கம்பியின் பருமை 1.89 க.செ.மீ. கம்பி 'தரா' வென்னும் உலோகத்தாலாகியது.

வளைய முகப்பு

வளையத்தின் முகப்பு, வட்ட வடிவமாகும். இவ் வட்டத்தின் விட்ட அளவு 13 செ.மீ முகப்பின் பக்கத் தோற்றம் திரட்சியுடன் அமைந்த பதினாறிதழ்த் தாமரை மலர் பின்புறம் தாங்கியுள்ள பாங்கில் அமைந்ததாகும். இத்தாமரை வடிவு 22 செ.மீ. பருமையுடன் ஐம்பொன் எனும் கலப்பு உலோகத்தாலாகி மிளிர்கின்றது.[10]

திரண்டு எழுந்துள்ள முகப்புருவின் அடியில் இருபுறமும் கிளைத்து நீளும் கம்பிச் சுரையின் பருமை 3.49 செ.மீ. ஆகும்.[11]

இவ்வாறாக அமைந்த முகப்பும் வளையமும் ஒரே வார்ப்பாகச் செய்யப்பட்டுள்ளது.

முதல் 55 செப்பேடுகளும் 42 செ.மீ நீளமும், 23½ செ மீ. அகலமும் உடையன. இவற்றின் தடிப்பு 1.4 மி. மீ. ஆகும். ஓரங்கள் மெல்லிய வரம்புகளுடன் ஒரே மட்டமாக அமைந்துள்ளன. எஞ்சிய இரு ஏடுகளும் இவ்வேடுகளைக் காட்டிலும் அளவில் சிறிது குறைந் தனவாகும்.

நிறையும் எடையும்

57 ஏடுகளின் கூடுதல் எடை 8750 தோலாக்கள் ஆகும்.[12]

இரு கோப்பு வளையங்களின் கூடுதல் நிறை 1255 தோலாக்கள்.

இவற்றுள் சிதைந்த வளையத்தின் எடை 400 தோலாக்கள். இவ் வெடை போக எஞ்சிய தோலாக்கள், முழு வளையத்தின் எடையாகும்.

முழு வளையமும் அதற்குரிய 57 ஏடுகளும் சேர்ந்த முழுத் தொகுதியின் கூடிய நிறை, 8750+855=9605 தோலாக்களாகும். இக்கால நிறையளவில் சுமார் 90 கிலோ கிராம் எடையாகுமெனலாம்.

தனிச்சிறப்பு

முதல் இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் கூடிய எடை 7980 தோலாக்கள்.[13] இதனைவிட 1625 தோலாக்கள் மிகுந்த எடையுடன் விளங்குவது கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியாகும்.

மற்றும், ஏழு ஏடுகளைக் கொண்ட அன்பிற் செப்பேடுகளையும் 21 ஏடுகளைக் கொண்ட ஆனைமங்கலச் செப்பேடுகளையும், 31 ஏடுகளைக் கொண்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளையும், 7 ஏடுகளைக் கொண்ட சாராலச் செப்பேடுகளையும், 3 ஏடுகளைக் கொண்ட சிறிய லெய்டன் செப்பேடுகளையும் ஏடுகளின் எண்ணிக்கையாலும் நிறையாலும் அளவாலும் விஞ்சி மாபெருந் தொகுதியாக விளங்குவது இக்கரந்தைச் செப்பேடுகளேயாகும்.

மாண்பும் மாசும்

சோழர்காலச் செப்பேட்டுத் தொகுதிகளுள் தனிச்சிறப்புடன் அமைந்துள்ளதாகக் கிடைத்துள்ள இச்செப்பேடுகளும் வளையங்களும் ஏறக்குறைய ஏழு நூற்றாண்டுகட்குமுன் பாழ்கிணற்றடியில் மண்ணில் புதையுண்டிருந்தமையின், ஏடுகள் களிப்பேறியும், மண் மாசு பிடித்தும் மாசுற்றிருந்தன. எழுத்துக்கள் தெளிவுறா நிலையில் இருந்தன.

அந்நிலையில், இச் செப்பேடுகளையும் வளையங்களையும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய சி. கோவிந்தராசனார் அவர்கள் அரிதில் முயன்று தூய்மை செய்துள்ளனர்.[14]

குறிப்பும் பொறிப்பும்

முதல் இராசேந்திர சோழன் காலத்திலேயே, ஆனைமங்கலம், திருவாலங்காடு, திருக்களர் ஆகிய ஊர்கட்குரிய செப்பேடுகளோடு, கரந்தைச் செப்பேடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பு

இவற்றுள், எத்தொகுதி எவ்வகை அறச்செயலுக்குரியது என்பதன் குறிப்பாக ஒவ்வோர் ஏட்டிலும் குறிப்புச் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. அம்முறையில் கரந்தைச் செப்பேடுகள் தரும் 'திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம்' எனும் பிராமண நில தானத்தினைக் குறிக்கும், குறிப்பாகச் செப்பேடுகளில் 'திரிபு' என்ற அடையாளக் குறியீடும் தொடர் எண்களும் முறையாகக் குறிக்கப்பட்டுள்ளன.

தொகுப்புக் குலைந்தால் ஏடுகளை மறுபடியும் வேறு பிரித்து வரிசைப்படுத்தச் சோழர்காலச் செப்பேட்டுக் கலைஞர் இத்தகைய

ஆவணப் பதிப்புக் குறிப்புக்களைப் பொறித்துள்ளனர் என்பது இதனால் புலனாகும்.

பொறிப்பு

1. சிற்பாசாரியன் எழுத்துக்களைச் செதுக்குவதற்கு முன், ஏடுகள் நன்ருக மட்டம் செய்யப்பட்டுள்ளன.

2. ஏடுகளில் மெல்லிய வரிக்கோடுகளை வரைந்த பின்னரே, அவற்றின்மீது எழுத்துக்களை முறையாகப் பொறித்துள்ளனர். இதனை, இரண்டாம் பகுதிக்குரிய எண் 20, 22 ஆகிய ஏடுகளில் தெளிவாகக் காண முடிகின்றது.

3. பெரும்பான்மை ஏடுகளில் பக்கத்திற்கு 24 வரிகளும், சிலவற்றில் 20 வரிகளும் உள்ளன. செய்தி நிறைவு பெறும் ஏடுகளில் குறைந்த வரிகளும் உள்ளன.

4. 57 ஏடுகட்குரிய 114 பக்கங்களிலும் எழுத்துப் பொறிப்புள்ளது. ஒரு வரிக்குச் சராசரி 50 எழுத்துக்கள் உள்ளன.

முதல் நேர் எழுத்துப்படி

அற்றை நாளில் கரந்தைத் தமிழ்ச் சங்கச் செயலாளராக இருந்த திரு. சி. வேதாசலம் பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்களின் விருப்பப்படி கி. பி. 1950 இல் செப்பேடுகளிலமைந்த எழுத்தமைப்பில் மாற்றம் ஏற்படாமல், அதே அளவில் உள்ள வடிவில் பாங்குற இந்தியக் கருப்பு மையினுல் (Indian Ink) தெளிவமைந்த கையெழுத்து நேர்படியாகத் திரு. சி கோவிந்தராசனார் அவர்கள் எழுதித் தொகுப்பாக வைத்துள்ளார்கள். இவ்வரிய படித்தொகுப்பினை 1956இல் பேரறிஞர் மு. இராகவ ஐயங்கார் அவர்களும், வரலாற்றுப் பேரறிஞர் டி. வி சதாசிவப் பண்டாரத்தார் அவர்களும் நேரிற் கண்டு பாராட்டியுள்ளார்கள்.[15]

இந்திய அரசின் பதிவு

இந்திய அரசின் தொல்லெழுத்துப் படிவத்துறையாளர் (Govt. Epigraphist of India) இச்செப்பேட்டுத் தொகுதியினை, 11-3-1950இல் எடுத்துச் சென்று புகைப்படங்களும் மைப்படிகளும் எடுத்துள்ளனர்.

அவர்களால் இந்திய வரலாற்றில் இவைகட்கு முதலாம் இராசேந்திர சோழனின் கரந்தைச் செப்பேடுகள் (Karanthai Plates of Rajendra Chola I) எனும் பெயர் பதிவு செய்யப் பெற்றுள்ளது.[16] ஆனால் இன்றுவரை இச்செப்பேட்டு மூலச் செய்திகள் அத்துறையாளரால் வெளியிடப்பெறவில்லை.

நீலகண்ட சாத்திரியார்

1955 இல் திருத்திய இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்ட 'சோழர்கள்' (Cōlas) என்ற வரலாற்று நூலில் ஆசிரியர் திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரியாரவர்கள் இச் செப்பேடுகள் பற்றிய குறிப்பினைப் பத்து இடங்களில் கூறியுள்ளார்.[17] 'தமிழக வரலாற்றிற்கு மிகவும் இன்றிமையாத செப்பேடுகள்' எனவும் போற்றியுள்ளார்.

1956 இல் வெளியிடப்பட்ட இந்தியத் தொல்பொருளியல் துறையாளரின் 1949-50க்கான ஆண்டறிக்கைக் குறிப்பேட்டில், (The Annual Report of the Indian Epigraphy) இச் செப்பேடுகள் பற்றிய செய்திச் சுருக்கமும் செப்பேட்டு முகப்புப் படமும் வெளியிடப்பட்டுள்ளன [18]

தமிழ்ப் பொழிலில்

1957 சூன் திங்கட்கான தமிழ்ப்பொழில் இதழில் திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் இச்செப்பேடுகள் குறித்து முன்னுரை யொன்று எழுதியுள்ளார்கள்.[19] அதனைத் தொடர்ந்து, செப்பேட்டுச் செய்திகளைத் தமிழ்ப்பொழிலில் திரு. சி. கோவிந்தராசனார் அவர்கள், திரு. பண்டாரத்தாரால் பார்வையிடப்பட்ட அரும்பத விளக்கத்துடன் வெளியிட்டு வந்துள்ளார்கள்.[20] இவ்வெளியீட்டிற்கு முதன்மையாய் நின்று ஊக்கமளித்துதவியவர்கள் திருமுறைச் செல்வர் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்களேயாவார்கள்.

செப்பேட்டுச் செய்திகளில் முற்பகுதியாகிய வடமொழிச் செய்யுட்களாலாகிய சோழ மன்னர் மெய்க்கீர்த்தியினை (பிரசஸ்தி) திரு. சி. கோவிந்தராசனார் அற்றைநாள் தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலைய வடமொழித் தலைமை ஆய்வர் திரு. நாவல்பாக்கம் தேவநாதாச்சாரியார் அவர்களின் துணைகொண்டு தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள்.

இம்மொழிபெயர்ப்புடன் இரண்டாம் பகுதியாகிய அறவிளக்கத்தில் பத்து ஏடுகளிலமைந்த செய்திகளையும் தமிழ்ப்பொழிலில் முறையாக வெளியிட்டுள்ளார்கள். யாது காரணம் பற்றியோ மற்றையப் பகுதிகள் வெளியீட்டுவழி நிறைவு பெறாது நின்றுபோயுள்ளது.

காட்சியும் மாட்சியும்

1961 அக்டோபர்த் திங்களிலிருந்து சனவரி 1962 முடிய நான்கு திங்கள் டில்லியில் இந்தியத் தொல்பொருள் துறையாளரால் நடத்தப்பட்ட அருங்கலைப் பொருட்காட்சியில், இச்செப்பேட்டுத் தொகுதி மதிப்புடைய இடத்தைப் பெற்றிருந்தது. அற்றைநாள் இந்தியத் தொல்

பொருள் துறைத்தலைவர் திரு ஏ. கோஷ் அவர்கள், தமது கருத்துரையாக ''இச்செப்பேடுகள், இந்தியாவில் இதுவரையில் கிடைத்துள்ள உலோகப் பொறிப்புக்களில் மிகச்சிறந்த முழுமையான பெருஞ் செப்பேட்டுத் தொகுதியாகும். தனித்திறம் வாய்ந்த செய்திகள் மிகுந்த இவை வெளிநாட்டு அறிஞரின் கவனத்தைப் பெரிதும் கவரக் கூடியன'' என்று கரந்தைத் தமிழ்ச் சங்கச் செயலருக்குத் தாமெழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.[21]

பிற அறிஞரின் கருத்தில்

டாக்டர் என். சுப்பிரமணியன் அவர்கள் அண்மையில் தாம் எழுதிய 'தமிழக வரலாறு' என்னும் நூலுள் திரு. நீலகண்ட சாத்திரியார் குறிப்பிட்டுள்ள கரந்தைச் செப்பேட்டுக் குறிப்புக்களினின்றும் சிலவற்றை எடுத்தாண்டுள்ளார்.[22] அதே குறிப்பினைப் பின்பற்றிய நிலையில் திரு. டி என். பாலசுப்பிரமணியன் அவர்கள் 'தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள்' என்னும் கல்வெட்டுத் தொகுப்பில் இச் செப்பேடுகள் பற்றிய செய்திகளைக் குறித்துள்ளார்.[23]

இந்தியத் தொல்லெழுத்துப்படிவ அதிகாரி திரு. என். லெட்சுமி நாராயணராவ் அவர்கள் 1951 இல் கலந்து கொண்ட 'அனைத்திந்திய ஓரியண்டல் கருத்தரங்கி'ல், கரந்தைச் செப்பேடுகளின் முதற் பகுதியாகிய மன்னர் மரபுப் புகழ்ச்சியுரையில் அமைந்த சில கருத்துக்களைச் 'சென்னை ஓரியண்டல் ஆராய்ச்சி வெளியீடு' தொகுதி 19ல், 'சோழர் வரலாற்றில் சில புதிய உண்மைகள்' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்.[24]

கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா மலரில் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் 'கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடுகள்' எனுந் தலைப்பில் செப்பேட்டுச் செய்திகளைச் சற்று விளக்கமான கட்டுரையாக வெளியிட்டுள்ளார்.[25]

இவ்வாறாகக் கரந்தைச் செப்பேட்டிலுள்ள செய்திகள் முழுவதும் வெளிவராத நிலையில், வரலாற்றுச் செய்திகளாகவும் குறிப்புக்களாகவும், தழுவல்களாகவும் இதுவரை வெளிவந்துள்ளன.

இவ்வாய்வேட்டின் பயனாகவே இச்செப்பேட்டுத் தொகுதியின் முழுமையான படியும், முழுமையான செய்திகளும் ஒரு தொடராக முதன்முதல் விளக்கமுடன் வெளியிடப் பெறுவதுடன், அவற்றிலமைந்த சோழர்காலப் புதிய வரலாற்றுண்மைகள் பலவும் ஆய்வுரைகளுடன் இடம் பெற்றுள்ளன.

முகப்புச் சின்னத்தின் விளக்கம்

வாழ்த்துரை

வளையத்திலமைந்த முகப்பு, வட்ட வடிவாக அமைக்கப்பட்டுள்ளது. வட்டப் பரப்பிடத்தில் குவிமுறைப் பொறிப்பில் (Embossing) முதல் இராசேந்திர சோழனின் அரசு இலச்சினை வார்க்கப்பட்டுள்ளது.

வட்டவிளிம்பில் பழங் கிரந்த எழுத்துக்களில்,

"ராஜத் ராஜன்ய மகுடஸ்ரேணி ரத்நேஷு ஸாசனம்
ஏதத் ராஜேந்ர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண:"

எனும் வாழ்த்துரை (அநுஷ்டுப் சுலோகம்) காணப்படுகின்றது.[26] இதன் பொருள்,

"பரகேசரிவர்மனாகிய இராசேந்திர சோழனின் இந்தச் சாசனம், அரசர்களின் முடிவரிசைகளிலுள்ள இரத்தினங்களில் செலுத்தப்பட்டது"

என்பதாகும்.[27]

1. செப்பேடுகள் பற்றிய ஆய்வும் விளக்கமும்

சோழ அரசின் இலச்சினை

இவ்வட்ட விளிம்பின் எழுத்தமைவுக்குள்ளமைந்த வட்டப் பரப்பிடத்தின் மேற்பகுதி முதலமைந்த முக்காற்பங்கிடத்தில், புலி, இணை கயல் ஆகியவை நடுவே அமைக்கப்பட்டு அவற்றின் இருபுறமும் மங்கலச் சின்னங்கள் காட்டப்பட்டுள்ளன. புலி கயல்களுக்கு மேல் இருபுறமும் கவரியுடன் கூடிய கொற்றக்குடை தோற்றமளிக்கின்றது. கீழமைந்த காற்பங்கிடத்தில் வில் நாணுடன் இடம்பெற, அதன் நடுவே, முழவு, தவிசு, பன்றி, சுவத்திகம், ஐந்திதழ்த் தாமரை மலர் ஆகிய வடிவங்கள் தோற்றமளிக்கின்றன.

புலி இலச்சினை

முகப்புச் சின்னமாகிய சோழர் இலச்சினையில் அமைக்கப்பட்டுள்ள உருவங்களுள் சோழ அரசின் நிலையான சின்னமாகிய புலி செம்மாந்து நிமிர்ந்து அமர்ந்துள்ளது. அதன் வால் மடங்கி முகத்திற் கெதிராக எழுந்து முன்னங்காலளவு உயர்ந்துள்ள அமைப்பு, அதன் வீரப்பொலிவினை உணர்த்துகின்றது. புலியின் உடல் முழுவதும், புள்ளிகள் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளன.[28]

வரிப்புலியல்ல

சோழரின் அரசியல் சின்னமாக அறிஞர்கள் பலராலும் குறிக்கப்பட்ட வடிவம் வரிப்புலியாகிய வேங்கையேயாகும். (Bengal Tiger- வங்காளப் புலி.)

ஆனால் சோழரின் சின்னத்திலமைந்த புலி, 'பெருஞ்சிறுத்தைப் புலியே' என்பதை இவ்வளைய முகப்பின் வாயிலாக நன்கு அறியமுடிகின்றது.

இப்புலியின் தோற்றத்துடன் திருவாலங்காடு, ஆனைமங்கலம் ஆகிய சோழர்காலச் செப்பேட்டு வளைய முகப்பிலுள்ள புலிகளையும் ஒப்புநோக்க அவையும் புள்ளிப் புலியாகவே உள்ளமை புலனாகின்றது.

தமிழகப் புலி

தமிழகத்தில் நிலவும் சிறுத்தைப்புலிகளுள் இருவகை இனமுண்டு. ஒன்று, வடிவில் பெருமிதத்துடன் பூத்தொகுதி போன்ற புள்ளிகளை உடலில் வரிசை வரிசையாகப் பெற்ற 'பொறிப்புலி' என்னும் 'பெருஞ்சிறுத்தைப்புலி'. மற்றொன்று சிறு சிறு புள்ளிகளை நிரவலாக முகத்திலும் உடலிலும் பெற்ற 'புள்ளிப்புலி' எனப்படும் 'சிறுத்தைப் புலி'யாகும்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் 'வரிவயங் கிரும்புலி' எனவும்[29], சிலப்பதிகாரத்தில் 'கொடுவரி யொற்றி' எனவும்[30] சோழரின் இலச்சினைக்குரிய புலி குறிக்கப்படுகின்றது.

பிற்காலத்தார், சோழர்கட்குரிய இலச்சினைப்புலி வங்காள வேங்கைப் புலியெனக் கொண்டதற்கு இம் மயக்க நிலையே காரணமாகும். ஆயினும் 'பூத்த வேங்கையைப் புலியெனக் கருதிய' எனும் குறிஞ்சிக்கலிப் பாடலடியும்,[31]

> *"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்,*
> *இரும்புலிக் குருளையிற் றோன்றும்"*

என்னும் குறுந்தொகைப் பாடற் பகுதியும்,[32] பெருஞ்சிறுத்தைப் புலியின் தோற்றத்திற்குரிய விளக்கமாக அமைந்திருப்பது சோழர் கால இலச்சினைக்குரிய புலி இன்னது என்பதற்கு அரண் செய்கின்றது. இக் கருத்தினை அறிஞர். பி. எல். சாமி அவர்களும் விளக்கியுள்ளார்.[33]

மேலும் புலி என்ற சொல்லிலிருந்து தோன்றியதே புள்ளி என்பதாகும் என்பர். சான்றாக, புள்ளியுடைய புறாவைப் 'புலிப்புறா' என்று மக்கள் அழைப்பதனைக் கூறலாம்.[34]

பொறிப்புலியை, வரிப்புலியெனக் கண்டு வேட்டையாளரும் மயங்குதல் உண்டு.

''வரிப்புலியாகிய வங்காளப் புலிக்கு உடலில் வளைந்த நெடிய வரிகள் உண்டு. பொறிப்புலிக்கு அவ்வரிக்கு இணையாகத் தோற்றங் கொள்ளும் பூப்போன்ற புள்ளிகள் வரிசையாகவும், அழகாகவும் அமைந்திருக்கும். புள்ளித் தொகுதிகளினால் அமைந்த பொய்வரித் தோற்றத்தினால் தொலைநோக்கில் சிறுத்தையா? வேங்கையா? என்பதைத் தேர்ந்து உறுதி செய்தல் எளிதன்று'' எனப் புலிவேட்டையில் தேர்ந்த 'லெப்டினென்ட் கர்னல் பொல்லாக்' தம் அனுபவக் குறிப்பில் எழுதியுள்ளார்.[35]

வங்காளப் புலி எனப்படும் வரிப்புலிக்கு வாழுந் தட்ப வெப்பச் சூழல் தமிழகத்தில் இல்லை. தமிழகக் காடுகளில் சிறுத்தைப் புலியினமே பெருகி வாழ்ந்து வருகின்றது.

இவ்வகைக் காரணங்கட்கு ஏற்பச் செப்பேட்டு வளைய முகப்பில் இலச்சினையாக அமைக்கப்பட்டுள்ள புலியின் உருவம் உள்ளது. எனவே, பண்டைச் சோழரது சின்னம் 'சிறுத்தைப் புலி உருவே' என்னும் கருத்து நிலைபெறுகின்றது.

2. சோழ பாண்டியம்

முகப்பிலச்சினையிலமைந்த புலிக்கெதிரே ஒத்த அளவில் 'இணைகயல்கள்' செங்குத்தாகத் தலைப்புறம் மேலாகப் பொறிக்கப் பட்டுள்ளன. இரட்டை மீன்களுள் ஒன்று அளவில் பெரியதாயும் மற்றொன்று சிறியதாயும் இருப்பது ஆண் பெண் என்னும் வேறு பாட்டினை உணர்த்தும் பாங்கில் உள்ளன.

இம்மீன்கள் இரண்டும் புலியை ஒத்த அளவில் ஒரே சம நிலையில் இணையாகப் பொறிக்கப்பட்டுள்ளமை, பாண்டிய நாடு, முதல் இராசராசன் ஆட்சியிலிருந்து சோழராட்சியோடு இணைக்கப் பட்ட ஆட்சியாகவே இருந்தது என்பதற்குரிய சான்றாகுமெனலாம்.

இணைகயலின் ஏற்புடைமை

முதல் இராசராசன் காலத்தில் பாண்டிய நாடு சோழராட்சிக் குட்படுத்தப்பட்டமையின் இராசராசன் 'தண்டமிழ் நாடன்' எனப் புகழப்பட்டுள்ளான்.

சோழ பாண்டிய நாடுகள் ஓராட்சிக்குள் நிகழ்ந்ததற்குரிய சின்னமாகவே, புலி, மீன்கள் ஆகிய இரு உருவங்கட்கும் மேலே இருபுறக் கவரியுடன் கூடிய கொற்றக்குடை அமைக்கப்பட்டிருப்ப துடன், பக்கங்களில் மங்கலச் சின்னங்களும் விளங்குகின்றன. இதற் கேற்ப, முதல் இராசராசனின் திருக்கோயிலூர்க் கல்வெட்டில்,

"ஒற்றைவெண் குடைக்கீழ்
இரட்டைவெண் கவரி"

எனும் புகழுரை காணப்படுகின்றது.[36] இவ்வாறாகக் கொற்றக்குடை யொன்றின்கீழ் கவரிகள் எடுத்த மதிப்புடன் புலியும், கயலிணையும் ஒரே தகுதியில் இருப்பது, முதல் இராசராசன் பாண்டியரை வென்று நாட்டைத் தன்னாட்சிக்குட்படுத்தினானாயினும் பாண்டிய அரசை மதித்திருந்தான் என்பதைப் புலப்படுத்துகின்றது. இக்கருத்தினைக் கொண்டே இராசராசன் தனது மெய்க்கீர்த்தியுள், பாண்டியரை வென்றடக்கியதாகக் கூறாமல்,

"தன்னெழில் வளருழியில் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராஜ கேசரி வர்மரான
ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ......"

என்றுபாண்டிய அரசைமதித்தேற்றபொருளுடன் பொறித்துள்ளான்.[37]

மற்றும் முதல் இராசேந்திரன் காலத்தில், அவன் மகன், முதல் இராசாதிராசன் 'சோழபாண்டியன்' என்னும் சிறப்புப் பெயருடன் பாண்டிநாட்டு மன்னனாகவே நாட்டை ஆண்டு, மக்களிடம் மாட்சி பெற்றுள்ளான்.[38] எனவே, முதல் இராசேந்திரனின் காலத்திய சோழ பாண்டிய இணையரசின் சிறப்பினை வெளிப்படுத்தும் ஒப்பற்ற சின்ன மாகவே கரந்தைச் செப்பேட்டு வளைய முகப்பிலமைந்த இலச்சினை விளங்குகின்றதெனலாம்.

மங்கலச் சின்னத்தின் மாண்பு

புலிக்குப்பின், வரிசையாகத் திருவிளக்கு, கொடி, அங்குசம், உடைவாள் ஆகிய நான்கு அரச மங்கலச் சின்னங்களும், மீன்களுக்குப் பின் திருவிளக்கு, கொடி, அங்குசம் ஆகிய மூன்று மங்கலச் சின்னங் களும் பொறிக்கப்பட்டுள்ளன.

பாண்டியரைச் சோழர், வெற்றி கண்டதன் மேன்மைக்கு அறி குறியாக வாளுடன் கூடிய மங்கலச் சின்னங்கள் நான்கும் புலி யுடன் சார்ந்திருப்பதும், வாளொழிந்த ஏனைய மூன்று மங்கலச் சின் னங்கள் இணைகயலைச் சார்ந்திருப்பதும் ஏலாற்று நோக்குடன் அறியத்தக்கதாகும்.

இவ்வாறமைந்த சோழராட்சி இலச்சினை அட்டமங்கலச் சின் னங்களுடன் வட்டப் பரப்பின் மேற்பகுதியில் முக்காற் பங்கினை ஏற்று நிற்க, கீழே சோழர்கள் வென்றடக்கிய நாடுகளின் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

வெற்றிச் சின்னம்

வெற்றி கொள்ளப்பட்டமைக்கு அறிகுறியாகச் சேரரின் வில் லுருவம், புலி, கயல், உருவங்கட்கு இருப்பு வரம்பாகத் தலைகீழாக அமைந்துளது. வில்லின் வளைந்த கோல் கீழ்வட்ட விளிம்போடு, அணைந்து நிற்க, கோலிற்கும் நாணிற்கும் உட்பட்ட கால்வட்டப் பரப்பில், முதல் இராசேந்திரனால் வெற்றி கொள்ளப்பட்ட பிற நாடு களின் சின்னங்களாகிய முழவு, தவிசு, பன்றி, சுவத்திகம், ஐந்து இதழ்த் தாமரை ஆகிய ஐந்து சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

செப்பேட்டு நிறைவும் — பிரசஸ்தி ஆண்டும்

57 செப்பேடுகளும், முப்பெரும் பிரிவாக அமைந்துள்ளன. முதற்பகுதி : மன்னர் மரபுப் புகழ்ச்சி. இரண்டாவது : அற விளக்கம். மூன்றாவது : தானம் பெற்ற அந்தணரைப் பற்றிய விளக்கம்.

இவற்றுள், முதற் பகுதியாகிய மூன்று ஏடுகளில் தொடர் எண் குறிக்கப்படாமல் உள்ளது.

இம் முதற்பகுதியில் குறிக்கப்பெறும் முதல் இராசேந்திரனின் கடாரம், கங்கை வெற்றிகள், இம் மன்னனுடைய ஆட்சியாண்டு பத் திற்குப் பின்னரே நிகழ்ந்துள்ளன. அக்காலம் கி. பி. 1025க்குப் பின்னர் என்ப.[30]

இச்செப்பேட்டு அறமோ, கி. பி. 1020 இல் நிகழ்ந்ததாகும். எனவே இம்முதற் பகுதியாகிய மூன்று செப்பேடுகளும், ஏனைய இரண்டு மூன்றாம் பகுதிகளைப் பொறித்த பின்னரே, அறம் நிறை வேறிய காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளன என்பது போதரும்.

மற்றும், கல்வெட்டுக்களிலோ, செப்பேட்டுத் தொகுதிகளிலோ குறிக்கப்பெறும் எத்தகைய அறமும் இறுதியில் காப்பு வணக்க வேண்டுகையோடு நிறைவுறுதல் இயல்பு. ஆனால் 'பிராமணப் பேர்' வெட்டின மூன்றாம் பகுதியின் முப்பது ஏடுகளின் இறுதியிலோ, தேவ தானம், பட்டவிருத்தி முதலிய தானவிருத்திகளைக் குறித்த கடைசிப் பகுதி III அ இன், இரு ஏடுகளிலோ இக்காப்புரையினை யாண்டும் காணக்கூடவில்லை.

முதற் பகுதியின் 72வது செய்யுளில்,

"இராசேந்திர சோழன், தலையை வணங்கினவனாய் இந்தக் கிராமம் நன்றாகக் காப்பாற்றப்பட வேண்டுமென,

நம்பிக்கையுடன் வருங்காலத்து அரசர்களைத் தாழ்ந்து யாசிக்கிறான்''

என்னும் காப்புரை இடம்பெற்றுள்ளது.[40] எனவே, அற நிறைவுச் செய்தியாகப் பொறிக்கப்பட்ட பகுதி மன்னர் மரபுரைப் பகுதியில் உள்ளது என்பதும், இது காலத்தால் ஐந்தாண்டுகட்குப் பின்னர்ப் பொறிக்கப்பட்டுள்ளதென்பதும் தெளிவாகும்.

மூன்றாம் தொகுதிக்குரிய இரண்டேடுகள்

இந்தியத் தொல்பொருள் துறையாளர், தம் குறிப்பில், முதல் முழுமையான தொகுதி 55 ஏடுகளெனவும், சற்றுச் சிறிய வடிவிலுள்ள எஞ்சிய இரு ஏடுகள் சிதைந்த முகப்புக்குரிய தொகுதியினைச் சார்ந்தவை எனவும் கூறியுள்ளனர்.[41]

1972இல் பேராசிரியர் சி. கோவிந்தராசனார் தாம் எழுதிய கட்டுரையில், எஞ்சிய இரு செப்பேட்டுச் செய்திகளும் முதற்றொகுதியினைச் சேர்ந்ததென்று குறிப்பிட்டாராயினும், எண்ணிக்கையில் முழுத் தொகுதி 55ஏடுகளுடையதெனவும், எஞ்சிய இரண்டு செப்பேடுகளும் பிற தொகுதிக்குரியன என்றும் மயங்கக் கூறியுள்ளார்.[42]

1. இப்பிழையான குறிப்புக்களால் ஆய்வுக்குரியதாக அமைந்த கடைசி இரு ஏடுகளிலும் 'திரிபு'க் குறியீடும், பிராமணப் பேர் வெட்டின ஏடுகளோடு தொடரும், 31, 32 ஆகிய தமிழ் எண்களும் முறையாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே இயல்பாகவே இவ்விரு ஏடுகளும் மூன்றாம் பகுதியாகிய அந்தணப்பேர் ஏடுகளோடு தொடர்புகளுடைய ஏடுகளே என்பது அமைகின்றது.

2. திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்திலமைந்த ஊர்களிலுள்ள கோயில்கட்குரிய தேவதான நிலப் பங்குகளும் வேதாகமக் கல்வி விருத்திப் பங்குகளும் இவ்விரு செப்பேடுகளிலேயே கூறப்பட்டுள்ளன.[43]

3. பிரமதேயம் என்பது பிராமணர்க்கு நிலம் வழங்குவதோடு நிறைவு பெறுவதில்லை. அத்தேயத்தார்க்குரிய சமுதாயத் தொழிலாளர்களாகிய உகச்சர், நாவிசர், கணக்கர், குயவர், வண்ணார் ஆகியோர்க்கும், கிராம ஊழியர்கட்கும் உரிய இறையிலி நிலங்களைக் கொடுத்துத் தொழும்பாற்றல் பணித்தலையும் உட்கொண்டிருக்கும்.

இத்தகைய கிராம சமுதாயத் தொழிலாளப் பங்குகள், திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தாராக் காட்டப் பெறுவோர்கட்கு அளிக்கப்பட்டுள்ளமையை, இவ்விரு செப்பேடுகளே விளக்குகின்றன.[44]

4. சதுர்வேதி மங்கலமாகிய இது "வேதவொலியால் செவிடு பண்ணப்பட்ட திசைகளையுடைத்தாய்ப் பொலியட்டும்" என்ற, மன்னர் மாபுரைச் செய்யுட் கருத்திற்கேற்ப, வேத வளர்ச்சிக்கென, ஓதற்கும் ஓதுவித்தற்குமாக, திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில், மீமாம்ச, வியாகரண, வேதாந்த பட்டவிருத்தியாகவும், பவிழியக் கிடைப்புறமாகவும் உரிய நிலதானங்களை இராசேந்திரன் வழங்கியுள்ளான் என்பதை இவ்விரு செப்பேடுகள் புலப்படுத்துகின்றன.

5. மன்னர் மரபுரையின் 77ஆவது செய்யுள் குறிக்கும் செப்பேட்டுச் சிற்பாசாரியர்களாகிய திரிபுவன மாதேவிப் பேராசாரியனும் இராசேந்திர சிம்மப் பேராசாரியனும் செப்பேடுகளில் செய்திகளை வெட்டியதற்காகப் பெற்ற நிலப் பங்கினையும் இவ்விரு செப்பேடுகளே குறிக்கின்றன.

> *"இவ்வூர் சாசனம் வெட்டிப் பூஜ்ஜையாகப் பெற்ற காஷ்மகாரி கிருஷ்ணரங்கனான திருபுவன மகாதேவிப் பேராசிரியனுக்குத் துணி நிலம் வேலி|| இவ்வூர் சாசனம் வெட்டி பூஜ்ஜையாகப் பெற்ற காஷ்மகாரி ஆராவமுது புருஷோத்தமனான ராஜேந்திர சிம்மப் பேராசாரியனுக் குத் துணிநிலம் வேலி" ||உ||உ*[45]

6. திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் இணைக்கப் பட்ட ஊர்களின் எண்ணிக்கை 57ஆகும். பிரமதேய சாசனத்திற் குரிய செப்பேடுகள் 57ஆகும். இவ்வாறு எண்ணிக்கை ஒப்புமை பொருந்திய சிறப்புடன் செப்பேட்டுத் தொகுதி அமைக்கப்பட் டுள்ளமை போற்றத்தக்கதாகும்.

இத்தகைய அகச்சான்றுகளினால், கரந்தைச் செப்பேடுகளின் முழுமையான தொகுதி 57 ஏடுகளை உடையது என்பது தெளிவாகும்

முகப்பு அளவில் எஞ்சியதாகவுள்ள சிதைந்த வளையத்திற்குரிய ஏடுகள் அக்காலத்திலேயே அழிந்து போயின என்னும் உண்மையும் இதனால் புலனாகும்.

மேற்கோள் நூல்கள்

1. S. I. I. Vol. V Ins. No.1407.
2. அப்பர் தேவாரம் — அடைவு திருத்தாண்டகம், பா. 3.
3. "கருந்திட்டைக்குடியின் கல்வெட்டுச் சிறப்பு"—கார்த்திகேயனி, கோ. தமிழ்ப்பொழில், துணர் - 50, இணர் 8, 9.

4 S.I.I Vol. II - Part I. No. 22.
5. கல்வெட்டுக்களால் அறியப்படும் உண்மைகள், ப. 75.
6. A.R.I.E. for 1949-50 p. 3, pubd 1956.
7. S.I.I. Vol. VIII No. 204, 205. 206.
8. "பத்தூர்க் கல்வெட்டுக்கள்" - தெய்வநாயகம், கோ. தமிழகத் தொல்பொருள் துறைக் கருத்தரங்கு மலர், 1977.
9. தமிழக வரலாற்றுச் செய்திகள், பக். 72, 73.
10. க. செ. ப. படம். 11. ஷை
12. A.R.I.E. for 1949 - 50. 13. ஷை p.3.
14. திரு. சி. கோ. இச் செப்பேடுகளை உரிய முறையில் தூய்மைசெய்துள்ளார். 15. பேராசிரியருக்கு எழுதியுள்ள கடிதம். நேர் கூற்று.
16. A.R.I.E. for 1949 - 50.
17. 'Cholas' Sec. Edn. 1955 pp. 1, 8, 113. 141, 176 183, 195, 220, 602, 734.
18. A.R.I.E. for 1949-50 plates. 19. தமிழ்ப்பொழில், துணர் 33—இணர் 3. 20. ஷை துணர் 33 — இணர் 4,5,7.
21. 24 சூலை 1961 தேதியிட்ட 9/5/61 எம். எண்ணுடைய கடிதம். கரந்தைத் தமிழ்ச்சங்கச் செயலருக்கு அற்றைநாள் இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. அ. கோஷ் அவர்கள் எழுதியுள்ள கடிதம். 22. History of Tamilnad, 1976. N. Subramanyan.
23. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பர். சந்திரசேகரன்.
24. " Some new facts about Cholas History"-Lakshminarayana Rao, J.O.R. Vol. 19.
25. கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா மலர், ப. 334. 26. ஷை
37. ஷை 28. க. செ. படம். 29. அகம் 218.
30. சிலம்பு - புகார் 5 : 98. 31. கலி. குறிஞ்சி 2.
22. குறுந். 47. 33. "சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்" பக். 257-265. 34. ஷை ப. 259. 35. ஷை ப. 258.
36. திருக்கோவலூர்ச் சாசனம். 37. S.I.I. Vol II - No. I.
38. பிற்காலச் சோழர் வரலாறு, பண்டாரத்தார், 1954, ப. 176.
39. ஷை 1954, ப. 161-173
40. க.செ. தொகுதி 1, செய்யுள் 72. 41. A.R.I E. for 1949-50 p.4.
42. கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா மலர், ப. 342.
43. க. செ. தொகுதி III. ஏடு, 31, 32. 44. ஷை
45. ஷை ஏடு, 32, ப. 2.

★

2

கரந்தைச் செப்பேடுகள் செய்தியமைப்பு

மூன்று பகுதிகளைக் கொண்டது இச் செப்பேட்டுத் தொகுதி. இப்பகுதிகள் பற்றிய விளக்கங்கள் நிரலாக இவண் காட்டப்பட்டுள்ளன.

மூன்று பகுதிகளும் செப்பேட்டுச் சாசன அமைப்பு முறைக்குரிய முத்திறம் பெற்றனவே. அவற்றின் நுதல் பொருள்கள் தமிழக வரலாற்றாய்வின் பல்துறைகளில் குறிப்பிடத்தக்கன.

முற்கால பிற்காலச் சோழமன்னர்களின் வரலாறு; பதினோராம் நூற்றாண்டில் சோழர் ஆட்சி முறை; சமுதாய நிலை; அரசியல் சூழலில் தமிழ்மொழியின் நிலை; வேளாண்மை; அரசியல் வருவாய் தெய்வ கோட்டங்கள் எனத்தக்க வரலாற்றியல், அரசியல், சமுதாயவியல், மொழியியல், வேளாணியல், பொருளியல், சமயவியல் அனைய ஆய்வுகட்குத் துணைபுரியத் தக்கனவாக அமைந்துள்ளன.

காப்புச் செய்யுள் (அனுஷ்டுப் சுலோகம்)

இது, செப்பேட்டுக்கோப்பு வளையத்தின் வட்டமான முகப்பில் உள்ளது. முகப்பின் நடுவில் புடைப்பாக வார்க்கப்பட்டுள்ள சோழர் ஆட்சிக்கமைந்த இலச்சினையைச் சுற்றியதாகவுள்ள வட்ட விளிம்பிலமைந்துள்ள இச் செய்யுள் கிரந்த எழுத்துக்களாலான வடமொழிச் சுலோகமாகவே செய்யப்பட்டுளது. முகப்பிலச்சினையின் தலைப்பிலுள்ள கொற்றக்குடை உருவிற்கு நேர் உச்சியிலிருந்து தொடங்கி வலமிட்டுத் தொடர்ந்து தலைப்பிடத்தில் கூடும் பாங்கில் இச் செய்யுள் அமைந்துள்ளது.

ஒற்று நீங்க 32 எழுத்துக்களாலான வடமொழிச் சுலோகங்கள் முகவுரை வாழ்த்துப் பொருள் தருவதாக அமையின் அவை 'அனுஷ்டுப்' சுலோகங்கள் எனப் பெயர்பெறும். இவ்விலக்கண அமைதி பெற்றதாகவே இச்சுலோகமும் 32 எழுத்துக்களால் முறைபெற வியற்றப்பட்டுள்ளது.

"ராஜத் ராஜன்ய மகுடஸ்ரேணி ரத்நேஷு ஸாஸநம்
ஏதத் ராஜேந்ர சோளஸ்ய பரகேசரி வர்ம்மண :"

என்பது முகவுரைச் செய்யுளின் (அனுஷ்டுப்) வடிவமாகும்.[1]

இதன் பொருள் :

"பரகேசரிவர்மனான இராசேந்திர சோழனுடைய இந்த சாசனம், அரசர்களின் முடிவரிசைகளிலுள்ள இரத்தினங்களின் மீது செலுத்தப்பட்டது"

என்பதாகும்.

அரசர்கட்கெல்லாம் அரசனாக முதல் இராசேந்திர சோழன் இச்சாசனத்தை அளித்தவனாவான். அவனதாணை அரசர்களால் தலைவணங்கி ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும் எனவே, இவ்வறம் ஏனைய பிற்காலத்தரசர்களாலும் போற்றிக் காத்தற்குரியது என்னும் அறக்காப்பு நோக்குடன் இச்செய்யுளுரை அமைந்து விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வடமொழிக் கிரந்த எழுத்துக்களால் இச்செய்யுள் உலோக வார்ப்புத் தொழிலால் ஆசிட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.[2] இடைவெளி சிறிதுமின்றி வலமிருந்து இடமாக வளையமாகத் தொடர்ந்து முடிகின்றது.

சாசன முத்திரை

சோழர் குலத்தோற்றம் முதலாக, முதல் இராசேந்திர சோழனின்

எட்டாவது ஆட்சியாண்டுவரையிலும் (கி. பி. 1020)* நிகழ்த்திய வெற்றிச் சிறப்புக்களையும், அறச் செய்திகளையும், சாசனத்தை எழுதியவர், சாசனத்தைச் செப்பேடுகளில் வெட்டியவர் ஆகியோரைப் பற்றியும், அறச்செயல் எக்காலத்தும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற நோக்குடன் அரசன் கூறும் காப்புரை பற்றியும் தெளிவாகக் கூறுகின்றது.

முதல் மூன்று ஏடுகளில் ஆறு பக்கங்களில் இச் செய்திகள் எழுபத்தெட்டு வடமொழிச் செய்யுட்களால் பொறிக்கப்பட்டுள்ளன. எழுத்துக்கள் அனைத்தும் வடமொழிச் சொல்லொலிகட் கேற்ப பழங்கிரந்த எழுத்துக்களாலானவை.

மன்னர் குலப் புகழ்பாடும் இப்பகுதியினை வடமொழியில் பிரசஸ்தி' என்பர். தமிழில் 'மன்னர் மரபுப் புகழ்ச்சியுரை' என்று வழங்கலாகும்.

இப்பகுதிக்குரியதாகச் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ள செய்திகளனைத்தும், 131 வரிகளாகவும், செய்யுள் நடையுள்ளனவாகவும் தொடர்ந்துள்ளன. ஒரு செய்யுளையும் தொடரும் பிறிதொரு செய்யுளையும் வேறுகாண்பதற்கு, இடையில் || எனும் இரு செங்குத்து இணை கோடுகள் குறிக்கப்பட்டுள்ளன. இவ்விணைகோடுகளே இச் செப்பேடுகளின் செய்தித் தொடர்கட்கமைந்த நிறுத்தற்குறியாகவுள்ளமை அறியத்தக்கதாகும்.

மன்னர் மரபுப் புகழ்ச்சியுரையின் முதல் செய்யுள்,

''*ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மீதர*''[3]

என்று தொடங்குவதாகும்.

> ''*திருமகளின் பருத்த இரு திருமுலைத் தடங்களின் குங்குமக் குழம்பினால் அடையாளமிடப்பட்டனவும் சுழன்று கொண்டுள்ள மந்தரமலையின் உயர்ந்த குடுமிகளில் உராய்வதால் மிக்கு ஒளிபெற்ற பொன்னாலான தோள் வளைகளை உடையனவும், மூவுலகத்தையும் காப்பனவும், சார்ங்கம் முதலிய ஆயுதங்களைத் தாங்கித் திகழுகின்றனவுமான இந்திர நீலக்கல் போன்ற திருமேனியை உடைய திருமாலின் புயங்கள் உங்களுக்கு வேண்டிய அளவு செல்வத்தைக் கொழிக்கச் செய்வதாக*''

* 63, 64 ஆகிய செய்யுட்கள், 12, 13ஆம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த வெற்றிகளைக் குறிப்பதால், சாசனம் செப்பேடுகளில் பொறிக்கப் பெற்ற காலமாகிய கி. பி. 1025 அளவில் 'பிரசஸ்தி' எழுதப்பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளது என்பது புலனாம்.

எனும் முதற் செய்யுளுடன் இரண்டாவது செய்யுளும் அரச வாழ்த்து ஆகும். சூரிய குலத் தோன்றல்களை அடுத்த செய்யுளில் காணலாம்.

3ஆவது செய்யுளில் 'கதிரவனும்,' அவன் மகனாக 'மனு வும்,' அவன் மகனாக 'இட்சுவாகுவும்' அவன் மகனாக 'மாந்தர் தா'வும் குறிக்கப்பட்டுள்ளனர்.

4ஆவது செய்யுளில் 'முசுகுந்தன்' குறிக்கப்பட்டுள்ளான்.

5ஆவது செய்யுள் 'சிபியினைக்' குறிக்க,

*"மன்னுயிர்க்கெனவே தன்னுயிரைக் காத்தவனும்
பெரும் பண்புகளால் நிறைந்தவனுமாகிய
அவ் வேந்தனுடைய குணங்களைப் புலவர் பெருமானாகிய
வியாசரல்லது எடுத்துரைக்க வல்லார் யாவர்?"*

என 6ஆவது செய்யுள் அவனைப் புகழ்கின்றது.

7ஆவது செய்யுள் 'சோழன்' எனும் குடிப்பெயர் முதல்வனைப் புகல்கின்றது.

8ஆவது செய்யுளில் சோழனின் மகனாகவும், பெயரனாக வும், 'இராச கேசரி,' 'பரகேசரி,' என்பார் காணப்படுகின்றனர். இவர்கள் பெயர்களையே பின்னரசர் மாறிமாறிப் பட்டப் பெயராகப் புனைந்தனர் என 9ஆவது செய்யுள் குறிக்கிறது.

10, 11 ஆகிய செய்யுட்கள் காலனை வென்றவன் என 'மிருத் யுஜித்' எனும் 'சுரகுருவைக்' குறிக்கின்றன.

12ஆவது செய்யுளில் 'உபரிசரவசு' என்னும் மன்னன் காட்டப் பட்டுள்ளான்.

*"மனத்திலும் கடியதாகிய சிறந்த விமானத்தில் ஏறி,
வான்வெளியில் இயங்கியவனும், காவிரிக்குக்
கரை கண்டவனும், பகைவர்க்குக் கூற்றுவனை
ஒத்தவனும் ஆகியவன் எவனோ அத்தகைய
கரிகாலன் அம்மரபில் தோன்றினான்"*

என 13ஆவது செய்யுள் 'கரிகாலனின்' தோற்றத்தைப் புகழ்கிறது.

14ஆவதில் இடைக்காலச் சோழர், பெயருடன் விளக்கப் படாது பொதுப்பட,

"எண்ணற்ற வேந்தர்கள் மறைந்தபிறகு"

எனக் குறிக்கப்பட்டபின், பிற்காலச் சோழர்களின் முதல்வனாகிய 'விசயாலயன்' தோற்றம் பெறுகிறான்.

15ஆவது செய்யுளில் இவன் மகன் 'ஆதித்த சோழன்' சுட்டப் படுகின்றான்.

16ஆவதில் உவமை சிறக்க,

"பாற்கடலில் திங்கள் தோன்றியது போல"

ஆதித்தனுக்கு மகனாகிய 'பராந்தக சோழன்' பிறந்தானென்று புகழப் படுகிறான்.

17, 18, 19, 20,21 ஆகிய ஐந்து செய்யுட்களும் பராந்தகனின் பலதிற அறங்களைப் போற்றுகின்றன. அவற்றுள் இம்மன்னன் பல்லவ அரசன் ஒருவனை வென்றமையும், வீரநாராயணம் எனும் ஊரைத் தன் பெயரால் ஏற்படுத்தியமையும் குறிக்கப் பெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகளாகும்.

22ஆவது செய்யுள் ஆய்வுச் சிறப்புக்குரியது. பராந்தகனுக்குப் பின் அவனின் மூன்றாம் மகன் 'அரிஞ்சயன்' குறிப்பிடப் படுகின்றான். இடையில் ஆட்சியுற்ற இராசாதித்தனும், கண்டராதித்தனும் விடுக்கப் பட்டுள்ளனர்.[4]

23ஆவதில் 'பராந்தகன் II' அரிஞ்சயனின் மகனாகத் தோற்றம் பெற்றமை புகலப்பட்டுள்ளது. அவனது சேவூர்ப் போரும், 24, 25ஆவது செய்யுளில் விளக்கப்பட்டுள்ளன.

26ஆவது செய்யுள் முதல் 38ஆவது செய்யுள்வரை 12 செய்யுள்கள் முதல் 'இராசராச சோழனை'ப் பற்றியன. இவனுக்கு முன் சுந்தரசோழனாகிய இரண்டாம் பராந்தகனுக்குப் பின் சோழ அரியணை ஏறிய[5] 'மதுராந்தகன்' எனும் இளமைப் பெயருடைய உத்தம சோழனோ, அரசியலதிகாரிகளால் கொலை செய்யப்பட்ட 'ஆதித்த கரிகாலனோ' இவண் குறிக்கப் பெறவில்லை.

வரலாற்றில் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டிய சில நிகழ்ச்சிகள் இவற்றுள் காணக்கிடக்கின்றன. அவை,

1. சத்தியா சிரயனுடன் இராசராசனே தனித்து நேருக்கு நேர் போரிட்டுப் புறங்கண்டமை

2. தெலுங்க பீமசோடனை வென்றமை.

இச் செய்தி குறித்த செய்யுட்கள் மிக அழகான வர்ணனைகளால் அலங்கரிக்கப்பட்ட சொற்சித்திரங்களாகத் திகழ்வதை ஒருபாட்டால் காணலாம்.

> *''அவன் (இராசராசன்) ஊழிக்காலத்துக் கடல் போன்ற தனது படையைத் திருப்பிவிட்டு ஒரு நொடியில் தான் ஒருவனாகவே குதிரையில் ஏறிக் கொண்டு...''*

சத்தியாசிரயனுடைய படையை வென்றான் எனும் 29ஆவது செய்யுளறியத்தக்கது

> *''குதிரைகளின் வரிசகளாகிற அலைத் தொகுதிகளையும் யானைகளாகிற முதலைகளால் சூழப்பட்டதும், காலாட்களின் கூட்டங்களாகிற கொந்தளிக்கும் நீர்ப் பரப்பை உடையதும் மண்ணுலகத்தையே மறைப்பதுவுமான சத்தியபசிரயனுடைய படை...''* (செய். 34)

எனுமிச் செப்பேட்டுச் செய்திப் பகுதி கி. பி 12ஆம் நூற்றாண்டின் கவிச்சக்கரவர்த்தி செயங்கொண்டாரின் கொடையாகத் தமிழுருவம் பெற்று விளங்கும் 'கலிங்கத்துப் பரணியில்',

''எறிகட லோடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபதி யொடுபரி மலைக்கவே
கனவரை யொடுவரை முனைத்தபோல்
கடகரி யொடுகரி முனைக்கவே''

என்பன போன்ற பாடல்களாக உருப்பெற்றன எனக் கருதற்கு இடமுண்டு.[6]

மேலும் சைவநெறியிலும், சிவன் மீதும் மிக்க பற்று உடையவனாகத் திகழ்ந்த இராசராசனை உவமிக்கின்ற போழ்தெல்லாம் பிரசஸ்தியை எழுதிய நாராயணனெனும் கவிஞன்,

''சிவபெருமான் சடையினால் தாங்கியது போல'' — செய். 29

''பினாகம் என்னும் வில்லையுடைய சிவபெருமான் போல்''
— செ. 32

"சிவபெருமான் வீற்றிருக்கும் சிறந்தமலை வரையிலும்"
— செ. 36

எனச் சிவபெருமானையே உவமித்துக் காட்டுஞ்சிறப்பு, இராசராசனது சைவப் பற்றினையும், 'சிவபாத சேகரன்' எனும் பெயரினையும் விளக்க முறச் செய்வதாகும்.

இராசராசன் பற்றி மேலுமோர் புதிய செய்தியாகக் கரந்தைச் செப்பேடுகள் வழங்கும் சிறப்பு, 51, 57ஆவது செய்யுள்களுக்கு உரித்தாகும்.

"மான்ய கேடத்தை நான் பிடிக்காதவரை
கிரிஹர விகாரம் செய்தில்லை" — செ. 51

எனத் தன் இறுதிநாட்களில் சூளுரைத்து அரண்மனையில் வாழாது இருந்தான் இராசராசன். இதனை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டு மான்ய கேடத்தைக் கைப்பற்றி எரிபரந்தெடுத்தழித்து, தன் புயங்களால், தன் தந்தை இராசராசன் உரைத்த சூளுரையை நிறைவேற்றினான் இராசேந்திரன். நிறைவேற்றப்பட்ட சூளுரையினையும், இத்தகு பேராற்றலையும் இப்பகுதியில் புதிய வரலாற்றுச் செய்தியாகக் காணலாம்.

39ஆவது செய்யுள் முதல், 'இராசேந்திரனைப்' பற்றிய புகழுரைகள் தோற்றம் பெறுகின்றன. கூடுதல் 78 செய்யுட்களில் சரிபாதியாகிய 39ஆவது செய்யுள் முதல் இவனது புகழ்மாலை இடம்பெறுவது கவிஞனது கவிநுட்பத்திற்குப் பிறிதோர் சான்றாகும். 36 செய்யுட்கள் இராசேந்திரனின் புகழ் பாடுகின்றன.

எவ்வாறு இராசராசன் சிவபெருமானாக உவமிக்கப்பட்டானோ அதைப் போன்றே இராசேந்திரனும், திருமாலோடு உவமிக்கப் பெறுகின்றான். இது,

"திருமாலே உலகில் பிறந்துவிட்டார்" — செ. 39

எனும் தொடரால் இனிதறியத்தக்கது.

39ஆவது இவனது தோற்றத்தையும், 40, 41, 42 செய்யுட்கள் இவனது இளமைக் காலத்தையும் விளக்குகின்றன.

43 முதல் 47 வரை ஐந்து செய்யுட்கள் இவனாட்சியில் சோணாடு பெற்ற நல்வாழ்வை விளக்குகின்றன.

48ஆவது செய்யுள் 'காம்போஜ தேசத்தரசன்' இராசேந்திரனுக்கு அளித்த தேர்ப்பரிசைப் புலப்படுத்துகின்றது. பிற்காலச் சோழர் வரலாற்றிற்கு இச்செப்பேடுகள் தரும் புதிய வரலாற்றுச் செய்திகளுள் இதுவுமொன்றாம்.

49ஆவது செய்யுளும் இதனையொத்த 'பத்ரம்' எனும் சிறந்த இனத்து யானைகளைப் பரிசிலாகச் 'சக்கரக்கோட்டத்து அரசன்' அளித்தமையைக் குறிக்கின்றது.

50ஆவதில் வடபுல வெற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

51 முதல் 57 வரை ஏழு செய்யுட்களில்,

மேகமண்டலத்தைத் தொடும் சால மரங்களால் சூழப்பட்ட மான்ய கேடத்தை எரித்து அழித்தான் எனவும், அழகியதும், காற்றுக்கு நிகரான வேகமுள்ளதும் ஐந்து தாரைகள் உள்ளதுமான நல்ல குதிரையின்மேல் ஏறிக்கொண்டு இராசேந்திரனும் தன் தந்தையினைப் போலவே போரிட்டதைப் பற்றி வருணனைகளுடன் விளக்குகிறது.

58, 59ஆவது செய்யுள்கள் இவனது சிங்கள வெற்றியினை முழுமையாகக் குறிக்கின்றன.

60ஆவது செய்யுள் பழந்தீவு வெற்றியினையும்,

61ஆவது செய்யுள் மேலைச் சாளுக்கிய ஜயசிம்மனை வென்றதால் 'ஜயசிம்ம சிம்மசரபன்' எனப் புகழப் பெற்றதனையும் புகழ்கின்றன.

62ஆவது செய்யுள் 'தைலனுடைய சந்ததியினை எரிந்தத'னையும் கடலைக் கடந்த கடாரத்தை வென்றதனையும் குறிப்பிடுகின்றது.

63ஆவது செய்யுள் கேரள வெற்றியினையும்,

64 ஆவது செய்யுள் கங்கை வெற்றியினையும் குறிப்பிடுகின்றன. இச் செய்யுட்களே இம்முதற் பகுதி, ஏனைய இரு பகுதிகளைக் காட்டிலும் காலத்தால் பிந்தி, கி. பி. 1025ஐச் சார்ந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றன. 65ஆவது செய்யுள், சிதம்பரத்தை இராசேந்திரன் அந்தணர்க்குத் தானமாக அளித்ததனையும், அவ்வந்தணர் இவனைப் புகழ்வதனை 66ஆவது செய்யுளும் குறிக்கின்றன. இவற்றைத் தொடர்ந்து இச் செப்பேடுகளின் இரண்டாம் பகுதி குறிப்

பிடும் திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தினைப் பற்றி 67, 68, 69, 70, 71 ஆகிய ஐந்து செய்யுட்கள் விளக்குகின்றன. இவனது 'அமைச்சர் ஸ்ரீசகநாதன்' விண்ணப்பிக்க, தன் தாயின் பெயரால் இராசேந்திரன் பிரமதேயம் வழங்கினான்.

கிருஷ்ணபுரத்து 'நாராயணன்' இக்கிராமக் காரியங்களைக் காணும் பணிபெற்றுள்ளான்.

> "இந்த ராசேந்திர சோழன் தலையை வணங்கின வனாய் இந்த கிராமம் நன்கு காப்பாற்றப்பட வேண்டும் என்ற நம்பிக்கையுடன் வருங்காலத்து அரசர்களைத் தாழ்ந்து யாசிக்கிறான்"

எனும் 72, 73ஆவது செய்யுட்கள் சாசன முடிவில் இடம் பெற வேண்டியவை. ஆனால் காப்புச் செய்தியாகப் 'பிரசஸ்தியில்' இடம் பெற்றுள்ளன. மூன்றாம் பகுதியின் இறுதியில் அமைதற்குரித்தான இச்செய்தி, முதற்பகுதியில் இடம் பெற்றுள்ள பாங்கு இம் முதற் பகுதியாகிய 'பிரசஸ்தி' ஏனைய இரு பகுதிகளுக்குப் பிறகே தோற்றம் பெற்றமையினைக் காட்டுகின்றது.

'பண்டிதசோழன்' எனும் சிறப்புப் பெயர் இராசேந்திரனுக்கு எய்திய முறைமை இப்பகுதியில் விளக்கப்படுகிறது.

74, 75 ஆகிய செய்யுட்கள் இச்சதுர்வேதி மங்கலமும், இவ் வரசனும், ஊழியளவும் வாழட்டும் என வாழ்த்துகின்றன.

76ஆவது செய்யுள் இம்மன்னர் மரபுரையினை இயற்றிய வடமொழிக்கவியை,

> "பக்கத்துக் கிராமத்தில் வசிக்கிறவரும் சங்கராரிய ருடைய பிள்ளையுமான நாராயணன்"

என அறிமுகப்படுத்துகிறது. 77, 78ஆவது செய்யுட்கள் இச்சாச னத்தை ஏடுகளில் பொறித்த,

> "திரிபுவன மாதேவிப் பேரசாரியனையும்"
> "ராசேந்திர சோழப் பேராசாரியனையும்"

சிற்பங்களிலும் ஆகமங்களிலும் மெய்ப்பொருளை நன்குணர்ந் தவர்களாக வெளிப்படுத்துகின்றன.

பகுதி இரண்டு

இச்செப்பேட்டுத் தொகுதியின் தோற்றத்திற்கான அறச் செயலும் ஆணையும் இப்பகுதியில் காணப்படுகின்றன. முதல்

இராசேந்திர சோழன், தன் எட்டாவது ஆட்சியாண்டின் 107ஆவது நாளில் இவ்வறத்திற்காக ஆணையிட்டுள்ளான். அவ்வாணை அவ்வியாண்டின் 380ஆவது நாளில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இடை நாட்களில் அவ்வறவாணை அரசியல் அமைப்பில் எவ்வாறெல்லாம் செயற்படுத்தப்பட்டது எனும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இராசேந்திரன் காலத்திய,

1) இடப்பெயர்கள் 2) நிலவியற் பகுப்பு 3) சோணாட்டு அரசியற் பிரிவுகள் 4) இயற்கை அமைப்பு. 5) சிறுதெய்வங்கள்.

என்ற தலைப்பில் ஆய்வு செய்தற்கமைந்த வகையில் இப்பகுதி 22 ஏடுகளின் 44 பக்கங்களில் 1066 வரிகளால் பொறிக்கப்பட்டுள்ளது மொழியும் எழுத்தும் நற்றமிழே. நிறுத்தற்குறியான || எனும் இணை செங்குத்துக் கோடுகள் இவ்விருபத்திரண்டு ஏடுகளிலும் இடம் பெறவில்லை. செய்திகள் அனைத்தும் ஒரே தொடராக நீட்சி பெறுகின்றன. கீழ்க்கண்டவாறு அறச்செயல் நிகழ்ச்சிகள் குறிக்கப் பட்டுள்ளன.

இரண்டாம் பகுதி - 22 ஏடுகள் தரும் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கல அமைப்பியல் செய்திக் குறிப்புகள்.

1.	இராசேந்திரன் பெரும்பற்றப் புலியூர் மாளிகையிலிருந்து, தன் தாயின்பெயரால் பிர்மதேய அறச் செயலைத் தோற்றுவித்தமை.	ஏடு 1, பக் 1, வரி 1-6
2.	பிர்மதேய தானத்திற்குரிய 51 ஊர்களின் பெயர்கள்.	ஏடு 1, பக் 1, வரி 6-24 + ஏடு 1, பக் 2, வரி 1 - 5 வரை.
3	ஒவ்வோரூரிலும் நாட்டுப் பொது, வெண்ணிக் கூற்றுத் துப் பிர்தேயங்கள், அதிகாரிகள் உரிமை ஆகிய வகையில் நீங்கும் நிலனும், பிர்மதேயத்திற்குக் கொள்ளும் நிலனும்.	ஏடு 1, பக் 2, வரி 6 - 24 + ஏடு 2, பக் 1, வரி 1 2 வரை

4.	பிர்மதேயத்திற் கமைந்த 51 ஊர்களைத் தனித்தனியே முறையாக அளந்து, அவ்வவ்வூர்களில் உரிமையுடையார் நிலம், பொது நீர்ப்பாசனம், கோயில்கள், பொது இடங்கள் ஆகிய நீக்குவன நீக்கி, பிர்மதேயத்திற்குக் கொண்ட கூடுதல் நில அளவு, அதன் நெல் வருவாய், காசு வருவாய் முதலியன. ...	ஏடு 2, பக் 1, வரி 3-24 முதல் ஏடு 6, பக் 2, வரி 1-12 வரை.
5.	51 ஊர்களிலும் கொண்ட கூடுதல் நிலத்தொகை அளவும், அவற்றிலிருந்து பெறும் கூடுதல் நெல் வருவாயும் காசும். ...	ஏடு 6, பக் 2, வரி 12-13
6.	திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலமெனும் பெயரால் 1080 பட்டர்களுக்கு அரசன் அளித்த பிர்மதேயம். ...	ஏடு 6, பக் 2, வரி 14-19
7.	முதலும், பழைய உரிமையும், பழம்பெயரும் தவிர்த்துத் திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்துள் இணைக்கப்பட்ட பிறவூர்ப்பகுதிகளும், சதுர்வேதி மங்கலங்களும். ...	ஏடு 6, பக் 2, வரி 19-24 + ஏடு 7, பக் 1, வரி 1 - 15 வரை.
8.	'ஆக இப்படி வரியிலிட்டுக் கொள்கவென்று நாம் சொல்ல' எனும் இராசேந்திரன் ஆணை. ...	ஏடு 7, பக் 1, வரி 16-17
9.	அரசன் ஆணையினை, ஓலை எழுதுபவன் எழுதி திருவாய்க் கேள்வி, நாயகம், ஒப்பு ஆகிய அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற, அரசியல் நிர்வாக அதிகாரிகள் ஆய்வு செய்து, ஆணைத்தி செய்தல். ...	ஏடு 7, பக் 1, வரி 16-24 + ஏடு 7, பக் 2, வரி 1-24 + ஏடு 8, பக் 1, வரி 1-2 வரை.

10.	நில அளவை செய்து, சதுர் வேதி மங்கலமாக ஆக்கிய 51 ஊர்களின் பெயர்த் தொகுப்பு ...	ஏடு 8, பக் 1, வரி 3 - 15
11.	அமைக்கப்பெற்ற திரிபுவனமா தேவி மங்கலத்துள் அமைந் திருந்த பிராமணர் உரிமை நிலங்களைப் பிடிசூழ்ந்து எல் லையிட அரசன் தக்க அதிகாரி களை நியமித்தல். ...	ஏடு 8. பக் 1, வரி 16-24 ஏடு 8. பக் 2, வரி 1-8 வரை
12.	முதல் இராசேந்திரனின் எட் டாவது ஆண்டிற்குரிய மெய்க் கீர்த்திப் பொறிப்பு. ...	ஏடு 8, பக் 2, வரி 9-18
13.	நாட்டோருக்கு அரசன் அனுப் பிய திருமுகம். திருமுகம் கண்டு நாட்டோர் அதிகாரிகளுடன் கூடி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து, ஒவ்வோரூரையும் எல் லைகண்டு அளவிட்ட செயல். ...	ஏடு 8, பக் 2, வரி 19-24 + ஏடு 19, பக் 2-ல், வரி 1-3 வரை
14.	திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தின் பெருநான் கெல் லையுள்ளும் அகப்பட்ட பிற வுரிமை நிலங்களைப்பற்றிய விவரம். ...	ஏடு 19, பக் 2, வரி 4-24 + ஏடு 20, பக் 1, வரி 1-4 வரை.
15.	சதுர்வேதி மங்கலத்துள் அடங் கிய நிலங்களின் இயற்கைத் தோற்றங்கள் செயற்கை அமைப்புகள் ஆகியவை பற் றிய குறிப்புகள். ...	ஏடு 20, பக் 1, வரி5-11
16.	'திரிபு' சதுர்வேதிமங்கலத்துள் அடங்கிய விளை நிலங்கட்கு அமைந்த நீர்ப்பாசன வழி களும் நெறிமுறைகளும். ...	ஏடு 20, பக் 1, வரி 12-21

17.	இறை பெறாததாகக் குறித்த வரிவகைகள். ...	ஏடு 20, பக் 1, வரி 22-24 + ஏடு 20, பக் 2, வரி 1-3 வரை.
18.	பிடி சூழ்ந்து பிடாகை நடந்து எல்லை கண்டு, கல்லும் கள்ளியும் நாட்டி அற வோலை செய்து கொடுத்த நாட்டோரும், நாட்டோரோடு எல்லை கண்டு வந்தவரும் அறவோலையினை நிறைவேற்றிய அதிகாரிகளும். ...	ஏடு 20, பக் 2, வரி 4-23
19.	நாட்டோர்கள், அரசியலதிகாரிகள் ஆகியோருடனிருந்து பிடி சூழ்ந்த சபையார்களும், கணத்தார்களும், ஊர்ப்பெருமக்களும் விளக்கமாகக் குறிக்கப்பெறல். ...	ஏடு 20, பக் 2, வரி 23-24 + ஏடு 21, பக் 1, வரி 1-24 + ஏடு 21, பக் 2 வரி 1-19 வரை.
20.	உயர் அதிகாரிகள், ஊர்ப் பெருமக்கள், ஆகியோரின் சான்றுக் கையெொப்பங்களுடன் சாசனமாக நிறைவு செய்யப் பட்ட அறவோலையை, 'வரியிலிடுக' எனச் சொன்ன அதிகாரியும், வரியிலிட்டுக் கொடுத்துப் 'பரதேத்தி' செய்த அதிகாரிகளும். ...	ஏடு 21, பக் 2, வரி 20-24 + ஏடு 22, பக் 1, வரி 1-24 வரை
21.	சோழமண்டலத்துள் அமைந்த பிற வளநாட்டுத் தலைமை அதிகாரிகளின் ஒப்புதலையும் இப்பிர்மதேசம் பெற்றது என்பதனை, அவர்களின் வளநாடு, நாடு, பெயர் ஆகியவற்றுடன் 'ஒக்கும்' என்ற உரையும் கூறி அடைவுடன் சாசனம் நிறைவு பெறுதல். ...	ஏடு 22, பக் 2, வரி 1-7 நிறைவு.

இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் செயல்முறையில் எவ்வாறு நடந்தனவோ அதே வரிசை முறையில் அடுத்தடுத்துக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே நிகழ்ச்சிகள் அனைத்துமே ஓலையில் 'நாட்குறிப்பு' அல்லது 'செயல் விளக்கக் குறிப்பேடு' போலக் குறிக்கப்பட்டு, அதுவே சாசனமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அரசனே ஆணையிடும் தன்மைக் கூற்றுக்களும், நாற்பாற்கெல்லையும் அதிகாரிகளின் ஒப்பும், பணியும் தொடர்பாகவே காணப்படுதல் கண்கூடு. இவ்வறத்தை ஒத்தவொரு பேரறம் பிரமதேயம் பற்றித் தமிழகத்தே இதுவரை கிடைத்திலது.

பகுதி மூன்று

திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் பங்கு பெற்ற (நிலக்கொடை பெற்ற) அந்தணர்களின் மரபும், பெயரும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. இச்சேப்பேட்டுத் தொகுதிகளுள் மிகப் பெரும் பகுதியாகி இலங்குவது இப்பகுதியே. 30 ஏடுகளில் 60 பக்கங்களில் 1378 வரிகளும் தமிழும் கிரந்தமும் கலந்த நடையினதாகவுள்ளன. ஒவ்வோர் அந்தணரின் பெயர் முடிந்தவுடன். முதற் பகுதியில் உள்ளது போன்றே நிறுத்தற்குறியாக || எனும் இணை செங்குத்துக்கோடுகள் பொறிக்கப்பட்டுள்ளன

ஒவ்வோர் அந்தணரும் அவர் வாழும் வளநாடு, நாடு, கூற்றம், கிராமம் எனும் ஊர் விளக்கத்துடன் கோத்திர சூத்திரத்துட்பட்ட விளக்கத்துடன் மரபுப் பெயரையும் பெற்று இயற்பெயரைக் குறித்துப் பின் சிறப்புப் பெயர் அல்லது பட்டப் பெயருடன் குறிக்கப் பட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக ஒன்று காணலாம்.

> *"இராஜேந்திர சிம்ஹ வளநாட்டுத் தனியூர் வீரநாரா*
> *யணச் சதுர்வேதி மங்கலத்துப் பாரத் வாஜ கோத்ரத்து*
> *ஆஸ்வலாயன ஸூத்ரத்து இறையானரைசூர் மதிசூதன்*
> *யக்ஞப் பிரிய பட்டனுக்குப் பங்கொன்று"*[7]

இதுபோன்று 1084 வைணவ அந்தணர்களின் பெயர்களும் குறிக்கப் பட்டுள்ளன திரு நடன காசிநாதன் இவ்வந்தணரின் தொகை 1073 என்பர்.[8] அவ்வெண்ணிக்கை பிழையானது.

பகுதி மூன்று -- அ

திரு கோ. தெய்வநாயகம், இச் செப்பேட்டுத் தொகுதியிலமைந்த பகுதிகளை ஆய்வுசெய்ததின் பயனாக, இதுவரையில் ஆய்வாளர்கள் இவை இரண்டு ஏடுகளும் வேறொரு தொகுதிக்கு உரியவை என்று கூறியிருந்த கருத்தினைத் தக்க சான்றுகளுடன்

மாற்றி, இவை இரண்டும் மூன்றாம் பகுதியின் இறுதியான ஏடு களே யாகுமென நிறுவியுள்ளார். எனவே, மூன்றாம் பகுதியாகிய பிர்மதேய அறவிளக்கப்பகுதி 30 + 2 = 32 ஏடுகளைக் கொண்ட தென்பது தெளிவாகும்.

பகுதி மூன்றின் 1084 வைணவ அந்தணரோடு எஞ்சிய நிலப் பரப்பினைப் பங்காக ஏற்றுத் திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங் கலத்தில் வாழ்வோர் பற்றிய விளக்கம் இவ்விரண்டு ஏடுகளின் 4 பக்கங்களில் 77 வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகு கூடுதற் பங்குகளில் 9 சிவப் பிராமணர்களும் பங்கு பெற்றுள்ளனர். 2 சோதிடப் பங்குகளும், 6 கணக்கப் பங்குகளும், 4 காவிதிப் பங்குகளும், 8 உகச்சப் பங்குகளும், 4 நாவிசப் பங்குகளும், 35 கோயில்கள், சிறு தெய்வங்கள் பங்குகளும், 16 வகையில் வேதக்கல்வி வளர்ச்சிப் பங்குகளும், 1 தச்சக் கொல்லப் பங்கும், 2 சாசன வெட்டிப் பங்குமாகக் கூடுதல் 87 பங்குகளை இம் மூன்றாம் பகுதியின் நிறைவுப் பகுதி விவரிக்கின்றது.

மேற்கோள் நூல்கள்

1. க. செ. தொகுதி, முகப்புச் செய்யுள்.
2. வளைய முகப்புப்படம்.
3. க. செ. தொகுதி முதற்செப்பேட்டு முதல் வரி
4. ஷை பிரசஸ்தி
5. ஷை
6. கலிங்கத்துப் பரணி பாடல்: 403—408.
7. இம்முறை தற்காலத்திய அஞ்சல் முகவரி முறையினை ஒத்துள்ளது.
8 கல்வெட்டியல் — செப்பேடுகள், நடன. காசிநாதன்.

*

3

செப்பேட்டின் எழுத்து நிலை

இராசேந்திரன் காலத்தில் தஞ்சை இராசராசேசுவரத்தில் காணப்படும் கல்வெட்டு எழுத்துக்களுள் சில மேலும் சிறிதளவு வரிவடிவில்திருத்தம்பெற்றுள்ளன. கரந்தைச் செப்பேடுகளில் எழுத்துக் களை வெட்டிய ஆசாரி, ஏடுகளில் முதற்கண் வரிகளை வருவிக் கொண்டு அதன் ஒழுங்கிலேயே எழுத்துக்களை வெட்டியுள்ளான். இக்காரணத்தினால் முன்னர்ச் சாய்வு நிலைகளில் அமைந்திருந்த எழுத்துநிலை நீண்டதொரு படுக்கைக் கோட்டின் அடிப்படையில் அமைக்கும் முறைமையினால் சாய்வு நிலைகளிலிருந்து எழுத்துக்கள் சற்று நிமிர்த்தப்பெற்ற நிலையில் எழுதப்பட்டுள்ளன. வீரமாமுனிவர் அச்செழுத்திற்கென்று வரிகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தியதற்கு முன்னர்க் கரந்தைச் செப்பேடுகளில் அம்முறை கையாளப்பட்டுள்ளது எனலாம். எடுத்துக்காட்டாக, நு, னு, து, லு ஆகிய எழுத்துக் களில் அமைந்த குறுக்குக் கோட்டுநிலை முன்னர்க் கீழே சாய்ந்த தாகவே இருந்தன. அவை இச்செப்பேடுகளில் சமனிலைக் கோட்டுருப் பெற்றிருப்பது, எழுத்துத்திருத்தமெனலாம். உயிர்மெய் எழுத்துக் களில் கி, கீ போன்ற இகர ஈகார ஒலிக்கு அறிகுறியாகத் தலைப் பில் கோடுபெறும் எழுத்துக்கள், முன்னர் ஒரு வளைகோட்டளவில் குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே வடிவமாகக் குறிக்கப்பட்டன. அந் நிலையின் ஒரு வளர்ச்சியாக இச்செப்பேடுதரும் எழுத்துக்களி லமைந்த இகர ஒலி உயிர்மெய்க்கு வளைகோடும், ஈகார ஒலிக்கு அறிகுறியாக அவ்வளைகோட்டின் முடிவில் சற்று உள்வளைவு பெற்றும் இருப்பது எழுத்தின் வரிவடிவின் வளர்ச்சிக்கோர் அறிகுறியாகும்.

உயிரெழுத்துக்களில், அ, ஆ இரண்டும் வரிக்கோட்டிற்குரிய நேர்வடிவினையே பெற்றுள்ளன. இ, ஈ பழைய வடிவில் மாறவில்லை. உ, ஊ இரண்டெழுத்தும் வரிக்கோட்டில் எழுதப்பெறும் நிலையை அடைந்துள்ளன. ஐ, பழையவடிவமே பெற்றுளது. ஒ, ஓ இரண்

டெழுத்தில் நெட்டெழுத்தாம் ஓகாரம், கீழிறங்கு கோட்டு நுனியில் சற்று வளைவு பெற்று நெட்டெழுத்தின் சாயலைக் காட்டுவதாக உளது. இவ்வெழுத்து முயற்சி இராசேந்திரன் காலத்தில் கையாளப் பெற்றமைக்குச் சான்றாகும்.

மெய்யெழுத்துக்களில், க, ச, த ஆகிய எழுத்துக்களின் சதுரப் பகுதியாகும், தலைப்பகுதி வரிக்கோட்டுத் தொடர்நிலைக்கு ஏற்ப நேராக எழுதப்பட்டிருப்பது புதிய முயற்சியாகும். ஙு, ந இரண் டெழுத்துக்களும் முன்னைய சாய்வுநிலையினின்றும் சற்றே நிமிர்ந்த வடிவில் எழுதப்பட்டுள்ளன. ட,ப,ம,ய,ர,வ ஆகிய எழுத்துக்கள் வரிக்கோட்டில் ஓரளவு அடங்கிய வடிவமாகவே எழுதப்பட்டுள்ளன. ன,ண இரண்டெழுத்துக்களுக்கும் உடற்சுழிப்பு முன்பு இல்லை. இராசேந்திரன் காலத்தில் உடலில் சுழித்துக் காலிடும் வடிவம் கையாளப்பட்டிருப்பது எழுத்தின் திருத்தம் எனலாம். ள ற இரண் டெழுத்தும் முன்னைய வடிவங்களிலேயே எழுதப்பட்டுள்ளன. இவைகளன்றி கோடு, விலங்கு, கால், சுழிப்பு ஆகிய தமிழெழுத்தின் சார்புநிலை வடிவங்கட்காகும் உறுப்புக்கள் தெளிவாகவும் பிற் காலத் தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிரந்த எழுத்துக்கள் முதல் இராசராசன் காலத்து வடிவங் களிலேயே கையாளப்பட்டிருப்பது, சாசனம் வெட்டியவரின் வட மொழிப் பயிற்சியினைக் குறிக்கின்றது கிரந்த கூட்டெழுத்துக்கள் பழைய வடிவிலேயே உள்ளன. சில வடசொற்களும், தமிழ் மொழிக்கு முதலில் வராத 'ர'கரத்தை உடைய 'ராஜராஜன்' என்பது போன்ற பெயர்ச்சொற்கள் தமிழாக்கமாக இராஜராஜன், இராச ராசன் என்று எழுதப்பெற்றிருப்பதும், 'க்ஷத்ரிய' என்பன போன்ற சொற்கள் தமிழாக்கமாக 'சத்திரிய' என்று திருத்தப் பெற்றிருப்பதும் முதல் இராசேந்திர சோழன் காலத்துத் தமிழ்வளர்ச்சியினைப் புலப் படுத்துவதாக அமைந்துளது. சாசனம் வெட்டியவர் வடமொழிப் புலமையுடைய பிராமணராதலின் தொடரின் முடிவிடங்களில் நிறுத்தக் குறியாக, இரண்டு சிறிய இணைகோடுகள் இட்டுச்செல்வது திறுத்தப்புள்ளியிடங்களாகும்.

*

செப்பேட்டின் எழுத்து நிலை



பகுதி II, ஏடு-8, பக். 2. முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி

4

கரந்தைச் செப்பேடுகள் மரபுப் புகழ்ச்சி

57 ஏடுகளின் அமைப்பு விளக்கம்

பகுதிகள்	ஏடுகள்	பக்கங்கள்	வரிகள்
*1	3	6	131
2	22	44	1066
3	30	60	1378
3-அ	2	4	77
கூடுதல்	57	114	2652

கரந்தைச் செப்பேடுகள்

*பகுதி — 1

சோழ மன்னர் மரபுப் புகழ்ச்சி உரை

(பிரசஸ்தி)

ஏடுகளின் கூடுதல் ... 3
பக்கங்களின் கூடுதல் ... 6
செய்யுட்களின் கூடுதல் ... 78
கூடுதல் வரிகள் ... 131

முதலாம் இராசேந்திர சோழனின்

கரந்தைச் செப்பேடுகள் - பிரசஸ்தி (வடமொழிப் பகுதி)

தமிழாக்கம்

முதல் மூன்று ஏடுகள் பகுதி 1 ஆறு பங்கங்கள்

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகளின் பருத்த இரு திருமுலைத் தடங்களின் குங்குமக் குழம்பினால் அடையாளமிடப்பட்டனவும் (பாற்கடல் கடைந்த ஞான்று) சுழன்றுகொண்டிருக்கிற மந்தரமலையினுடைய உயர்ந்த குடுமிகளில் உராய்வதனால் மிக்கு ஒளிபெற்ற பொன்னாலான தோள்வளைகளை உடையனவும், மூவுலகத்தையும் காப்பனவும் சார்ங்கம் முதலிய ஆயுதங்களைத் தாங்கித் திகழுகின்றனவுமான இந்திர நீலக்கல் போன்ற திருமேனியை உடைய திருமாலின் புயங்கள் உங்களுக்கு வேண்டிய அளவு செல்வத்தைக் கொழிக்கச் செய்வதாக.

2. திருமகளுக்கு உவகையைக் கொடுப்பவர்களாகவும், இருளைப் போக்கடிப்பவர்களாகவும், சன்மார்க்கத்திற்கு ஒளியைக் கொடுப்பவர்களாகவும், ஏனைய அரசர் குழாத்தின் பொலிவைப் போக்கடிப்பவர்களாகவும் எக்காலமும் மேன்மையுடன் சிறந்து தோன்றித் தமது மரபின் முதல்வனான கதிரவனை ஒத்து விளங்குகின்றார்களோ அத்தகைய பெருவேந்தர் பிறந்த திருநிறைந்த சோழமரபு, கடல்சூழ்ந்த நிலவுலகத்தை நீடூழி காப்பதாகுக.

3. உலகங்கள் அனைத்திற்கும் ஒரு கண்ணாக விளங்கும் 'கதிரவனிட'மிருந்து அரசர்களுக்கெல்லாம் முதல்வனான 'மனு' தோன்றினான். அரசர்களின் மணிமுடி வரிசையினால் தழுவப் பெற்ற பாதபீடத்தை உடையவனான 'இட்சுவாகு' என்னும் அரசன் அவனுடைய (மனுவின்) புதல்வனாகத் தோன்றினான். அவனது மரபில் லோகாலோக (சக்கரவாள) மலைவரை நெறி வழுவாது இந்நிலவுலகைக் காப்பாற்றியவனும், நான்முகனை ஒத்தவனும், நற்குணங்கட்கு இருப்பிடமானவனுமாகிய 'மாந்தாதா' என்னும் வேந்தன் தோன்றினான்.

4. (பின்னர்) தேவாசுர யுத்தத்தில் தேவராசனைக் காத்தவனும் முகுந்தனுக்குரிய திருத்தகவினைப் பெற்றவனுமாகிய 'முசுகுந்தன்' என்னும் வேந்தன் தோன்றினான்.

5. குற்றமற்றவனும் கொண்டாடத் தகுந்த புகழை உடையவனுமான எவனுடைய பெருமையானது உலகில் எக்காலமும் நல்லோர்களால் நன்கு பாடப்படுகிறதோ அத்தகைய ஒப்பற்ற பெருமையை உடைய 'சிபி' என்னும் அரசன் புகழ் பெற்றதும், களங்கமற்றதுமான அம்மரபிற்கு மணிவிளக்காய்த் தோன்றினான்.

6. மன்னுயிர்க்கெனவே தன்னுயிரைக் காத்தவனும் பெருமிதப் பண்புகளால் நிறைந்தவனுமாகிய அவ்வேந்தனுடைய குணங்களைப் புலவர் பெருமானாகிய வியாசரல்லது எடுத்துரைக்க வல்லார் யாவர்?

7. அக்குலமாகிய கடலுக்கு நிறைமதியை யொத்து விளங்குபவனும், கலைகட்கு இருப்பிடமானவனுமாகிய 'சோழன்' என்பான் தோன்றினான். இவன் முதலாக இவன் மரபில் தோன்றிய மன்னர்கள் யாவரும் 'சோழன்' என்ற பெயரையே தாங்கி வருகின்றனர்.

8. பகைவர்களாகிற யானைகட்கு அரியேற்றினை ஒத்த இராசகேசரி' என்ற வேந்தன் அவனுக்கு (சோழனுக்கு)ப் புதல்வனாகத் தோன்றினான். அவனுக்குப்பின் பகைப் படையை முறியடிப்பதிலேயே நோக்கங் கொண்டவனும், வலிபடைத்தவனுமாகிய 'பரகேசரி' என்னும் வேந்தன் தோன்றினான்.

9. அந்த இராசகேசரியின் பெயரும், பரகேசரியின் பெயரும் அக்குலத்தில் தோன்றிய அரசர்கட்கு முறையே மாறிமாறி வழங்கும் ஆணையாயிற்று.

10. பேராற்றல் படைத்த எவனுடைய குடியரசில் கூற்றுவன் நடுநடுங்கிக் குடிமக்களிடம் தோன்றுவதில்லையோ அப்படிப்பட்டவனும், இணையற்றவனும், அறிவில் தேவகுருவுக்கு (வியாழன்) ஒப்பாகத் திகழ்பவனும், 'சுரகுரு' என்னும் பெயருள்ளவனுமான அரசன் அக்குடியில் தோன்றினான்.

11. உயிர்வகைகளெல்லாம் எவனைக் கண்டு நடுங்குகின்றனவோ, அத்தகைய கூற்றவனைப் பெரும் போரில் வென்று தேவர்களாலும் பெறமுடியாத 'மிருத்யுஜித் (கூற்றுவனைவென்றவன்) என்ற பெயரை (சுரகுரு) பெற்றான்.

12. அந்த வம்சத்தில் தன்ஒளியால் கதிரவனைப்போல் மிக்கு விளங்கும் 'உபரிசரவசு' என்னும் அரசன் தோன்றினான்.

13. மனத்திலும் கடியதாகிய சிறந்த விமானத்தில் ஏறி வான வழியில் இயங்கியவனும், காவிரிக்குக் கரைகண்டவனும், பகைவர்க்குக் கூற்றுவனை ஒத்தவனும் ஆகியவன் எவனோ, அத்தகைய 'கரிகாலன்' என்னும் மன்னன் அம்மரபில் தோன்றினான்.

14. அம்மரபில் தோன்றி உலகம் முழுமையும் தனியாட்சி செலுத்திய எண்ணற்ற வேந்தர்கள் விண்ணுலகை அடைந்த பிறகு

கடல் சூழ்ந்த இவ்வுலகைக் குன்றாத பெருவலியுடன் புரந்தவனான 'விசயாலயன்' என்ற பெயருள்ள வேந்தன் தோன்றினான்.

15. பகைகொண்ட அரசர்களாகிற இருளின் கூட்டங்களை அழித்தவனும் பிரதாபம் (வாட்டுதல்) மிக்கவனும், இணையற்ற ஒளியை உடையவனுமான 'ஆதித்யன்' அவனிடமிருந்துதோன்றினான்.

16. எண்ணற்ற (புலவர்) இரத்தினங்களின் குவியல்களுக்கு ஒரே இருப்பிடமானவனும், வள்ளன்மை நிறைந்தவனுமான அவனிடமிருந்து, பாற்கடலில் திங்கள் தோன்றியதுபோல உலகத்தின் நலனுக்காகப்'பராந்தகன்'என்னும் கலைகள் நிறைந்த அரசன் தோன்றினான்.

17. அவ்வீரன் சிங்களதேசத்து அரசனையும், பாண்டிய அரசனையும், வெளிப்படையான புகழ் படைத்தவனும் வெல்லமுடியாதவனுமான கேரள தேசத்து அரசனையும், பல்லவ அரசனையும் போரில் முறியடித்து அவ்வரசர்களுடைய புகழ்களையும், நாடுகளையும் செல்வங்களையும், ஊர்திகளையும் தனக்குரிமை யாக்கிக் கொண்டான்.

18. சூரிய வம்சத்திற்குத் திருவிளக்குப் போன்ற அவ்வரசன் புலியூரில் (வியாக்ர அக்ரஹாரத்தில்) தன் தோள் வலிமையால் எல்லாத் திசைகளையும் வென்று அங்கிருந்தும் கொண்டுவரப்பட்ட மாசற்ற பொற் குவியல்களினால், பிறைசூடிய இறைவனுடைய கோயிலை வேய்ந்தான்.

19. அவ்வரசன் (பராந்தகன்) உலகத்திற்குத் திலகம் போன்றதும், பெருஞ் செல்வம் படைத்ததும், ஊழிக்காலத்திலும் மாறுபாடன்றி விளங்குவதுமான 'வீரநாராயணம்' என்னும் ஊரை (அக்ரஹாரத்தை)த் தன் பெயரால் ஏற்படுத்தினான்.

20. செல்வம் மிக்கவனும் அரசர்களுள் சிறந்தவனுமான அவன், இவ்வுலகில் ஆங்காங்குச் செல்வம் மிகுந்த ஏனைய பெரிய ஊர்கள் (அக்ரஹாரங்கள்) பலவற்றையும் நிறுவினான்.

21. அவன் நிலத்தை வளனுள்ளதாகச் செய்வதற்கு, ஆழமானதும் தெளிவான நீர் உள்ளதுமான ஆறுகளை நூற்றுக் கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் வெட்டச் செய்தான்.

22. அந்தப் பராந்தகன் இமையோருலகைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டபோது அவனுடைய மகனான 'அரிஞ்சயன்' என்பவன் மானிட உலகத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றான்.

23. தன்னுடைய நற்பண்புகளால் மக்களை மகிழ்வித்துக் கொண்டு கடல் சூழ்ந்த உலகை இன்பமாகக் காப்பாற்றியவனும் திரிபுரத்தை அழியச் செய்த சிவபெருமானுக்கு ஒப்பானவனும் பகைவருடைய படைகளைச் சிதைப்பவனுமான 'பராந்தகன்' என்னும் அரசன் அரிஞ்சயனிடத்தினின்றும் தோன்றினான்.

24. 'சேவூர்' என்னும் நகரத்தில், தனது அழகிய வில்லிலிருந்து விடப்பட்ட கூர்மையான அம்புக் குவியலால் திக்குகளில் இடைவெளி இல்லாமல் செய்தவனும், கூர்மையான வாளாயுதத்தால் பிளக்கப்பட்ட மலை போன்ற பகைவர்களின் யானைகளினின்றும் இழிந்தோடும் பலவகையான இரத்த ஆறுகளைத் தோற்றுவித்தவனும்,

25. பகைவர்களின் கூட்டங்களை வாள்முனையினால் போக்கியவனுமான அவன் (பராந்தகன்) மிக்க சீற்றமுடையவனான வீரபாண்டியனை வலியினால் போரில் வென்று அப்பொழுதே தன்னுடைய மாசற்ற உயர்ந்த புகழை 'ஸஹ்யம்' என்னும் பெரிய மலையினது உயர்ந்த சிகரத்திலும் இமையோருலகிலும் ஏற்றினான்.

26. அரசர்களுள் சிறந்த அவன் (பராந்தகன்) வானுலகைக் காப்பதற்குச் சென்ற பொழுது அரசர்களின் முடிவரிசைகளால் தழுவப்பட்ட பாதபீடத்தை உடையவனும், சோழமரபிற்கு விளக்குப் போன்றவனுமான (அந்த) 'இராசராசன்' என்னும் அவனுடைய மகன், ஆதிசேடனுடைய உடலின் அழகைப் பற்றுகிற புயத்தினால் சுமை பொருந்திய இவ்வுலகைத் தாங்கினான்.

27. பெருவலியினையே செல்வமாகக் கொண்டவனான சீராசராசன் சிங்கள, பாண்டிய, கேரள அரசர்களையும், கொங்கேசுவரர்களையும், மாளவர்களையும், தெலுங்கர்களையும், கங்கர்களையும், கலிங்கர்களையும், வங்கர்களையும், மகதர்களையும், சாளுக்கிய அரசர்களையும், குருநாட்டு அரசர்களையும், ஏனைய எல்லா அரசர்களையும் தோள்வலியால் (போரில்) வென்று அவர்களுடைய

யானைகளையும், குதிரைகளையும். நாடுகளையும், இரத்தினங்களை யும், செல்வங்களையும் கைப்பற்றினான்.

28. எவனுடைய யானைகளின் தந்தங்களாலுண்டான வடுக்கள் இன்றளவும் துங்கபத்திரை ஆற்றினுடைய கரைகளிலுள்ள மலையைச் சார்ந்த இடங்களில் எங்கும் விளங்குகின்றனவோ,

29. அவன் (இராசராசன்) ஊழிக்காலத்துக் கடல் போன்ற தனது படையைத் திருப்பிவிட்டு ஒரு நொடியில் தான் ஒருவனாகவே குதிரையில் ஏறிக் கொண்டு மிக்க வேகத்துடன் வந்துகொண்டிருக் கிற 'சத்தியாசிரயனுடைய' படையை விண்ணினின்றும் வேகத்துடன் விழுகின்ற கங்கையைச் சிவபெருமான் சடையினால் தாங்கியதைப் போல் விளையாட்டாக (தனது) கொடிபோன்ற வாளினால் ஏற்றான்.

30. பெருந்தோள் படைத்த அவன், வாணாசுரனை யொத்த ஒளியுள்ளவனான 'வாணராசனைப்' படைக்கலங்களால் அடியோடு அழித்துப் 'போகதேவனு'டைய தலையைத் துணித்தான்.

31. கேசவனுக்கு ஒப்பானவனும் 'கேசவன்' என்னும் பெய ருள்ளவனுமான சத்தியாசிரயனுடைய சேனைத்தலைவன் அந்த ராச ராசனால் போரில் உயிருடன் பிடிக்கப்பட்டான்.

32. பகைவருடைய படையை அழித்துக் கொண்டிருக்கும் அவ்வரசரேறு ஊழிக் காலத்தில் எல்லா மக்களையும் அழிக்கும் 'பினா கம்' என்னும் வில்லையுடைய சிவபெருமான் போல் விளங்கினான்.

33. அவ்வரசனால் (இராசராசனால்) பகைவர்களின் படை அழிக்கப்படும்பொழுது ஆங்காங்கு இருகால்கள், இருதுடைகள், வயிறு, மார்பு, கைகள், தலை இவைகளில் வெட்டுப்படாதான் ஒருவனும் இல்லை.

34. அவன் (இராசராசன்) குதிரைகளின் வரிசைகளாகிற அலைத் தொகுதிகளை உடையதும், யானைகளாகிற முதலைகளால் சூழப்பட்டதும், காலாட்களின் கூட்டங்களாகிய, கொந்தளிக்கும் நீர்ப் பரப்பை உடையதும், மண்ணுலகத்தையே மறைப்பதுவுமான சத்தி யாசிரயனுடைய படையாகிய கடலைத் தனது புயங்களாகிய மந்திர மலையினால் வலிமையுடன் கடைந்து புகழாகிய மதியுடன் வெற்றித் திருமகளையும் விரைவில் ஏற்றுக் கொண்டான்.

35. மனுவம்சத்திற்குக் கொடிபோன்றவனும், எமனுக்கொப்பானவனுமான அவன் (இராசராசன்) ஒரே குதிரையுடன் வலிமை பொருந்திய சத்தியாசிரயனை இரத்த ஆறுகள் சூழ்ந்த போர்முனையினின்றும், ஒரே நொடியில் ஓடச் செய்து, அவனது தோள்வலியால் ஈட்டப்பட்ட மதம் பொருந்திய யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், பெண்கள், குடைத்தொகுதிகள் இவை யாவற்றையும் பறித்துக் கொண்டான்.

36. கதிரவன் எழுதலினால் பளபளப்பான தாழ்வரைகளை உடைய மலைவரையிலும் (உதயபர்வதம்) தென்கடல் வரையிலும், பகலவன்போய் மறைகிற மலைவரையிலும், சிவபெருமான், வீற்றிருக்கும் சிறந்த மலைவரையிலும் (இமயம்) தங்களுடைய மரபுகளைக் காப்பாற்றுவதில் நோக்கங் கொண்ட அரசர்கள் யாவரும் பலவகையான இன்பங்களை (தாம்) அனுபவிப்பதற்கு நித்யாதித்ய விநோதனுடைய (நாளும் நிலைத்து நிற்கும் ஞாயிறு போன்ற அவ்வரசனுடைய) தாமரை போன்ற இரு பாதங்களை அடைந்தனர்.

37. வள்ளலான அவ்வரசன் தன் பாதத்தை அடையும் அரசர்கட்குப் பல்லாற்றானும் ஆதரவு கொடுத்து வந்தான். அதனால் இணையற்ற வீறுடைய அவனை உலகில் நல்லோர்கள் இராசாசிரயன் என்று சொல்லுகிறார்கள்.

38. தேவேந்திரன், எமன், வருணன், குபேரன் ஆகிய இவர்களுடைய செல்வங்கள் யாவும், மனிதருட் சிறந்தவனான அவனால் (இராசராசனால்) முறையே அவரவர்களுடைய திசைகளை வென்று பறிக்கப்பட்டன.

39. கலியின் வலியைச் சிதைப்பதற்காகத் திருமாலே உலகில் பிறந்துவிட்டார் என்று எவனைச் சிறப்பித்துச் சொல்லுவார்களோ அப்படிப்பட்டவனும் மனுகுலத்திற்கு அணியாய் விளங்குகின்றவனுமான 'மதுராந்தகன்' என்னும் அரசனைப் புத்திமானான அவ்வரசன் தோற்றுவித்தான்.

40. அவன் (மதுராந்தகன்) புன்சிரிப்பினாலும் வடிவழகினாலும் தாய் தந்தையர்க்கு மகிழ்ச்சியையும், பகைவர்களுக்குப் பெரும் அச்சத்தையும் நாளும் கொடுத்துக் கொண்டு வளர்ந்து வந்தான்.

41. அவன் எனது பொறையைத் தரை தாங்கும் தரமுடையதோ இல்லையோ என்று ஐயுற்றவன் போல, செவிலித் தாயாரின்

கையைத் தன் கையால் பற்றிக் கொண்டு தரையின்மீது மிகமிக மெதுவாகக் கால்களை (எடுத்து) வைத்தான்.

42. அவன் இளம் பருவத்திலேயே எல்லா வேதங்களையும் சாத்திரங்களையும் அறிந்தவனாய், குதிரை ஏற்றம், யானை ஏற்றம் தேரேறுதல் இவைகளில் மிக்க பயிற்சியுள்ளவனும், வாட்போரின் நுணுக்கங்களை அறிந்தவனும், எறிபடைக்கலங்களில் தேர்ச்சி பெற்றவனுமாகி,

43. இராசராசன் பூமியை அனுபவித்துவிட்டுச் சொர்க்கத்தைச் சுகமாக அனுபவிப்பதற்குச் சென்ற பொழுது, குணங்களாகிய இரத்தினக் குவியல்களுக்குக் கடல் போன்றவனான தைரியம் நிறைந்த இந்த மதுராந்தகன் பூமியின் பாரத்தைத் தாங்கினான்.

44. பத்மராகக் கல்லினுடைய ஒளியினால் விளங்குகிற பொற் கிரீடத்தைத் தலையால் தாங்கிய அவன், உயர்ந்த தனது சிகரத்தினால் காலை வேளையில் சூரிய மண்டலத்தைத் தாங்கி நிற்கும் உதயபர்வதம் போல் விளங்கினான்.

45. கதிரவன் போல் செயல்புரியும் மதுராந்தகன் என்னும் அரசன் பெரிய புயத்தினால் பூமியின் பாரத்தைத் தாங்கும் பொழுது இவ்வுலகம் கலி என்னும் இராகுவினுடைய முகப்பாழியினின்றும் வெளிப்பட்ட சந்திரமண்டலம்போல் விளங்கிற்று.

46. (மதுராந்தகன்) அரசன் பூமியை ஆளும்பொழுது மக்கள் அறவழியில் கருத்துள்ளவர்களாகவும், தமது கடமைகளில் ஊன்றியவர்களாகவும், துன்பங்களை அற்றவர்களாகவும், நிலைத்த செல்வம் விழா இவைகள் நிறைந்தவர்களாகவும், மிக்க மகிழ்ச்சி உள்ளவர்களாகவும், உண்மையைப் பற்றுபவர்களாகவும், நல்வாழ்க்கையுடையவர்களாகவும் இருந்தனர். காலத்தில் மழை பொழிந்தது. ஆறுகள் நன்னீரோடு பெருகின. எல்லாப் பக்கங்களிலும் நாடு (பூமி) பல்வேறு பயிர் வகைகளால் அழகு செய்யப் பெற்றிருந்தது.

47. அறமாகிய உதய பர்வதத்தில் நாளும் உதயத்தையடைந்து உலகத்திலுள்ள யாவராலும் வணங்கப்படுபவனும் அனேகமாயிரம் (பூபிர்த்) அரசர்களுடைய மாசற்ற மணிகளால் விளங்கும் தலைகளில் தனது பாதங்களை வைத்தவனும், தீவிரமான பிரதாபத்தை உடையவனும், தனது கரங்களால் எல்லா உலகுக்கும் உபகாரம் செய்பவனும், சன்மார்க்கத்திலேயே இருப்பவனுமான அப்படிப்

பட்ட இவ்வரசன், சூரியன் போல் தனது சேர்க்கையினாலும் மர பினாலும் உலகத்தை ஒளியோடு விளங்கச் செய்தான்.

48. 'காம்போஜ தேசத்தரசன்' வெற்றியே தருவதான எந்தத் தனது தேரினால், பகைவர்களுடைய சேனையை வென்றானோ அந்தத் தேரை, வெற்றிவீரனான எவனுடைய உதவியினால், போர் களில் பகைவர்களுடைய படையை வென்றானோ, அந்த மதுராந்தக னுடைய நட்பை வேண்டித் தன் ஆட்சித் திருமகளைக் காப்பதற் காக, அவனுக்குக் கொடுத்தான்.

49. சிறந்த அறிவாளியான 'சக்கரக் கோட்டத்'து அரசன், இணையற்ற ஆற்றல் பொருந்திய மதுராந்தகனை, தன்னால் அனுப்பப்பட்டவையும், எண்ணற்றவையும், புதிய மேகம் போன்ற வையும், மலைகளில் திரிபவையும், அபிஷேகத்திற்கு ஏற்றவையுமான 'பத்ரம்' என்னும் இனத்தைச் சார்ந்த யானைகளால் மகிழ்வித்துப் பெருஞ் செல்வத்தைப் பெற்றான்.

50. அவனுடைய (மதுராந்தகனுடைய) ஆணையை மற்ற அரசர்கள் யாவரும் அச்சத்தினால் தலைமேல் தாங்கி நின்றனர் என்ப தில் வியக்கத்தக்கது ஒன்றில்லை. ஏனெனில் அவனுடைய ஆணையை இன்றளவும் 'மகேந்திரமலை' தன் சிகரத்தினால் தாங்கிக் கொண் டிருக்கிறதல்லவா?

51. 'மானகேடத்தை' (மான்ய கேடத்தை)நான் பிடிக்காத வரையில்''க்ரிஹர விகாரம்செய்வதில்லை'' என்னும் தந்தையினுடைய (இராசராசன்) சூளுரையை நிறைவேற்றி வைப்பதற்காக அரசன் (மதுராந்தகன்)அப்பட்டணத்தைப் பிடிப்பதில் ஆவல் கொண்டான்

52. மேகமண்டலத்தைத் தொடும் 'சாலமரங்களால்' சூழப்பட்ட எந்தப் பட்டணமானது (மான்யகேடம்) லோகாலோக மலையினால் சூழப்பட்ட பூமண்டலம் போல் பிரகாசித்தது;

53. அந்தப் பெரிய பட்டணம் எவனுடைய (மதுராந்தக னுடைய) சேனைகளால் எறியப்பட்டதீயின் பல்லாயிரக்கணக்கான ஜ்வாலைகளினால் கொளுத்தப்படும் பொழுது கிளர்ந்தெழுகின்ற இந்திரநீலக்கல் போன்ற ஒளியுடைய புகைமண்டலங்களால் மறைக்கப் பட்ட மேல்மாடங்களில், இங்குமங்கும் அடிக்கடி ஓடிக்கொண்டிருக்கிற அழகிகள், மேகக்கூட்டத்தின் நடுவில் மின்னல்கள் போல் பிரகாசித்தனர்.

54. அந்தப் பட்டணத்தினின்றும் மேலே எழுந்த நெருப்பு ஜ்வாலைகளால் விழுங்கப்பட்ட சொர்க்கலோகத்தைவிட்டுத் தேவர் கூட்டமானது, இது ஊழிக்காலத்து நெருப்பு என்று எண்ணி, அஞ்சி, திடீரென்று ஓடிப்போய்விட்டது

55. களங்கமற்ற புகழினால் அழகுசெய்யப்பட்ட திசைகளின் முனையை உடைய, 'யது' வம்சத்தைச் சேர்ந்த சாளுக்கியர்களுடைய இருப்பிடமானதும், சொர்க்கம் போல் பிறரால் (பகைவரால்) மனதாலும் அசைக்க முடியாததுமான மான்ய கேடத்தை வீரனான தேவன் (மதுராந்தகன்) தண்டத்தினால் எரித்து, அவர்களுடைய அழுக்கற்ற புகழ்க்குவியல்களுடன் பல பொருள்களையும், ஊர்திகளையும், தனது பட்டணத்தில் இருந்துகொண்டே பறித்துக் கொண்டான்.

56. அழகியதும், காற்றுக்கு நிகரான வேகமுள்ளதும், ஐந்து தாரைகள் உள்ளதுமான நல்ல குதிரையின்மேல் ஏறிக்கொண்டு அதேபோன்ற குதிரைகளில் ஏறியவர்களும், தனக்குத் தக்கவர்களும், காளைப்பருவம் உள்ளவர்களும், விருப்பமானவர்களும், குறிப்பறிந்தவர்களும், நன்றியறிதலுள்ளவர்களும், சிறந்த அறிவாளிகளும், கலைவல்லுநர்களும், களங்கமற்ற குலத்தில் தோன்றியவர்களும், ஒற்றுத் தொழிலில் தேர்ச்சிபெற்றவர்களும்,

57. எண்ணற்ற சிறந்த நற்குணங்களின் குவியல்களை உடையவர்களும், நேர்நின்று போர் செய்வதில் ஈடுபட்ட உறுப்புக்களை உடையவர்களும், போர்க்களத்தில் தேர்ச்சி பெற்றவர்களும், அவரவர் வருணத்திற்கேற்ற தண்டத்தை உடையவருமான சிற்றரசர்களுடன், மக்களுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்த போரில், அழிக்கும் விளையாட்டைச் செய்துகொண்டு விளங்குகின்ற அவ்வீரன் (மதுராந்தகன்) தனது புயங்களால் தன் தந்தையான இராசராசனை, நிறைவேற்றப்பட்ட சூளுரையை உடையவராகச் செய்தான்.

58. வலிபொருந்திய அவன், வலிமிக்கவனாகிய சிம்ஹள தேசத்து அரசனை அஞ்சத்தக்க போரினால் (தண்டோபாயத்தினால்) வென்று அவனுடைய நாட்டையும், அவனுடைய முடியையும், அவனுடைய அரச பத்தினியையும், அவளுடைய முடியையும், அவனுடைய மகளையும், மற்ற பொருட்குவியல்களையும் அவனுடைய ஊர்திகளையும், அவனால் நன்கு பாதுகாக்கப்பட்ட, பாண்டியனுடைய மாசற்ற இந்திர ஹாரத்தையும், முடியையும் சண்டையில் கைப்பற்றினான்.

59. புகழ்பெற்ற பல வெற்றிமேம்பாடுகளுள்ளவனும் போரில் மதுராந்தகன் சேனைகளால் வெல்லப்பட்டவனுமான இலங்கை

அரசன் பெண்டுபிள்ளைகளைப் பறிகொடுத்த அச்சத்தினால் அவனுடைய இரு திருவடிகளையும் வணக்கம் செய்தான். அவனுடைய (மதுராந்தகனுடைய) மதுகையை இப்பொழுது என்னால் எவ்வாறு வருணிக்கப்படுவதாகும்?

60. தடைபடாத நிறைந்த பராக்கிரமத்தை உடையவனும் புலனடக்கம் உள்ளவனுமான எவன் (மதுராந்தகன்) புராணத்தீவை (பழந்தீவை)த் தண்டோபாயத்தினால் முற்றுகையிட்டு. அதன் சாரத்தை(சிறந்த பகுதியை)க் கைப்பற்றி அத்தீவைத் தன்வசப்படுத்தினான்?

61. நடுங்குகின்ற பகைவர்களின் கூட்டத்தை உடையவனும், தன் புகழாகிய விதானத்தினால் வான் முழுவதையும் மூடியவனுமான எவன் (மதுராந்தகன்) வலிமிக்க ஜயசிம்மனாகிற சிம்மத்தை ஆற்றலினால் வென்று 'ஜயசிம்ஹ சிம்ஹசரபன்' ஆனான்?

62 அவனுடைய (மதுராந்தகன்) உயர்ந்த பராக்கிரமமாகிற தீயானது 'தைல'னுடைய சந்ததியை எரித்து விட்டது என்னும் இது வியக்கத்தக்கதில்லை. ஏனெனில், கடலைக் கடந்து கடாரத்தை நன்றாக எரித்துவிட்டான் என்கிற மற்றொரு அற்புதத்தினால்!

63. உலகிலுள்ள அரசர்கள் யாவரையும் கொல்லுவதிலேயே விரதம் பூண்ட பரசுராமனுடைய தவத்தினால் நன்கு காப்பாற்றப் பட்ட நாட்டை, ஆற்றல் நிறைந்த அவன் (மதுராந்தகன்) வென்று எல்லா அரசர்கட்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பவனானான்.

64. எல்லா அரசர்கட்கும் விளக்குப் போன்றவனும், நற்குணங்கள் நிறைந்தவனுமான அவன் கங்கையைக் கொண்டு வருவதற்காகத் தவம் பூண்டு உடல் மெலிந்த பகீரதனுடைய கதையைக் கேட்டுச் சிரித்துக் கொண்டு அதன் கரையிலுள்ள அரசர்களுடைய முடிகளாலேயே அதை (கங்கையை)த் தன் நாட்டுக்கு அழைத்து வந்துவிட்டான்.

65. அரசர்கட்குச் சூடாமணி போன்றவனும், வியாக்ரா அக்ரஹாரத்தில் (புலியூர்) வாழ்ந்தவனுமான அவன் (மதுராந்தகன்) எல்லா வேதங்களிலும் கரை கண்டவர்களான அந்தணச் சிரேஷ்டர்களுக்கு அக்ரஹாரம் முழுவதையும் நீர் வார்த்துக் கொடுத்தான்.

66. உறுதியிலும், தைரியத்திலும், தவத்திலும், தேஜசிலும், வணக்கத்திலும் இணையற்றவர்களும், தமது மதிநுட்பத்தால் வேதங்கள் யாவற்றையும் இலகுவாக நினைப்பவர்களும் சாஸ்திரார்த்

தங்களுக்கு விளையாடும் வீடு போன்றவர்களும், தூய்மையானவர்களும் பிறரைத் தூய்மையாக்குகிறவர்களுமான அந்தணர்கள் நாளும் அந்த கிராமத்தில் இருந்து கொண்டு (அரசனை) புகழ்வதிலேயே விழைவு கொண்டுள்ளனர்.

67. தனது தாயின் பெயரால் காவேரியின் சுவையுள்ள நீர்ப்பெருக்கின் சாரத்தை (வளத்தை)ப் பெற்ற திரிபுவனமாதேவி என்னும் பெயருள்ள அவ்வக்ரஹாரத்தை இராசராசன் பிள்ளையான அவன் மற்ற கிராமங்களோடு கூடினதாகச் செய்து, வேதவொலியால் செவிடு பண்ணப்பட்ட திசைகளை உடையதாகவும் உலகத்தினுள் சாரமானதாகவும் (சிறந்ததாகவும்) செய்தான்.

68. மதுராந்தகன் என்னும் அவ்வரசன், தான் பட்டத்திற்கு வந்த ஆண்டில் ஆயிரத்திற்காக எண்பதுடன் கூடின எட்டாவது ஆண்டினை அடைந்தவனாய் நாளும் விழாக்கள் நிறைந்த தனது நாட்டில் நிலைத்த செல்வம் படைத்த பல ஆஸ்ரமங்களை இவர்கட்கு (அந்தணசிரேஷ்டர்களுக்கு)க் கொடுத்தான்.

69. அவ்வரசன் அந்த நாட்டின் நடுவிலே அமைந்த ஐம்பத்தொரு கிராமங்களை (அந்தண சிரேஷ்டர்களுக்கு)க் கொடுத்தான்.

70. அமைச்சர்களுக்குள் வியாழனுக்கு ஒப்பானவரும், இவ்வரசனுடைய மற்றொரு உடல் போன்றவரும், நல்வழியைக் கடைப்பிடிக்கும் நல்லோர்கட்கெல்லாம் தலைவரும், கல்வி என்னும் ஆறுகட்கெல்லாம் கடல் போன்றவரும், ஸ்ரீசகநாதன் என்ற பெயருள்ளவருமான இவ்வரசனுடைய அமைச்சர், இலக்குமி திருவிளையாடும் இடமான வேதமறிந்தவர்கட்கு இந்த கிராமத்துக்கு விண்ணப்பம் செய்பவராய் இருந்தார்.

71. இவ்வரசனுடைய பிரதானமான ஸ்தானத்தில் வசிப்பவனும், சிறந்த அறிவாளியும், புதிய அக்ரஹாரமாகிய பாற்கடலுக்குச் சந்திரன் போன்றவனும், வேள்விகளைச் செய்தவனும், பிரசித்தமான 'கிருஷ்ணபுரம்' என்பது போன்ற சப்தங்களை உடையவனுமான 'நாராயணன்' என்பவர் இந்த கிராமத்தினுடைய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து வந்தார்.

72. வித்தையாகிய அன்னப்பேடுக்கு விளையாடும் ஏரி போன்றவனும், வாத இலக்குமி பரந்த விளையாட்டிடமானவனும் தைர்யம், நுட்பமானமதி, அன்பு, செல்வம், இரக்கம் இவைகட்குப்

பிறப்பிடமானவனும், புலவர்களுடைய குழாங்களில் பண்டிதர்களை அளந்து காட்டும் உரைகல்லாய் இருப்பவனும் இம்மைக்கும் மறுமைக்குமான வேதமார்க்கமாகிற குகையின் தத்துவத்தைக் காட்டும் ஞான விளக்காய் இருப்பவனும் வணங்கிய அரசர்களுடைய கிரீடங்களால் பளபளவென மின்னுகிற பாதபீடத்தை உடையவனுமான இந்த ராஜேந்திர சோழன் தலையை வணங்கினவனாய் இந்த கிராமம் நன்கு காப்பாற்றப்பட வேண்டும் என்று நம்பிக்கையுடன் வருங்காலத்து அரசர்களைத் தாழ்ந்து யாசிக்கிறான்.

73. இந்தக் கிராமம் பலவிதமான கேள்விகளில் அழகுவிட்டு ஒளிக்கும் தீக்கொழுந்துகளால் பிரகாசமாக காண்பிக்கப்பட்ட திவ்யமான புண்ணிய மார்க்கத்தை உடையதும், நல்வழியை உபதேசிக்கும் தொழிலில் நிலைத்த புத்தியை உடைய அந்தணர்களுக்கு வந்தடையும் இடமாகவும் ஊழிக்காலத்தளவும் விளங்கட்டும்.

74. மூவுலகங்கட்குரிய கோளங்களையும் கடந்து சென்ற தனது உயர்ந்த குணங்களின் கூட்டங்களை உடையவனும், எல்லாச் சாஸ்திரங்களையும் கடந்த அறிவை உடையவனும், கலைகளில் தேர்ச்சி பெற்றவனும், அரசர்களின் முடிவரிசைகளால் தேய்க்கப் பட்ட பாதபீடத்தை உடையவனும், பிரகாசிக்கிற பெரிய மகிமையை துதிப்பதற்கு இடங்கொள்ளாத காவியங்களை உடையவனும், பகைவர்களை முறியடித்தவனும், செல்வம் நிறைந்தவனுமான இராஜேந்திர சோழன் அகண்டமான இந்த பூமண்டலத்தைச் சந்திரன் நட்சத்திரங்கள் உள்ள காலம்வரை காப்பாற்றட்டும்,

75. பக்கத்துக் கிராமத்தில் வசிக்கிறவரும் சங்கராரியருடைய பிள்ளையுமான நாராயணனால் இந்த சாசனம் செதுக்கப்பட்டு ஸாஸ்வதாமாகப் பண்ணப்பட்டது.

76. திரிபுவன மாதேவி பேராசிரியரும், ராசேந்திரசிம்ஹப் பேராசிரியரும் இந்த சாசனத்தை எழுதினார்கள்.

77. இருவரும் சிற்பங்களையும், ஆகமங்களிலும் மெய்ப் பொருளையும் நன்குணர்ந்தவர்கள்.

*

5

கரந்தைச் செப்பேடுகள் அறவிளக்கம்

கரந்தைச் செப்பேடுகள் அறவிளக்கம்

பகுதி — 2

(பிரம்மதேய விளக்கம்)

ஏடுகளின் கூடுதல்	22
பக்கங்களின் கூடுதல்	44
வரிகளின் கூடுதல்	1066

முதலாம் இராசேந்திரசோழனின் கரந்தைச் செப்பேடுகள் - தமிழ்ப்பகுதி

தொகை எண். 4. ஏடு. 1 பகுதி 2 பக்கம் 1

வரிகள்

1. ஸ்வஸ்தி ஸ்ரீ||உ கோநேரின்மை கொண்டான் நித்த விநோத வளநாட்டு வீரசோழ வள
2. ஞட்டும் வெண்ணிக் கூற்றத்தும் நாட்டார்க்கும் ப்ரஹ்மதேயக் கிழவர்க்கும் தேவதானப் பள்ளி
3. ச்சந்தக் கணிமுற்றூட்டு வெட்டிப் பேற்றுப் பழவறச் சாலா போகம் உள்ளிட்ட ஊர்களிலார்க்கும்

4. நகரங்களிலார்க்கும் நமக்கு யாண்டு எட்டாவது நாள் நூற்றேழினால் நாம் பெரும்பற்ற

5. ப் புலியூர்விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழைமண்டபம் இராஜேந்ர சோழ ப்ரம்ஹாதிரா

6. ஜனில் நாம்முண்ணாவிருந்து நித்த விநோத வளநாட்டு வீர சோழ வளநாட்டு நாட்டுப் பொது

7. திருபுவந மஹாதேவிப் பேரெரியும் இவ்வேரி அரயர்கள் கமுகு கொள்ளி வெட்டிப் பேறும் நாட்டுப் பொ

8 து ஊர்நத்தமும் நாட்டுப் பொதுச் சிறுபற்றைக் காடும் என்றளந்து வந்த நிலமும் இந்நாட்டு நெற்கு

9. ப்பைத் திருமால் காடனும் தஞ்சை நாட்டுக் கோனும் வேளான் அரங்கனும் உள்ளிட்டார் பற்றும் இந்நாட்டு

10. ச் செம்பங்குடியும் இந்நாட்டுக் குளப்பாடும் இந்நாட்டுத் துளாரும் இந்நாட்டு நல்லம்பரும்

11. இந்நாட்டுத் திருபுவன மஹாதேவி நல்லூரும் இந்நாட்டு விச்சூரான சிக்கரும் இந்நா

12 ட்டு முஞ்ஞாவலும் இந்நாட்டுக் கூத்தனூரும் இந்நாட்டு கமுகஞ்சேந்தன்குடியும் இந்நா

13. ட்டு வைகுந்த நல்லூரும் இந்நாட்டு மயிமாலய நல்லூரும் இந்நாட்டுக் கீழ மாத்தூரும் இந்நாட்

14. டுப் பரகேசரி நல்லூரும் இந்நாட்டுப் பெண்ணாகடமும் இந்நாட்டு உறத்தூரும் இந்நாட்டுச் சிறை

15. யூரும் இந்நாட்டுக் கீழசோற்றுத்துறையும் இந்நாட்டு நெருவாயிலும் இந்நாட்டேறு பாடியு

16. ம் இந்நாட்டுப் புளிகைக்குடியும் இந்நாட்டுப் பெருங்குடியும் இந்நாட்டு முண்டனூரும் இந்நாட்டுத் தாமோதரந

17. ல்லூரும் இந்நாட்டு அரசூரும் இந்நாட்டு வாளுவநல்லூரும் இந்நாட்டு குணசீல நல்லூரும் இந்நாட்டுச் செய்

18. யாநல்லூரு இந்நாட்டுச் சிற்றாலி நலூரும் இந்நாட்டு நித்த விநோத நல்லூரும் இந்நாட்டு வெங்கூரும் இந்நா

19. ட்டு நியாய நடை நல்லூரும் இந்நாட்டுச் சேந்தமங்கலமும் இந்நாட்டு இசுழா நிலை நல்லூரும் இந்நாட்டு வீர

20. நாராயண மங்கலமும் இந்நாட்டுக் கருவூரும் இந்நாட்டுக் கோவிந்தநல்லூரும் இந்நாட்டு வீரசோழ நல்லூரு

21. ம் இந்நாட்டுக் கொஞ்ஞாப்பூரும் இந்நாட்டு மணிமங்கலமும் இந்நாட்டுத் துறையா நல்லூரும் இந்நாட்டு வா

22. மனநல்லூரும் ஆக இவ்வூர்களும் இந்நாட்டு வெண்ணிக் கூற்றத்து ஆதநல்லூரும், இந்நாட்டுச் சிறுமுன்னியூரும்

23. இந்நாட்டு மேட்டுமேற்குடியும் இந்நாட்டுப் பூதமங்கலத்துப் பாலக்காடன் காரிகுறிச்சியும் இந்நாட்டுப் பருத்

24. தி நியமத்துத் திறப்பாந தேவதானம் தேவதானக்குடியும் இந் நாட்டு விளங்குடியும் இந்நாட்டு வெண்

செப்பேடு 1 - பக்கம் 2.

தொகை எண். 4.

1. ணிக் கணிமுற்றூட்டிறங்கலும் இந்நாட்டு நெடுங்கணக்குடியும் இந்நாட்டுப் பூதமங்கலத்துபால் அயலூ

2. ட்டிகாணியும் இந்நாட்டுப் பள்ளிச்சந்த மிறங்கின ஸ்ரீகரண மங் கலமான கொட்டாரக்குடிப்பள்ளியும் இந்நாட்

3. டுப்புறகுடியும் ஆக இவ்வூர்கள் வெண்ணிக்கூற்றத்து முதல் தவிர்த்து இவ்வூர்களும் முன்காணி யுடையா

4. ரை மாற்றிக்குடி நீக்கிக் காராண்மை மியாள்ச்சியும் மிகுதிக் குறை மையும் முள்ளடங்க வெள்ளான் வ

5. கையில் முதல்யாண்டு எட்டாவது முதல் தவிர்த்து வெள்ளானூர் களை பிர்மதேயமாகச் செய்வன பிர்மதே

6. யம் இத்யாதி இறைகட்டும்படி இவ்வூர்களுக்குத் தவிர்த்து இவ்வூர்களில் நாட்டுப் பொதுத் திரிபுவனமஹா

7. தேவிப் பேரெரியும் இவ்வேரியரயர்கள் கமுகு கொள்ளி வெட்டிப் பேறும் நாட்டுப் பெ(ா)து ஊர் நத்தமும் நாட்டு

8. ப்பொதுச் சிறுபற்றைக் காடுமென்றளந்து வந்தபடி நிலத்தில் இந்நாட்டு நித்தவிநோத நல்லூரொடும்

9. கூடவரியிலிட்ட ஊர்நத்தம் நிலம் நீக்கிநின்ற நிலன் பத்தொன்ப தேய் நாமா வரை முந்திரிகை

10. க்கீழ் முக்காலெ ஒருமா முக்காணிக்கிழ் முக்காலே ஒரு மாவிலும் திரிபுவன மஹாதேவிப்பே

11. ரேரியுங் கரையும் நிலன் ஐஞ்ஞூற்றெழுபத்தெட்டேழும் மாவரை யரைக்காணிக்கீழ் நா

12. ன்கு மா முக்காணிக்கீழ் முக்காலெ ஒருமாவும் இவ்வேரியினுள் ளால் திருவிறையான்குடி மா

13 தேவர் ஸ்ரீகொயிலும் திருமுற்றமும் நிலன் முக்காணி முந்திரி கைக் கீழ்மெட்டு மா முக்காணி

14. க்கீழ் முக்காலே ஒருமாவும் இவ்வரிதேய் இறயிலி தெங்குமா வும் உள்ள நந்தவானம் நிலன்

15. இருமாவரை முந்திரிகைக்கீழ் இரண்டு மாக்காணி அரைக் காணிக்கீழ்மெட்டுமாவும் இவ்வூரரைய

16. ர்கள் வெட்டிப்பேறு கமுகுகொள்ளி நிலத்தில் நீர்நிலை ஒடை நிலன் அறுமாவரையும் நாட்டார் குடியி

17. ருக்கை நத்தம் நிலன் பதிநொன்றெ முக்காலெழும் மாவரைக் கீழ் ஒருமாவரை முந்திரிகைக்கீழ் அரையே

18 யிரண்டு மாவும் நாட்டுப் பொதுக்குளமும் கரையும் நிலன் காலே அரைமாவுமாக நீங்கு நிலன் ஐஞ்ஞூ

19. ற்றுத் தொண்ணூற்றைஞ்சேய் முக்காலெ இருமாரைக்கீழ் முக் காலெ இருமாவரை முந்திரிகைக்கீழ் அரை

20. யெ இரண்டுமா நீக்கி நிலன் நூற்றறுபத்து மூன்றே ஏழுமாவின் கீழ் முக்காலே நான்கு மாவரை

21. க்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிநால் நெல்லு இருநூற் றுக்கலமும் நெற்குப்பைத் திரு

22. மால்காடனும் தஞ்சை நாட்டுக்கோனும் வேளான் அரங்கனும் உள்ளிட்டார்பற்று அளந்தபடி நி

23. லன் னூற்றறுபதரையே இருமாவரைக்கீழ் எழுமாவரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிலும்

24. ஸ்ரீகோயிலுத் திருமுற்றமும் இவ்வூர் மாதேவர் குளமுங் கரை யும் நிலன் அறுமாவரை முந்திரிகைக்கீழ்

தொகை எண் 5.

ஏடு. 2. பக்கம் 1

1. (அ)ரையெ யிரண்டு மாவும் நீக்கி நிலன் ஹூற்று பத்தே காலே முக்காணி அரைக்காணி (க்) கீழ் முக்கா
2. லேயரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிநால் நெல்லு ஆயிரத்தைஞ்ஞூற்றுக் கலமும் மீந்பா
3. ட்டங் காசு ஒன்றும் செம்பங்குடி அளந்தபடி நிலந் ஹூற்று முப்பத்தேழே யாறுமாக்காணி யரைக்காணி
4. முந்திரிகைக்கீழ் நான்மா வரையிலும் இவ்வூர்ப் பிடாரி கோயி லுந் திருமுற்றமும் ஐய்யந் கோயிலு தி
5. ருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போந சிங்களாந்த கன் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊ
6. டறுத்துப் போய் மயிமலயா நல்லூர்க்குப் பாயும் வாக்காலும் இவ்வூர்நிலத்தை ஊடறுத்துப் போ
7. (ந) கருணைக்காலாந மும்மடி சொழப் பேராற்றாலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போந சுந்தரசோழ
8. வாக்காலும் இவ்வூர்ச் சுடுகாடுமாக அரையே மும்மாவரை முந்திரிகைக்கீழ் எட்டுமா முக்கா
9. ணிக்கீழ் முக்காலே ஒருமா நீக்கி நிலந் ஹூற்று முப்பத்தா றரையே யிரண்டுமா முக்காணி முந்திரிகைக்
10. கீழரைமா வரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிநால் நெல்லு நாலாயிரக் கல
11. மும் மீந் பாட்டங்காசு மூ(ன்)றும் குளப்பாடு அளந்தபடி நிலந் ஹூற்றிருபத் தொந்பதே மாகா
12. ணியரைக்காணி முந்திரிகைக் கீழரையெய் மூந்று மா முக்காணி யிலும் இவ்வூர்க்குளமுங் க
13. ரையும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் போந சிங்களாந்தகந் வாய்க்காலும் இவ்வூர் நி
14. லத்தை ஊடறுத்துப் போந செய்யா நல்லூர் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊ

15. டறுத்துப் போய் வாளுவ நல்லூர்க்குப் பாயும் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்

16. துப் போய்ப் பெருங்குடிக்குப் பாயும் வாய்க்காலும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கொயிலும் திருமுற்றமும் இவ்

17. வூரிதே இறையிலி குளமுங்கரையும் இவ்வூர் ஐய்யந்கோயிலும் திருமுற்றமும் இவ்வய்யநார் இறையிலி

18. குளமுங்கரையும் இவ்வூர்ப் பிடாரி கோயிலிரண்டிநாலும் இவ்வூர் சுடுகாடுமாக நீங்கும் நிலந் ஒன்

19. றே முக்காலே இரண்டுமாமுக்காணி முந்திரிகைக் கிழரையேய் மூந்றுமா முக்காணி அரைக்காணி முந்திரி

20. கைக்கீழ் நாலுமா நீக்கி நிலன் னூற்றிருபத்தேழே மும்மாவரை முந்திரிகைக்கீழ் முக்காலே நான்

21. குமா முக்காணிக்கீழ் முக்காலெ ஒருமாவிநால் நெல்லு மூவாயிரத் தொருனூற்றுக் கலமும் துளாரள

22 ந்தபடி நிலன் னூற்றிருபத்து நாலே முக்காலெ காணி முந்தி ரிகைக்கீழ் முக்காலே ஒருமாவ

23. ரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிலும் குளமுங் கரையும் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் ஐ

24. ய்யந் கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போந புல்வெளூர் வாக்கா(லும்)

தொகை எண் 5.

ஏடு 2. பக்கம் 2

1. இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போய் (மணக்கள் முந்தியூர்க்குப் பாயும் வாய்க்காலுஞ்) சுடுகாடு

2. ம் ஆக நிலந் அரையே மூன்று மாக்காணிக்கீழ் முக்காலே (நான்குமா வரைக்காணி) முந்திரிகைக்கீழ்

3. நான்குமா நீக்கி நிலந் னூற்றிருபத்து நாலேயிரண்டு மாவின் கீழ் முக்காலே இரண்டு மாவிநால் நெல்

4. லு மூவாயிரத்தெண்ணூற்றுக் கலமும் மீந்பாட்டங்காசு மூந்றும் நல்லம்பர் அளந்தபடி நிலந்னூ

5. ற்றிருபத்திரண்டரையே நான்மாவரைக் கீழரையே நான்மா வரை முந்திரிகைக் கீழரையே இரண்டு

6. மாவிலும் குளமுங் கரையுந் நிலந் மூன்றுமா நீக்கி நிலந் னூற்றிருபத்திரண்(டரை)யெய் ஒரு

7. மாவரைக் கீழரையெய் நான்மாவரை முந்திரிகைக் கீழரையெய் இரண்டு மாவிநால் நெல்லு எண்ணூ

8. ற்றுக் கலமும் மீந் பாட்டம் காசு ஒன்றும் திரிபுவந மாதேவி நல்லூர் அளந்தபடி நிலந் தொண்ணூறேய்

9 எழுமா முக்காணிக் கீழரையேய் மூந்றுமாவரைக் காணி முந்திரி கைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் நில

10. த்தை ஊடறுத்துப்போந சிங்களாந்தகன் வாக்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போ

11. ந கொஞ்ஞாப்பூர் வாய்க்காலும் இவ்வூர்ச் சுடுகாடுமாக நிலந் எழுமா முக்காணிக்கீழ் இ

12. ருமாவரை முந்திரிகைக்கீழரையேய் இரண்டுமா நீக்கி நிலன் தொண்ணூற்று வேலிக்கி

13. ழரையெய் ஒருமாவரை முந்திரிகைக் கீழரையேய் இரண்டு மாவிநால் நெல்லு இரண்டாயி

14. ரத்தைஞ்ஞூற்றுக்கலமும் மீந்பாட்டங்காசு ஒன்றும் விச்சுராந சிக்கர் அளந்தபடி நில

15. ந் எழுபத்தொன்பதே எட்டுமாமுக்காணி முந்திரிகைக்கீழ் ஏழுமா முக்காணிக்கீ

16. ழ் முக்காலே ஒரு மாவிலும் பிடாரிகோயிலுந் திருமுற்றமும் பிடாரியாரிது குளமுங் கரையும் இவ்வூர்க்கு

17. ளமுங் கரையும் இவ்வூ(ர்) நிலத்தை ஊடறுத்துப் புறவூர்களுக்கு நீர்பாயும் காமபதாகை வா(ய்)க்கா(லு)

18. ம் ஆக நிலந் எட்டுமா முந்திரிகைக்கீழ்க்காலே அரைமா முந்திரி கைக்கீழ் அரையெய் இரண்டுமா நீக்கி நி

19 லந் எழுபத்தொன்பதே முக்காணிக்கீழ் மூந்றுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான் (கு) மாவிநால் நெ

20. ல்லு ஆயிரத்தொருனூற்று கலமும் மீன்பாட்டங்காசு ஒன்று முஞ்ஞாவல் அளந்தபடி நிலந் எழுபத்

21. தேழெ அறுமாவரை யரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையெய் காணி யரைக்காணிக்கீழ் எட்டு மாவிலும்

22 இவ்வூர்க் குளமுங் கரையும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் இவ்வூர்ப் பிடாரிகோயிலும்

23. திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போந காமபதாகை வாய்க்காலுமாக நிலந் மூந்றுமா

24. முக்காணிக்கீழ் ஒன்பது மாவரை முந்திரிகைக் கீழரையேய் இரண்டு மாநீக்கி நிலன் எழுபத்தே

தொகை எண் 6.

ஏடு 3. பக்கம் 1

1. ழேயிரண்டுமா முக்காணியரைக்காணி மு(ந்)திரிகைக்கீழ் முக் காணிக்கீழ் முக்காலே இருமாவினால் நெல்லு நானூ

2. ற்றுக்கலமும் கூத்தனூரளந்தபடி நிலன் எழுபத்தாறே முக்கா லே முந்திரிகைக் கீழரையே யிரண்டுமாவரை

3. ரக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர்நிலத்தை ஊடறுத்துப் போன கருவாய்க்காலான

4. மும்மடிசோழப் பெராற்றாலும் இவ்வூர் நிலத்தை யூடத்துப்போன சிங்களாந்தகன் வாய்க்கா

5. லாலும் இவ்வூர் மஹாதேவர் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் இத்தேவர் இறையிலி நந்தவானமும் இத்(தே)

6. வர் குளமும் கரையும் இவ்வூர் ஐயங்கோயிலுந் திருமுற்றமும் இவ்வூர்ப் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் இவ்

7. வூர்க்கணவதியார் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் இவரிதெ யிறையிலி நந்தவானமும் இவ்வூர்ச்சுடுகாடுமாக நிலன்

8. அரையேயரை மாவின்கீழ் முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா நீக்கி நிலன் எழுபத்தாறே நான்மாவரை மு

9. ந்திரிகைக் கீழரையே மாகாணியரைக்கர்ணிக்கீழ் எட்டுமாவினால் நெல்லு இரண்டாயிரக்கலமும் மீன்பாட்

10 டங்காசொன்றும் அக்கமெட்டும் கமுகஞ்செந்தன்குடி அளந்தபடி நிலன் எழுபத்தைஞ்சேய் முக்காலே மூ

11. ன்று மாக்காணி அரைக்காணிக்கீழே மும் மாவரைக்காணி முந் திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்

12. வூர்க் குளமுங்கரையும் சுடுகாடும் இவ்வூர் நிலத்தை யூடறுத் துப்போன வெண்ணில் நீரோடு காலும்

13. இவ்வூர் நித்தை யூடறுத்துபோய் ஆதனல்லூர்க்குப் பாயும் வாய்க்காலும் ஆகனிலன் ஒன்

14 றே யெழுமாவரை யரைக்காணிக்கீழெட்டுமா நீக்கி நிலன் எழுபத்து நாலரையே யரைமாவரை

15. க் காணி முந்திரிகைக் கீழ் முக்காலே நான்கு மாவரைக் காணி முந்திரிகைக் கீழ் நான்குமாவினால் னெ

16. ல்லு இரண்டாயிரத்தைஞ்னூற்றுக் கலமும் மீன்பாட்டங் காசிரண்டும் வைகுந்தநல்லூர் அளந்தபடி நிலன் எழுபதரை

17. யேயரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்றுமா வரைக்காணி முந் திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர்க் குளமுங் கரை

18. யும் நிலன் கால்நீக்கி நிலன் எழுபதே காலே யரைக்காணி முந்திரிகைக்கீழ் மூன்று மாவரைக்காணி முந்திரிகைக்கீ

19. ழ் நான்கு மாவினால் னெல்லு ஆயிரத்து நூற்றுக் கலமும் மீன்பாட்டங்காசு இரண்டும் மஹிமாலயநல்லூர் அ

20. ளந்தபடி நிலன் அறுபத்தொன்பதேய் எட்டுமாவின்கீழ் அரை யே மூன்று மா முக்காணிக்கீழ் முக்காலே யொருமாவி

21. லும் இவ்வூர் மஹாதேவர் ஸ்ரீகோவிலு திருமுற்றமும் சுடு காடும் நிலன் மூன்று மா வரைக்காணிக்கீழ் அரையெ நான்கு மா(க்)காணி

22. யரைக்காணிக்கீழ் எட்டுமாநீக்கி நிலன் அறுபத்தொன்பதே நான்குமா முக்காணி முந்திரிகைக் கீழ் முக்காலே நான்

23. கு மாக்காணி யரைக்காணிக் கீழெட்டு மாவினால் நெல்லு இரண்டாயிரத்தைஞ் னூற்றுக் கலமும் மீன்பாட்ட

24. ங் காசு ஒன்றும் இந்நாட்டுக் கீழமாத்தூர் அளந்தபடி நிலன் ஐம்பத்தெட்டே இரண்டு மாவரைக்காணிக்கீழ் மும்மாமு

தொகை எண் 6. பக்கம் 2

ஏடு 3.

1. க்காணிக் கீழ் முக்காலே ஒருமாவினால் நெல்லு எண்ணூற்றுக் கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் பரகேஸ

2. ரி நல்லூரளந்தபடி நிலன் ஐம்பத்தெட்டே மூன்றுமா முக் காணி யரைக்காணி முந்திரிகைக்கீழ்க் காலிலும் இவ்வூ

3. ர்ப்பிடாரி கோயிலுந் திருமுற்றமும் குளமுங் கரையும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் போய்ப்புறவூர்க்கு(ப்) பாயுங்கா

4. மபதாகை வாய்க்காலும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீகோயிலுந் திரு முற்றமும் இத் தேவர் குளமுங் கரையும் நிலன்

5. காலேயரைமாவ ரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காணிக்கீழ் முக் காலே யொருமா நீக்கி நிலன் ஐப்பத்தேழே

6. முக்காலே மூன்றுமாக்காணிக்கீழ் நான்கு மாவரைக்காணி முந் திரிகைக்கீழ் நான்கு மாவினால் நெல்லு (இரு)

7. னூற்றுக் கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் பெண்ணாகடம் அளந்தபடி நிலன் ஐம்பத்தைஞ்செ யரைமாவரைக்காணிக்

8. கீழ் முக்காலே மூன்றுமாக்காணி யரைக்காணிக்கீழ் எட்டுமா விலும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் போன காமபதாகை வா

9. ய்க்கால் நிலன் ஒருமாமுக்காணி முந்திரிகைக்கீழரையே யிரண்டு மா நீக்கி நிலன் ஐம்பத்து நாலெ முக்காலே முன்

10. றுமா முக்காணி முந்திரிகைக்கீழறுறு மாக்காணி யரைக்காணிக் கீழெட்டு மாவினால் நெல்லு அறுநூற்றுக்

11. கலமும் மீன்பட்டமக்கமெட்டும் உறத்தூர் அளந்தபடி நிலன் ஐம்பத்துநாலே காலே காணிக்கீழ்க் காலேய

12. ரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் மாதேவர் ஸ்ரீ கோயிலுந் திருமுற்றமும் இத்தே

13. தவர் குளமுங் கரையும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன மும்மடிசோழப் பேராறுமாக நிலன் அரை

14. யெ கீழெட்டு (ம)ா நீக்கி நிலன் ஐம்பத்து மூன்றே முக்காலே யரைக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே இரண்டு

15. மாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினால் நெல்லு ஆயிரக்கலமும் மீன்பாட்டங்கர்சு ஒன்று

16. ம் சிறையூர் அளந்தபடி நிலன் நாற்பத்தொன்பதேயிரண்டு மாவரைக்காணிக் கீழரையே நான்குமாக்காணி யரைக்காணிக் கீ

17, ழெட்டு மாவிலும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் போன காமபதாகை வாய்க்கால் நிலன் ஒருமா நீக்கி நிலன் நாற்பத் தொன்பதே ஒருமா

18. வரைக்காணிக் கீழரையே நான்கு மாக்காணியரைக்காணிக் கீழெட்டு மாவினால் நெல்லு ஆயிரத்து முன்னூ(ற்று)க்கலமும்

19, மீன்பாட்டங்காசு ஒன்றும் கீழ்சோற்றுத்துறை அளந்தபடி நிலன் நாற்பத்தஞ்சரையே மாகாணி முந்திரிகைக்கீழ்

20. யெழும்மாவரை யரைக் காணி முத்திரிகைக்கீழ் நான்கு மா விலுங் குளமுங் கரையும் இவ்வூர் நிலத்தை யூடறுத்துப்போன கரு(ணை) (வா)

21. ய்க்காலான மும்மடிசோழப் பேராற்றாலுமாக நிலன் எழுமா வரையரைக் காணி நீக்கி நிலன் நாற்பத்தைஞ்செ மும்மாவ

22. ரை யரைக்காணி முந்திரிகைக்கீழரையே மும்மாவரை யரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவினால் நெல்லு ஆயிரக்

23. கலமும் மீன்பாட்டங்காசொன்றும் நெடுவாயில் அளந்தபடி நிலன் முப்பத்தொன்பதே முக்காலே நான்கு மாவரை

24. க்காணிக்கீழரையே இரண்டு மா முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவிலும் இவ்வூர் சுடுகாடு நிலன் அரைக்காணி முந்திரிகை

தொகை எண் 7.

ஏடு 4.

பக்கம் 1

1. க்கீழ் நான்குமா நீக்கி நிலன் முப்பத்தொன்பதே முக்காலே மூன்றுமா முக்காணி (யை)ரக்காணி முந்திரிகைக்கீழ் எட்டு

2. மாமுக்காணிக் கீழ் முக்காலே யொருமாவினால் நெல்லு ஆயிரத்தெழு நூற்றைம்பதின் கலம்மு

3. ம் மீன்பாட்டங்காசு ஒன்றும் ஏறுபாடி அளந்தபடி னில(ன்) இருபத்திரண்டே முக்காலே காணி ய(ரை)

4. க்காணிக்கீழரையே மும்மாவரை முந்திரிகைக்கீழ ரையே இரண்டு மாவினால் நெல்லு நாஹு

5. ற்றுக் க (ல)மும் புளிகைக்குடி அளந்தபடி நிலன் முப்பத் தெட்டே முக்காலே மும்மாவரை அரைக்

6. காணிக்கீழரையே மூன்று மாவரைக்க(ா)ணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் விஷ்ணுக்க

7. ள் ஸ்ரீவைகுந்தமுடையார் ஸ்ரீகோயிலுந் திருமுற்றமும் இந் தேவரிதே தொங்குமாவு மாவும் உள்ளநந்த

8. வானமும் நீர்நிலை யோடையுமாக நிலன் அரையேயரைக் காணி முந்திரிகைக்கீ ழரையே நான்குமா

9. க்காணியரைக்காணிக் கீழ் எட்டுமா நீக்கி நிலன் முப்பத் தெட்டே யெழுமாவரைக் கீழ் முக்காலே மூன்

10. றுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவிநால் நெல்லு ஆயிரத் திருனூற்றுக் கல

11. மும் பெருங்குடி அளந்தபடி நிலன் முப்பத்தொன்றே முக்காலே காணிக்கீழ்முக்காலே

12. நான்கு மாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நான்கு மாவிலும் இவ்வூர் ஐய்யன் கோயி

13. லுந் திருமுற்றமும் இவ்வூர்ப் பிடாரி கோயிலுந் திருமுற்றமும் இப்பிடாரியார் நந்தவான

14. மும் கம்மாணசேரியும் பறைச்சேரியுமாக நிலன் ஒருமா முக் காணி முந்திரிகைக் கீழிரண்டு

15. மாக்காணி யரைக்காணி கீழெட்டுமா நீக்கி நிலன் முப்பத் தொன்றரையே மூன்று மா

8. யிமினி சூத்ரத்துப் புள்ளமங்கலத்து வாஸுதேவன் ஸ்ரீராம பட்
டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் வாஸிஷ்ட கோத்ரத்து ஜயி

9. மினி சூத்ரத்துப் புள்ளமங்கலத்து நாராயணன் ஸ்ரீவாஸுதேவ
னுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து ஜயி

10. மினி சூத்ரத்துப் புள்ளமங்கலத்து ஸ்ரீதரன் தத்தனுக்குப் பங்
கொன்று|| இவ்வூர் பாக்கவ கோத்ரத்து ஜ

11. யிமி சூத்ரத்துப் புள்ள மங்கலத்து வாஸுதேவ ஸ்ரீலகண்டனுக்
குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர

12. கோத்ரத்து ஜயிமினி சூத்ரத்துப் புள்ளமங்கலத்து நாராயணன்
அக்கிசன் மனுக்குப் பங்கொன்று||

13. இவ்வூர் வாஸிஷ்ட கோத்ரத்து ஜயிமினி சூத்ரத்து மருதூர் மா
றன் குமரனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் வாஸிஷ்ட

14. கோத்ரத்து ஜயமினி சூத்ரத்து அருவலத்து நாராயணன் ஸ்ரீகுமர
னுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமி

15. த்ர கோத்ரத்து ஜயிமினி சூத்ரத்து புள்ளமங்கலத்து நாராயணன்
ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பங்கொன்று||

16. இவ்வூர் வாஸிஷ்டகோத்ரத்து ஜயிமினி சூத்ரத்துக் காடன்
ஸ்ரீகிருஷ்ண அக்கி சத்தயாஜிக்குப் பங்கொன்று|| இ

17. ந்நாட்டு மலரியாளி ஸ்ரீகணச் சதுர்வேதி மங்கலத்து காஸ்யப
கோத்ரத்து ஆஸ்வலாயன சூத்ரத்து நாராய

18. ணன் ஸுப்ரஹ்மண்ய பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்
வாமித்ர கோத்ரத்து ஆஸ்வலாயன சூத்ரத்து பெருவெங்கூ

19. ர்த்தத்தன் சோமனுக்குப் பங்கொன்று|| இந்நாட்டு மீகோழைச்
சோழமா தேவிச் சதுர்வேதி மங்கலத்து லோகீத கோ

20 கோத்ரத்து ஆபஸ்தப்ப சூத்ரத்துக் காராம்பிச் செட்டுத் தூரப்பில்
ஸ்ரீமாதவ நாராயண தசபுரியனுக்குப் பங்கொன்று||

21 இவ்வூர் ஹாரித கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து முட்டிறை
ஐய்யன் தோணய தசபுரியனுக்குப் பங்கொன்று|| இ

22. வ்வூர் காஸ்யப கோத்ரத்து காத்யாயான சூத்ரத்து மணிமத்தி நாராயணன் திருமாலிருஞ்சோலை ஸஹஸ்ரனுக்குப் பங்

23. கொன்று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து காத்யாயனசூத்ரத்து மணிமத்தி திருமாலிருஞ்சோலை தாமோதர பட்டனுக்கு

24. ப்பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து ஜயிமினி சூத்ரத்து அன்பில் கோவிந்தன் ஜாதவேதனுக்குப் பங்கொ

25. ன்று|| கேரலாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலத்து ராதீதர கோத்ரத்து காத்

26. யாயன சூத்ரத்து நாராயணன் ஸுப்ரஹமண்ய பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ராதீதர கோத்ரத்து ஆஸ்வலாய

ஏடு 29 பக்கம் 2

1. சூத்துரத்து நாராயணன் சத்ராபரண பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் சண்டியல கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்து

2. மண்றபள்ளி கேசவன் ரிஷிகேச கிரமவித்தனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் குண்டின கோத்ரத்து ஆபஸ்தம்ப

3. சூத்ரத்துக் கோமடத்துச் சங்கரநாராயணன் ஸ்ரீகிருஷ்ண தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் வத்ஸ கோத்ரத்து ஆ

4. பஸ்தம்ப சூத்ரத்துக் கோக்கன் கேசவ நாராயண பட்டனுக்குப் பங்கொன்று|| இல்வூர் குண்டின கோத்ரத்து ஆப

5. ஸ்தம்ப சூத்ரத்து இரங்கண்டி திவாகரன் யஜ்ஞசன்ம தசபுரியனுக்குப் பங்கொன்று || இவ்வூர் வத்ஸ கோத்ரத்து ஆப

6. ஸ்தம்ப சூத்ரத்து அக்கி பெருமான் திருவிராமீஸ்வர கிரமவித்தனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஸ்வாதராயன கோத்ரத்து ஆப

7. ஸ்தம்ப சூத்ரத்து மயிந்தக்குறி திருவரங்கன் திருவரங்க யஜ்ஞய தசபுரினுயக்குப் பங்கொன்று || இவ்வூர் வத்ஸ

8. கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்துக் காராம்பிச்செட்டு நாராயண தாமோதர ஸஹஸ்ரனுக்குப் பங்கொன்று ||

9. இவ்வூர் பாரஙாஜ கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து மாரங்களூர் மகேஸ்வரன் வெண்ணய பட்டனுக்குப் ப

10. ங்கொன்று|| இவ்வூர் கௌதம கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்துப் பசிண்டிப் புறத்து அம்பலத்தாடி தோண

11. ய தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் குண்டின கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து வங்கி

12. ப் புறத்துக் கலைசன் பட்டன் மாதவ தசபுரியனுக்குப் பங் கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து

13. ஆபஸ்தம்ப சூத்ரத்துக் காராம்பிச்செட்டு யஜ்ஞபூதி ஸ்ரீத தசபுரியனுக்குப் பங்கொன்று||

14. இவ்வூர் காஸ்யப கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்துக் குரவசரி மக்ஹயன் பன்மநாப தசபு

15. ரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் பாரத்வாஜ கோத்ரத்து ஆபஸ் தம்ப சூத்ரத்துக் காஞ்

16. சிக்குறி கேசவன் ஸ்ரீமாதவ ஸஹஸ்ரனுக்குப் பங்கொன்று|| இந் நாட்டு நங்கை ப்ரஹ்மதே

17. யமான அறிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலத்து காஸ்யப கோத் ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து ஸௌரஸாரப்பி மாட

18. போசன் உழுதன் பவத்ரோண தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஆத்ரய கோத்ரத்து ஆபஸ்தம்ப சூ

19. த்ரத்து நெதை கோமபுறத்து நாராயணன் சக்ரபாணி ஸஹஸ் ரனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் முக்க

20. ல கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து வங்கிப்புறத்து நாராயணன் தத்த ஸஹஸ்ரனுக்குப் பங்கொ

21. ன்று|| இவ்வூர் குண்டின கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து உவியூர்ச் சன்னப்பன் சக்ரபாணி தசபுரியனு

22. க்குப் பங்கொன்று|| கோநாட்டு உறத்தூர் கூற்றத்துக் கற்றளி யேரியான விக்ரமகேஸரி சதுர்வேதி மங்கல

23. த்து ஆத்ரய கோத்ரத்து ஆஸ்வலாயன சூத்ரத்து வாதவூர்ச் சேந்தன் சந்திராபரண பட்டனுக்குப் பங்கொன்

24. று|| சூரலூர் கூற்றத்துச் சோழ உத்தம சதுர்வேதி மங்கலத்து முஹ்ஹல கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ர

25. த்து உறுப்புட்டூர்த் திருமழபாடி ஆதித்தபிடார தசபுரியனுக்குப் பங்கொன்று|| ராஜாஸ்ரய வளநாட்டுத் தனியூர்

26. திருவெள்ளறை வாஸிஷ்ட கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து ஜாதவேதன் நாராயண பட்டனுக்குப் பங்கொன்று||

ஏடு 30 பக்கம் 1

1. இவ்வூர் வாஸிஷ்ட கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து பத்மநாபன் ஜாதவேத பட்டனுக்குப்

2. பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து மதிசூதன் சங்கரநாராய

3. ண பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து கோவிந்தன்

4. கேசவ தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர (கோ)த்ரத்து பௌதாயன சூத்ரத்து திய

5. ம்பகன் நீலகண்ட தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ் வாமித்ர கோத்ரத்து பௌதாய

6. ன சூத்ரத்து பசுவதி நாரரயண தசபுரியனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் கௌண்டிந்ய கோத்ரத்து

7. பௌதாயன சூத்ரத்து பசுவதிசாத்த பட்ட ஸோமயாஜிக்குப் பங்கொன்று|| இவ்வூர் காஸ்யப

8. கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து ஸ்ரீதரன் நக்கபிரான் பட்ட னுக்குப் பங்கொன்று|| இவ்வூர்

9. காஸ்யப கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து நீலகண்டன் ஸ்ரீ கிருஷ்ண பட்டனுக்குப் பங்கொன்று|| மூ

10. ஞ்ஞு இவல்லவாயா நாட்டு உத்தம சோழச் சதுர்வேதி மங் கலத்து வத்ஸ கோத்ரத்து

11. ஆபஸ்தம்ப சூத்ரத்து ஆதியூர் ரணதீர மங்கலத்து ருத்ரன் கேசவ கிரமவிதனு

12. க்குப் பங்கொன்று|| ராஜாஸ்ரய வளநாட்டு பாச்சில்க் கூற்றத்துக் கீழ பலாற்றுப் பெ

13. ருமருதூர் ஆத்ரெய கோத்ரத்து ஆஸ்வலாயன ஸூத்ரத்து ஹரி தாஸன் ஸ்ரீகண்ட பட்ட

14. னுக்குப் பங்கொன்று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து ஆஸ்வ லாயன ஸூத்ரத்து

15. தாயன் ஜடாதரனுக்குப் பங்கொன்று|| இந்நாட்டுக்கலாற் கூற்றத்து திருமங்கலத்து வா

16. ஸிஷ்ட கோத்ரத்து த்ரஹ்யாயன ஸூத்ரத்து நந்தீஸ்வரன் நாராயணபட்டனுக்குப் பங்கொன்று|| இ

17. வ்வூர் ஆத்ரெய கோத்ரத்து த்ரஹ்யாயன ஸூத்ரத்து வாசு தேவன் நந்தீஸ்வரபட்டனுக்குப் பங்கொ

18. ன்று|| இவ்வூர் வாஸிஷ்ட கோத்ரத்து த்ரஹ்யாயன ஸூத்ரத்து ப்ரஹ்மண்ய தேவன் உதயாதித்த பட்ட

19. னுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து த்ரஹ் யாயன ஸூத்ரத்து சாத்தன் சிவக்ரு

20 த ஸஹஸ்ரனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஆத்ரெய கோத்ரத்து த்ரஹ்யாயன ஸூத்ரத்து நக்கன்

21. பூதிக்குப் பங்கொன்று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து த்ரஹ் யாயன ஸூத்ரத்து நாராயணன் திருமா

22 லிருஞ்சோலைக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஆத்ரெய கோத்ரத்து த்ரஹ்யாயன ஸூத்ரத்துக் கொ

23. ற்றன் நீலகண்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் காஸ்யப் கோத்ரத்து த்ரா

தொகை எண் 55

ஏடு 30

பக்கம் 2

1. ஹ்யாயன ஸூத்ரத்துச் சோலை மாதவ பட்டனுக்குப் பங்கொன் று|| இவ்வூர் ஆத்ரெய கோத்ர

2. த்து த்ரஹ்யாயன சூத்ரத்து நக்கன் வாஸுதேவ பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமி

3. த்ர கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்து நீலகண்டன் சங்கப் பிரான் பட்டனுக்குப் பங்கொன்று||

4. இவ்வூர் ஆத்ரெய கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்துக் கண் ணன் சோம ஸஹஸ்ரனுக்குப் பங்கொ

5. ன்று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்துக் கேசவன் சங்கரனுக்குப் பங்கொன்

6. று|| இவ்வூர் காஸ்யப கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்து சோ மாசி சங்கரநாராயணனுக்குப் பங்கெ

7. ான்று|| இவ்வூர் ஆத்ரெய கோத்ரத்து த்ரஹ்யாயன சூத்ரத்து நாராயணன் வாமனஸ்வாமி ஸோ

8. மயாஜிக்குப் பங்கொன்று|| இவ்வூர் விஸ்வாமித்ர கோத்ரத்து ஆஸ்வலாயன சூத்ரத்து மணற்கால்

9. ஊரன் நாராயண ஸஹஸ்ரனுக்குப் பங்கொன்று|| இந்நாட்டு வெள்ளலையூர்க் கண்டத்து சங்கேத்தி மங்கலத்து வத்ஸ

10. கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்து வங்கிப் புறத்து ரிஷிகேஸவன் அடிகணம்பி ஸஹ

1 ஸ்ரனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஹாரி(த) கோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்துக் குமுண்

12. டிலி ஸ்ரீகிருஷ்ணதேவரத ஸஹஸ்ரனுக்குப் பங்கொன்று|| ராஜ ராஜ மண்டலத்துக் கள

13. க்குடி நாட்டு மாநநிலைநல்லூர் ஆத்ரெய கோத்ரதது ஆபஸ் தம்ப சூத்ரத்துக் கி

14. லாக்கில் கோவிந்தன் சேந்தப்பிரான் பட்டசோமயாஜிக்குப் பங்கொன்று|| இவ்

15. வூர் ஆத்ரெயகோத்ரத்து ஆபஸ்தம்ப சூத்ரத்துக் கிலாக்கில் சேந்திப்பிரான் கோவிந்த பட்ட ஆ

16. ஹிதாஹ்நிக்குப் பங்சொன்று|| உ || உ || ஆக ப்ராமணப்பேர் வெட்டின ஏடு முப்பது உ || உ || உ || உ || உ || உ || உ || லத்து இரவி பட்டன் ஸோ

17. மதத்த பட்டனுக்குப் பங்கு இரண்டு|| ராஜேந்திரஸிம்ஹ வள நாட்டுப் போஙக நாட்டுக்

18. கண்டாதித்ய சதுர்வேதி மங்கலத்து நப்பூர் தரன்கய பட்டனுக்குப் பங்கு ஒன்று||

பகுதி—3—அ

சிறப்பாகப் பங்குபெற்ற அந்தணரும், சமுதாயத் தொழிலாளரும், சமயக்கோயில்களும், கல்வியும்

ஏடுகள் 2

பக்கங்கள் 4

கூடுதல் வரிகள் 77

தொகை எண் 56

ஏடு 31 பக்கம் 1

1. ஸ்ரீகயிலாசமான ஸ்ரீராஜ ராஜ ஈஸ்வரமுடையார் அர்ச்சநா போகப்பங்கு இரண்டில் நித்தவிநோத

2. வளநாட்டு முடிச்சோணாட்டு ஜநநாபச் சதுர்வேதி மங்கலத்துப் பிடாகை இரும்புளை ஸிவப்ரா

3. ஹ்மணன் பாரநாஜ கோத்ரத்து பௌதாயன ஸூத்ரத்து ஸூப்ரஹ்மண்யன் நம்பிசாமி பட்டனுக்குப்

4. பங்கொன்று|| அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு மங்க லத்து ஸிவப்ராஹ்மணன் காஸ்யப

5. கோத்ரத்து பௌதாயன சூத்ரத்து தோன்றி ஈஸ்வர பட்டனுக் குப் பங்கொன்று|| நடுவிற் ஸ்ரீ

6. கோயிலான முடிகொண்ட சோழ விண்ணகர்க்கு அர்ச்சநா போகப் பங்கு இரண்டில் நித்த விநோ

7. த வளநாட்டு வெண்ணிக்கூற்றத்து ஒலோகமஹாதேவி சதுர் வேதி மங்கலத்து காஸ்யப கோத்ரத்

8 து வைகான சூத்ரத்து தேவதத்தன் அனந்தப்பிடார பட்டனுக் குப் பங்கொன்று||

9. இந்நாட்டு முடிச்சோணாட்டு ஜநநாத சதுர்வேதி மங்கலத்து ஆத்ரேய கோத்ரத்து வை

10. கானஸ சூத்ரத்துக் கேசவன் திருவரங்க பட்டனுக்குப் பங் கொன்று|| இவ்வூர்த் திருமேற்றளி

11. யான் திருபுவன மஹாதேவி விண்ணகர்க்கு அர்ச்சநாபோகப் பங்கு இரண்டில் ராஜேந்ரஸி

12. ம்ஹ வளநாட்டு வெண்ணையூர் நாட்டுப் பஞ்சவன் மஹாதேவி சதுர்வேதி மங்கலத்

13. து ஹௌதம கோத்ரத்து வைகானஸ சூத்ரத்து ஸூப்ரமண்யன் ஆராவமுது பட்டனுக்குப் பங்கொன்று||

14. க்ஷத்ரிய ஸிஹாமணி வளநாட்டுத் தேவூர் ஆலத்தூர் வாஸிஷ்ட ஹோத்ரத்து வைகானஸ சூத்ரத்து

15 அமுதன் அருமொழி தேவ பட்டனுக்குப் பங்கொன்று|| இவ்வூர் ஜநநாத விண்ணகர் தேவர் அ

16. ர்ச்சநாபோகப் பங்கு இரண்டில் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்து மனுகுல சூளாமணிச் ச

17. துர்வேதி மங்கலத்து பார்க்ஹவ கோத்ரத்து வைகானஸ சூத் ரத்துச் சேந்தன் சிங்க பட்டனுக்குப் பங்

18. கொன்று|| இந்நாட்டு வீரசோழ வளநாட்டு உதையமார்த்தாண் டச் சதுர்வேதி மங்கலத்து கௌதம கோ

19. த்ரத்து வைகானஸ சூத்ரத்துப் பற்பநாபன் ஸ்ரீவாஸு தேவனுக் குப் பங்கொன்று|| திருமடைபள்ளி

ஏடு 31 பக்கம் 2

1. வேதயன் கவினயன் ஒற்றியூரன் அனந்தஹிரண நான வளவள மங்கலப் பேரையனுக்குப் பங்

2. கு மூன்று|| திருராஜேந்ர ஸிம்ஹ வளநாட்டுக் குறுக்கை நாட்டுப் பிடாங்குடி பாரஙாஜ கோத்ரத்து ஆஸ்வலா

3. யன சூத்ரத்து ஆதித்தன் கணபுரத்துக்த ஜோதிஷப் பங் கொன்று|| அஷ்டபட்டன் நித்தவிநோத வளநா

4. ட்டு ஆவூர்க் கூற்றத்து மனுகுல சூளாமணச் சதுர்வேதி மங்கலத்து அமிர்தவர்ஷன் அண்ணாத்தடிகள் சிங்

5. கத்துக்குப் பங்கொன்று|| கணக்கப்பங்கு ராஜேந்ர ஸிம்ஹ வளநாட்டுப் பொ(ய்)கை நாட்டுக் கண்டராதித்யச் ச

6. துர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் பிடாரன் ஸ்ரீகுருகூர்க்குக் கணகாப்பங்கொன்று|| நித்த விநோத வளநாட்டு மு

7. டிச்சோணாட்டு ஜநநாத சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் முன்னூற்றவன் நாற்பத்து மூவனுக்குக் கண

8. க்கப் பங்கொன்று|| இந்நாட்டு ஆவூர்க்கூற்றத்து மனுகுல சூளாமணிச் சதுர்வேதி மங்

9. லத்து மத்யஸ்தன் வேம்பன் இருநூற்றுப்பதினறுவனுக்குக் கணக்கப் பங்கொன்று|| க்ஷ

10. த்ரிய ஸிகாமணி வளநாட்டு அளநாட்டுப் பாப்பார்குடி மத்யஸ் தன் நானூற்றுவன் தியம்

11. ம்பகனுக்குக் கணக்கப் பங்கொன்று|| நித்தவிநோத வளநாட்டு வெண்

12. ணிக் கூற்றத்து ஸ்ரீபூதி மத்ய(ஸ்)(த)ன் அரவணையா நின்றானுக் குக் கணக்கப் பங்

13. கொன்று|| ராஜேந்ர ஸிம்ஹ வளநாட்டுப் பொ(ய்)கைநாட்டு மது ராந்தகச் சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் ந

14. கரத்தான் வெண்காடனுக்குக் கணக்கப் பங்கொன்று|| காவிதிப் பங்கு நித்த விநோத வளநாட்டு முடிச்சோணா

15. ட்டு ஜநநாதச் சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் பிடாரன் வட பத்ர சாயிக்குக் காவிதிப் பங்கரை|| ராஜேந்ர

16. ஸிம்ஹ வளநாட்டுப் பொ(ய்)கை நாட்டு மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து மத்யஸ்தன் குமரன் இரண்டாயிர

17. வனுக்குக் காவிதிப் பங்கரை|| அருமொழி தேவ வளநாட்டு இக் கணாட்டு நெற்குப்பை மத்யஸ்தன் புருஷோத்தமன்

18. நீலகண்டனுக்குக் காவிதிப் பங்கரை|| நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து நெற்குன்றத்து மத்யஸ்த

19. ன் ஏச்செருமானரையனுக்குக் காவிதிப் பங்கரை|| உகச்சப்பங்கு இவ்வூர் ஸ்ரீகயிலாசமான ஸ்ரீராஜராஜ ஈ

தொகை எண் 57

ஏடு 32 பக்கம் 1

1. ஸ்வரத்துக்கு உவச்சப்பங்கு நித்தவிநோத வளநாட்டு வீரசோழ வளநாட்டு உதயமாத்தாண்ட சதுர்வேதி மங்கலத்து உவச்சன் க

2. லன் கிளாவனுக்கு உவச்சப்பங்கொன்று|| திருபுவன மஹாதே விச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை குளப்பாட்டு உவச்சன்

3. அமலன் தேவனுக்கு உகச்சப்பங்கொன்று|| நடுவிற் ஸ்ரீகோயிலான முடிகொண்ட சோழ விண்ணகர்க்கு உகச்சப்

4. பங்குளப்பாட்டுகச்சன் பாலைமன்றனுக்கு உகச்சப் பங்கொன்று|| உதைய மாத்தாண்டச் சருப்பேதி மங்கலத்து உக

5. ச்சன் கரிகாலன் தேவனுக்கு உகச்சப்பங்கொன்று|| திருமேற் றளியான திருபுவன மஹாதேவி விண்ணகர்க்கு கச்சப்ப

6. ங்கு மேற்படியூர் உகச்சன் கரிகாலன் மண்டகவனுக்கு உகச்சப் பங்கொன்று|| இவ்வூர்ப் பிடாகை திருபுவனமாதேவி நல்

7. லூருகச்சன் ஊரானண்ணாமலைக்கு கச்சப்பங்கொன்று|| ஜநநாத விண்ணகர்க்கு உகச்சப்பங்கு உதைய மாத்தாண்ட சருப்

8. பேதிமங்கலத்து உகச்சன் கரிகாலன் கண்ணனுக்கு உகச்சப்பங் கொன்று|| திருபுவன மாதேவிச் சருப்பேதி மங்கலத்துப் பிடா

9. கை குளப்பாட்டுகச்சன் சூற்றி வெண்காடனுக்கு உகச்சப்பங் கொன்று|| நாவிசப்பங்கு நித்த வளநாட்டு வீரசோழவளநாட்டு திருபு

10. வ மஹாதேவிச் சருப்பேதி மங்கலத்துப் பிடாகை திருபுவன மாதேவி நல்லூர் நாவிசன் பிரமன் திருவடிகளுக்

11. கு நாவிசப்பங்கு அரை|| இந்நாட்டு வெண்ணிக் கூற்றத்து ஸ்ரீபூதிநாவிசன் அமளயன் சூற்றிக்கு நாவிசப்பங்

12. கு அரை'' இந்நாட்டு ஆவூர்க் கூற்றத்து மனுதல சூளாமணிச் சருப்பேதி மங்கலத்து நாவிசன் மண்டகவனாடனுக்

13. கு நாவிசப்பங்கு அரை|| இந்நாட்டு ஊற்றக்காட்டு நாவிசன் வாமனன் மாங்குடிக்கு நாவிசப்பங்கு அரை||

14. இவ்வூர் ஸ்ரீகயிலாசமான ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார்க்கு நிலம் எண்வேலி|| இவ்வூர் நடுவி

15. ற் ஸ்ரீகோயிலான முடிகொண்ட சோழ விண்ணகர தேவர்க்கு நிலம் எண்வேலி|| இவ்வூர் திருமே

16. ற்றளியான திருபுவனமாதேவி விண்ணகர தேவர்க்கு நிலம் நால்வேலி|| இவ்வூர் ஜநநாம விண்ணகர

17. தேவர்க்கு நிலம் எண்வேலி|| இவ்வூர்க் கேரளாந்தக விண்ணகர தேவர்க்கு நிலம் மூவேலி|| இவ்வூர் ஸூர்யதே

18. வர்க்கு நிலம் வேலி|| இவ்வூர் ஸுப்ரமண்ய தேவர்க்கு நிலம் வேலி || இவ்வூர் த்ரபையார்க்கு நிலம் வேலி || இவ்வூர்

19. மஹா ஸாஸ்தாவுக்கு நிலம் மூவேலி || இவ்வூர்ப் பிடாரி யார்க்கு நிலம் வேலி || இவ்வூர் திருபுவன மாதேவிப் பேரேரி

20. க்கரை கணவதியார்க்கு நிலம் மூவேலி || இவ்வூர்ப்பிடாகை குளப்பாட்டு மாதேவர்க்கு நிலம்இருவேலி || கூத்

21. நதனூர் மாதேவர்க்கு நிலம் அரை || சிறையூர் மாதேவர்க்கு நிலம் அரை || உறத்தூர் மாதேவர்க்கு நிலம் வேலி ||

ஏடு 32 பக்கம் 1

1. சோற்றுத்துறை மாதேவர்க்கு நிலம் அரை || முஞ்ஞாயில் மாதே வர்க்கு நிலம் அரை || மயின்மாலைய மாதே

2. வர்க்கு நிலம் அரை || மேட்டுமேற்குடி மாதேவர்க்கு நிலங்கால், சிக்கல் மாதேவர்க்கு நிலம் அரை || நியசயநை

3. ட நல்லூர் மாதேவர்க்கு நிலங்கால் || பரகேசரி நல்லூர் மாதே வர்க்கு நிலம் அரை || ஆதநல்லூர் மாதேவர்க்கு நிலம்

4. அரை || கீழமாத்தூர் மாதேவர்க்கு நிலங்கால் || கூத்தனூர் விஷ் ணுக்களுக்கு நிலம் அரை || முஞ்ஞாயில் விஷ்ணுக்களுக்கு

5. நிலம் அரை புளியக்குடி || விஷ்ணுக்களுக்கு நிலம் அரை || சிறை யூர்ப் பிடாரியார்க்கு நிலம் ஒருமா || சோற்றுத்துறை பிட

6. ாரியார்க்கு நிலம் ஒருமா || உறத்தூர்ப் பிடாரியார்க்கு நிலம் ஒரு மா || முஞ்ஞாயில் பிடாரியார்க்கு நிலம் ஒருமா || கூத்தனூர்

7. பிடாரியா(ர்)க்கு நிலம் ஒருமா || மயின்மாலைய நல்லூர்ப் பிடாரி யார்க்கு நிலம் ஒருமா || பெண்ணாகடத்துப் பிடாரியார்

8. க்கு நிலம் ஒருமா || கோவிந்த நல்லூர்ப் பிடாரிக்கு நிலம் ஒரு மா || மேட்டு மேற்குடிப் பிடாரிக்கு நிலம் நாலுமா || மீமாங்ச

9. பட்டவிருத்தி நிலம் ஐய்வேலி || வேதாந்த பட்ட விருத்தி நிலம் ஐய்வேலி || வியாகரணப் பட்ட விருத்தி நில(ம்) நால்வே

10. லி || பவிழியக் கிடப்புறத்துக்கு நிலம் இரு வேலி || தைத்தியக் கிடைபுறம் நிலம் இருவேலி || வாஜஸனை

11. யக்கிடைப்புறம் இருவேலி || ஸதோகக் கிடப்புறம் நிலம் இரு வேலி || ஆதவ்யச்கிடைப்புறம் நிலம் இரு வே[லி]

12. லி || தலவுகாரக் கிடைப்புறம் நிலம் இருவேலி || கூவர்வதாரக் கிடைப்புறம் நிலம் இருவேலி || ஸ்ம்ருதி மூல

13. ஸ்ரஜம் ஓதுவிப்பானுக்கு நிலம் இருவேலி || பாரதம் வாசிப் பானுக்கு நிலம் இருவேலி || அம்பலம் மெ

14. ழுகித் தொட்டியிலிறைச்சுத் தண்ணீரட்டுவானுக்கு நிலம் இரு வேலி|| விஷபோகத்துக்கு நிலம் இருவேலி|| குசவ

15. ர்க்கு நிலம் வேலி|| தைச்சர் கொல்லர்க்கு நிலம் வேலி|| இவ்வூர் ஸாஸனம் வெட்டி பூஜை

16. யாகப்பெற்ற காஷ்மகாரி க்ருஷ்ணனரங்கநான திருபுவன மஹா தேவிப் பேராசாரியனுக்குத் துணி

17. நிலம் வேலி|| இவ்வூர் ஸாஸனம் வெட்டி பூஜையாகப் பெற்ற காஷ்மகாரி ஆராவமுது புருஷோ

18. த்தமனான ராஜேந்ர ஸிம்ஹப் பேராசாரியனுக்குத் துணிநிலம் வேலி|| உ உ || உ

6

திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்— அறவிளக்கம்

திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தில் அமைந்த 57 ஊர்கள்

1. ஊர்கள்

1. செம்பங்குடி
2. குளப்பாடு
3. துளார்
4. நல்லம்பர்
5. திருபுவனமாதேவி நல்லூர்
6. சிக்கர்
7. முஞ்ஞாவல்
8. கூத்தனூர்
9. கமுகஞ்சேந்தன்குடி
10. வைகுந்தநல்லூர்
11. மயிமாலய நல்லூர்
12. கீழமாத்தூர்
13. பரகேசரிநல்லூர்
14. பெண்ணாகடம்
15. உறத்தூர்
16. சிறையூர்
17. கீழ்சோற்றுத்துறை
18. நெடுவாயில்
19. ஏறுபாடி
20. புளிகைக்குடி
21. பெருங்குடி
22. முண்டனூர்
23. தாமோதரநல்லூர்
24. அரசூர்
25. வாளுவநல்லூர்
26. குணசீலநல்லூர்
27. செய்யாநல்லூர்
28. சிற்றாலிநல்லூர்
29. நித்தவிநோதநல்லூர்
30. வெங்கூர்
31. நியாயநடைநல்லூர்
32. சேந்தமங்கலம்
33. இகழாநிலை நல்லூர்
34. வீரநாராயணமங்கலம்
35. கருவூர்
36. கோவிந்த நல்லூர்
37. வீரசோழ நல்லூர்
38. கொஞ்ஞாப்பூர்
39. மணிமங்கலம்
40. துறையாநல்லூர்
41. வாமனநல்லூர்
42. ஆதநல்லூர்
43. சிறுமுன்னியூர்
44. மேட்டுமேற்குடி
45. பூதமங்கலத்துப்பாலக் காடன் கரிகுறிச்சி
46. பருத்திநியமத்துத்திறப்பான தேவதானம்தேவதானக்குடி

47. விளங்குடி

48. வெண்ணிக்கணி முற்றூட்டிறங்கல்

49. நெடுங்கணக்குடி

50. பூதமங்கலத்துப் பாலயலூட்டிக் காணி ஸ்ரீகரண மங்கலமான கொட்டாரக்குடிப் பள்ளி

51. புறக்குடி

2. நாட்டுப்பொது

52. திருபுவனமாதேவிப் பேரேரி கழுத கொள்ளிவெட்டிப் பேறு

53. ஊர்நத்தம்

54. சிறுபற்றைக்காடு

55. நெற்குப்பைத் திருமால்காடன் தஞ்சைநாட்டுக்கோன் பற்று நிலங்கள்

3. இணைவுப் பிரமதேயங்கள்

56. உதையமாத்தாண்ட சதுர்வேதி மங்கலம்

57. வெண்ணிக் கூற்றத்து ஸ்ரீபூதி

4. திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்—அறவிளக்கம்

கரந்தைச் செப்பேடுகளின் தோற்றத்திற்கு இன்றியமையா தமைந்த அறச் செயல் இங்கு விளக்கப்படுகின்றது. 1080 வைணவ அந்தணர்களுக்குத் தானமாக இப்பெரு நிலப் பரப்பு ‘முதல் இராசேந்திர சோழனா’ல் கி. பி. 1020இல் வழங்கப்பட்டுள்ளது.

நாதமுனிகளின் தொடர்பால் வைணவ இலக்கியங்களாகிய திவ்வியப் பிரபந்தங்களைத் தொகுத்தவன், முதல் இராசேந்திர சோழனே யாவன். இராசராசன் எவ்வாறு நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு ‘‘தேவாரத் தொகுப்பு’’ செய்தானோ; அதுபோன்றே இவனும் ‘‘பிரபந்தத் தொகுப்பு’’ செய்தமையினைச் சான்றுகாட்டி விளக்குவர் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்.[1]

இராசேந்திரன் சைவனாயினும், வைணவர்களும் அவனாட்சியில் செல்வாக்குப் பெற்றமையினை "மலைவிளக்காக" இவ்வறம் காட்டுகின்றது.

அறந்தோற்றம்

கி. பி. 1020இல், அதாவது தமது எட்டாவது ஆட்சியாண்டின் நூற்று ஏழாவது நாளில், இராசேந்திரன் "வியாக்ர அக்ரஹாரம்" எனப்படும் பெரும்பற்றப் புலியூருக்கு (சிதம்பரம்) வருகை புரிந்தான். இச் சிதம்பரத்தின் "விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம் இராசேந்திர சோழப் பிரம்மாதி ராஜனில் உண்ணாவிருந்தபோது அவனது அமைச்சருள் சிறந்த ஸ்ரீசகநாதன் என்பார் 1030 வைணவ அந்தணர்க்கான தானம் வேண்டினார்".[2] இத்தகையோரை "விஞ்ஞாப்பி" என்ப. இவ் வேண்டுதற்கிசைந்த அரசன் காவிரிப்பாய்ச்சலினால் மிக்க வளம்பெற்ற கீழத்தஞ்சைப் பகுதியில் 51 ஊர்களை ஒன்றாக இணைத்து ஓருராக்கித் தன் தாயின் பெயரால் "திரிபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம்" எனும் பிர்மதேயமாக வழங்க ஆணையிட்டான்.[3]

இணைக்கப்பட்ட ஊர்கள்

இவ்வாணைக்குப்பட்டு ஓருராக்கப்பட்ட 51 கிராமங்கள் பழைய முதல் தவிர்க்கப்பட்டன.[4] நித்த விநோத வளநாட்டு, வீர சோழ வளநாட்டு, வெண்ணிக் கூற்றத்து, எல்லைகட்குட்பட்ட இவ்வூர்களும், மற்றும் சில புறப்பகுதிகளும் இவற்றுள் அடங்கின. அவை,

1. திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலக் கமுகு கொள்ளி வெட்டிப் பேறு

2. ஊர்ப்பொது நத்தம்

3. சிறுபற்றைக்காடு

4. நெற்குப்பைக்காடன், தஞ்சைநாட்டுக்கோன் ஆகியவர்களின் பற்றான நிலங்கள்.

இவற்றோடு,

1. செம்பங்குடி 2. குளப்பாடு 3. துளார் 4. நல்லம்பர் 5. திரிபுவன மாதேவி நல்லூர் 6. சிக்கர் 7. முஞ்ஞாவல் 8. கூத்தனூர் 9. கமுகஞ்சேந்தன்குடி 10. வைகுந்தநல்லூர் 11. மயிமாலயநல்லூர் 12. கீழமாத்தூர் 13. பரகேசரி

நல்லூர் 14. பெண்ணாகடம் 15. உறத்தூர் 16. சிறையூர் 17. கீழ்சோற்றுத்துறை 18. நெடுவாயில் 19. ஏறுபாடி 20. புளிகைக்குடி 21. பெருங்குடி 22. முண்டனூர் 23. தாமோதரநல்லூர் 24. அரசூர் 25. வாளுவநல்லூர் 26. குணசீலநல்லூர் 27. செய்யாநல்லூர் 28. சிற்றாலிநல்லூர் 28. நித்தவிநோதநல்லூர் 30. வெங்கூர் 31 நியாயநடை நல்லூர் 32. சேந்தமங்கலம் 33. இகழாநிலை நல்லூர் 34. வீரநாராயண மங்கலம் 35. கருவூர் 36. கோவிந்த நல்லூர் 37. வீரசோழ நல்லூர் 38. கொஞ்ஞாப்பூர் 39. மணிமங்கலம் 40. துறையாநல்லூர் 41. வாமனநல்லூர் 42. ஆதநல்லூர் 43. சிறுமுன்னியூர் 44. மேட்டுமேற்குடி 45. பூத மங்கலத்துப் பாலக்காடன் காரிகுறிச்சி 46. பருத்தி நியமத் துத் திறப்பான தேவதானம் தேவதானக்குடி 47. விளங் குடி 48. வெண்ணிக்கணி முற்றூட்டிறங்கல் 49. நெடுங் கணக்குடி 50. பூதமங்கலத்துப் பாலயனூட்டிக் காணி; டள்ளிச்சந்தமிறங்கின ஸ்ரீசரணமங்கலமான கொட்டாரக்குடிப் பள்ளி 51. புறக்குடி

ஆகிய இவ் ஐம்பத்தொரு கிராமங்களும்,

''வெவ்வேறு முதலும் பழம்பெயரும் தவிர்க்கப்பட்டு ஓரூராய் அளக்கப்பட்டன''.[5]

நிலக்கணக்கு நுட்பம்

இவ்வாறு ஓரூராய் அளக்கப்படுதற்குமுன் ஒவ்வொரு ஊருக்கும் உரிய மிக நுட்பமான நில அளவுகளுடன் கூடுதல் நிலப் பரப்பு, வரியின்றி நீக்கப்பட்ட நிலப்பரப்புகள், வரிக்குட்பட்ட பயன் நிலப் பரப்புகள் என நில அளவைகள் விளக்கப்பட்டுள்ளமை இதன் வரலாற்றுச் சிறப்பிற்கோர் சான்றாகும். அதனை,

> ''செம்பங்குடி அளந்தபடி நிலன் நூற்றுமுப்பத்தேழே யாறுமாக் காணியரைக் காணி முந்திரிகைக்கீழ் நான்மாவரையிலும், இவ்வூர்ப் பிடாரிகோயிலும், திருமுற்றமும், ஐய்யந்கோயிலும், திருமுற்றமும், இவ்வூர் நிலத்தை யூடறுத்துப் போன சிங்களாந் தகன் வாய்க்காலும், இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய் மயிமாலய நல்லூர்க்குப் பாயும் வாக்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போந கருணைக் காலான மும்முடி சோழப் பேராற்றாலும், இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போந சுந்தர சோழ வாய்க்காலும், இவ்வூர்ச் சுடுகாடுமாக அரையே

மும்மாவரை முந்திரிகைக்கீழ் எட்டுமா முக்காணிக்கீழ் முக்கா லே ஒருமா நீக்கி நிலன் நூற்று முப்பத்தாறரையே யிரண்டு மா முக்காணி முந்திரிகைக்கீழ் அரைமாவரைக்காணி முந்திரி கைக்கீழ் நான்கு மாவிநால் நெல்லு நாலாயிரக்கலமும் மீந் பாட்டங்காசு மூன்றும் (2 - 1 : 3 - 11)''

எனும் பகுதி செம்பங்குடியின் கூடுதல் அளவில் கழிக்கப்பட்ட நிலப் பரப்பு போக, வரிக்குட்பட்ட நிலப்பரப்பு, வருவாய் ஆகியவற்றைக் குறிப்பதாகும்.[6] இவ்வாறே 51 ஊர்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இணைக்கப்பட்ட பெருநிலப்பரப்பின் கூடுதல் பரப்பளவு,

''ஆக இவ்வூர்கள் வெவ்வேறு முதலும் பழம் பெயரும் யாண்டு எட்டாவது முதல் தவிர்த்து ஒரூராய் அளந்தபடி நிலன்மூவா யிரத்தொருநாற்று முப்பத்தஞ்சே நான்மாவரை முந்திரிகைக்-கீழ் முக்காலே இரண்டு மா முக்காணி யரைக்காணிக்கீழ் ஏழுமா முக்காணி ஆகும்''[7]. (6-1 : 23-24)

நீக்கப்பட்ட இடங்கள்

''ஊர் நத்தங்களும், மாதேவர் ஸ்ரீகோயில்களும் திருமுற்றங்களும் விஷ்ணுக்கள் ஸ்ரீகோயிலும், திருமுற்றமும், கணவதியார் ஸ்ரீகோயிலும் ஐயன்கோயில்களும், திருமுற்றமும் போன்ற கோயிலமைந்த இடங்களும்,

''கம்மாளச்சேரி பறைச்சேரி'' போன்ற கிராமத் தொழிலாளர் வாழிடங்களும், குளங்களும், திரிபுவன மாதேவிப் பேரேரியும்...... சுந்தரசோழன் வாய்க்கால், முடிகொண்ட சோழப்பேராறு, மும்முடி சோழப் பெருவாய்க்கால் போன்ற நீர்நிலைகளும், சுடுகாடுகளும், வரியிலிகளாக நீக்கப்பட்டன.[8] இவற்றின் கூடுதற் பரப்பு,

''அறுநூற்றொருபத்தொன்பதே யாறுமாக்காணி
முந்திரிகைக்கீழ் மாகாணி முந்திரிகைக்கீழ்
முக்காலெ முக்காணி ஆகும்.''[9] (6-2 : 9-11)

வரிக்குட்பட்ட நிலப்பரப்பு

இரண்டாயிரத்தைஞ்ஞூற்றொரு பத்தஞ்சே முக்காலேயொரு மாவரைக்கீழ் அரையேயிரண்டுமா ஆகும்[10] (6-2 : 11-13)

கூடுதல் ஆண்டு வருவாய்

''நெல்லு ஐம்பத்தோராயிரத்து ஐம்பதின்கலமும் மீன்பாட்டம் காசுமுப்பத்திரண்டரையும்அக்கம் அறுபத்தஞ்சும்'' ஆகும்[11](6-2:12-13

பிரமதேயத்திற்கும் வரி உண்டு

பிரமதேயம் என்றால் வரியிலிருந்து நீக்கப்பட்ட நிலம் என்ற எண்ணமே பெரும்பாலும் உள்ளது. நிலத்தைத் தானமாகச் சதுர்வேதி அந்தணர்கள் பெறும்போது அந்நிலம் பிரமதேயமாகும். அதற்கு, தானமாக அளிக்கப்பட்ட முதலாண்டின் கூடுதல் வருவாய்க்குரிய வரியில் 4 ல் 1 பங்கும், 2ஆம் ஆண்டு 4 ல் 2 பங்கும், 3ஆம் ஆண்டு 4 ல் 3 பங்கும், 4 ஆம் ஆண்டு 4 பங்கும் முழுமையாக, இறைகட்டுமாறு கணக்கிட்டு, அதற்கேற்ப இறைகட்டும் உரிமையும் விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பிரமதேய நிலமென்பது விலை கொடுக்காமல் தானமாகப் பெற்ற அனுபோக உரிமையினையே கொண்டுள்ளது என்பது பெறப்படும். இதனை,

"...யாண்டு எட்டாவது முதல் பிரம்மதேயமாய் இவ்வூர் இறை கட்டின இறையிலியாண்டு எட்டாவது நாலு கூறிட்ட ஒரு கூறும், இதன் எதிராமாண்டு செம்பாதியும், இதன் எதிராமாண்டு நாலு கூறிட்ட மூன்று கூறும், இதன் எதிராமாண்டு முதல் இவ்வூர் இறை கட்டின இறை ஆட்டாண்டு தோறும் நின்றிறையாயிருப்பதாகவும்" (6 - 2 : 16 - 19) எனும் செய்தி விளக்குகின்றது.[12] நான்காம் ஆண்டின் நிறைவு முதல் முழுவரியினைப் பிரமதேயத்தாரும் கட்டியுள்ளனர்.

இணைப்பில் கூடிய பிரமதேயங்கள்

1. உதையமாத்தாண்ட சதுர்வேதிமங்கலமும்
2. வெண்ணிக் கூற்றத்துப் பிரமதேயம் ஸ்ரீபூதியும்

இத்திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தோடும் இணைக்கப்பட்ட பிரமதேயங்கள் ஆகும்.[13] இவ்விரு பிரமதேயத்துடன் இணைந்தே திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் 57 கிராமங்களைப் பெற்றிருந்தது.

இவ்விரு பிரமதேயத்தாரும்,

"யாண்டு எட்டாவது முதல் ஆட்டாண்டுதோறும் நின்றிறையாயிருப்பதாக" (7 - 1 : 11 - 12) எனும் இராசேந்திரனின் ஆணையும் அமைகின்றது.[14]

திருவாய்மொழி திருமுகம் ஆகுதல்

இவற்றையும் சேர்த்தே "ஓருராகவும் ஆக இப்படி வரியிலிட்டுக் கொள்க" என்று நாம்சொல்ல (7-1:16) எனும் அரசனது ஆணையினை படிப்படியாக ஆணை ஓலையாக மாற்றும் திறத்தைக் கீழ்க் காணலாம்.

அரசனின் வாய்மொழியினை உள்ளவாறு எழுதிக் கொள்ளும் ''திருவாய்க் கேள்வி'' என்னும் அதிகாரி அதனை எழுதினான். இவன் பெயர் ''பாலையூர் கிழவன் அரையன் முடிகொண்ட சோழன்'' என்பதாகும்.

திருத்தமும் ஒப்பும்

இவ்வோலைப்படியினை ''ஓலைநாயகங்கள்'' நால்வர் சரிபார்த்து ஒப்பமளிக்கின்றார்கள் (7-1: 19-24). பிறகு அவ்வோலையினை மேற்பார்த்து ''அரசகருமத்தாராகிய'' ஐவர் ''வரியிலிட்டுக் கொள்க''என இசைவளிக்கின்றனர் (7.2: 1-6).

இதனையொத்தே வேறொரு, நால்வர் அடங்கிய அரச கருமத்தாரும் ''வரியிலிட்டுக் கொள்க'' என்று அனுமதித்துள்ளனர் (7-2: 6-11).

பதிவாளர்கள்

''புறவுவரித் திணைக்களத்துக் கண்காணி'' ஒருவனும், அவனுக்குக் கீழ் அதிகாரிகளாகிய ''புரவுவரித் திணைக்களம்'' எனப்படும் அதிகாரிகள் நால்வரும் (7-2:11-17),

''வரிப்பொத்தகம்'' என்றழைக்கப்படும்அதிகாரியும் (7-2:17-18),

''முகவெட்டி'' எனும் பணியிலுள்ள இருவரும் (7-2: 8.21),

''வரிப்பொத்தகக் கணக்கு'' என்ற அதிகாரியும்,

''வரியிலீடு'' என்ற பணியாளனும்,

''பட்டோலை'' எனும் பணியிலுள்ளவனும் (7-2 : 21-23),

ஆக இவர்களெல்லாம் ஒருங்கே கூடியிருந்து, இப்பிரமதேயத்தினை ஆய்ந்து, அரசியல் பதிவேடுகளிலும் வருவாய்ப் பதிவுகளிலும் பதிந்து ஆணையைச் செயற்படுத்தியுள்ளனர். இது,

''யாண்டெட்டாவது, நாள் நூற்றொருபதிநால்'' நிகழ்ந்ததாகும்.[15]

அரசனது திருவாய்மொழி, யாண்டெட்டாவது நாள் நூற்றேழினால் நிகழ்ந்தது. தொடர்ந்த மூன்றாவது நாளில் அவ்வரசவாணை செயல்படத் தொடங்கியமையும், முறையாக ஒவ்வொருதரத்து அரசியல் பொறுப்பாளராலும் செயல் தணிக்கை செய்யப்பட்டுள்ளமையும், சபையாரும், அதிகாரிகளும் ஒப்பமளித்த பின்னரே அரச

வாணை நிறைவு செய்யப் பெற்றுள்ளமையும் சோழர்கால ஆட்சிச் சிறப்பின் இலக்கங்களாக விளங்குகின்றன.

ஊர்ச் சபையாருக்கு ஓலை

இச் செயல்களனைத்தும் ஓலையில் பொறிக்கப்பட்டு இப்பிரம தேய ஊர்களடங்கிய ஊர்ச்சபையாருக்கு அதிகாரிகள் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து எல்லை நாட்டுவதைக் கண்டுதவிடுமாறும் அரசன் கேட்டுக் கொள்வதனை,

> ''தாங்களும் இவர்களோடும் உடனின்று எல்லை தெரித்துக் காட்டிப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து போத்தக'' (8 - 1 : 23 - 24)

என்னும் தொடர்கள் அரசனது மேலான ஆட்சியின் திறத்தினைப் புலப்படுத்துகின்றன.[16]

இப்பிரமதேயத்தின் எல்லைகளைக் காண்பதற்கு அரசனது ஆணைவழிப்பட்ட அதிகாரிகளாக மூவர் ''பேர் தரப்பட்டு'' அனுப்பப் பெற்றுள்ளனர்.

இவ் வோலை,

> ''இராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு எட்டாவது நாட்கீழ் நாட்டோமுக்கு'' வந்துற்றது.[17] (8 - 2 : 18)

ஊர்ச்சபையாரும் ஆணை ஓலையினை எதிரெழுந்து தொழுது வாங்கித் தலைமேல் வைத்து, பேர் தரப்பட்ட அரசியல் அதிகாரிகளுடன், கண்டு அறிவித்த நாற்புற எல்லைகளைப் பற்றிய விளக்கம் 12-ஏடுகளின் 24 பக்கங்களிலும் எல்லையடையாளச் சான்றுகளுடன் காணப்படுகின்றன.

எல்லை தெரிவு

எல்லைகளைத் தேருங்கால் மிக நுட்பமாக, வாய்க்கால்கள், உட்சிறு வாய்க்கால்கள், புற்றுக்கள், மரங்கள், ஈந்துறுகள் முதலியனவும் எல்லையில் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக 1 செ. மீ. அளவுள்ள நிலமும் அளக்கப்பட்டுக் கணக்கிடப்பட்டுள்ளது.

பிடியொடு சூழ்ந்து ஊராரும் அதிகாரிகளும் எல்லைகோலுமளவில், நிலவியற்கைக்கேற்ப வளைந்தும் நெளிந்துமுள்ள ஊர்ப்புற வழிகளிலே சென்று எல்லை தெரித்தலைச் சொல்லோவியத்தொடர் நிலையாக இப்பகுதி காட்டுகின்றது. அவற்றுள் எடுத்துக்காட்டாக,

"இவ்வூர் நிலத்துக்கு வடகீழ் மூலை இந்நாட்டு வெண்ணிக் கூற்றத்து வட சாத்தமங்கலத்து மேலெல்லை பூவாணூர் வாக் காலென்று பேர் கூவப்படும் வாய்க்காலின் தென்கரை கூடின இடமேய் துடங்கி, இதனின்றும் இவ்வட சாத்தமங்கலத்து மேலெல்லைதான் கிடந்தவாறே தென்மேற்கு நோக்கியுந், தெற்கு நோக்கியுஞ் சென்று, இவ்வட சாத்தமங்கலத்துக்கு நீர்பாயும் அருமொழி தேவ வாய்க்காலென்று பேர் கூவப்படும் வாய்க்காலின் வடகரையேயுற்றுமேற்கின்னும், வடக்கின்னும், இதனின்றும் இவ்வாய்க்காலைத் தெற்கு நோக்கியிழிஞ்சு தென்கரைக்கே ஏறி.... ." (8-2)

எனுமிப்பகுதி தொடக்கப் பகுதியின் எல்லையினை அளவிட்ட நிகழ்ச்சி யினை விளக்குகின்றது.[18]

உள்ளிட்ட பொருளும் உரிமையும்

இவ்வாறு காட்டப்பட்ட நாற் பெருந் எல்லைக்குள் அகப்பட்ட,

"நீர்நிலமும் புன்செய்யும் ஊரிருக்கையும், ஸ்ரீகோயில்களும், திருநந்தவனங்களும், கம்மாளச் சேரிகளும், பறைச் சேரிகளும், சுடு காடுகளும், மனையும், மனைப்படப்பையும், கடையும், கடைத்தெரு வும், மன்றுங், கன்றுமேய்பாழும், ஏரியும், குளமும், கொட்டகாரமும், கிடங்கும் கேணியும், புற்றுந், தெற்றியும், காடும், பிடிவிகையும், களரும், உவரும், ஓடையும், உடைப்பும், ஆறும், ஆறிடு படுகையும், அளமுங், கழியும், மீன்பயில் பள்ளமும், தேன்பயில் பொதும்பும், மேநோக்கிய மரமும், கீணோக்கிய கிணறும்" (20 - 1 : 5 - 11) ஆக அனைத்து வகையான செல்வங்களையும், கோமகனே விரும்பி னும் "கோக் கொள்ளாததாக" வைணவ பிராமணர் தான உரிமை வழிப் பெற்றனர்.[19]

பிரமதேயம் பெற்ற பிராமணர் தமக்குரிய நிலபுலங்களையும், நீர்ப்பாசனங்களையும் எவ்வெவ்வகையினிற் பயன்படுத்தலாம் என்னும் சிறப்புரிமைகளையும் இப் பகுதியே விளக்குகின்றது. அவற் றுள் நீர்ப்பாசன முறைமைகள்,

"இவ்வூர் நிலத்துக்கு நீர்பாயும் வாய்க்கால்கள் கீழ்நடை நீர் பாயவும், வாரவிடவும், குத்திப் பாச்சவும், அன்னியர் குறங் கறுத்துக் குத்தவும், குற்றேத்தம் பண்ணவும், கூடை நீர் இறைக்க வும், விலங்கடைக்கவும், பெறாததாகவும்" என்னும் முறைமைகளைப் பெற்றுள்ளது.[20]

நில உரிமைகள்

தட்டோடு ஆலமாட மாளிகை எடுக்கப் பெறவும், மல்லிகை, மா, பலா, தமனகம், மரு, செண்பகம், முதலிய பல்லுருவிற் பயன் மரங்களும், செடிகளும் இடப்பெறவுமாகிய உரிமைகளுடன் விளங்கின.[21]

"வட்டி நாழி, பிதா நாழி, கண்ணாலக் கானம் முதலிய வரிகள் விலக்குப் பெறும் செய்தியும்" இப் பகுதியிலேயே உள்ளது.[22] (20 -1: 12 - 24)

நிறைவு

பிரமதேய நிலத்திற்குரிய எல்லைகள், அந்தணர்க்களிக்கப்பட்ட பங்கு நிலங்கள், உரிமைகள், யாவும்ஊர்மக்களாலும், அரசியலதிகாரிகளாலும், ஆயப்பட்ட நிலையில் ஒப்பம் செய்யப்பெற்றதற்குச் சான்றாக இருபதாவது ஏட்டின் இரண்டாம் பக்கம் முதலாக 22 ஆவது ஏட்டின் இறுதிவரையில் சான்றாயினார் பெயர்கள் அவரவர் ஒப்பமுடன் "அறிவேன்" என்னும் உண்மைச் சான்றுகளுடன் அமைந்துள்ளன.

இவ்வாறு, இம்மாபெரும் அறமாக நிறைவேற்றப்பட்ட காலம் இராசேந்திரனின் ஆட்சியாண்டு, எட்டாவது "நாள் முன்னூற்றெண்பதினால்" ஆகும். அஃதாவது அறவாணை நிறைவேற்றப்பட்டது. இதனை "வரியிலிட்டுக் குடுத்துப் பரதேத்திச் சென்றது" எனச் செப்பேடு புகலுகின்றது.[23] எனவே 273 நாட்களில், ஏறக்குறைய ஒன்பது திங்களளவில் இவ்வாணை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது அறியத் தக்கதாகும்.

மேற்கோள் நூல்கள்

1. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி பக். 177 - 78
2. க.செ.தொகுதி 11 ப. 12.
3. ,,
4. ,, ப. 16
5. ,, ப. 35.
6. ,, ப. 18.

7. க.செ.தொகுதி 11, ப. 33.
8. ,, ப. 34.
9. ,,
10. ,,
11. ,, ப. 35.
12. ,,
13. ,,
14. ,,
15. ,, ப.39.
16. ,, ப.41.
17. ,, ப.43.
18. ,,
19. ,, பக்.86-88.
20. ,, ப.87.
21. ,,
22. ,,
23. ,, ப.95.


தஞ்சை மாவட்டத்தில்
திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலம்
மாயவரம்
காரைக்கால்
நன்னிலம்
வெட்டாறு
வெண்ணியாறு
திருவாரூர்
நாகை
நாகப்பட்டினம்
பேராறு
திருத்துறைப்பூண்டி
தஞ்சாவூர்
ஐயாறு
புத்தூர்
வ
கி
வட்டப் பிரிவு
புகைவண்டிப் பாதை
"திரிபு" சதுர்வேதிமங்கலம்
1 அங்.= 7 கி.மீ



சோழவளநாட்டில்
திரிபுவன மாதேவிச் சதுர்வேதிமங்கலம்

7

பொருட்பாகுபாடு

பிற்காலச் சோழர் வரலாற்றிற்குப் புதிய சான்றாகக் கரந்தைச் செப்பேடுகள் அமைகின்றன. இச்செப்பேட்டுச் செய்திகள் ''பொற்காலம்'' எனச் சிறப்பிக்கப்படும் பிற்காலச் சோழராட்சியினைத் தெளிவாக்கிடும் பல கருத்துக்களைப் பெற்றுள்ளன. அவற்றை அரசியல், சமுதாயம், சமயம், முறைமைகள், அறிவு, கல்வி வேதாகமவிருத்தி, நிவந்தங்கள் எனுந் தலைப்புக்களில் காணலாகும். இத் தலைப்புக்களுள் செப்பேட்டுச் செய்திகளே இடம் பெறுகின்றன.

அரசியல்

நாட்டிற்கு முதல்வனாயினும் அரசன் குடிகளைச் சார்ந்தே வாழ்ந்துள்ளான். தன்னாட்சியும், தன்னுரிமையும் பெற்ற ஊர்ச் சபைகள் இருந்தன. இவ்வூராட்சி அமைப்பே சோழரின் ஆட்சிச் சிறப்புக்குரிய அடிப்படையாக இருந்துள்ளது.[1]

ஊராட்சியினர் அரசின் கண்காணிப்புக்குட்பட்ட உரிமையுடன் விளங்கினர். அரசன் செய்த தானத்தினை ஏற்கும் உரிமையும் ஊர்ச் சபையே கொண்டுள்ளதனைக் கரந்தைச் செப்பேடுகளிலும் காண முடிகின்றது.

அமைச்சர் அரசன் அருகிருந்து அறங்கூறி வந்தனர். பெருந்தரம், சிறுதரம் எனும் இருவகைப்பட்ட அதிகாரிகள் அரசியலில் இடம் பெற்றுள்ளனர்.[2] சில அதிகாரிகள் அரசனின் அணுக்கத்திலும், சிலர் புறத்துறை அதிகாரிகளாகத் தொலைவிலும் இருந்தனர்.

திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம், கருமமாராய்வோர், உடன் கூட்டத்தார், புரவுவரித் திணைக் களக் கண்காணி, புரவுவரித் திணைக்களம், வரிப்பொத்தகக் கணக்கு, வரிப்பொத்தகம், முகவெட்டி, பட்டோலை முதலிய பல திறத்து அதிகாரிகள் பல நிலைகளில் இருந்து பணி புரிந்தனர். இவர்களைப் பற்றிய விளக்கங்களை அரசியல் அதிகாரிகள் எனும் தலைப்பின்கீழ்க் காணலாகும்.[3]

ஆறிலொரு பங்காகப் பெற்ற நில வருவாய் விளை பொருளாகவும், காசாகவும் அமைந்திருந்தது. காசு, அக்கம் என்னும் நாணயப் பழக்கமும் வழக்கில் இருந்தது.[4]

விளை நிலங்கள் அனைத்தும் வரியிலிடப்பட்டன. ஆறுகள், குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள், கோயில்கள், சுடுகாடுகள், பறைச் சேரிகள் இவை அமைந்த நிலங்கள் வரிவிலக்குப் பெற்றனவாகும்.[5] தானமாக அளிக்கப்பட்ட பிரமதேயங்களுக்கும் வரியுண்டு. கரந்தைச் செப்பேடுகள் இதனை விளக்கமாகக் குறிக்கின்றன. பிரமதேயத்திற் குள்ளடங்கிய விளைநிலங்கட்குரிய வரி படிமுறையாக நான்கு ஆண்டு களில் விதிக்கப்பட்டுள்ளது.[6] வரி, இறை முறைகள் விளைவுக்கேற்ற அளவில் பெறப்பட்ட நிலவரித்திட்டமாகவுள்ளது.

அரசு வருவாய்களும் மக்களிடமிருந்து பெற்ற பல்வகைப்பட்ட வரிகளும் அமைந்திருந்தன. அவற்றுள் கரந்தைச்செப்பேடுகள்,

''நாட்டாட்சி, ஊராட்சி, வட்டி நாழி, பிதாநாழி, கண்ணாலக் காளம், வண்ணாரப்பாறை, குசக்காணம், நீர்க்கலி, ஈழம்பூச்சி, இலைக் கலம், தறிப்புடவைதரகு, தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், ஆட் டுக்கிறை, நல்லா, நல்லெருது, நாடுகாவல், ஊரடுபோக்கு, வீரபிடி, வாலமஞ்சாடி, உல்கு, ஓடக்கூலி, மன்றுபாடு, மாவரை, தீயெறி, கூத்திக்கால்'' என்னும் 27 வரி வகைகளையும் குறிப்பிடுகின்றமையின் அக்காலத்திய சோழ அரசின் வருவாயாக அமைந்த ஆதாரங்களை அறிய முடிகிறது.

சமுதாயம்

அரசின் நோக்கில் சமுதாயம் இருவகைப்பட்டதாக இருந்துள் ளது. எனவேதான் ''ஊர்களிலார்க்கும், நகரங்களிலார்க்கும்'' எனப் படும் கிராம சமுதாயத்தார், நகர்வாழ் சமுதாயத்தாராகிய இருவகை யினர்க்கும் அரசனது ஓலை முதலில் அனுப்பப்படுகிறது.[8] ''நாட்டார்'' என்னும் ஊர்மக்களும் ''பிரமதேயக்கிழவர்'' எனும் அந்தணர் சமுதாயத் தலைவர்களும் தனித்தே வாழ்ந்துள்ளனர்.

சமுதாயத்தின் மேன்மையொடு நகர்வாழ் மக்கள் நோக்கப்பட் டிருப்பினும் அடிப்படையினராக ஊரார் மதிக்கப் பெற்றுள்ளனர். எனவேதான் அரசனே ஊராரை ''தாங்களும் இவர்களோடே உட னின்று பிடிசூழ்ந்து'' என வேண்டுகின்றான்.[9]

சதுர்வேதி மங்கலங்களில் உயர் குலத்தாராக எவ்வாறு அந்தணர் மதிக்கப் பெற்றுத் தனித்துச் சேரிகளில் வாழ்ந்தனரோ அதுபோன்றே கம்மாளரும், பறையரும், கம்மாளச்சேரி, பறைச்சேரி ஆகிய சேரிகளில் முறையே, தனித்து வாழ்ந்துள்ளனர். சமுதாயத்தின் அடிப்படைத் தொழிலாளரும் ஏழ்மை பெற்றவருமாக இருந்தமையின் இவர்கள் வாழ் சேரிகள் வரிவிலக்குப் பெற்றிருந்தன.

''ஈழவர்'' எனும் பெயரில் மரமேறிகள் வழங்கப் பெற்றுள்ளனர். அந்தணர்களின் சதுர்வேதி மங்கலங்களில் ''தென்னை மரங்கள்'' ஈழவர் ஏறப்பெறாத கட்டுப்பாட்டுடன் அமைந்திருந்தன.[10]

மா, பலா, வாழை, தென்னை ஆகிய பல்லுருவிற் பயன் மரங்களும், மல்லிகை, முல்லை, மரு, தமனகம் போன்ற நறுமண அழகுச் செடிகளும் வளர்த்துப் பிழைக்க, ஒரு சிலரே உரிமை பெற்றிருந்தனர். திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து அந்தணரனைவரும் இத்தகு உரிமையினை உடையவராயிருந்தனர்.[11] விளைநிலங்களில் தண்ணீர் பாய்ச்சிக் கொள்வதிலும் எவ்வெம் முறைகளில் உரிமைகள் இருந்தன என்பதனைக் கீழ்வரும் பகுதி தெரிவிக்கும்.

''இன்னிலத்துக்கு நீர்க்கீந்தவாறு வாய்க்கால் குத்திப் பாச்சவும், வாரவிடவும், பெறுவதாகவும், இவ்வூர் நிலத்துக்கு நீர்பாயும் வாய்க்கால்கள் கீழ் நடை நீர் பாயவும் வாரவிடவும் பெறுவதாகவும், இவ்வாய்க்கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் குற்றேத்தம் பண்ணவும், கடைநீர் இறைக்கவும், விலங்கடைகவும் பெறாததாகவும்'' என்பது அப்பகுதி.[12]

கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியின் மூன்றாம் பகுதி, முதல் இராசேந்திரன் காலத்தில் சோழ நாட்டில் வாழ்ந்த அந்தணர் சமுதாய நிலையினை அறிவிக்கிறது.

ஒவ்வொரு அந்தணரும், தத்தம் வளநாடு, நாடு, கூற்றம், ஊர், கோத்திரம், சூத்திரம், இயற்பெயர், சிறப்புப்பெயர் எனும் எண்வகைப் பகுதிகளுடன் குறிக்கப் பெற்றுள்ளார். இவ்வாறு குறிக்கப்பட்ட 1084-அந்தணர்களும் வைணவப் பிராமணர்களாகவே உள்ளனர். இவர்கள் 75 கோத்திரங்களையும், 15 சூத்திரங்களையும் சேர்ந்தவர்களாயுள்ளனர். சிறப்புப் பங்கு பெற்றோராக உள்ளவர்கள் சிவப் பிராமணர்களாகிய ஒன்பதின்மராவர்.

கோத்திரம்

கோத்திரம் என்பது இன்ன மரபு அல்லது வம்சம், சந்ததி எனும் பொருளில் வழங்கப்படுவதாகும். ஆரியருள் இருடிகளாக விளங்கிய ஒருவரை முதல்வராகக் கொண்ட வழியினர், அம்மூலவிருடியின் பெயரைத் தங்கள் கூட்டத்திற் குரிய மரபுப் பெயராகக் கொள்வர். இதனையே கோத்ரம் என்று கூறுவர்.

கோத்திரக்காரர்களின் வாழ்வியற் கோட்பாடுகளை நிலை பெறச் செய்யும் தலைவர்கள் ''பிரவரர்கள்'' எனும் பெயரினைப் பெறுவர். அந்தணரின் கோத்திரங்களையும், கோத்திர விருத்தியாளர்களான பிரவரர்களையும் எண்ணிட இயலாது என்பர்.[13]

கோத்திர முதல்வருள், குறிப்பிடத்தக்கோர் 1) பிருகு, 2) அங்கிரஸ், 3) மரீசி, 4) அத்ரி 5) புலஹர், 6) புலஸ்தியர் 7) வசிட்டர் என்பவராவர்.

சூத்திரம்

கோத்திரங்கட்குரிய பிராமணர்கள் ஒழுக வேண்டிய பொது விதி முறைகளையும், நாள்விதிமுறைகளையும் திட்டமாக அமைத்தவர் சூத்திரக்காரர்களாவர். அவர்களால், விதிக்கப்பட்ட பிராமண நியதிகள் ''சூத்திரம்'' எனப்படும்.[14] சூத்திரக்காரரும் முனிவர்களாகவே யுள்ளனர். இச்சூத்திரங்கள் வேத நெறிகளின் வழித் தொடரும் அங்கங்களுடன் உள்ளன சூத்திரக்கார இருடிகள் :

1. ஆபஸ்தம்பர்
2. போதாயனர்
3. ஹிரண்யகேசர்
4. பாரத்வாஜர்
5. வைகானசர்
6. காத்யாயனர்
7. லோகாக்ஷி
8. ஆஸ்வலாயனர்
9. ஸாங்க்யாயனர்
10. ஸத்யாஷாடர்
11. த்ராஹ்யாயணர்

எனப் பதினொருவரை வருணாச்சிரம நூல்கள் குறிக்கின்றன.[15]

கோத்திரங்கள் என்பன புறப்பிரிவுகளாயினும் அடிப்படையில் ஒருங்கிணைவு பெற்றனவேயாகும். பிராமண சாதிக்குள்ளேயே சிறுசிறு வேறுபாடுகள் கொண்டு வேறுபடும்; சாதியினர்போல் கோத்திர சூத்திர வேறுபாடுகளும் அமைந்துள்ளன என எஸ்.எச். ஹட்டன் என்பார் கூறுவர்.[16]

பிரவர இருடிகள்

பிராமணரின் ஒரு தொகுதியினர்க்குத் தலைவராகவோ, குல முதல்வராகவோ அமைந்த இருடியின் பெயரையும் அவரது சட்ட திட்டங்களையும் கொண்டமைவது கோத்திரமாயினும் அதற்குரிய வேதநெறிமுறைகளை அக்குழுவினர்க்குப் பயிற்சியளித்து வளர்த்தவர்கள், ''பிரவரக்காரர்கள்'' எனப்படுவர். எடுத்துக்காட்டாக வாதுல கோத்திரத்திற்கு வாதுலர் கோத்திர முதல்வராகவும், பார்க்கவர், வைதஹவ்யர், ஸாவேதணர் என்போர் பிரவரர்களாயும் அமைந்துள்ளனர்.[17]

பார்க்கவ, ஔர்வ, ஜாமதக்நிய பிரவரத்தினருக்கு ஆபஸ்தம்ப சூத்திரமும் ஜாமாக்நிய கோத்திரமும், பொருந்தியதாகும்.[18] இத்தகைய கோத்திர சூத்திரங்களைக் கொண்ட அந்தணர், சைவம் வைணவம் எனும் இருநெறிப்படினும் ''வேதநெறி'' என்பதில் ஒருமையாளராய் இரு பிறப்பாளராகவே நான்கு வேதங்களையும் உபநிடதங்களையும், ஆகமங்களையும் ஏற்றவர்களாகவுள்ளனர்.

கரந்தைச் செப்பேடுகளில் குறிக்கப் பெறும் தானபிராமணரின் கோத்திர சூத்திரங்களைக் காண்போமாயின், அவர்கள் பதினைந்து சூத்திரங்கட்குரிய எழுபத்தைந்து கோத்திரக்காரர்களாக உள்ளனர். எனவே, பல கோத்திரங்களுக்கு சூத்திரம் ஒன்றாகவே இருப்பது பெறப்படும். தானம் ஏற்ற பிராமணர்களின் பட்டப் பெயர்களும் சிறப்புப் பெயர்களும் செப்பேடுகளில் நன்கு குறிக்கப்பட்டுள்ளன. அவை பட்டன், தோணப்பட்டன், மாதவப்பட்டன், குமாரபட்டன், சன்னய பட்டன், விஷ்ணுபட்டன், அஷ்டபட்டன், எச்சப்பி பட்டன், பவநந்தி பட்டன் என்பனவாகும்.

வேதவேள்வி செய்யும் அந்தணர்கள், யக்ஞபட்டர் எனவும் சோமவேள்வி செய்வோர் யக்ஞபட்ட ஸோமயாஜி, சோமயாஜி, சதுர்வேதிப்பட்ட ஸோமயாஜி எனவும் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களோடு,

பட்ட நம்பி, தசபுரியன், வஸந்தயாஜி, ஸகஸ்ரன், ஜாதவேதன், ஸர்வஜ்யன், சத்தியாஜி, ஆகிதாக்நி, ஸர்வக்ருத்யாஜி, ஸர்வஜ்யன், கிரமவித்தன், பூவத்தன், நந்தி, நம்பி, என்ற பட்டப் பெயர்களுடைய பிராமணர்களும் இச் செப்பேடுகளில் குறிக்கப்பட்டுள்ளனர்.

பிரமதேயம் பெற்ற பிராமணரின் கோத்திரங்கள் - 75

1. ஆங்கிரஸ 2. ஆத்ரேய 3. உலோகித

4.	ஔபமந்ய	5.	கண	6.	கபி
7.	கபில	8.	கவுஷ்ர	9.	காஸ்யப
10.	கால்யாஸ்ரீ	11.	காலாயாச	12.	கிரெஞ்ஷ
13.	குசல	14.	குண்டின	15.	குத்ஸ
16.	குவின	17.	கொக்கான	18.	கௌதம்
19.	கௌசிக	20.	கௌடிந்ய	21.	கௌஷாயன
22.	சட	23.	சண்டில	24.	சண்டியல
25.	சாண்டில்ய	26.	தைஞ்செய	27.	தேவராத
28.	தேைராத்ய	29.	நிதுஹிந	30.	நிதுந்தின
31.	நிதுஜின	32.	நிர்தந்தின	33.	நிர்தர்ஷன
34.	பராசர	35.	பம்ஷண	36.	பார்க்கவ
37.	பாக்கீவ	38.	பாரதாய	39.	பாண்டில
40.	பாரநாஜ	41.	பாரத்வாஜ	42.	மர்க்கல
43.	மாடில	44.	மாடல	45.	மாஷில
46.	மங்கல	47.	மாண்டவ்ய	48.	மாதவ
49.	மித்ரயூ	50.	மௌக்கல்ய	51.	ம்ருஹ்ஹல
52.	முக்கல	53.	ரகுத்ஸ	54.	ரக்த்ரய
55.	ரஹ்ஹல	56.	ராதீதர	57.	ராமீதர
58.	ஹர	59.	ஹர்ஹ்ஹ	60.	ஹாரித
61	ஹாலந்தன	62.	ஹெஹ்ஹ	63.	ஸ்வாதராயன
64.	ஸ்சரவிஷ்ட	65.	ஸ்ங்கிருதி	66.	ஸம்கோத்ர
67.	ஸாலாவ்த்	68.	ஸரஜ்தஹமித்ர	69.	லோஹித
70.	ஜாம்பலிய	71.	வத்ஸ	72.	வாதால
73.	வாதுல	74.	வாஸிஷ்ட	75.	விஸ்வாமித்ர

சூத்திரங்கள் — 15

1.	ஆகஸ்ய	2.	ஆகஸ்த்ய	3.	ஆகிவெஸ்ய
4.	ஆபஸ்தம்ப	5.	ஆஸ்வலாயன	6.	காத்யாயன
7.	த்ராஹ்யாயன	8.	ஸத்ராஷ்ம	9.	ஸத்யாஷாட
10.	ஸாம்பவ்ய	11.	ஸ்ரமிபவ்ய	12.	பாரநாஜ
13.	பௌதாயன	14.	ஜயமின (ஜயமினி)	15.	ஜாம்பவ்யஸ

சமுதாயத் தொழிலாளர்

சமுதாயத் தொழிலாளர்களாகிய கணக்கர், கணி, காவிதி, உவச்சர், நாவிசர், குசவர், தைச்சர், கொல்லர், அம்பலம் மெழுகுவோர், தண்ணீரட்டுவோர் முதலியோர் பிரமதேய நிலத்தில் இறையிலி பெற்றோராய் 57-ஆவது செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்.[19]

''விஷபோகம்'' எனும் பெயரால் நச்சினைத் தீர்க்கும் பச்சிலைகளை வளர்த்திட மருத்துவர்க்கும் தானநிலம் அளிக்கப் பெற்றுள்ள செயல், முதல் இராசேந்திர சோழனுள்ளிட்ட பிற்காலச் சோழர், மக்களின் நல்வாழ்வில் கொண்டிருந்த பொறுப்புணர்ச்சியினைக் காட்டுவதாயமைந்துள்ளது[20].

சமயம்

இராசராசனைப் போன்றே இராசேந்திரனும் சைவனாயினும், பிறசமயப் பொது நோக்குடையவனாகவே விளங்கியுள்ளான். இவன் காலத்து மக்களும் சமயப் பொதுமை நிறைந்த சமுதாயத்தினராகவே அமைந்திருந்தனர்.

தஞ்சைப் பெருங்கோயிலை ஒப்பதோர் 'கங்கைகொண்டசோழீச்சரத்'தினைக் கட்டிய சைவ மணியாகத் திகழ்பவன் முதல் இராசேந்திர சோழனாவன். அவனது அமைச்சராக விளங்கிய ஸ்ரீசகநாதனோ பரமவைணவர்.[21] அவரது வேண்டுகோட்கிணங்கியே மன்னன் 1084 வைணவ அந்தணர்க்கு 57 ஊர்களை ஒன்றாகக் கொண்டமைந்த ''திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலம்'' எனும் பெரும்பரப்பினைத் தானமாக்கியுள்ளானென்றால், இராசேந்திர சோழன் காலத்து ஆட்சியில் சமயப் பொதுநோக்கில், சைவ-வைணவம் சிறந்திருந்தமையைக் காண முடிகின்றது.

நிலதானம் பெற்ற அந்தணருள் சிலர் சமய வேறுபாடு தோன்றாத நிலையில் சைவ வைணவத் தெய்வங்களின் பெயர்களை இணைத்துப் பூண்டுள்ளமையும் மேலே குறிப்பிட்ட கருத்திற்குச் சான்றுகளாயுள்ளன. எடுத்துக்காட்டாக, பிராமணப் பெயரெண்ணுள் :

1. நீலகண்டன் கோவிந்தபட்டன் (எண். 16)
2. சுப்ரமண்ய ஸ்ரீகிருஷ்ணபட்டன் (எண். 153)
3. நாராயண சுப்ரமண்யன் (எண். 1033)
4. நந்தீஸ்வரன் நாராயண பட்டன் (எண். 1067)

இப்பெயர்களின் அமைவு 11ஆம் நூற்றாண்டின் சமயச் சூழலைத் தெற்றென விளக்குகின்றது.

முறைமைகள்

முறைமை என்பதே அக்காலச் சமுதாயத்தின் பேரொழுக்கமாக அமைந்திருந்தது. அரசனது ஆணையோலையினைக் காணும் போதே அரசனையே நேரில் கண்டு வரவேற்கும் முறையில் ஊர்ச்சபையார் எழுந்து சென்று தொழுது வாங்கித் தலைமேற்கொண்டு உடன் ஆணையினை நிறைவேற்றும் செயல் முறைகள் சமுதாய வழக்கிலும் அமைந்திருந்தன.

சாசனத்தில் ஊர்த்தலைவரும், சபையாரும் சான்றாகக் கையொப்பமிடும் வழக்கு நிலையாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

சதுர்வேதி மங்கலப் பிரமதேயம் பெற்ற அந்தணர்கள், நாளும், அரசும் மக்களும் குறையின்றி வாழ வேதவொலியும் வேள்வியுப் செய்பவராக இருந்தனர்.

உவச்சர், நாவிசர், குசவர், கொல்லர் போன்றவர்கள் சமுதாயப் பணியாளர்களாகவும் சதுர்வேதி மங்கலத்துச் சமுதாயத் தொழிலாளர்களாகவும் இருந்து அதற்குரிய நிலவுரிமைகளை வழிவழியாகப் பெற்றுள்ளனர்.[22]

கோயில்களும்-பெற்ற நில அளவும்

இராசேந்திரன் அந்தணர்க்கும் சமுதாயத் தொழிலாளர்க்கும் பங்கிட்டது போக, எஞ்சிய நிலப்பகுதிகளைப் பிரமதேய ஊர்களிலமைந்த சைவ வைணவக் கோயில்களுக்கும் பிடாரி, ஐயனார் போன்ற கிராம தெய்வங்களுக்கும் நாள் வழிபாட்டுக்குரிய நிவந்தமாக உரிமையாக்கியுள்ளான்.[23] அவ்வகையில்,

1. ஆவூர்க் கூற்றத்து மனுகுல சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீகயிலாசமான ஸ்ரீராசராஜ ஈஸ்வரமுடையார்க்கு நிலம் ... 8வேலி
2. ஸ்ரீ கோயிலான முடிகொண்ட சோழ விண்ணகர்க்கு ... 8வேலி
3. திருபுவன மாதேவி விண்ணகர்க்கு ... 4வேலி
4. ஜநநாப விண்ணகர்க்கு ... 8வேலி
5. கேரளாந்தக விண்ணகர்க்கு ... 3வேலி
6. இவ்வூர் சூர்யதேவர்க்கு ... 1வேலி
7. சுப்ரமண்ய தேவர்க்கு ... 1வேலி

8.	திரௌபதையார்க்கு	...	1 வேலி
9.	மஹாசாஸ்தாவுக்கு	...	1 வேலி
10	பிடாரியார்க்கு	...	1 வேலி
11.	திரிபுவன மாதேவிப் பேரேரிக்கரை கணபதியார்க்கு	...	3 வேலி
12.	இவ்வூர்ப்பிடாகை குளப்பாட்டு மாதேவர்க்கு	...	2 வேலி
13.	கூத்தனூர் மாதேவர்க்கு	...	1/2 வேலி
14.	சிறையூர் மாதேவர்க்கு	...	1/2 வேலி
15.	ஹத்தூர் மாதேவர்க்கு	...	1/2 வேலி
16.	சோற்றுத்துறை மாதேவர்க்கு	...	1/2 வேலி
17.	முஞ்ஞாயில் மாதேவர்க்கு	...	1/2 வேலி
18.	மயின்மாலைய தேவர்க்கு	...	1/2 வேலி
19.	மேட்டு மேற்குடி மாதேவர்க்கு	...	1/4 வேலி
20.	சிக்கல் மாதேவர்க்கு	...	1/2 வேலி
21.	நியாய நடைநல்லூர் மாதேவர்க்கு	...	1/4 வேலி
22.	பரகேசரி நல்லூர் மாதேவர்க்கு	...	1/2 வேலி
23.	ஆதநல்லூர் மாதேவர்க்கு	...	1/2 வேலி
24.	கீழமாத்தூர் மாதேவர்க்கு	...	1/4 வேலி
25.	கூத்தனூர் விஷ்ணுக்களுக்கு	...	1/2 வேலி
26.	முஞ்ஞாயில் விஷ்ணுக்களுக்கு	...	1/2 வேலி
27.	புளியங்குடி விஷ்ணுக்களுக்கு	...	1/2 வேலி
28.	சிறையூர்பிடாரியார்க்கு	...	1 மா
29	சோற்றுத்துறை பிடாரியார்க்கு	...	1 மா
30,	ஹத்தூர் பிடாரியார்க்கு	...	1 மா
31.	முஞ்ஞாயில் பிடாரியார்க்கு	...	1 மா
32,	கூத்தனூர் பிடாரியார்க்கு	...	1 மா
33.	மயின்மாலைய நல்லூர் பிடாரியார்க்கு	...	1 மா
34.	பெண்ணாகடத்துப் பிடாரியார்க்கு	...	1 மா
35.	கோவிந்த நல்லூர் பிடாரியார்க்கு	...	1 மா
36.	மேட்டு மேற்குடி பிடாரியார்க்கு	...	4 மா

என ஊர்த் தெய்வங்கட்கும் சமயப் பெருந் தெய்வங்கட்கும் அவ்வவற்றில் வழிபாட்டுச் சிறப்பினங்களுக்கு ஏற்ற நிவந்தம் அளிக்கப் பட்டுள்ளது.

அறிவு-கல்வி-வேதாகம விருத்தி-நிவந்தங்கள் விளக்கம்

செப்பேட்டுத் தொகுதியின் கடையேடாகிய எண் 57 ஆவதில் சமுதாய நல்வளர்ச்சிக்குரிய அற போகங்கட்கு நிலங்களளித்துள்ளமை விளக்கப்படுகின்றது.[24]

1. மீமாம்ச பட்ட விருத்திப்பங்கு ... நிலம்-5-வேலி
(இம்மீமாம்சை எனும் கல்வி பிராமண உபநிஷத்துக்களுள் பூர்வ மீமாம்சை யாகும்.)

2. வேதாந்தப்பட்ட விருத்திப் பங்கு-நிலம்-5-வேலி
(இது உத்தர மீமாம்சை பற்றிய கல்வியாகும்.)

3. வியாகரணப்பட்ட விருத்திப் பங்கு-நிலம்-4 வேலி
(வடமொழி இலக்கணம் குறித்த ஆய்வுக்கல்வி)

4. பவிழியக்கிடைப்புறப்பங்கு - நிலம்-2 வேலி
(வேதத்தின் அங்கமாக, காலநிர்ணயம், எனும் கலையாக அமைந்தது.)

5. தைத்தியக்கிடைப்புறப்பங்கு - நிலம்-2-வேலி
(சாமவேதத்தினை உபநிஷத்துக்களை ஓதும் முறையினைப் பற்றிய கல்வி.)

6. வாஜ்ஸனையக் கிடைப்புறப்பங்கு - நிலம்-2 வேலி
(காமசாத்திரம் எனும் மானுட இன்பக் கல்வி.)

7. ஸ்தோக ஆதவ்யக்கிடைப்புறப்பங்கு - நிலம்-2 வேலி
(வடமொழியின் யாப்பணி குறித்து ஆயும் கல்வி.)

8. தலவுக்காரக் கிடைப்புறப்பங்கு - நிலம்-2-வேலி
(ஸம்ஹிதை விருத்திக்கு வேத விளக்கக் கிளைக்கல்வியமைப்பு.)

9. கூர்வவதராசக் கிடைப்புறப் பங்கு நிலம் - 2 - வேலி
(நாடகவியல் குறித்த கல்வி.)

10. ஸ்ம்ருதி மூலஸ்ரயப் பங்கு-நிலம்-2-வேலி
(வேதங்களின் சூத்திரங்களைப் பயிற்றுவிக்கும் கல்வி)

11. பாரதம் வாசிக்க ... பங்கு - நிலம் - 2 - வேலி
(பாரதக் கதையினை அம்பலங்களில் மக்கள் கேட்டுணர வாசித்தல்.)

இவ்வாறு பதினொரு வகைத்தாய வேதக் கல்வி திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தூரார் கேட்டுப் பயனும் பழக்கமும் எய்துமாறு முதல் இராசேந்திர சோழனால் போற்றப்பட்டுள்ளது.

ஊர்ச்சபை கூட்டும் அம்பலங்களை மெழுகி, ஆங்குள்ள தொட்டிகளில் தண்ணீர் நிறைத்து வைக்கும் வழக்கம் ஊர்க்கூட்டம் கூடுதற்குரிய காலங்களிலிருந்துள்ளது. இதற்கெனத் தனித்த பணியாளரும் இருந்தனர். நச்சுக்கடிகளுக்கு மருத்துவம் பார்க்க மருத்துவ மூலிகைகள் தனித் தோட்டங்களில் வளர்க்கப்பட்டன. இவற்றை ''விஷ போகம்'' என்ப [25]

இவ்வாறு மக்கள் பயனுறத்தக்க பல்வேறு வகையான முறைகளின் வளர்ச்சிக்கு என அரசன் நிலையான வருவாயாக நில நிவந்தங்களை ஏற்படுத்திய வழக்கினை இச்செப்பேடுகள் வழி உணர முடிகின்றது.

மேற்கோள் நூல்கள்

1. தென்னிந்திய வரலாறு 1, நீலகண்ட சாத்திரியார், ப. 321.
2. ,, ,, ப. 320.
3. க. செ. தொகுதி 1 தலைப்பு 7.
4. ,, தொகுதி 11. ப. 35.
5. ,, ப. 34.
6. ,, ப. 35.
7. ,, ப. 87.
8. ,, ப 14.
9. ,, ப. 41.
10. ,, ப. 87.
11. ,, ப. 87.
12. ,, ப. 86.

13. ரிஷிகளும் கோத்திரங்களும் ப.5.
14 ,,
15. ,, ப. 7.
16. ,,
17. ப. 20.
18. ,, ப. 92.
19. க.செ. தொகுதி 11. ப, 219.
20. ,, ப. 224.
21. ,, ப. 12.
22. ,, ப. 219.
23. ,, பக். 222,223.
24. ,, ப. 224.
25. ,,

8

முதல் இராசேந்திரன் காலத்தில் அரசியலதிகாரிகள்

பிற்காலச் சோழராட்சி, குடிதழுவிக் கோலோச்சிய ஆட்சி என்று சிறப்பிக்கப்படும் பெருமை உடையதாகும். அக்குடி தழுவற் கேற்ற அரசியலதிகாரிகள் அக்காலத்தில் இருந்துள்ளனர். அவர்கள் அரசின் பலதுறைகளில் பணியாற்றியுள்ளனர். சோழர் காலச் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் இத்தகைய துறைகளை நன்கு விளக்குகின்றன. அத்துறையதிகாரிகளின் செயற்பாடுகள் அனைத்தும் சோழராட்சியின் செம்மைக்கே அடிகோலியுள்ளன. இவர்களே சோழராட்சியில் மன்னருக்கும் மக்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக இருந்து முறைசெய்தவர்களாவர். இப் பணி யாளருள் முதல் இராசேந்திரன் காலத்தவராக விளங்குவோரை இக் கட்டுரை எடுத்துக் காட்டுகிறது.

''திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்'' உருவாக்கப்படும் நிகழ்ச்சி சோழராட்சியின் செம்மையினைப் படிப்படியாக விளக்கிடும் சான்றாகவுள்ளது. அரசன் தகுதிவாய்ந்த சான்றோரின் விண்ணப்பத் தினை ஏற்று அளிக்கும் நிலக்கொடை குறித்த ஆணை, அரசனின் அணுக்க அதிகாரிகள், பெருந்தர, சிறுதரத்து, அதிகாரிகள், போன்றோ ரால் எவ்வெவ்வாறு தணிக்கை செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது இச்செப்பேட்டுத் தொகுதியின் இரண்டாம் பகுதி உணர்த்தும் செய்தியாகும். அச்செய்தி வழி அக்காலத்திய அதிகாரிகளும் அவர்தம் பணிகளும் குறிக்கப்பட்டுள்ளன.

1. ஆணை

அறஞ்செய்ய ஆணை இடுவோன் அரசனேயாவன். (செல்வர் களும் சிலவிடங்களில் அறங்களுக்கான ஆணையினை வேண்டுகோ ளாக்குதல் உண்டு).

கரந்தைச் செப்பேடுகளில் அறவாணை இடுவோன், முதல் இராசேந்திர சோழனேயாவன்.

1. 1. நடுவிருக்கல்

மன்னன் மனநிறைவோடு, சிறப்பான மாளிகை, கோயில் இவை போன்ற இடங்களில் சான்றோர் நடுவே இருக்கை கொண்டுள்ள போதே அறஞ் செய்வான். அந் நிலை நடுவிருக்கை எனப்படும்.

'நாம் பெரும்பற்றப் புலியூர் விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழை மண்டபம், இராசேந்திர சோழப் பிரம்மாதிராஜனில், நாம்முண்ணாவிருந்து'' என்ற குறிப்பால் தில்லையில் தனது மாளிகையில் ''இராசேந்திர சோழ பிரம்மாதிராஜன்'' எனும் பெயர் கொண்ட கீழை மண்டபத்தில் இராசேந்திரன் நடுவிருந்தமை பெறப் படுகிறது.[1]

1.2. அறம்

அறங்கள், பிரமதேயமாகவோ, பள்ளிச்சந்தமாகவோ, தேவதான மாகவோ அமையும். இவை தவிர விளக்கு வைத்தல், திருப்பணி செய்தல், காசு முதலீடு செய்தல் ஆகிய அறங்கள் நிகழ்வதுமுண்டு.

''திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம்'' பிரமதேய அறச் செயலாகும்.

2. விஞ்ஞாப்பி

அரசனிடத்து அறம் வேண்டுவோர் விஞ்ஞாப்பி எனப்படுவர்.[2]

''ஸ்ரீசகநாதன் என்ற இராசேந்திரனின் தலைமை அமைச்சர் இங்கு விஞ்ஞாப்பியாக'' உள்ளார்.[3]

3. திருமந்திரவோலை

அரசன் வாய்மொழியாக ஆணையிடுவதனைத் ''திருவாய் மொழிதல்'' என்பர். இத்திருவாய்மொழியினைப் பொருள் மாறாமல் அப்படியே எழுத்துக்களில் அரசாணைப் படிவமாக ஓலையில் எழுதுபவன் ''திருமந்திர ஓலை'' எனும் பணியாளனாவன்.

''ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து பாலையூர் நாட்டுப் பாலையூர் கிழவன் அரையன் முடி கொண்ட சோழன்'' என்பான் கரந்தைச் செப்பேடுகளின் திருமந்திர வோலையாவன்.[4]

4. திருமந்திர ஓலைநாயகம்

திருமந்திர ஓலைகளுக்குள் திறமும், முதிர்வும் உடைய தலைவர் ஓலைநாயகமெனப்படுவர். இவர் ''திருமந்திர ஓலை'' எழுதிய அர சாணையினைத் திருத்தஞ்செய்து செம்மையாக்குவர்.

இங்கு நான்கு நாயகர்கள் குறிக்கப்படுகின்றனர்.

1. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நராக்கன் கிருஷ்ணன் இராமனான இராசேந்திரசோழ பிரம்மராயன்.

2. உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டு சாத்தமங்கலமுடையான் அரையன் ராஜராஜனான விக்ரம சோழச் சோழியவரையன்.

3. நித்தவிநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவனான உத்தமசோழப் பல்லவரையன்.

4. அருமொழி தேவ வளநாட்டு நென்மலி நாட்டு உத்தமசோழ நல்லூருடையான் பாலூரம்பலத் தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையன்.

ஆகியோராவர்.[5] இவர்கள், செய்த திருத்தங்களுடன் எழுதப்பட்ட ஓலை, ''ஓலை'' யென்றே வழங்கப்படும்.

5. கரும மாராய்வர்

இவ்வதிகாரிகள் அரச கட்டளையினை ஆய்ந்து முழுமைபெறச் செய்வோராவர். அறவாணை, செயல், நிலைவிளக்கம், எல்லை, உரிமை ஆகிய செய்திகளை வரையறை செய்து முடிப்போராவர். அரசனது அணுக்கத் தொண்டாகவே இவர்களின் பணி அமைந்துள்ளது.

அரசன் செய்த அறத்தினைப் பற்றிய முழு விளக்கங்களையும் இவர்களே நேர்பட அறிந்தோராதலின் அவற்றைச் சாசன ஓலையாக்கும் பொறுப்பாளராகின்றனர். இத் ''திரிபு'' அறத்திற்குரிய விளக்கங்களைச் சொன்ன கருமத்தார் ஒன்பதின்மராவர். அவர்கள் ஐவர், நால்வர் கொண்ட இரு குழுக்களாக இவ்விளக்கங்களைத் தனித் தனியே ஆய்ந்து கூறி, செய்திகள் தவறின்றி இயைபுபட்ட பின்னரே அவ்வற விளக்கம் ஆணையோலையாக்கப்பட்டுள்ளது.

முதற் குழு

1. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நராக்கன் மாராயன் ஐநநாதனான இராசேந்திர சோழப் பிரம்மாதிராஜன்.

2. உய்யக்கொண்டார் வளநாட்டு பேராவூர் நாட்டு காஞ்சி வாயிலுடையான் உதயதிவாகரன் தில்லையாளியான இராஜராஜ மூவேந்த வேளான்.

3. அருமொழிதேவ வளநாட்டு, இங்கணாட்டு இளையான் குடியன் ராஜாதித்தன் கூத்தாடியான பரகேசரி விழுப்பரையன்.

4. நடுவிருக்கும் நித்தவிநோத வளநாட்டுக் கிழார்க் கூற்றத் துப் புள்ள மங்கலத்துப் பரமேஸ்வர பட்ட ஸர்வக்குருத்யாஜி.

5. உகளூர்க் கூற்றத்துத் திட்டைக்குடி மறவடிகள் ஸதாசிவ பட்ட ஸோமயாஜி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்[6]

இரண்டாம் குழு

1. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு வயலூர்க்கிழ வன் தத்தன் சேந்தன் ராஜேந்திரசோழ அணுக்கப் பல்லவரையன்.

2. உய்யக்கொண்டார் வளநாட்டு, திருவழுந்தூர் நாட்டு, பரகேசரி நல்லூருடையான் மாணிக்கனெடுத்த பாதமான சோழ மூவேந்த வேளான்.

3. அருமொழிதேவ வளநாட்டு இடையள நாட்டுசிறிநூர்கிழான் தன்னிச்சை ஆதித்தன்.

4. சத்திரிய சிகாமணி வளநாட்டு வைப்பூர் கிழவன் தீரன் பாஸ்கரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.[7]

6. உடன் கூட்டம்

மேற்கூறப்பட்ட கருமத்தாரது கூற்றுவழிப்பட்ட ஆணையினை, பலதரப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரிகள் ஒருங்கே கூடி மேலும் ஆய்வுசெய்து அவ்வறத்தினை ''வரியிலீடு'' செய்வர்.

இவ்வரியிலீடு என்பது புரவுவரித்திணைக்களப் புத்தகத்துள் அறத்தைக் குறித்து அதன் வருவாய்க்கு வரிவிலக்களித்து அரச வாணையினை அளவிட்டு அனுமதிக்கும் நிலவருவாய்த்துறையின் செயலாகும்.

இச்செயலை செயற்படுத்தும் அதிகாரிகள் அரசனது அழைப்பின் பேரில், எந்த நேரத்திலும் ஒருங்கு கூடக்கூடிய அதிகாரிகளாகவே

இருப்பர் என்று நீலகண்ட சாத்திரியார் கூறுவர்.[8] இத்தகைய கூட்டத்துள் பெருந்தரம் முதல் சிறுதரம் வரை உள்ளோரை நிரல்படக் காணலாகும்.

புரவுவரித் திணைக்களக் கண்காணி

புரவு என்பது விளைநிலமாகும்[9] நிலவருவாய்த் துறையின் மேலாண்மையாளர் கண்காணி எனப்படுவர்.

''சத்திரியசிகாமணி வளநாட்டுப் பனையூர்நாட்டு விசலூர்க் கிழவன் கணவதி யழகியான்'' என்பான் முதல் இராசேந்திர சோழன் காலத்தில் புரவுவரித் திணைக்களக் கண்காணியாகப் பணி புரிந்துள்ளான்.[10]

புரவுவரித்திணைக்கள நாயகன்

இவ்வதிகாரி மேற்கண்ட துறையின் தலைமையதிகாரியாவார்.

''நித்தவிநோத வளநாட்டு கிழார்க் கூற்றத்துப் பூஞ்சிற்றூருடையான் நக்கன் அரங்கன்'' இப்பணி புரிந்துள்ளான்.[11]

புரவுவரித் திணைக்களத்தார்

இவர்கள் நில வருவாய்த் துறையில் பணியாற்றுவோராவர்.

1. உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர்நாட்டு தலையூருடையான் நக்கன் தாமோதிரன்,

2. சத்திரிய சிகாமணி வளநாட்டு அளநாட்டு அழிஞ்சில் மங்கலமுடையான் நாகனக்கன்,

3. சயங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகனூர் பெரும்பேடு கிழான் பட்டன் வாசுதேவன்,

ஆகியோர் இப் பணியாளராகக் காணப்படுகின்றனர்.[12]

வரிப் பொத்தகம்

நிலவரிக் கணக்கினை நேர்பார்க்கும் அலுவலர்கள் வரிப் பொத்தகம் என அழைக்கப்படுவர்.

''சத்திரியசிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு இரையான் சேரி கிழவன் புழமதனிராமன்'' இப்பணி புரிந்துள்ளான்.[13]

முகவெட்டி

இவர் பணிகுறித்த தெளிவான கருத்தில்லை. நீலகண்ட சாத்திரியாரும் இதனை ஏற்பர்.[14] ஒருக்கால் வரிப் பொத்தகத்தின் எவ்வெப் பகுதிகளில் ''வரியிலீடு'' நிகழ்த்தப்படலாம் என முடிவு செய்வோராகவும் இருக்கலாம். சாசன வெட்டி என்பாருமுளர்.[15] கரந்தைச் செப்பேடுகளில்,

1 சத்திரிய சிகாமணி வளநாட்டு பட்டிநக் கூற்றத்து உவர்க் குடி கிழான் அரையன் கணபுரம்,

2. அருமொழிதேவ வளநாட்டு ஆர்வலக் கூற்றத்து இலுப்பை யூருடையான் இராமன் அமலன்,

3. வீராணமுடையான் நூற்றெண்மர் கருணாகரன்,

4 பனையூருடையான் காவிதி வெண்காடன்

ஆகியோர் இப்பணி புரிந்துள்ளமையினை அறிய முடிகின்றது.[16]

வரிப்பொத்தகக் கணக்கு

நில வருவாய்க் குறிப்பேடுகளில் அறச் செயலை வரியிலீடாகக் குறித்து வைக்கும் பணிபுரிந்தோர் வரிப்பொத்தகக் கணக்கு என வழங்கப்பட்டுள்ளனர்.

''செல்காருடையான் நரதொங்கன் கருத்தன்'' என்பான் இப் பணிக்குரியவன்.[17]

வரியிலிடு

இப்பணிபுரிவார், வரியிலிகளைப் பதிவு செய்யும் பதிவாளர் ஆவர்.

''பூதிகுடையான் சிங்கன்புலியன்'' இப்பணிக்குரியவனாவன்.[18]

பட்டோலை

அரசனது ஆணை, ஓலையாக திருமந்திர ஓலையால் எழுதப் பட்டு, பின் பல்துறையதிகாரிகளின் தணிக்கை பெற்று வரியிலீடு செய்யப்பட்ட நிகழ்ச்சியும் சேர்க்கப்பட்ட நிறை அறவோலை ''தீட்டு'' என்றழைக்கப்படும். சாத்திரியாரும் இதனை ஒப்புவர்.[19]

''தீட்டினைப் படியோலையாக ஊர்ச் சபையார்க்கு அனுப்புதற் குரியதாகத் தீட்டுபவர் பட்டோலை''யாவர்.

''நரிகுடையான் சத்தி இராமன்'' இப்பணி புரிந்துள்ளான்.[20]

பேர்தரப்பட்டோர்

அரசன் தானளித்த அறநிலத்தின் எல்லைகளைத் தெரித்து அளந்தறிய ஆணையளித்து அனுப்பும் அதிகாரிகள் இப்பணிபுரிவர். இப்பணி தற்காலிகமானது. எனவே பல திறப்பட்ட துறையதிகாரிகளே தற்காலிகமாக நியமிக்கப்படுவர். இவர்களை அரசனே தேர்ந்தெடுத்தல் மரபு. இதனைப் "பேர் தருதல்" என்பர்.

திருபுவனமாதேவிச் சதுர்வேதி மங்கலத்தின் எல்லைகளைத் தெரித்துதவ முதல்ராசேந்திரனால் பேர்தரப்பட்டோர்:

1. (நித்தவிநோத) இந்நாட்டு வகை செய்கின்ற களத்தூர் கிழவன் சிறியான் ஆதித்தன்,

2. புரவுவரித்திணைக்களத்து பூஞ்சிற்றூருடையான் நக்கன் அரங்கன்,

3. பட்டன்சத்திரிய சிகாமணிவளநாட்டு வேளாநாட்டு ராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலத்துக் கவிணியன் கிருஷ்ணமாறபட்டன் ஆகியோராவர்.[21]

ஊர்ச்சபையார்

அரசியலதிகாரிகளைக் கொண்டு, இவ்வளவில் அரசவாணை செயற்பட்ட பின்னர், நிறைவேற்றம் பெறுதற்கு ஊர்ச்சபையாரின் ஆய்வுத்தணிக்கையும் ஒப்பும் வேண்டப்படுவது, சோழராட்சியின் சிறப்புக்குரியதாகும்.

மக்களாட்சியின் சின்னமாக "குடவோலை"த் தேர்தல் வழித் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களமைந்த சபைகளே அரசனது ஆணையினை முடிபு செய்யும் நிலைக்களங்களாகும். சோழ அரசர்களும் இவ்வூர்ச்சபையாரைப் பெரிதும் மதித்தே ஆட்சி செய்துள்ளனர்.

இராசேந்திர சோழனே தனது திருமுகத்தில், ஊர்ச்சபையாரை,

"தாங்களும் இவர்களோடும் (பேர்தரப்பட்டோர்)
உடனின்று எல்லை தெரித்துக் காட்டிப்
பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்
கள்ளியு நாட்டி அறவோலை செய்துபோத்தக"

எனச் சபையாரைப் பெருமைப்படுத்தி வேண்டிக் கொண்டுள்ளமை அறியத்தக்கது.[22]

சாட்சிகள்

அறங்களை மன்னன் தனது சொந்த விருப்பில் செய்தானென்றில்லாது மக்களின் ஒப்புதல் பெற்றே நிறைவு செய்தனன்.

ஊர்ச்சபையின் உறுப்பினரும், சபையாரும்,

''இப்பரிசு நாட்டாரோடும் உடநின்று பிடிசூழ்ந்து பிடாகை நடந்து கல்லுங்கள்ளியுநாட்டி அறவோலை செய்து கொடுத்தேன்/கொடுத்தோம்''[23] இவையென்னெழுத்து

எனச் சான்றொப்பமிடும் வழக்கத்தினையும் பொதுவாக செப்பேடுகளில் காணலாகும்.

அம்முறையில் ''திரிபு'' அறப்பட்டயத்தில் சான்று செய்துள்ளோருள்,

1. சத்திரிய சிகாமணி வளநாட்டு வேளிர் நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ ராசேந்திர சோழ சதுர்வேதி மங்கலத்துக் கவிணியன் கிருஷ்ணமாதவ பட்டனேன்.

2. இந்நாட்டு வகை செய்கின்ற களத்தூர் கிழவன் சுற்றியான் ஆதித்தன்.

3. வெண்ணியுடையான் கருத்தன் செய்யரன்.

4. வெண்ணிக் கூற்றத்துப் பிரமதேயம் முல்லைவாயில் ஸபையோர் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.[24]

ஏற்பாளர்

இறுதியாக அரசியலில் இன்றியமையாத உயரதிகாரிகள் ''விரியிலிட்டுக் கொள்க'' என அனுமதிப்பர். பின்னரே அ ரசவாணை உடன் கூட்டத்தார் அனைவராலும் ''பரதேத்தி''[25] எனும் நிறைவேற்றம் செய்யப்பெறும்.

அத்தகு உடன்பாட்டினை இவ்வறத்திற்கு ''உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு கேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து நராக்கன் மாராயன் ஜனநாயனான ராஜேந்திர சோழச் சிவப்பிராமணன்'' அளித்துள்ளான்.[26]

பெருந்தரம் ஒப்புதல்

இவ்வாறு பரதேத்திய ஆணையினை அரசனது பெருந்தரத்து அதிகாரிகளும் ஒப்பி அறத்தினை,

"சந்திராதித்தவரை செல்லக் கடவதாக"
நிலைபெறச் செய்வர்.

அவ்வழிக் கரந்தைச் செப்பேடுகளில்,

1. திரைமூர் நாட்டு நடார் கிழான் அரையன் அருமொழியான ராஜேந்திர சோழப் பல்லவரையன்,

2. உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டு சேரளாந்தக சதுர்வேதி மங்கலத்து ராஜராஜ பிரம்மராஜன்,

3. நித்த விநோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து ஈராயிர வன் பல்லவயனான உத்தமசோழப் பல்லவராயன்,

4. அருமொழிதேவ வளநாட்டு நென்மலி நாட்டு உத்தம சோழ நல்லூருடையான் பாளூரம்பலத் தாடியான முடிகொண்ட சோழ விழுப்பரையன்,

5. உய்யக்கொண்டார் வளநாட்டு சாத்த மங்கலமுடையான் அரையன் ராஜராஜனான விக்கிரம சோழச் சோழிய வரையன் போன்றோர் நிறைவு செய்துள்ளனர்.[37]

இவ்வாறாக, இராசேந்திரன் காலத்திய அரசியல் அதிகாரிகள் முடியாட்சியில் குடியாட்சி எனுமுறையில் பிற்காலச் சோழர்களின் ஆட்சி சிறந்தோங்க உழைத்த உண்மையாளர்களாகத் திகழ்தலைக் கரந்தைச் செப்பேட்டுச் செய்திகளால் அறியத்தக்கதாகும்.

மேற்கோள் நூல்கள்

1 கரந்தைச் செப்பேட்டுத் தொகுதி, II ப. 14.

2 Cholas, p. 468.

3 A.R.I.E. for 1949-50 and 1956, p. 5.

4 க. செ. தொகுதி II, ப. 37.

5. ,, ப. 37.

6. ,, ப. 38.

7. ,, ப. 38.

8. Cholas, p. 472.

9. Cholas, p.470.
10. க. செ. தொகுதி II ப. 38.
11. ,, ப. 39.
12. ,, ப. 39.
13. ,, ப. 39.
14. Cholas ,p. 470.
15. ,,
16. க. செ. தொகுதி II. ப. 39.
17. ,, ப. 39.
18. ,, ப. 39.
19. Colas, K. A. N. Sastri.
20, க. செ. தொகுதி II. ப. 39.
21. ,, ப. 41.
22. ,, ப.41.
23. ,, ப. 88.
24. ,, ப. 90.
25. பள்ளன்கோயிற் செப்பேடுகள்
26. ,, ப. 92.
27. ,, ப.96.

9

செப்பேட்டுச் செய்திகளால் அறியப் பெறும் வளநாடுகளும் ஊர்களும்

முதல் இராசேந்திரனிடத்து நிலதானம் பெற்ற ஆயிரத் தெண்மர் வேத பிராமணர்களின் பெயர்களையும் முப்பது செப்பேடுகள் விளக்குகின்றன. அவர்கள் சோழ மண்டலத்தில் வாழ்ந்திருந்த ஊர்களைக் குறிப்பிடும்போது, சாசன விளக்கமாக அவ்வூர் அமைந்த கூற்றம், நாடு, வளநாடு ஆகியவற்றுடன் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு, இச் செப்பேடுகளில் கூறப்பெற்றிருப்பதால், சோழ மண்டலத்தின் உட்பிரிவுகளைத் தெளிவாக அறிய முடிகின்றது. முதல் இராசராசன் காலஅளவு வரையில் கிடைத்திருந்த வளநாடுகள் ஒன்பதாகும். அவை, (1) அருண்மொழி தேவ வளநாடு (2) சத்திரிய சிகாமணி வளநாடு (3) உய்யக்கொண்டார் வளநாடு (4) நித்த வினோத வளநாடு (5) பாண்டிய குலாசனி வளநாடு (6) கேரளாந்தக வளநாடு (7) இராசாசிரிய வளநாடு (8) இராசராச வளநாடு (9) இராசேந்திர சிங்க வளநாடு என்பதாகும்.

இவ்வளநாடுகள் சோழமண்டலத்தின் நான்கு எல்லைகளாகக் குறிக்கப்பெறும், கிழக்கே வங்கக் கடல், தெற்கே தென் வெள்ளாறு, மேற்கே கோட்டைக் கரை, கருவூர், வடக்கே வட வெள்ளாறு ஆகியவற்றிற்கு இடைப்பட்ட பெரு நிலப்பரப்புக்குட்பட்டனவாகும். மண்டலத்தின் ஒன்பது பிரிவுகளாக முதல் இராசராசன் தனது 16-ஆம் ஆட்சியாண்டில், குரவன் உலகளந்தான், இராசராச மாராயன் தலைமையில் நாட்டளவை செய்து பிரித்துள்ளான். அந்நிலப் பிரிப் பின்படி சோழ மண்டலம் வளநாடுகளாகவும், வளநாடு நாடுகளாகவும், நாடு கூற்றங்களாகவும், கூற்றம் ஊர்கள் அல்லது சதுர்வேதி மங்கலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பிரிக்கப்பட்ட உட்பிரிவுகளை அறிதற்கு முதல் இராசராசன் கால முதலாக ஆட்சி செய்த சோழமன்னர்களின் கல்வெட்டுச் செய்திகளில் குறிக்கப்படும் வளநாடு, நாடு, கூற்றம், ஊர்கள் ஆகிய

வற்றைக் கொண்டு வரலாற்றாசிரியர்கள் ஓரளவு குறித்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக, தித்தவினோத வளநாட்டைப் பற்றி அறிய முயன்றால், அவ்வளநாடு, கும்பகோணம், மன்னார்குடி, தஞ்சை ஆகிய தாலுகாக்களின் பக்க இணைப்பாக அரிசிலாற்றுக்குத் தெற்காக அமைந்ததும், ஆவூர்க்கூற்றம், இருப்புதல் ஆகிய ஊர்களைக் கொண்டதும் ஆகும் என்ற அளவிலேயே குறிப்பிடப் பட்டுள்ளது.

செப்பேடுதரும் - பிரிவுகள்

கரந்தைச் செப்பேடுகளில் குறிக்கப்பெறும் சோழ மண்டலத்தின் உட்பிரிவுகளாகிய வளநாடுகள் முன்னர் குறிக்கப்பெற்ற ஒன்பதுவளநாடு களுடன் கடலடையாது இலங்கை கொண்ட சோழ வளநாடென்னும் கோனாட்டுப்பகுதியும் சேர்ந்து பத்தாகக் காணப்படுவது சிறப்பான தாகும்.

ஒவ்வொரு வளநாட்டிலும் அடங்கிய நாடுகளும் கூற்றங்களும், ஊர்களும், சதுர்வேதிமங்கலங்களும் இதுவரையில் கிடைத்திருப்பதை விட மிகுதியாகவே காணப்படுவதால், வளநாடுகளின் எல்லைகளை முன்னையினும் ஓரளவு தெளிவாக அறிதற்கு உதவியாக அமைந் துள்ளது. இதுவரையில் வெண்ணிக் கூற்றம் எவ்வள நாட்டைச் சேர்ந்த தென்பதில் ஏற்பட்டிருந்த ஐயம் தெளிவுபெற, வெண்ணிக் கூற் றம் நித்தவிநோத வளநாட்டின் கூற்றப் பகுதிகளில் சிறந்த தொன் றென்பதுடன், இக்கூற்றத்துள், ஸ்ரீபூதி, ஒளிமதி ஆகிய ஊர்களுடன் பூவணூராகிய அவநி கேஸரி சதுர்வேதிமங்கலம், கீழைப் பூண்டி யாகிய ஒலோக மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம் ஆகிய சதுர்வேதி மங்கலங்களும் அடங்கியிருப்பதை இச்செப்பேடுகள் தெளிவு செய் கின்றன. மற்றும், சோழ மண்டலத்தில் கி.பி. பதினோராம் நூற்றாண் டில் அமைந்திருந்தனவும், சோழமன்னர்கள் பெயராலும், சோழவர சியர் பெயராலும், பிற சிறப்புப் பெயராலும் விளங்கியனவுமாகிய நாற்பத்து நான்கு சதுர்வேதிமங்கலங்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

திருவாரூர் கூற்றத்தில் உள்ளதும் இன்று பிழையாக அடியக்சா மங்கலம் என்று அழைக்கப் படுவதுமாகிய ஊரின் திருந்திய பெயர் அடியப்பி மங்கலம் என்பதும், தண்டந்தோட்டம், மும்முடிச் சோழச் சதுர்வேதிமங்கலம் என்பதும், நித்த விநொத வள நாட்டு இருப்புதல் மந்தகுல சூடாமணிச் சதுர் வேதி மங்கலம் என்பதும், காமரச வல்லி மிறைக் கூற்றத்துச் சதுர்வேதிமங்கலம் என்பதும் இச்செப்பேடுகளால் அறியப் பெறுவன வாகும்.

1. அருமொழி தேவ வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
புறங்கரம்பை நாடு—	——	செம்பியன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	——	சிங்களாந்தகச்சதுர்வேதி மங்கலம்
,,	——	கோதண்டராமச் சதுர்வேதி மங்கலம்
,,	——	பனையூர்
,,	——	பல்லவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	——	பெரும்பல மருதூர்
,,	வண்டாழை வேளூர் கூற்றம்	கொண்ஹூர்
,,	,,	குறும்பில்
,,	,,	வல்லமாகிய விடேல் விடுகுச் சதுர்வேதி மங்கலம்
,,	,,	செம்பியன் மஹாதேவி சதுர்வேதி மங்கலம்
,,	,,	கீழயில் பரமேஸ்வர மங்கலம்
இடையள நாடு	——	அறிஞ்சிகை சதுர்வேதி மங்கலம்
,,	——	குந்தவைச் சதுர்வேதி மங்கலம்
முழையூர் நாடு	——	நாட்டுக் கடுவன் திடலாகிய பரமேஸ்வர மங்கலம்
,,	வலிவலக் கூற்றம்	கன்றாப்பில்
,,	,,	இறையான்குடி
தக்களூர் நாடு	——	அத்திகோச மங்கலம்
,,	——	தாழைக்குடி
இங்கணாடு	——	நெற்குப்பை
,,	——	விபலசித்த மங்கலம்

நாடு	கூற்றம்	ஊர்
தேவூர் நாடு	——	கிள்ளி குடி
,,	——	மாரக்க மங்கலம்
,,	ஆர்வலக் கூற்றம்	கொற்றங்குடி
நென்மலி நாடு	——	ஆராற்றூர்
,,	——	குன்றியூர்
,,	——	நெடுமணலாகியமதன மஞ்சரிச் சதுர்வேதி மங்கலம்

ஆக நாடு-7. கூற்றம்-3. ஊர்-17. ச.மங்கலம்-9.

2. க்ஷத்திரிய சிகாமணி வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
பாம்பூர் நாடு	——	மாங்குடி
திருநறையூர் நாடு	——	சீதொங்க மங்கலம்
,,	சேற்றூர் கூற்றம்	சேற்றூர்
,,	,,	நாலூர்
,,	,,	குடவாயில்
வேளார் நாடு	——	ராஜமல்ல சதுர்வேதி மங்கலம்
,,	——	விளங்குடி
,,	——	விளமாசி
,,	திருவாரூர் கூற்றம்	குருக்கத்தி
,,	,,	அடியப்பிமங்கலம்
மருகல் நாடு	——	பிராய்குடி
,,	——	இடையாற்றுக்குடி
தேவூர் நாடு	——	ஆலத்தூர்
முழையூர் நாடு	——	குந்தவைச் சதுர்வேதி மங்கலம்
,,	——	சாத்தமங்கலம்
பனையூர் நாடு	——	பூலோக மாணிக்கச் சதுர்வேதிமங்கலம்
,,	——	மூலமங்கலம்
,,	——	எயினனூர்
அளநாடு	——	அத்திப்புலியூர்
,,	பட்டணைக்கூற்றம்	கொட்டாரக்குடி
,,	,,	சன்னமங்கலம்

ஆக, நாடு -8. கூற்றம் -3. ஊர் -19. ச.மங்கலம் -3.

3. உய்யக் கொண்டார் வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
திருநறையூர் நாடு	——	தண்டந்தோட்ட மானமும் மடிச்சோழச் சதுர்வேதிமங்கலம்
பரம்பூர் நாடு	——	கடையக்குடி
,,	——	திருக்குடமூக்கு
அம்பர் நாடு	——	ஆலத்தூர்
,,	——	சிறுபுலியூர்
,,	——	பேழைக்குடி
,,	——	வேலங்குடி
வெண்ணாடு	——	வைகலாகிய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம்
,,	——	திருமிழலை
திரைமூர் நாடு	——	வண்ணக்குடி
திருவழுந்தூர் நாடு	——	உத்தமச்சோழ சதுர்வேதி மங்கலம்
,,	——	அக்களூர்
,,	——	விழலாகிய வானவ மங்கை
குறும்பூர் நாடு	——	காயாக்குடி

ஆக, நாடு-7. ஊர்-11. ச. மங்கலம்-3.

4. நித்த விநோத வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
——	ஆவூர் கூற்றம்	அமிதிரவல்லிச் சதுர் வேதி மங்கலம்
——	,,	நரசிங்கமங்கலம்
	,,	இரும்புதலாகிய மந்ர குலசூடாமணிச் சதுர்வேதிமங்கலம்
முடிச்சோணாடு	—	ஜநநாதச் சதுர்வேதி மங்கலம்
,,	—	சிற்றின பாழாகிய பரமேஸ்வரமங்கலம்
காந்தரன் நாடு	—	விசயாலயசதுர்வேதி மங்கலம்
,,	வெண்ணிக் கூற்றம்	ஒளிமதி
,,	,,	பூவனூராகிய அவநி கேஸரி சதுர்வேதி மங்கலம்
,,	,,	கீழைப் பூண்டியாகிய ஒலொகமஹாதேவிச் சதுர்வேதிமங்கலம்
நல்லூர் நாடு	—	ராஜகேஸரி சதுர்வேதி மங்கலம்

ஆக, நாடு — 3. கூற்றம் - 2. ஊர் - 3. ச. மங்கலம் - 7.

5. பாண்டிய குலாசனி வளநாடு:

நாடு	கூற்றம்	ஊர்
புறக்கிளியூர் நாடு	—	மலையக்கச் சதுர்வேதி மங்கலம்
,,	—	மாறனேரியான தென்னவன் மகாதேவிச் சதுர்வேதிமங்கலம்
இடையாற்று நாடு	—	தொண்டவைச் சதுர்வேதி மங்கலம்
,,	—	இடையாற்று மங்கலம்
எயினாடு	ஆர்காட்டுக் கூற்றம்	சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம்
விளர் நாடு	—	உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலம்
,,	—	மலரியான ஸ்ரீகணச் சதுர்வேதி மங்கலம்
,,	—	மீகோழைச் சோழமாதேவிச் சதுர்வேதி மங்கலம்

ஆக, நாடு - 4. கூற்றம் - 1. ஊர்- 1. ச. மங்கலம் - 7.

6. கேரளாந்தக வளநாடு:

நாடு	கூற்றம்	ஊர்
——	உறையூர் கூற்றம்	இராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலம்
——	,,	நங்கை பிர்ஹ்மதேயமான அறிஞ்சிகைச் சதுர்வேதி மங்கலம்

ஆக, நாடு ——. கூற்று — 1. ச. மங்கலம்—2.

7. ராஜாஸ்ரய வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
முஞ்ஞுஇ வல்ல வாயர் நாடு	——	தனியூர் வெள்ளறை
,,	——	உத்தம சோழச் சதுர் வேதி மங்கலம்
,,	பாச்சில் கூற்றம்	கீழபாலாற்றுப் பெரு மருதூர்
,,	களாற் கூற்றம்	திருமங்கலம்
,,	வெள்ளலையூர் கண்டம்	சங்கேந்திமங்கலம்

ஆக : நாடு — 1. கூற்றம் — 3. ஊர் — 4. ச. மங்கலம். 1.

8. ராஜ ராஜ வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
களக்குடி நாடு	——	மாநநிலை நல்லூர்

ஆக : நாடு — 1. கூற்றம் —. ஊர் — 1. ச. மங்கலம்—.

9. ராஜேந்திர சிம்ஹ வளநாடு :

நாடு	கூற்றம்	ஊர்
பொய்கைநாடு	——	வீரநாராயணச்சதுர் வேதி மங்கலம்
,,	——	கண்டராதித்தசதுர் வேதி மங்கலம்
,,	——	மதுராந்தகச் சதுர் வேதி மங்கலம்
,,	மிறைக்கூற்றம்	காமரசவல்லி சதுர் வேதி மங்கலம்
இன்னம்பர் நாடு	,,	பழைய வானவன் மஹாதேவிச் சதுர் வேதி மங்கலம்
,,	,,	ஸ்ரீபராந்தகச் சதுர் வேதி மங்கலம்

நாடு	கூற்றம்	ஊர்
இன்னம்பர் நாடு	மிறைக்கூற்றம்	கிழக் கூர்
,,	,,	மிழலை இரட்டுச் சேய் ஞலூர்
மண்ணிநாடு	——	ஏமநல்லூர்
,,	——	இடையரிநல்லூர்
,,	——	வேப்பற்றூரானசோழ மாத்தாண்டச்சதுர் வேதி மங்கலம்
,,	——	முள்ளிலங்குடி
,,	——	இடவை
,,	——	வீரத்தூர்
காரகில் நாடு	——	யேமான் புலியூரான உலகளந்த சோழச் சதுர்வேதிமங்கலம்
திருவிந்தளூர் நாடு	——	சேந்தன் குடி
,,	——	திருநின்றியூர்
,,	——	மார்ப்பிடுகுதேவிச் சதுர் வேதி மங்கலம்
குறுக்கை நாடு	——	கடலங்குடி
,,	——	காவிரி மங்கலம்
அதிகைமங்கை நாடு	——	பெருந்தோட்டம்
திருக்கழுமல நாடு	——	உதயாதித்த மங்கலத்து கஞ்சனூர்
,,	——	மகேந்திரகோட்டூர்
நாங்கூர் நாடு	——	குன்றத்தூர்
,,	——	மருதூர்
,,	——	தனியூர்பெரும்பற்றபுலியூர்

நாடு	கூற்றம்	ஊர்
வெண்ணையூர் நாடு	——	சோதியக்குடி
,,	——	பஞ்சவன் மஹாதேவிச் சதுர் வேதி மங்கலம்
,,	உகளூர்க் கூற்றம்	திட்டைக்குடி
,,	,,	வேசாலிப்பாடி ஐயங் கொண்ட சோழச் சதுர் வேதி மங்கலம்
,,	——	இருங்கோளப் பாடித் தனியூர் வளவன் மஹா தேவிச் சதுர்வேதி மங்கலம்

ஆக, நாடு - 10. கூற்றம் - 2. ஊர் - 19. ச.மங்கலம் - 12.

10. கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாடு :

கேனாடு	உறத்தூர் கூற்றம்	கற்றளியேரியான விக்கிரம கேஸரி சதுர் வேதி மங்கலம்
,,	சூரலூர்க்கூற்றம்	சோழ உத்தம சதுர்வேதி மங்கலம்

ஆக :நாடு-1. கூற்றம்- 2, ஊர் —.ச மங்கலம்- 2.

10

சோழர் மரபு விளக்கம் -பகுதி1

உலகம் முழுதும் உள்ள அரச குலத்தவர் அனைவரும் தம்மைத் தெய்வங்களின் வழியினராகவே கருதியுள்ளனர். ஆற்றலும் தண்ணளியும் நிறைந்த அவர்களை மக்களும் கடவுளராகவே மதித்து வணங்கினர். அம்முறையிலேயே சோழர் தல மன்னரும் காணப்படுகின்றனர்.

பிற்காலச் சோழருள் முதல்வனாகும் விசயாலயனையும் (கி.பி. 846) அவன் முன்னோராகக் குறிக்கப்பெறும் கரிகாலனையும் கடவுள் தன்மையும், அறிவும் ஆற்றலும் படைத்த புராண, இலக்கிய காலச் சோழர்களையும், இவர்கட்கெல்லாம் தோற்ற மூலமாகக் குறிக்கும் தெய்வங்களையும், தம் முன்னோராகச் சோழர் குறித்துக் கொண்டுள்ளனர்.

இம்முறையில் திருமால் முதலாக, முதல் இராசேந்திரசோழன் வரையில் சோழர்குலத் தோன்றல்களின் மரபினை, அன்பில், ஆனை மங்கலம், திருவாலங்காடு, கரந்தை, சாராலம் ஆகிய ஊர்ப்பெயர்களுடனமைந்த சோழர்காலச் செப்பேடுகளிலும், கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் காணலாகும்.

கலிங்கத்துப்பரணி, மூவருலா, (விக்கிரமசோழன் உலா, குலோத்துங்கசோழன் உலா, இராசராசசோழன் உலா) சங்கரசோழன் உலா ஆகிய சிற்றிலக்கியங்களிலும், கம்பராமாயணம்- குலமுறை கிளத்துப் படலம், வில்லிபாரதம்- குருகுலச் சருக்கம் ஆகிய பேரிலக்கியங்களிலும், சோழர் குலமரபு இடம் பெற்றுள்ளது.

இத்தகைய செப்பேடுகள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் ஆகியவற்றுடன் கரந்தைச் செப்பேடுகளை ஒப்பிட்டாய்ந்து சோழர் குல மரபு பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

சோழர் கால நெடிய மரபினை, நான்கு பெரும் பிரிவாகக் கொள்ளலாகும். அவை,

1. புராணகாலச் சோழர்
2. சங்ககாலச் சோழர்
3. இடைக்காலச் சோழர்
4. பிற்காலச் சோழர்

இவற்றுள் புராணகால, சங்ககால, சோழர் பற்றிய செய்திகள் தெய்வத் தன்மையுடையனவாகவும், செயற்கரியனவாகவும் அமைந்திருப் பினும் அவை தமிழக வரலாற்றினை, மேலும் விரிவு செய்தற்குரிய ஆய்விற்கு அடிப்படையாகுந் தன்மையன.

முதற்கண் புராணகாலச் சோழரெனும் ஆதிகாலச் சோழரைப் பற்றி அறியலாகும்.

1. திருமால்

உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் முக்கடவுளரில் நடுவண் காப்புடைக்கடவுளே திருமால். உலகைப் புரக்கும் ஒப்புமையால் திருமால் அரசகுல ஆதிமுதல்வனாகக் காட்டப்பட்டுள்ளான். இது குறித்தே,

"திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என ஆழ்வாரும் புகன்றனர்.[1] திருமாலின் தேவி இலக்குமி, திருவின் செல்வி, இத்திருமகளைத் திருமார்பில் கொண்டிலங்கும் காப்புக் கடவுளாம் திருமாலைச் சோழ மன்னர் குலம் குடி முதல்வனாகக் கொண்டு விளங்குவது சிறப்புடையதாகும்.

அன்பிற் செப்பேடுகளும் சாராலச் செப்பேடுகளும் கன்னியாகுமரிக் கல்வெட்டும், கலிங்கத்துப் பரணியும், விக்ரமசோழனுலாவும், இராசராசச் சோழனுலாவும் சங்கர சோழனுலாவும் திருமாலையே சோழர்குல முதல்வனாகக் குறிக்கின்றன.

2. பிரமன்

உலகைப் படைக்கும் முதன்மைக் கடவுள். காப்புக் கடவுள் திருமாலின் மகனாக, உந்திச் சுழியிற் பூத்த, முளரியிலமர்ந்தவன். கலைவாணியின் கணவன். தந்நாட்டை அறத்தோடும், அமைதியோடும் ஆண்டு வளமாக்கிப் பின் புதிய நாடுகளை வென்றும்,

படைத்தும் காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கி யும் ஆட்சி செய்வதோடு, கலைநிரம்பியதாகவும் தன்னாட்டை ஆக்குவது அரசனது கடமையாதலின் அறமும், ஆக்கமும், கலையும் நிறைந்த பிரமன் சோழர்களின் முன்னோரில் ஒருவனாகவே கூறப்பட்டுள்ளான்.

மேற்குறிக்கப் பெற்ற கல்வெட்டு முதலியவற்றின் சான்றுகளே இவனையும் குறிக்கின்றன.

3. மரீசி

பிரமனின் மகன். ஒழுக்க சீலமும் ஆற்றலும் நிரம்பியவன். அரசர்களுக்கு இன்றியமையாத ஒழுக்கசீலத்தினைக் குறித்து இவனும் குறிக்கப்பட்டுள்ளான். குறள் குறிக்கும்,

> ''அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
> மானம் உடைய தரசு''[2]

என்னும் இலக்கணத்தால், இவனும் அம்மரபுப் பட்டியலில் குறிக்கப் படுகின்றான்.

4. காசியபன்

மரீசியின் மகன். தெய்வீகத்தன்மை வாய்ந்தவன்.[3]

மேலே சுட்டப்பெற்ற செப்பேடுகள் முதலாயின யாவும் ஒரு சேர இந் நால்வரையும் இதே வரிசையில் காட்டுகின்றன. ஆனால் கீழே குறிக்கப்படும் கரந்தைச் செப்பேடுகள் முதலாயின இதனின்று மாறுபடுதல் கீழே காட்டப்படுகிறது.

5. சூரியன் (அல்லது) விவாசுவன் (அல்லது) விவாசுவ மனு

கரந்தைச் செப்பேடுகளின்படி சோழர் குடியின் முதல்வன் இவனேயாவன். இவன் பெயரால் சூரியகுலம் எனச் சோழர்குடி போற்றப் பெறுகின்றது. தங்கடமையில் வழுவாது, உலகுயிர்கள் அனைத்திற்கும் வாழ்வின் ஒளியாகி, இருண்மையினை அழித்து, உறுதியும், கடமையும், கருணையும், ஆற்றலும், நடுவுநிலைமையும் வாய்ந்த சூரியன் வழி வந்த சோழர்களின் ஆட்சியிலும் இவ்வியல்புகள் மிளிர்தலை இலக்கியச் சான்றுகளால் காணலாம்.[4]

கரந்தை, திருவாலங்காடு, ஆனைமங்கலம் ஆகிய செப்பேடு களும், குலோத்துங்க, இராசராச சோழனுலாக்களும் சூரியனையே முதல்வனாகக் கருதுகின்றன.

6. மனு

சூரியனின் மகன்.[5] இவனைக் குறித்துப் பல கதைகள் உண்டு. எல்லாக் கதைகளின் பொருளும் இவனை ஒரு நீதிமான் என்றே குறிப்பினவாம். தமிழ் வழக்கில்,

பசு ஒன்றின் கன்றினைக் கொன்றதற்காகத் தன் மகனைத் தானே தன் தேர்க்காலில் இட்டுக் கொன்றவனாகவே குறிக்கப்படுகின்றான். இவனைத் திருவாரூர்ச் சோழன் எனவும் மொழிப.

''ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்''

எனச் சிலப்பதிகாரமும்,[6] இவ்வாறே பெரியபுராணம் திருநகரச் சிறப்புப் பகுதியும்[7]

''மையல் கூர்
சிந்தனை யாவிற்த முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்''

என விக்கிரம சோழனுலாவும்,[8]

''அருக்கன் மகனாகி மனுமே தினிபுரந்
தரிய காதலனை யாவினது கன்று நிகரென்
றெவ்வ ருக்க மும்வி யப்பமுறை செய்த பரிசும்''

எனக் கலிங்கத்துப் பரணியும்,[9]

''ஆதித்தன் குலமுதல்வன் மனுவினை யாரறியாதார்?''

எனக் கம்பராமாயணமும்[10] இவனைக் குறிப்பிடுகின்றன.

மனுநீதிச் சோழனது வரலாறு தமிழகத்தில் பெருவழக்குப் பெற்றதாகும். எல்லாச் சான்றுகளும் இவனைக் குறிக்கின்றன.

7. இட்சுவாகு

மனுவின் மகன்.[11] மேற்கதை வழி இவனே தேர்க்காலில் தன் தந்தை மனுவால் கொல்லப்பட்டுப் பின்,

''விடை மருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள
அந்நிலேயே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியு முடனெழலும்''

என்பதால் உயிர்பெற்றவனாதல் வேண்டும்.[12]

கம்பராமாயணத்தில், அரங்கநாதரை அயோத்தியில் வணங்கியவன்.[13]

கடவுளரின் பகைவர் நடுக்குறுமாறு மூவுலகையும் மகிழ்வு நிரம்ப ஆற்றலோடு ஆண்டவன்.[14]

பாலநாட்டு ''கைக்கியர்'' எனும் அரச குடிக்கு இட்சுவாகுவே குடிமுதல்வனாவன்.[15]

இவனது காலம் ''கலிகால புராண காலம்'' என ''பார்கிதர்'' எனும் மேனாட்டறிஞர் புகல்வார்''.[16]

எல்லாச் சான்றுகளும் இவனைக் குறிக்கின்றன.

8. விகுக்சி (அல்லது) சசாதனன்

இட்சுவாகுவின் மகன்.[17] தந்தை கொணரச் செய்த முயல்களில் ஒன்றைத் தின்று அதனால் சாபமேற்றுச் ''சசாதனன்'' எனும் பெயர் பெற்றவன்.[18] அரசர்களை வென்று உலகினைச் சிறப்புடன் ஆட்சி செய்தவன்[19]

திருவாலங்காடு, சாராலம் செப்பேடுகளும்; கன்யாகுமரிக் கல்வெட்டும் கலிங்கத்துப்பரணியும் இவனைக் குறிக்கின்றன.

9. ககுத்தன் (அல்லது) புரஞ்சயன்

இந்திரனை எருதாக்கி (அல்லது களிறாக்கி) அதன் திமில் மீதமர்ந்து, அசுரரோடு பொருது அழித்துத் தேவர்க்கு உதவியவன். திருமாலின் அம்சம் நிறைந்தவன் என விஷ்ணு புராணம் புகல்வதையே[20] திருவாலங்காட்டுச் செப்பேடுகளும்[21] புகல்கின்றன.

''சக்கு வாயிரமு டைக்களிறு வாகனமெனத்
தானி ருந்துபொரு தானவரை வென்ற சயமும்''

எனக் கலிங்கத்துப் பரணியும்,[22]

''தான்றனக்கு வெலற்கரிய தானவரைத் தலைதுமித்தென்
வான்றரக்கிற் றிகொவிலன்று குறையிரப்ப வரங்கொடுத்தாங்
கேன்றெடுத்த சிலையினனா யிகல்புரிந்த விவர்குலத்தோர்
தோன்றலைப் பண்டிந்திரன்காண் விடையேறாச் சுமந்தோனும்''

எனக் கம்பராமாயணமும்,[23]

''பேராப் பெரும்பகை பேரப் பிறவேந்தர்
ஊராக் குலிச விடை யூர்ந்தோன்''

எனக் குலோத்துங்கசோழனுலாவும்[24] இக்கதையினையே புகல்கின்றன. சாராலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும் இவனைக் குறிப்பிடுகின்றன.

10. காக் சீவதன்

எதிர்ப்பில்லாது, கந்தர்வர்களால் புகழப்பட்டு, உலக முழுமையினையும் தண்ணளியோடு புரந்தவன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மட்டும் புகல்கின்றன. இவனைக் ககுத்தனின் மகனாகவே இச்செப்பேடு குறிக்கின்றது.[25] விஷ்ணுபுராணம் ககுத்தனின் மகனாகக் குறிக்கும் ''அனேனசு'' என்பான் இவனே போலும்.[26]

11. ஆரியமன்

போர்க்களமாகிய திருப்பாற்கடலைத் தமது புயமாகிய மந்தர மலையால் கடைந்து வெற்றியாகிய திருமகளைப் பெற்றவன்.[27]

12. அநலப்பிரதாபன்

எரியும் தீயொத்து மரமனைய தோள்களுடன் எதிரிகளை அழிப்பவன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளே இவனையும் புகல்கின்றன.[28]

13. வேனன்

''பிருது'' வம்சத்தில் ''அங்கன்'' என்பானுக்கும், ''சுநீதை'' என்பாளுக்கும் பிறந்தவன் இவன் என விஷ்ணுபுராணம் சுட்டும். இவன் ''துஷ்டன்'' எனவும் இப்புராணத்தில் குறிக்கப்படுகிறான்.[29]

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மட்டும் குறிப்பிடும் இவன் ''அரசருள் அரசன்'' எனப்படுகின்றான்.[30]

14. பிரீது

வேனனின் மகனாகக் குறிப்பிடுவதோடு, சிவபெருமானின் ''அசகவ'' எனும் வில்லை உடையவனாகவும் இவனை விஷ்ணு புராணம் குறிக்கின்றது.[31]

''தனது வில்லின் ஆற்றலால் மலைகளை உடைத்தவன்'' எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகழ்வதை[32] ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழனுலாவில்,

"தொல்லார் கலிவலையந் தோள்வலைய முன்றிருந்த
வில்லா னடுவுள்ள வெற்பெடுத்தோன்"

எனப் புகழ்ந்துள்ளார்.[33]

சாராலச் செப்பேடுகள், கன்யாகுமரிக் கல்வெட்டு ஆகியவை இவனைக் குறிப்பிடுகின்றன.

15. துந்துமாறன் (அல்லது) குவலாசுவன்

பேராற்றல் வாய்ந்த "துந்து" எனும் அரக்கனை அழித்து அரசாண்டவன். திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் "துந்துமாறன்" எனவும், கன்யாகுமரிக் கல்வெட்டால் "குவலாசுவன்" எனவும் வழங்கப்படுபவன் இவனே. இவனது ஆற்றலை விஷ்ணுபுராணம் குறிப்பதோடு, தனது 2100 மகன்களைக் கொண்டு "துந்துவோடு" போரிட்டு அவனை அழித்த செயலையும் குறிப்பிடுகின்றது.[34]

16. யுவனாசுவன்

துந்துமாறனின் மகனாகிய இவன் "உலகினை அரண்போலப் பாதுகாத்தவன்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளாற் புகழப் படுகின்றான்.[35] பிரீதுவின் பேரன் இவன் என்பதனை விஷ்ணுபுராணம் நான்காம் பகுதியில் காணலாகும்.[36]

17. மந்தாதா

யுவனாசுவனின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு பிறந்த இவன் இந்திரனது விரலையே முலையாக உண்டவன்.[37] சக்ரவாள கிரிவரை நான்முகனை ஒத்து நிலவுலகைக் காத்தவனாகக் கரந்தைச் செப்பேடுகள் புகழும்.[38] இவனை அறந்தழைக்க அரசாண்ட அரசனாகவே எல்லாச் சான்றுகளும் குறிக்கின்றன.

"ஒருது றைப்புனல்சி னப்புலியு மானுமுடனே
உண்ண வைத்தவுர வோன்"[39]

"புலிப்போத்துப் புல்வாயும் ஒருதுறையில் நீருண்ட
உலகாண்டோன் உளனொருவன்"[40]

"ஆடுதுறையி லடுபுலியும் புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும்"[41]

"புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த உலகாண்ட மாந்தாதா"[42]

"புக்க துறையில் பகைப்புலியும்
ஒக்க வொருகாலத் தூட்டினேன்"[43]

எனவும் இலக்கியங்களில் இவன் புகழப்படுகின்றான்.

18. முசுகுந்தன்

மாந்தாதாவின் மகன். எல்லாச் சான்றுகளும் இவனைக் குறிப்பிடுகின்றன. "காலியவனன்" எனும் அசுரனை அழித்து, முகுந்தனாகிய திருமாலை மகிழ்வித்தவன். இவ்விஷ்ணு புராணக் கருத்தினை தமிழிலக்கியங்களும் குறிக்கின்றன.

"முகுந்தனை ஒத்த திருத்தகவுடையவன்" என கரந்தைச் செப்பேடுகள் இவனைப் புகழ்கின்றன"[44]. அவ்வாறே திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் போற்றுகின்றன.

"பொன்னார மார்பிற் புனைகழற்கால் கிள்ளிபேர்
உண்ணேன் என்றாழுலக்கை பற்றினேற்-கென்னோ
மனனொடு வாயெலாம் மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்"

எனும் முத்தொள்ளாயிரச் செய்யுள் இவனைக் "கிள்ளி" எனவும் உறையூராகிய கோழியகத்தரசனெனவும் குறிப்பிடுகின்றது."[45]

"கடுவிசை யவுணர் கணங்கொண் டண்டி
கொடுவரி யூக்கத்துக் கோநகர் காத்து
தொடுகழல் மன்னற்குத் தொலைந்தன ராகி"

எனுஞ் சிலப்பதிகாரத் தொடர்களும்,[46]

"வானவரும் தானவரும் பொருமொரு நாளில்
அறமென்ன வொருதனியே திரிந்தமராபதி காத்தோன்"

எனுங் கம்பராமாயணத் தொடரும்,[47] இமயவர்களை இவன் காத்த தனைக் குறிப்பிடுகின்றன.

"பொருது றைத்தலைபு குந்துமுசு குந்த னிமையோர்
புரம டங்கலும் ரண்செய்துபு ரந்த புகழும்"

எனச் செயங்கொண்டாராலும்[48] ஒட்டக்கூத்தரால் மூவர் உலாவிலும்[49] சிறப்பிக்கப்படுகின்றான்.

இவன், "கண்ணனின் காலத்தவன்" என அபிதான சிந்தா மணிக் குறிப்புப் புகலுகின்றது.[50]

19. வல்லபன் (அல்லது) வளவன்

இம்மன்னன் 'வலபி' நகரை உருவாக்கியும், பேரரசு புரிந்தும் சிறந்தவன். இவனே "வளவர்" எனும் சோழர் மரபின் சிறப்புப் பெயர் முதல்வனாதல் வேண்டும்.

இவனை ஆனைமங்கலம், திருவாலங்காடு செப்பேடுகள் குறிக்கின்றன.

20. பிரிதுலாக்கன்

வளவனின் மகன். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி திருப்பாற்கடலை மந்தரமலையினைக் கொண்டு கடைந்து அமிழ்து தந்தவன் என திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன.[51] விஷ்ணு புராணம் இவனை மகாபலி மரபில் எட்டாவதாகக் குறிப்பிடுகின்றது.[52]

''கடல் கலக்கவெழு மின்னமுது தன்னை யொருவன்
கடவுள் வானவர்க ளுண்ண வருள்செய்த கதையும்''

எனக் கலிங்கத்துப் பரணியும்[53]

''குரைகடலை நெடுவரையாற் கடைந்தமுது கொடுத்தோனும்'' எனும் குலமுறை கிளத்துப் படலம் நான்காம் செய்யுளால் கம்பராமாயணமும் இவனைக் குறிக்கின்றன.[54]

21. பார்த்திவ சூடாமணி

பிரிதுலாக்கனின் மகன். தேவர்கட்குத் திருமால் அமிழ்து வழங்கியபோது, அசுரர்களை அழித்தவன், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் மட்டும் இவனைக் குறிப்பிடுகின்றன.

22. தீர்க்கபாகு

இவனும் திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் மட்டும் புகழப்படுகின்றான். இவனைக் குறிப்பிடும்போது முரணழகு தோன்ற ''ஆற்றலாகிய ஏரியினையும் கருணையாகிய மழையினையும் ஒருங்குடையவன்'' என இச்செப்பேடு குறிக்கின்றது.[55]

23. சந்ரசித்தன்

''அத்திரி'' எனும் முனிவரின் மகன். தேவர்களை வென்றதோடு பிருகஸ்பதியின் மனைவியை அபகரித்துக் கொண்ட சந்திரனை வென்றவன். சந்திரனை வென்ற புகழ் குறித்து ''சந்தரஜித்'' எனும் பெயர் பெற்றவன் என்கிறது விஷ்ணுபுராணம்.[56]

அன்பில் திருவாலங்காடு-செப்பேடுகள் இவனைக் குறிப்பிடுகின்றன.

24. சங்கிருதி

ஆற்றலும் அளியும் சான்ற இவ்வரசனை கிருதயுகத்தின் கடைசி யரசன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகல்கின்றன.[57]

25. பஞ்சபன்

உடலழகால் மன்மதனையும் பொலிவால் இந்திரனையும் வென்ற அரசன்.[58] ஐந்து யட்ச விருந்தினர்க்குத் தன் இரத்தக் குழாயினை அறுத்துக் குருதியை அவர்களின் தாகத்திற்கான விருந்தாக்கி மகிழ்வித்தான்.[59] இச்செய்தியை சாராலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும், குறிப்பிடுகின்றன. இச்செய்தியினடிப்படையாக விஷ்ணுபுராணம் அமைகின்றது.

26. சகரன்

''அறாநீர்த்
தரங்கக் கடலேழுந் தன்பெயரே யாகத்
துரங்கப் பசுநாடித் தொட்டோன்''

என இர்ாசர்ாச சோழனுலா புகழும் கடல்களைத் தோண்டியவன் இவனே.[60] ஆற்றல் மிக்க இவன் செய்த அசுவமேதயாகக் குதிரையினை, அசுரர் கீழுலகத்தே கபிலமுனிவர் சாபத்திற்குள்ளாகிய அவ்வறிவிலா மக்கள் பின் பகீரதன் கொணர்ந்த கங்கைநீர் பட்டு முத்தியடைந்தனர்.

பாரதக் கதையில் விளக்கப்படும் இவ்வரசனை சார்ாலச் செப்பேடுகளும் கன்யாகுமரிக் கல்வெட்டும் குறிக்கின்றன.

27. சத்திய விரதன் (அல்லது) உருத்திர சித்தன் (அல்லது) அரிச்சந்திரன்

தன் தந்தை சகரன் செய்த அசுவமேதயாகத்தில் குதிரையைக் காக்கப் போரிட்டு காசியரசனால் வெல்லப்பட்டவன்.[61]

எரியும் அம்புகளை எய்யும் உருத்திரனை வென்றவனாதலின் தேவர்களே இவனை ''ருத்ரஜித்'' என்றழைத்தனர் என்பர்.[62]

''சத்யவிரதன்'' எனும் பெயரைக் கண்டு சிந்திக்க அரிச்சந்திரன் காத்த வாய்மை புலப்படுகின்றது.

பதியிழந்தும், பாலனையிழந்தும், படைத்தநிதியிழந்தும் கௌசிக முனிவனின் வற்புறுத்தற்கும் ஒருப்படாது மனைவியையும் இழந்து, பெறக்கூடும் கதி இழக்கினும் ''கட்டுரை இழக்கிலேன்'' என்ற அரிச்சந்திரன் சத்யவிரதனாகக் காணப்படுதலையே,

"பூவிற் கிழத்தியையும் பூமிக் கிழத்தியையும்
நாவிற் பழுதஞ்சி நல்கினோன்"
என இராசராச சோழனுலா புகழும்.[63]

சாராலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும் இவனைக் குறிப்பிடுகின்றன.

28. உசீநரன்

ஒப்புயர்வற்ற "சிபி" யின் தந்தையாவன். சந்ரமரபினைச் சார்ந்தவன். அன்பிற் செப்பேடுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவனைக் குறிக்கின்றன.

29. சிபி

சோழர்குடி என்னும்போது "மனுநீதிச் சோழன்" "சிபிச் சக்கரவர்த்தி" எனுமிருவரையும் நீதிக்கும் தியாகத்திற்கும் கொள்ளுதல் தமிழ் வழக்காகும்.

உசீநரனின் மகனாக இவனைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் காட்டுகின்றன.[64] விஷ்ணுபுராணம் இக்குறிப்பிற்குரிய அடிப்படைக் கருத்தினை வெளிப்படுத்துகின்றது.[65]

புறவிற்காகத் தானே துலைபுக்கு முறை செய்த இச்சான்றோனை,

"உலகில் எக்காலத்தும் புகழ்ந்துபாடப்படும் புகழுடைய-சோழர்குடியின் மணிவிளக்கு" எனக் கரந்தைச் செப்பேடுகள் புகழுகின்றன.[66] கருணையும், தியாகமும், நீதியும் நிறைந்த இவனைச் செம்பியன் எனவும் மொழிப. இவன் முதற்கொண்டே சோழர் குடிக்குச் "செம்பியர்குடி" என்ற சிறப்புப் பெயர் தோற்றம் பெற்றது எனலாம்.

30. மருத்தன்

"பல ராஜசூய யாகங்களையும் அசுவமேத யாகங்களையும் செய்து சிறந்தவன்" எனக் கொண்டாடப்படும் இவனை "அவிஷித்து" என்பவனின் மகனாக "விஷ்ணுபுராணம்" குறிக்கின்றது.

பிற்காலத்தில் பாண்டவர்கள் யாகஞ் செய்வதற்குக் கொண்ட தங்கம் இவனால் வைத்துச் செல்லப்பட்ட எச்சமேயாகும் என் மார்க்கண்டேய புராணமும் பாரதமும் குறிப்பிடுகின்றன.[67]

திருவாலங்காட்டுச் செப்பேடுகளே இவனைக் குறிப்பிடுகின்றன.

31. துஷ்யந்தன்

காளிதாசனின் "சாகுந்தல" காவியத் தலைவன். சகுந்தலையினைக் கன்வ முனிவரின் ஆசிரமத்தே மணந்து மறந்தவன்.

இவனை "பூரு" வம்சத்தவன் என்கிறது விஷ்ணுபுராணம்.[68] இவனை, திருவாலங்காட்டுச் செப்பேடுகள்மட்டும் குறிக்கின்றன.

32. பரதன்

துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மகன். ஆற்றலுடன் இவன் ஆட்சி செய்தநாடு இவன் பெயரால் பரத கண்டம் எனப் பெயர் பெற்று, பாரதம் என மருவி வழங்கி வருகின்றதென்பர்.

33. ரிதுபரணன்

வீரராஜேந்திரனின் சாரலச் செப்பேடுகளும் கன்னியாகுமரிக் கல்வெட்டும் இவனைக் குறிக்கின்றன.

34. திலீபன்

"அவனி புறவாழி முட்டப் புரந்தோன்" என ஒட்டக்கூத்தரால் சிறப்பிக்கப்படும் பெருமை பெற்றவன்.[69]

"இந்திரனுடன் சரியாசனத்தில் அமர்ந்தவன்" என்பதாகச் சாராகச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் குலோத்துங்க சோழனுலாவும் புகழ்கின்றன.[70]

35. பகீரதன்

அருமையில் முயன்று அடையும் செயலைப் "பகீரதப் பிரயத் தனம்" எனக் குறிப்பிடும் வழக்கிற்குச் சான்றானவன். ஆகாச கங்கையினைப் பூமிக்குக் கொணர்ந்தவன் எனப் புராணங்கள் இவனைக் குறிக்கின்றன. கபிலமுனிவரின் சாபத்தில் சாம்பலாகிப் போன தனது முன்னோராகிய "சகர மைந்தர்களின் முத்திக்காகக் கடுந்தவம் புரிந்து பற்பல இடுக்கண்களைக் கடந்து ஆகாச கங்கையினை நிலவுலகிற் கொணர்ந்து முன்னோர்களைச் சாபத்தினின்றும் பிழைப்பித்தவன்.

இலக்கியங்கள் அனைத்தும் புகழும் இவனைச் சாரலச் செப் பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும், இராசராச சோழ னுலாக்களும் குறிப்பிடுகின்றன.

36. ரகு

இரகுவம்சம் எனும் இராமன் பிறந்த வம்சத்தின் பெயர் முதல்வ னாவன். தன் பெயர் தோற்றி, நிறுத்திய ஆண்டகை.

ஒட்டக்கூத்தரின், இராச ராச சோழனுலா, இவனைக் குறிக்கின்றது.[71]

37. தசரதன்

பத்துத் தேர்களில் வந்துற்ற பகைவரைத் தன் ஒரு தேர் கொண்டு வென்றவன் என ஒட்டக்கூத்தர் புகழ்வர்.[72]

"உயிரெலாம் உறைவதோர் உடல்" என இவனைக் கம்பர் பாராட்டுவர்.[73] அருமைக்கும் பெருமைக்கும் உரிய சோழர் குலத்தில் தசரதன் முதலியோரையும் வைத்து எண்ணுதல் சோழர் குடியின் மாண்பினைக் குறிக்குமெனக் கொள்ளலாகும்.

38. இராம லட்சுமண பரத சத்துருக்கன்னன்

சாராலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும் தசரத மக்களாகிய இந்நால்வரையும் இணைத்தே கூற, குலோத்துங்க சோழனுலாவும், இராசராச சோழனுலாவும் தசரதற்குப் பின் இராமனை மட்டும் குறிக்கின்றன.

"இராவணனின் பத்துத்தலைகளை வெட்டுவோன்" என குலோத்துங்க சோழனுலாவும்[74]

"அம்பினால் கடலை வற்றச் செய்தவன்"
என இராசராச சோழனுலாவும்[75] இராமனை மட்டும் குறிக்கின்றன.

39. சோழன்

இவன் முதலாகவே சோழர் குடி தனித்தன்மை பெற்று "சோழர்" எனும் பெயர் பெற்றதெனலாம்.

"அமராபதியினின்றும் சிறப்புற ஆட்சி செய்தவன்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகல்கின்றன.[76] இவனே "ஆரியத்தினின்றும் அந்தணக் குடும்பங்களைத் தென்னாடு அழைத்துப் போந்து, காடு கொன்று நாடாக்கியவன்" எனக் கன்யாகுமரிக் கல்வெட்டும், சாராலச் செப்பேடுகளும் புகழ்கின்றன.[77]

கரந்தைச் செப்பேடுகளோ இவனைக் "கலைகளின் இருப்பிடம்" என்கின்றன.[78]

அன்பில், ஆனைமங்கலம் - செப்பேடுகளாலும், கலிங்கத்துப் பரணியாலும், இவனே "சோழர்" எனும் குடிப்பெயர் முதல்வனாகப் படைக்கப் பட்டுள்ளான்.

40. இராஜகேசரி

சோழனின் மகன். அரசருள் அரசன். அரிமா ஒத்தவன். ஆற்றல் மிக்க இவன் பெயரையே பிற்காலச் சோழர் மட்டுமல்லாது இடைக்காலச்

சோழரும் பட்டப் பெயராகப் புனைந்து கொண்டனர் எனக், கரந்தைச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.

கலிங்கத்துப் பரணியோ, இவனை,

''சோழ மண்டல மமைந்தபிற கேழுலகையும்
இராச கேசரிபு ரந்துபர கேச ரிகளாம்
இருவ ராணைபுலி யானையென நின்ற புகழும்''

எனப் புகழ்கின்றது.[79]

41. பரகேசரி

இராசகேசரியின் மகன். சீற்றமும் ஆற்றலும் மிக்கோன். பகைப் படையை முறியடிப்பதிலேயே நோக்கமுடையவன்; எனக் கரந்தைச் செப்பேடுகள் குறிக்கும்.[80] இவன், பிற சான்றுகளாலும் குறிக்கப் படுகின்றான்.

இவனது பெயரையும் இவனது தந்தை பெயரையும் சோழர் அரியணையேற்கும் காலத்து மாறிமாறிப் புனைந்தாண்டனர். அதுவை இராசகேசரி, பரகேசரி என்னும் விருதுப்பெயர்களாக அமைந்தன.

இப்பெயர்கள் பட்டப் பெயர்கள்தாம் என்னும் அளவில் இன்றி, இருபேரரசர்களின் பெயர்கள் என்னும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும்.

42. சுரகுரு (அல்லது) மிருத்யுஜித் (அல்லது) நாபாகன் (அல்லது) இராசேந்திரன்

''காலன் தன் மக்களை அணுகாது காத்தவன்'' எனக் கரந்தைச் செப்பேடுகள் கூறுவதுடன்,[81] ஒட்டக்கூத்தர் வனை, ''முதுமக்கட்சாடி'' கண்டவன் எனக் கூறுகின்றார்.

''பதுமக் கடவுள் படைப்பு அடையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன்'' (கு.உலா.கண்.12)

இக்கருத்து வரலாற்றுச் சிறப்புடைத்து.[82] முதுமக்கள் சாடி, புதிய கற்காலத்தில் எழுந்ததென்பர். ஆதலின் சுரகுருவை புதிய கற்காலக் காலத்தவனாகக் கருத இடமுண்டு,

ஆனைமங்கலம், திருவாலங்காடு, கரந்தை-செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும், கலிங்கத்துப்பரணியும், விக்ரம சோழனுலாவும், குலோத்துங் சோழனுலாவும் இவனைக் குறிக்கின்றன.

43. வீரசேனன்

சாராலச் செப்பேடுகளும், கன்னியாகுமரிக் கல்வெட்டும் இவனைக் குறிக்கின்றன.

44. சித்ரரதன்

"அனுவம்சத்தவன்" இவன் என விஷ்ணுபுராணம் குறிப்பிடும்.[83]

ஆனால் பரகேசரியின் (41) மகனாகத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன.[84]

45. சித்ராசுவன்

சித்ரரதனின் மகன்.[85]

46. கவேரன் (அல்லது) சித்ரரதன்வன்

சித்ராசுவனின் மகன்.[86] அரசர்கட்கரசன். பகீரதனின் கதையைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே ஆகாய கங்கையை "காவேர கன்யகா" எனும் காவேரியாக அழைத்து வந்தவன்.[87] வானவர் நாடு எனப்படும் குடகுநாட்டில் உற்பத்தியாகும் காவேரி வெள்ளத்தைச் சில குன்றுகளைக் குடைந்தும், உடைத்துப் பிளவுபடுத்தியும், சோணாட்டிற்குக் காவிரியாகக் கொணர்வித்தவன் இவனேயாதல் வேண்டும்.

இவ்வரிய வரலாற்றுச் செய்தியினை, ஒட்டக்கூத்தர்,

"கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளும் திரைப்பொன்னி தந்தோனும்"[88] (வி.சோ.உலா. கண்.12)

"அலையெறியுங் காவேரி யாற்றுப் படைக்கு
மலையெறிவு மன்னர்க்கு மன்னர்"[89] (கு.சோ.உலா.கண்.15)

என்றெலாம் தமது உலா நூலுள் பாடுகின்றார்.

"காவிரிப் புனல் கொணர்ந்தவன்" எனக் கலிங்கத்துப் பரணியும் பாராட்டுகின்றது.[90] சங்கரசோழனுலாவும் இவனைக் குறிக்கின்றது. இக் குறிப்பை, மணிமேகலையுள்,

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாஅது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"

எனக் காணலாம்.[91]

47. வ்யாக்ரகேது அல்லது புலிகேசி

முதன் முதலாக புலி உருவத்தைக் கொடியிலும் அரச இலைச் சினைகளிலும் கொண்ட சோழன். ஆத்திமாலையினைத் தலையணியாகச் சூடிக் கொடுத்தவனும் இவனே என்கிறது திருவாலங்காட்டுச் செப்பேடுகள்.[92]

''போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெருந் தானையர்...''[93]

எனத் தொல்காப்பியம் குறிப்பதால் தொல்காப்பிய காலத்திற்கும் முன்னர் இவன் வாழ்ந்தவனாதல் வேண்டும்.

இம்மன்னனை, இந்திரனைக் காத்தவனாகக் கன்யாகுமரிக் கல்வெட்டு குறிப்பிடும். ஆனால் கலிங்கத்துப் பரணியோ இந்திரனையே புலியாகத் தன் கொடியில் பொறித்துக் கொண்டவன் என்பதனை,

''புலியெனக் கொடியிலிந்திரனை வைத்தவனும்''

எனுந் தொடர்களால் புகழ்கின்றது.[94]

ஆனைமங்கலம், திருவாலங்காடு, சாராலம்-செப்பேடுகளும் இவன் புகழ் பாடுகின்றன.

48. புட்பகேது (அல்லது) நரேந்திரபதி

இவனது பெயரமைப்பினால் ''புட்பக விமானம்'' எனும் வானவூர்தி கண்டவனாகவும் கருதலாகும். வியாக்ரகேதுவின் மகனாகிய இவனுடன் ''திரேதாயுகம்'' முடிந்தது எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன.[95]

வீரராசேந்திர சோழனின் சாராலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும் இவனைச் சுட்டுகின்றன.

49. கேதுமால்

• விஷ்ணுபுராணம் இவனைப் பிரசாபதியின் மகன் என்கிறது. மேற்சான்றுகளும் இவனைச் சுட்டுகின்றன.

50. சமுத்திரஜித் (அல்லது) சம்ஹர்ஷணன்

கலிங்கத்துப்பரணியின்,

''புணரியொன்றினிடை யொன்றுபுக விட்டவனும்''

எனும் தொடர்களாலும்[97] ஒட்டக்கூத்தரின்,

"மால்கடற் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடற் கீழ்கடற்கு விட்ட கோன்"[98] (கு. சோ. உலா. கண். 14)

"மேல்கடலில்
வீங்குநீர் கீழ்கடற்த விட்டோனும்"[99] (வி. சோ. உலா. கண்

எனுங் குறிப்புக்களாலும் சிறப்பிக்கப்படுபவன்.

தமிழகத்தின் மேல்கடலையும் கீழ்கடலையும் ஒன்றாக இணைப்பதற்கு இடையிட்ட நிலப்பரப்பை வெட்டி "பெருநீரிணைப்பு" எனும் "ஜலசந்தி" கண்டவன் என்பதே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இராமேசுவரத்திற்தும் இலங்கைக்கும் இடையே மிகக் குறுகிய நீண்ட நிலத்தொடர்ச்சி ஒன்றிருந்ததாக "சேது அணை" எனும் இராமாயணக் குறிப்புக்களைக் கொண்டு உய்த்துணர முடிகின்றது. இப்பெருநீரிணைப்பே இன்று "பாக் ஜலசந்தி" என்பர்.

மேல்கடலைக் கீழ்கடலோடு கலக்கச் செய்து கடல்வணிகத்திற்கு ஆக்கஞ் செய்தவன் இவனே போலும்.

சாராலச் செப்பேடுகளும், சங்கரசோழனுலாவும் இவனைக் குறிக்கின்றன. இரு கடலையும் இணைத்த இச்சோழனின் செயல் வரலாற்றில் புதுமை பெறுவதாகும்.

51. தொடித்தோட் செம்பியன் அல்லது நீர்முருத்தன்

இவனைக் கீழ்வரும் தமிழ்ச் சான்றுகள் குறிக்கின்றன.

"ஓங்கரணங் காத்த வுரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காணம்மானை
சோழன் புகார் நகரம் பாடேலோ ரம்மானை"

எனச் சிலம்பு குறிப்பிடுகின்றது.[100]

புறநானூற்றில் 39ஆவது செய்யுள்.

"ஒன்னா ருட்கும் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்"

என்கிறது.[101]

மணிமேகலை,

"ஓங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்"

எனவும்,[102]

பழமொழி,

"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால்"

எனவும் சிறப்பிக்கின்றன.[103]

சிறுபாணாற்றுப்படையில்,

"ஓங்கெயிற் கதவம் உருமுச்சுவல் சொறியுந்
தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை"

எனும் வரிகளும் இவ்வாறே புகழ்கின்றன.[104]

தேவர்கட்குப் பகையாக வானத்தே பறந்துகொண்டு தேவருலகை அழித்து வந்த அசுரர்களின் மூன்று உலோகக் கோட்டைகளை அழித்தவன் எனும் பொருள்படவே "தூங்கெயில் எறிந்தோன்" எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

ஆனால் கன்யாகுமரிக் கல்வெட்டோ "திரிபுராந்தகன்" எனப்படும் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுக்கு, அவ்வெரித்தற்குதவியனாதலின் "நிரிமுருதன்" எனும் பெயருடையோன் என இவனைச் சுட்டுகின்றது.[105]

52. உபரிசரவசு (அல்லது) வசு

கதிரவனை ஒத்தவனாகக் கரந்தைச் செப்பேடுகள் குறிப்பிடும்[106], இவனைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் "இந்திரன் அளித்த பளிங்குத்தேரில் விரைவாகச் செல்பவன்" எனக் குறிக்கின்றன.[107]

"...திரண்மணிச்
சுடர்வி மானமது வான்மிசைய யர்த்த வவனும்"

எனும் செயங்கொண்டாரின் கருத்தையே,[108]

ஒட்டக்கூத்தரும்,

"....நீடிய
மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்"

எனக் கூறுகின்றார்.[109]

இச்சான்றுகளைக் கொண்டு சிந்திக்கின், இவன் ஒருவகை வானவூர்தியாகிய பளிக்குத் தேரில் வான்மிசைப் பறந்தவன் எனுங் குறிப்பு பெறப்படுகின்றது.

53. விசுவஜித்

துவாபர யுகத்தின் கடைசியரசன் என்கிறது திருவாலங்காட்டுச் செப்பேடுகள்.[110]

'பூரு' வம்சத்தின் "அசாமீதனி"லிருந்து ஐந்தாவதாக இவனைப் பற்றி விஷ்ணுபுராணம் குறிக்கின்றது.[111]

54. பெருநற்கிள்ளி

பொறியியற் கலைகளில் தேர்ச்சியுடையவன் என்று இவனைப் பற்றிக் கூறும் திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் செய்தி, சிந்தனைக் குரியதாகும்.[112] விஞ்ஞான அறிவு வாய்க்கப் பெற்றவனாதலின் வான ஊர்திகளையும் படைத்துத் தந்தவனாதல் வேண்டும்.

விஞ்ஞான ஆற்றலால் "காலனொடு வழக்கிட்டு வென்றவன்" என்பதனை

"கால னுக்கிதுவ ழக்கெனவு ரைத்த வவனும்"

எனக் கலிங்கத்துப் பரணியும்.[113]

விக்ரமசோழனுலாவின்,

"கூற்றுக்குத் தேர வழக்குரைத்த செப்பியனும்"

எனுந் தொடர்களும்[114]

குலோத்துங்க சோழனுலாவின்,

"... ... கவ்வை

எழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற்ப

வழக்குரைக்கும் செங்கோல் வளவன்"

எனுந் தொடர்களும்குறிப்பிடுகின்றன.[115]

"காலனை வென்றவன்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகளாலும், சாரலச் செப்பேடுகளாலும் சிறப்பிக்கப் பெறுவது "மிருத்யுஜித்" எனப்படும் சுரகுருவையே குறிக்கும். காலனைப் போல்(தருமன்) நீதிசெலுத்தியவன் எனச் சிறப்பிக்கப்படும் பெருநற்கிள்ளியோ அக் குறிப்பினின்றும் வேறானவனாவன். சங்கர் சோழனுலாவும் பெருநற் கிள்ளியைக் குறிக்கிறது.

55. மனோரதன் (அல்லது) சென்னி

காற்றினும் கடுகி மனத்தினும் விரைந்து தேர் செலுத்தக் கூடிய "உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி" எனும் சங்ககாலச் சோழனை, சாரலச் செப்பேடுகளும், கன்யாகுமரிக் கல்வெட்டும், "மனோரதன்" என்ற பெயரால் குறிப்பிடுகின்றன. வீரராசேந்திரனின் இச்சாசனங்கள் கரிகாலனுக்கு முன்னோனாகவும் இவனைக் குறிப்பிடுகின்றன.

சுந்தரசோழனின் அன்பிற் செப்பேடுகளோ இவனை "சென்னி" என்ற பெயரோடும், "தேர் செலுத்தலில் வல்லவன்" எனுங் குறிப்போடும், கரிகாலனுக்கு முன்னோனாகவே குறிக்கின்றன. இவற்றை

ஒப்பிட்டு நோக்க, அன்பிற் செப்பேடுகள் ''சென்னி'' எனக் குறிப்பிட்டவனையே வீரராசேந்திரனின் சாசனங்கள் ''மனோரதன்'' என குறிப்பிட்டுள்ளன என்பது போதரும். இதனால் செப்பேடுகள், வடமொழியில் குறித்துச் செல்லும் பல சோழகுலத் தோன்றல்களின் வடமொழிப் பெயர்கள், இயற்பெயரைக் கூறாது, புகழ் குறித்த பெயர்களையே வடமொழியில் குறிப்பிடுகின்றன என்பது புலனாகின்றது. இவ்வழித் தொடரும் சோழ மரபு ஆய்வுகள் தமிழக வரலாற்றைச் செம்மை செய்யும் தகைமையன.

இம் ''மனோரதன்'' கரிகாற் பெருவளத்தானின் தந்தையாவன். புகார் நகரினின்றும் சோணாட்டை அரசோச்சியவன்.

இவனது சிறப்பினை,

''நீயே அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந் தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிலந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ''

எனப் புறநானூறுகுறிக்கும்.[116] கரிகாலனின் தந்தை இவனே யென்பதனை முடத்தாமக்கண்ணியார்.

''இன்மை தீர வந்தனென் வென்வே
லுருவப் பஃறே ரிளையோன் சிறுவன்''

எனப் பொருநராற்றுப்படையில் கூறுவர்.[117]

56. கரிகாலன்

வடக்கே இமயம்வரை படையெடுத்துச் சென்று ''புலிபொறித்து'' மீண்ட முதல் தமிழரசன். சோழர் குலத்தின் பெருமைக்கிருப்பிடம். காவிரிக்குக் கரைகண்டு சோணாட்டை வளநாடாக வளங்கொழிக்கச் செய்தவன்.

''மனத்தினும் கடியதாகிய சிறந்த விமானத்தில்
ஏறி வானவெளியில் இயங்கியவன்''

எனக் கரந்தைச் செப்பேடுகள் இவனதாற்றலைப் போற்றுகின்றன.[118]

அன்பிற் செப்பேடுகளொழிந்த அனைத்துச் சான்றுகளும் இவன் புகழ் பாடுகின்றன.

இவனை, காஞ்சி நகரைப் பொன்னகரமாக்கியோன் எனவும்,[119] ''பட்டினப்பாலை'' எனும் புகழ் நூல் கொண்டவன் எனவும்

''கருவிலே திருவுடையவன்'' எனவும் ''கலியுகத் தொடக்கத்தில் அரசாண்டவன்'' எனவும் வரலாற்றுச் சான்றுகள் குறிக்கின்றன.[120]

இவனது காலத்தை டாக்டர் இராசமாணிக்கனார் கி.மு. 60-20 என்பர்.[121]

வெண்ணிப் போரில் சேரபாண்டியரொடு வேளிர் ஒன்பதின்மரை வென்றவன்.

சிலம்பில்,

''வடவரைமேல் வாள்வேங்கை பொறித்தினன்றிக் கொட்குபி
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்''

எனும் வாழ்த்துக்காதைத் தொடர்களும்,[122]

பட்டினப்பாலையில்,

''அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற்
திருமா வளவன்''

எனுந் தொடர்களும்,[123]

''விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொரு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடையு நன்பகல் ஒழித்த''
''செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழ னிடை யாற்றன்ன''

என்னும் அகநானூற்றுப் பாடற் பகுதிகளும் இவனது ஆற்றலையும் ஆட்சியையும் குறிப்பிடுகின்றன.[124]

வடபுலத்தே ''ரேணாடு'' வரை இவன் செங்கோலோச்சியவனாதலின் ரேணாட்டரசரும் தம்மைக் ''கரிகாலன் வழிவந்தவர்கள்'' எனவும், ''சோழர்கள்'' எனவும் கூறிக் கொள்வர் என, பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் விளக்குவார்.[125]

57. கோச்செங்கணான்

''களவழி நாற்பது'' எனும் தமிழ்நூல் கொண்டு சேரமான் கணைக்காலிரும்பொறையினை விடுதலை செய்தவன். இதனை,

'மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்''

எனுந் தொடர்களால் ஒட்டக்கூத்தர் குறிப்பர்.[126]

சிறந்த சிவபத்தன். காவிரிக்கரையினிரு புறங்களிலும் பல சிவன் கோயில்களை எடுத்தவன். இதனைச் சேக்கிழார்,

''அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகனாடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந் தாளங்கள் பலசமைத்தார்''

எனப் புகல்வார்.[127]

முற்பிறப்பில் சிலந்தியாக இருந்து சிவபத்தியால் அரச உருப் பெற்றவன் என்பதனை,

''முறையிற் சிலம்பி தனைச்சோழர் குலத்துவந்து முன்னுதித்து
நிறையிற் புவனங் காத்தளிக்க அருள்செய் தருள நிலத்தின்கண்''

எனுமடிகளால் பெரியபுராணம் குறிக்கின்றது.[128]

திருஞானசம்பந்தரின் ''திருவானைக்கா'' பதிகத்தில்,

''செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா...''

என இவனது பெயர்குறித்த குறிப்பு உள்ளது.[129]

புறநானூற்றில் 74ஆவது செய்யுட் குறிப்புரையில்,

''சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன்
செங்கணானொடு திருப்போர்ப்புறத்துப் பொருது
பற்றுக் கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச்
சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது
பெயர்த்துப் பெற்றுக் கைக் கொண்டிருந்து
உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு''

எனவும்,[130]

அகநானூற்றில்,

''திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி''

எனவும், இவனைப் பற்றிய புகழுரைகள் காணப்படுகின்றன.[131]

அன்பில், ஆனைமங்கலம், திருவாலங்காடு-செப்பேடுகளும், கலிங்கத்துப்பரணியும், மூவருலாக்களும் சங்கர சோழனுலாவும் இவனைப் புகழுகின்றன.

58. கோக்கிள்ளி (அல்லது) கிள்ளிவளவல் II (அல்லது) நல்லடிக்கோன் (அல்லது) தூர்வர்க்கன்

இவனைக் கலிங்கத்துப்பரணி,

''தாளவ ழிக்குநகை வேல்விழிபி லத்தின் வழியே
தனிநடந்துரகர் தங்கண்மணி கொண்டவவனும்''

எனக் குறிக்கின்றது[132].

பிலத்துவழி நாகருலகம் சென்று, பீலிவளை எனும் நாக கன்னியை மணந்தவன். இவர்கட்குப் பிறந்த மகனை ஆதொண்டை மாலையினை அணிவித்து விடுத்தனர். அம்மகனே பின்னர் ''தொண்டைநாடு'' எனும் பல்லவ நாட்டைத் தோற்றுவித்தான் எனும் வரலாற்றுச் செய்திகளால் பல்லவர் யார்? எனுங்கேள்விக்கு விளக்கம் பெறப்படுகின்றது. இதனை நச்சினார்க்கினியர், பெரும் பாணாற்றுப்படையின் 30-37 வரிகளுக்கான உரையில், ''பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலும் நிறத்தையுடையவன், பின்னிடத்தோனாகிய சோழன் குடியிற் பிறந்தோன், அக்கடலின் திரைகொண்டுவந்து ஏறவிட்ட மரபாற் பல வேற்படையினையுடைய திரையனென்னும் பெயரையுடையவன், என்றதனால் நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தே நாகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து, அவள், யான் பெற்ற புதல்வனை என் செய்வேனென்ற பொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின்-அதற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் ரேவிடத் திரைதருதலின் ''திரையனென்று'' பெயர் பெற்ற கதை கூறினார்.[133]

அன்பில் ஆனைமங்கலம் செப்பேடுகளானும், மூவருலா, சங்கர சோழனுலா இவற்றாலும் இவன் பாராட்டப் பெறுகின்றான்.

59. வலிவன் (அல்லது) மணிமுடிச் சோழன்

அன்பில், சாராலப்-செப்பேடுகள், கன்யாகுமரிக் கல்வெட்டு ஆகியவைகளாற் குறிக்கப்படும் இவன், கோக்கிள்ளிக்கு அடுத்துக் கூறப்படுதலின் வேறு வளவன் என்பது போதரும்.

''வளவர்கோன் பாவை'' எனத் திருஞானசம்பந்தர் பாண்டியன் முடத்திடு மாறனின் மனைவி மங்கையர்க்கரசியைப் பாடுதலின்,

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாக இவனைக் கொள்ளலாகும்[134]. பெரியபுராணம் குறிப்பிடும் புகழ்ச் சோழரையும், அப்பரடிகள் பழையாறை வடதளியில் உண்ணாநோன்பு நோற்றகாலை, ஆதரவு செய்த சோழனையும் இவ்வளவனோடு பொருத்திப் பார்ப்பதும் நல்விடை பயக்கும் எனலாம்.[135]

60. சகதேவ மல்லன்

கன்யாகுமரிக் கல்வெட்டுக்கள் மட்டும் இவனைக் குறிக்கின்றன.

6 . வியாழ பயங்கரன்

சாரலச் செப்பேடுகளும் கன்யாகுமரிக் கல்வெட்டும் இவனைச் சுட்டுகின்றன.

பல்லவர்காலத்திய சிற்றரசருள் ஒருவனாகக் கருதலாகும்.

62. ஸ்ரீகந்தன்

அன்பிற் செப்பேடுகள் மட்டும் குறிப்பிடும் இவனை விசயாலயனின் தந்தை எனக் கருதப்படும் "குமராங்குசன்" என்பவனாகப் பெயர் ஒற்றுமை குறித்துக் கருதலாகும். இவனை வேலூர்ப் பாளையச் செப்பேடுகள் குறிப்பிடும் சிற்றரசச் சோழனாய்த் துணிய இடமுண்டு. இவனது காலம் தெள்ளாறெறிந்த நந்திவர்ம பல்லவனது காலமாகிய கி.பி. 831 ஆகும்.[136]

நந்திக் கலம்பகத்தின்,
"சேர சோழரும் தென்னரும் வடபுலத்தரசரும் திறைதந்த வீரமாமத கரியவை"
"செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து மாயச் செருவென்ற"

எனுந் தொடர்களால் நந்திவர்ம பல்லவனால் வெல்லப்பட்ட சோழனாயும் இவனைக் கருதக் கூடும்.[137]

இவ்வாறாக, திருமால் முதலாகத் தொடரும் சோழர் குலத் தொகுப்பில், வரிசை முறையாக மன்னர்களை அமைத்துக் காட்டியுள்ளமை, சோழர்குல ஆய்வுக்கமைந்த செப்பேடுகள், இலக்கியங்கள் ஆகியவற்றில் அமைந்த பெரும்பான்மை ஒற்றுமை கருதியேயாம்.

ஒவ்வொரு செப்பேட்டிலும் ஒவ்வொரு வகையாகக் கூறப்பெறும் மன்னர் வரிசைகள், முன்னுக்குப் பின்னாகவும், பின்னுக்கு முன்னாகவும், இருக்கக் கூடியனவாகவும் உள்ளன.

எடுத்துக்காட்டாக, இட்சுவாகுவிற்குப் பின் அவனது மகனாகவும், பெயரனாகவும் மாந்தாதா, முசுகுந்தன் ஆகியோர் கரந்தைச் செப்பேடுகளால் குறிக்கப் படுகின்றனர். அன்பிற் செப்பேடுகள் இவர்களைக் குறிக்காதே விடுகின்றன. ஆனைமங்கலச் செப்பேடுகள் கரந்தைச் செப்பேடுகளை அப்படியே ஒத்துள்ளன. திருவாலங்காட்டுச் செப்பேடுகளோ இட்சுவாகுவிற்குப் பின் விகுச்சி, புரஞ்சயன், காக்சிவதன், ஆர்யமன், அநலப் பிரதாபன், வேணன், பிரீது, துந்துமாறன், யுவனாசுவன் எனும் ஒன்பதின்மரைக் குறித்த நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மாந்தாதாவினையும் முசுகுந்தனையும் குறிக்கின்றது. சாராலச் செப்பேடுகளோ விகுக்சி, புரஞ்சயன், ககுத்தன், பிரீது, குவலாசுவன் எனும் ஐவர்க்குப்பின் இவர்களைக் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப்பரணி விகுக்சி, ககுத்தன், என்பார்க்குப்பின் அவ்வம்சத்தில் இவர்கள் இருவரும் பிறந்ததாகக் குறிக்கின்றது. விக்ரமசோழனுலா, மனுவிற்குப்பின் நேராக மாந்தாதாவினையும் அடுத்து உபரிசரனையும் அதற்கடுத்தே முசுகுந்தனையும் குறிக்கிறது, இதில் "இட்சுவாகு" விடுபட்டுள்ளான். குலோத்துங்க சோழனுலாவோ, ககுத்தனுக்கு அடுத்து முதலில் முசுகுந்தனைக் குறித்துப் பின் திலீபன், பெருநற்கிள்ளி, இருவரையும் குறித்த பின்னர், மாந்தாதாவைக் காட்டுகிறது. மாந்தாதா மட்டிலும் அரிச்சந்திரனைத் தொடர்ந்து இராசராச சோழனுலாவில் காட்டப்பட்டுள்ளான். ஒட்டக்கூத்தரால் படைக்கப்பட்ட மூவருலாக்களிலேயே இத்தகு முரண்பாடுகள் நிறைந்துள்ளமை அறியத்தக்கதாயுள்ளது. இதுபோன்றே வரிசைமுறை முரண்பாடுகள் நிரம்பியுள்ள சோழர் மரபு இயன்ற அளவில் பொருந்துமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

புராண கால, சங்ககால, இடைக்காலச் சோழர்களாகிய இவர்களை "முற்காலச் சோழர்" என்று வழங்கலாகும். இவர்களைப் பற்றிய சில குறிப்புக்களை மட்டும் வெளிப்படுத்தக்கூடிய சான்று மூலங்கள் இயன்ற அளவில் தரப்பட்டுள்ளன. அக்குறிப்புக்கள் அடிப்படையில் நோக்கும்போது புராணகாலத்தில்,

திருமால், பிரமன், மரீசி, காசியபன் ஆகிய நால்வரைச் சோழர் குலத் தெய்வங்களாயும், முனிவராயும், "சூரியனை"க் குல முதல்வனாகவும், மனு, இட்சுவாகு, விகுக்சி, ககுத்தன், காக்சீவதன் ஆரியமன், அநலப்பிரதாபன், வேணன், பிரீது, துந்துமாறன், யுவனாசுவன், மாந்தாதா, முசுகுந்தன், வளவன், பிரிதுலாக்கன், பார்த்திவசூடாமணி, தீர்க்கபாகு, சந்திரசித்தன், சங்கிருதி, பஞ்சபன், சகரன்,

அரிச்சந்திரன், உசீநரன், சிபி, மருத்தன், துஷ்யந்தன், பரதன், ரிதுபரணன், திலீபன், பகீரதன், ரகு, தசரதன், இராமலட்சுமண பரத சத்துருக்கன்னன்,

ஆகிய 38 அரசர்களையும் புராணகாலச் சோழராகவும் இச் சான்றுகளால் அறிய முடிகின்றது.

இவர்கள் பல்வேறு குலத்தினராயும், வடபுலத்தாராயும், இருப் பினும் சிறப்புக் கருதியே சோழர் மரபினராகப் புகலப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் சிறப்புப் பெயரைப் பெற்றுவிளங்கும் திறத்தால், இச்சான்றுகளில் மாறுபட்ட பெயரில் குறிப்பிடப்பட்டும், விடப்பட்டும் உள்ளனர் இவர்களின் சிறப்புச் செயல் குறித்த செய்தி யொற்று மையே இவர்களை வரிசைப்படுத்த உதவியுள்ளது.

அடுத்து இலக்கியக்கால, அல்லது சங்ககாலச் சோழர்களாக,

சோழன், இராசகேசரி, பரகேசரி, இராசேந்திரன், வீரசேனன், சித்ரரதன், சித்ராசுவன், சுவேரன், புலிகேசி, புட்பகேது, கேதுமால், சமுத்திரஜித், தொடித்தோட்செம்பியன், உபரி சரவசு, விசுவஜித், பெருநற்கிள்ளி, சென்னி, கரிகாலன், கோச்செங்கணான் எனும் 19 - அரசர்கள் விளங்குகின்றனர். இவர்களைக் குறித்த செய்திகள் மிகத் தெளிவான வரலாற் றுச் செய்திகளைப் பயப்பனவாயுள்ளன. இவர்களில் சிலர் பெயர்கள் வடமொழியில் குறிக்கப்பட்ட சிறப்புப் பெயர்களே யாம். ''மனோவேகமாக தேர் செலுத்துபவன்'' எனும் பொருள் பட இளஞ்சேட்சென்னியை ''மனோரதன்'' எனக் குறிப் பிடப்பட்டுள்ளமை ஈண்டும் நினைவுபடுத்தலாகும்,

இடைக்காலச் சோழர்களாக,

நல்லடிக்கோன், வளவன், சகதேவ மல்லன், வியாழபயங்கரன், ஸ்ரீகந்தன் எனும் 5- அரசர்களைக் காணலாம்.

இவர்களது வரலாற்றுடன் பெரியபுராணத்திலும், தேவாரப் பதிகங்களிலும், கூறப்பட்டுள்ள சோழர்களை இணைத்துப் பார்க்க ஓரளவிற்கு இடைக்காலச் சோழர் பற்றிய விளக்கம் அமையலாகும்.

இவ்வாறு புராண, இலக்கிய, இடைக்காலச் சோழராய்த் தொடர்ந்த இவ்வறுபத்திரண்டு அரசர்களையும், ''முற்காலச் சோழர் களாகக்'' கண்டபின், தெளிவான, வரலாற்றினை உடைய பிற்காலச் சோழர் பற்றிய விளக்கம் தொடர்கின்றது.

மேற்கோள் நூல்கள் :

1. திவ்வியப் பிரபந்தம், திருவாய்மொழி பதிகம் 34, பாடல் 8.
2. திருக்குறள், அதிகாரம் 39, குறள் 384.
3. அபி.சிந். ப. 399.
4. க. செ. பிரச்ஸ்தி, செய். 3.
5. விஷ்ணுபுராணம், பகுதி 4 : 1.
6. சிலப்பு, 20 : 54 - 56.
7. பெரியபுராணம் - திருநகரச் சிறப்பு.
8. வி. சோழன் உலா, கண்ணி 4.
9. க. பரணி, 8 : 10.
10 க. இராமா. குலமுறை, பாடல் 1.
11. வி.புராணம், பகுதி 4:1.
12. பெ.புரா.நகர், செய். 46,47.
13. க.இராமா. குலமுறை, பாடல் 2.
14. திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் செய்யுள் 5.
15. J.A.H.R.S. Vol. XII Part I, p.29.
16. "Purana Text of the Dynasties of Kali age", p.8.
17. வி.புராணம், பகுதி 4:6.
18. அ.ப. "
19. S.I.I. Vol III, No. 205.
20. வி.புராணம், பகுதி 4:6.
21. தி.செ.செய். 8.
22. க.பரணி 8 : 11.
23. க.இராமா. குலமுறை, செய்.3.
24. கு.சோழ.உலா. கண். 3.
25. தி.செ.செய். 9.
26. வி.புராணம், 4:7.
27. தி.செ.செய். 10.

28. தி.செ.செய். 11.

29. வி.புராணம், 4:7.

30. தி.செ.செய். 11.

31. வி.புராணம், 4:7.

32. தி.செ.செய். 12.

33. கு.சோழன் உலா, கண். 16.

34. வி.புராணம், 4:7.

35. தி.செ.செய். 15.

36 விஷ்ணுபுராணம், 4:7.

37. ,, 4:8.

38. கரந்தைச் செப்பேடுகள், செய்யுள் 3.

39. க. பரணி, 8:12.

40. க. ராமா. குலமுறை, செய். 5

41. வி. சோழ. உலா, கண். 5.

42. கு. சோழ. உலா கண். 7.

43. இரா.சோழ. உலா. கண். 5.

44. க. செ. செய்யுள், 4.

45. முத்தொள்ளாயிரம், சோழன் 43.

46. சிலப்பு, 6:7-9.

47. க. ராமா. குலமுறை, செய். 6.

48. க. பரணி, 8:12.

49. மூவருலா

50. அபி.சிந். 1326.

51. தி. செ. செய், 19.

52. வி. புராண. 4:59.

53. க. பரணி, 8:13.

54. க. ராமா. குலமுறை, செய். 4.

55. S.I.I. Vol III. No. 205.

56. வி. புராணம் 4 : 27.
57. தி. செ. செய். 23.
58. ,, 24.
59. ,,
60. இரா. சோழ. உலா, கண். 7.
61. தி. செ. செய். 25.
62. ,, 26.
63. இரா. சோழ. உலா, கண். 4
64. தி. செ. செய். 27.
65. வி. புராணம், 4 : 59.
66. க. செ. செய். 5.
67. அபி. சிந். ப. 1269.
68. வி. புராணம், 4 : 60.
69. இரா. சோழ. உலா, கண். 3.
70. கு. சோழ. உலா, கண். 5.
71. இரா. சோழ. உலா, கண். 9.
72. ,, 11.
73. க. ராமா.
74. கு. சோழ. உலா, கண். 10.
75. இரா. சோழ. உலா, கண். 12.
76. தி. செ. செய். 28.
77. கன். கல்.
78. க. செ. செய். 7.
79. க. பரணி, 8 : 14.
80. க. செ. செய். 8.
81. ,, 10.
82. கு. சோழ. உலா, கண். 12.
83. வி. புராணம், 4 : 59.

84. தி. செ செய். 33.

85. ,,

86. ,,

87. ,, 35.

88. வி.சோழஉலா, கண். 12.

89. கு.சோழ உலா, கண். 15.

90. க.பரணி, 8:15.

91. மணிமேகலை பதிகம், 9·12.

92. தி.செ.செய். 37.

93. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-புறத்திணையியல் நூற்பா 63.

94. க. பரணி, 8:16.

95. தி.செ.செய். 38.

96 வி.புராணம், ப 105.

97. க.பரணி, 8:16.

98. கு.சோழ. உலா, கண். 14.

99. கு.சோழ. உலா, கண். 9.

100. சிலப்பு 29 : அம்மானை 1.

101. புறநானூறு பாடல் 39, வரிகள் 5-6.

102. மணிமேகலை, 1:3-4.

103. பழமொழி பாடல், 155.

104. சிறுபாணாற்றுப்படை வரிகள், 80-81.

105. கன். கல்.

106. க.செ.செய். 12.

107. தி.செ.செய். 39.

108. க.பரணி 8:17.

109. வி.சோழ. உலா, கண். 11.

110. தி.செ.செய். 40.

111. வி.புராணம் 4.

112. தி.செ.செய்.

113. க.பரணி, 8 : 15.

114. வி.சோழ. உலா, கண். 7.

115. கு.சோழ. உலா, கண். 7.

116. புறம் பாடல் 4.

117. பொருநராற்றுப்படை, வரி 130-131.

118. தி. செ. செய். 13.

119, தி. செ. செய், 42.

120. S.I.I. Vol III, Part I, II, p.4.

121. இராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, ப. ; 10.

122. சிலம்பு 29:அம்மானை 2.

123. பட்டினப்பாலை

124. அகநானூறு-பாடல்கள் 125,141 (மணிமிடைபவளம்)

125. Colas, p 107, Footnote 1.

126. வி. சோழ. உலா, கண். 14.

127. பெ. புரா. கோச்செங்கர், பாடல் 14.

128, பெ. புரா. கோச்செங். பாடல். 6.

129. சம்பந்தர் தேவாரம், திருவானைக்காபதி. 5.

130. புறம், பாடல் 74.

131. அகம், பாடல் 44 (களிற்றியானைநிரை)

132. க. பரணி, 8:18.

133. பெரும்பாணாற்றுப்படை, வரி, 30-37, நச்சர் உரை உ.வே. சா, பதிப்பு, 1931.; ப.213.

134. சம்பந்தர் தேவாரம், திருவாலவாய் பாடல் 1.

135. பெ. புரா. திருநாவு. வரலாறு, பாடல் 299.

136. S.I.I. Vol II, No. 98.

137. நந்திக் கலம்பகம், பாடல்கள், 31, 86.

11

சோழர் மரபு விளக்கம் - பகுதி 2

இனி, பிற்காலச் சோழர் பற்றிய விளக்கத்தினைக் காணலாகும். இவற்றுள் முதன்மையான செயல்களே குறிக்கப்பட்டுள்ளன.

63. பரகேசரி விசயாலயன்

பிற்காலச் சோழர்களின் முதல்வன் பரகேசரி என்னும் பட்டம் புனைந்தவன். கி. பி. 846 -இல் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றி சோழப் பேரரசிற்கு வித்திட்டவன்.[1]

''குமராங்குசன்'' என்ற சோழ மன்னனுக்கு மகன்.[2] தஞ்சையில் ''நிசும்ப சூதனி'' எனுங் கொற்றவைக்குக் கோயில் எடுப்பித்தவன்.[3]

> ''எண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
> புண்கொண்ட வென்றிப் புரவலன்''

என ஒட்டக்கூத்தரால் சிறப்பிக்கப்பட்டவன்.[4]

மாறவர்மன் பரசக்கர கோலாகலனால் கி. பி. 854ல் குடமூக்குப் போரில் வெல்லப்பட்ட சோழன் இவனே.[5]

அரிசிலாற்றங்கரைப் போரில் பாண்டியனைப் பல்லவ நிருபதுங்கவர்மனொடு சேர்ந்துகொண்டு வெற்றி கண்டவன்.[6]

புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் ''விஜயாலய சோழீச்சரம்'' எனும் கோயிலெடுத்தவன்.

தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டுக்கள் இவன் பெயரால் ''விஜயாலய சதுர்வேதி மங்கலம்'' என்ற பிரமதேயம் விளங்கியதனைக் குறிப்பிடுகின்றன.[8]

இவனைப் பற்றிக் கரந்தைச் செப்பேடுகள்,

''கடல்சூழ்ந்த இவ்வுலகைக் குன்றாத பெருவலியுடன் புரந்தவன்'' (செய் 14) எனக் குறிப்பிடுகின்றன.

64. இராசகேசரி முதல் ஆதித்தன்

விசயாலயனின் மகன். கி.பி. 880ல் திருப்புறம்பியப் போரில் வரகுண பாண்டியனை வென்றுயர்ந்தவன்.[9] கி.பி. 891ல் அபராசித பல்லவனை யானைமீது பாய்ந்து இவன் கொன்றதாகக் கன்னியாகுமரிக் கல்வெட்டு புகலுகின்றது.[10] ஆதலின் "தொண்டை பரவிய சோழன்" எனும் சிறப்புப் பெயர் பெற்றவன்.[11] கொங்குநாட்டைக் கைப்பற்றி பிரமதேயங்களாக வழங்கியவன்.[12]

"சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பலருக்கு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்"

எனத் திருவேங்கடத் திருவந்தாதி குறிப்பிடும்.[13] இவனை

"எண்ணற்ற இரத்தினங்களின் குவியல்களுக்கு
ஒரே இருப்பிடமானவனும் வள்ளன்மை நிறைந்தவனும்"

எனக் கரந்தைச் செப்பேடுகள் புகழ்கின்றன."[14]

இளங்கோப் பிச்சி, திருபுவன மாதேவி, வயிரியக்கன் எனும் மனைவியருடையவன். பராந்தகன், கன்னரதேவன் எனும் இருமக்கள் இவனுக்குண்டு.[15] கி.பி. 907ல் சித்தூர் மாவட்டத்தில் திருக்காளத்திக்கு அண்மையில் தொண்டைமான் பேராற்றூரில் இவன் இறந்தான்.[16]

65. பரகேசரி முதற் பராந்தகன் (அல்லது) வீரநாராயணன் (அல்லது) மதுராந்தகன்

முதலாதித்தனின் மகன். மிகச் சிறந்த வீரன். கி.பி. 907 முதல் 953 வரை அரசோச்சியவன். ஆறு செய்யுட்களால் கரந்தைச் செப்பேடுகளும், நான்கு செய்யுட்களால் திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இவனைப் புகழ்கின்றன.

"சூரியவம்சத்திற்குத் திருவிளக்குப் போன்ற அவ்வரசன் புலியூரில் தன் தோள்வலிமையால் எல்லாத் திசைகளையும் வென்று அங்கிருந்தும் கொண்டுவரப்பட்ட மாசற்ற பொற்குவியல்களினால் பிறை சூடிய இறைவன் கோயிலை வேய்ந்தனன்"

எனக் கரந்தைச் செப்பேடுகள் புகல்வதை[17] திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் குறிக்கின்றன. இதனை தரட்சித்திறத்தால் சோழப் பேரரசு விரிவுற்று வளமுற்றது. வீரத்தால் நாட்டைப் பெருக்கியதோடு, ஆறுகளையும், குளங்களையும், ஏரிகளையும் தோண்டுவித்து வளத்தைப் பெருக்கியும் இவன் சோணாட்டினை ஆண்ட சிறப்பினை, கரந்தைச் செப்பேடுகளே விளக்குகின்றன.[18]

மதுரையினை எரிகொளுவி அழித்து "மதுராந்தகன் எனும் பெயர்" பெற்றவன் இவனேயாவன்.[19]

வெள்ளூர் எனுமூரில் ஈழபாண்டியரை வென்றான்.[20] இவன்பால் தோல்வியுற்ற இராசசிம்ம பாண்டியன் இலங்கை சென்று நான்காம் தப்புலன்பால், தங்குலதனமாகிய சுந்தர முடியினையும், இந்திரனாரத் தினையும் அடைக்கலப்படுத்திப் பின் சேரனாடு சென்றான். அவற்றைக் கைப்பற்ற ஈழத்தின்மீது பராந்தகன் படையெடுத்து ஈழத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றினான். அதுபோது இலங்கையை ஆண்ட "நான் காம் உதயன்" ரோகணநாட்டிற்குச் சென்றான் என்கிறது மகா வம்சம்.[21] இவ்வெற்றியைக் கலிங்கத்துப்பரணி,

"ஈழமுந் தமிழ்க் கூடலுஞ்சிதைத் திகல்கடந்த தோர்
இசை பரந்ததும்"

எனப் புகழும்.[22]

இவ்வெற்றிகளை மூவருலாக்களும் விளக்குகின்றன. கேரளத் தையும் வென்ற இவன்

"பல்லவன் ஒருவனையும் வென்றான்"

எனுங் கரந்தைச் செப்பேட்டுக் குறிப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது.[23] முதலாதித்தன் அபராசித பல்லவனைக் கொன்றபின், பல்லவ மரபு அழிந்தது. பராந்தகனால் அழிக்கப்பட்ட பல்லவன் நிருபதுங்க வர்ம னாகவோ அன்றிக் கம்பவர்மனாகவோ இருக்கலாமென வரலாற்றாய் வாளர் கருதுகின்றனர்.[24]

பாணருடனும், வைதும்பருடனும், சீட்புலி நாட்டோருடனும் பொருதுவென்றான். மூன்றாம் கிருஷ்ணன் எனும் மேலைச் சளுக் கியனால் தோற்கடிக்கப் பட்டான்.[25]

இவனுக்குப் பல மனைவியருண்டு. இராசாதித்தன், கண்டரா தித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி எனும் மக்களையும் வீரமாதேவி, அநுபமா எனும் பெண்மக்களையும் உடையவன்.[26] கி.பி. 955இல் இவன் காலஞ்சென்றிருத்தல் வேண்டும் என்பர் நீலகண்ட சாத்திரி யார்.[27]

66. இராசாதித்தன்

முதற் பராந்தகனின் முதல் மகன். இளவரசனாக இருந்த போதே, தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே இறந்தவன். கி.பி. 949-50இல் தக்கோலத்தில் நடந்த போரில் மூன்றாங் கிருஷ்ண

னுக்கு உதவிய பாணநாட்டரசன் இரண்டாம் பூதுகன் எய்த அம்பால், ஆனைமீதமர்ந்த நிலையிலேயே உயிர் துறந்தவன் என ஆதகூர்க் கல்வெட்டு புகல்கிறது.[28] இவனை,

''ஆனைமேற் துஞ்சிய தேவர்''

எனச் சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் வழங்குகின்றன. இப் போரில் சோழர் தோற்பினும், திருவாலங்காட்டுச் செப்பேடுகள்,

''மூன்றாம் கிருஷ்ணனை வென்று பின் இராசாதித்தன் இறந்தான்'' என்கிறது.[29]

ஆனைமங்கலச் செப்பேடும் இவனைக் குறிக்கின்றது கரந்தைச் செப்பேடுகளில் இவனைப் பற்றிய குறிப்பிலது.

67. இராசகேசரி கண்டராதித்தன்

செம்பியன் மாதேவியின் கணவனும், இராசாதித்தனின் இளவலும் ஆவன். கி.பி. 950 முதல் 956 வரை சோணாட்டை ஆட்சி புரிந்தவன். தன் பெயரில் ''கண்டராதித்த சதுர்வேதி மங்கலம்' எனும் ஊரை அமைத்தவன் என ஆனைமங்கலச் செப்பேடுகள் புகல்கின்றன.[30]

''மேற்கெழுந்தருளிய தேவர்'' எனக் குறிக்கப் படுபவன் இவனே.[31] இவனிறப்புக்குப் பின்னும் இவனது இரண்டாம் மனைவி செம்பியன் மாதேவியார், முதல் இராசராசனின் ஆட்சியில் கி. பி. 1001 வரை அரசியல் செல்வாக்கோடு உயிர் வாழ்ந்திருக்கின்றார்.[32] இவரது மகனே உத்தமசோழனாவான். கரந்தைச் செப்பேடுகளில் இவனைப் பற்றிய குறிப்பிலது.

68. பரகேசரி அரிஞ்சயன் (அல்லது) அரிந்தமன்

முதற் பராந்தகனின் மூன்றாம் மகன். கரந்தைச் செப்பேடு களைப் போன்றே, அன்பிற் செப்பேடுகளும் பராந்தகனுக்கு அடுத்து இவனையே குறிக்கின்றன.

கி.பி. 956-957இல் கண்டராதித்தன், ''மேற்கெழுந்தருளிய'' பின்னர் சோணாட்டை ஆட்சி செய்தவன்.[33] வட ஆற்காட்டு மாவட்ட ஆற்றூரில் துஞ்சியவன். ஆதலின் ''ஆற்றூர்த்துஞ்சினதேவர்'' எனக் குறிப்பிடப்படுபவன்.[34]

69. இராசகேசரி இரண்டாம் பரந்தகன் (அல்லது) சுந்தரசோழன்

அரிஞ்சயனின் மகன். ''பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள்'' எனப் புகழப்படுபவன்.[35] வீரபாண்டியனொடு இவன்

நிகழ்த்திய போர் நிகழ்ச்சி கரந்தைச் செப்பேடுகளில் இரண்டு செய்யுட்களால் அழகுற விளக்கப்பட்டுள்ளது.

> ''சேவூர் எனும் நகரத்தில் தனது அழகிய வில்லினின்றும் விடப்பட்ட கூர்மையான அம்புக்குவியலால் திக்குகளில் இடைவெளி இல்லாமல் செய்தவனும் கூர்மையான வாளாயுதத்தால் பிளக்கப்பட்ட மலைபோன்ற பகைவர்களின் யானைகளினின்றும் இழிந்தோடும் பலவகையான இரத்த ஆறுகளைத் தோற்றுவித்தவனும் (செய். 24)
>
> பகைவர்களின் கூட்டங்களை வாள்முனையினால் போக்கியவனுமான அவன் மிக்க சீற்றமுடைய வீரபாண்டியனை வீரத்தால் வென்று தன் புகழை ''ஸஹ்யம்'' எனும் மலையினது உயர்ந்த சிகரத்திலும் தேவருலகத்திலும் ஏற்றினான்'' (செய். 25)

எனும் செப்பேட்டுப் பகுதிகள்; ஆனைமங்கலச் செப்பேட்டுச் செய்யுட்களை அப்படியே ஒத்துள்ளன.[36] இச் சேவூர்ப் போரினைத் தொடர்ந்து கி. பி. 966இல் நடந்த மற்றொரு போரிலேயே இவனது மூத்த மகன், ஆதித்தகரிகாலன், ''வீரபாண்டியனின் தலை கொண்டு'' பாண்டிநாட்டை முழுதுமாகக் கைப்பற்றியுள்ளான்.

சுந்தரசோழனால் அனுப்பப்பட்ட ''கொடும்பாளூர்ச் சிறிய வேளான்'' ஈழத்தில் நான்காம் மகிந்தனுடன் பொருது இறந்தான். 'சேனா'' எனும் இலங்கைத் தளபதி இதனால் தமிழரை வென்றதாக ''வெசகிரி'' கல்வெட்டு கூறுகின்றது.[37] மகாவம்சமும் இதனை உறுதி செய்கின்றது.

ஆதித்த கரிகாலனும், அருண்மொழிவர்மனும், குந்தவை தேவியும் இவன் மக்களாவர்.

தனது மூத்த மகன் ஆதித்த கரிகாலன் கொலைப்பட்டமையால் மனமுடைந்து செயலிழந்த நிலையில், உத்தமசோழன் வாரிசான சூழலையும் உளங்கொண்டு காஞ்சியில் பொன்மாளிகையில் துஞ்சியவனாதல் வேண்டும் என நீலகண்ட சாத்திரியார் குறிப்பர்.[38]

அறிஞர் வெங்கையா, இப் ''பொன்மாளிகை'' என்பதனை ''தில்லைக் கனக சபை'' எனவே குறிப்பர்.[39]

70. ஆதித்த கரிகாலன் (பரகேசரி)

சுந்தரசோழனின் முதல் மகன், பெருவீரன். ''யானையொடு விளையாடும் சிங்கக் குருளைபோல' இவன் வீரபாண்டியனொடு பொருதான் எனவும், (செய். 67)

"தலைநகரில் வெற்றித் தூணில் வீரபாண்டியனின் தலையைச் செருகிய பெருமை வாய்ந்த இவன் சொர்க்கத்தைக் காணச் செல்பவன் போலக் காணாமற் போனான்" (செய். 68)

எனவும் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கின்றன.[40]

சோணாட்டின் வடபகுதியில் சுந்தரசோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டின் போதே, உத்தமசோழன் அரசுபெற ஆதரவு திரட்டியுள்ளான்.[41] ஆதலின் உள்நாட்டுக் கலகங்கள் எழுந்தன போலும். அவற்றை அடக்கி அமைதிப்படுத்த ஆதித்த கரிகாலனை தொண்டைநாட்டுப் பகுதியின் தலைவனாக சுந்தரசோழன் அமைத்துள்ளான். அதனாலேயே சுமார் 16 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த ஆதித்த கரிகாலன் இளவரச நிலையிலேயே குறுநிலத் தலைவனாக இருந்தமைக்கு கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன.[42]

இவன் "காணாமற்போனான்" எனத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் குறிக்கும் செய்தி, "இவன் கொலைப்பட்டான்" என்பதனை முதல் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டில் எழுந்த உடையார் குடிக் கல்வெட்டால் அறியலாகும்.

"வீரபாண்டியனை தலைக்கொண்ட ஆதித்த
கரிகாலனைக் கொன்று துரோகிகளான"

என அக்கல்வெட்டு அக்கொலையாளிகளைக் குறிக்கின்றது.[43] அக் கொலையாளிகள் அந்தணர்களாவர். "இக்கொலையில் உத்தமசோழனுக்கும் பங்கு உண்டு" என்பதனை நீலகண்ட சாத்திரியார் தம் நூலில் பல இடங்களில் குறிக்கின்றார்.[44]

இவனைப் பற்றிய குறிப்பு கரந்தைச் செப்பேட்டில் இல்லை.

71. பரகேசரி உத்தமசோழன்

கல்வெட்டுகளில் "ஸ்ரீஉத்தமசோழதேவரைத் திருவயிறு வாய்த்த ஸ்ரீசெம்பியன் மாதேவியார்"[45] எனவும், "ஸ்ரீஉத்தமசோழதேவர் தங்களாச்சியார் ஸ்ரீபராந்தகன் மாதேவடிகளாரான ஸ்ரீசெம்பியன் மாதேவியார்" எனவும்[46] குறிக்கப்படும் அரசன் இவனேயாவன்.

இராசகேசரி கண்டராதித்தன் "மேற்கெழுந்தருளிய" காலத்து, இவன் அரசுக்குரிய பருவத்தனல்லன் என்பர் பண்டாரத்தார்.[47] பரகேசரி ஆதித்த கரிகாலனின் இடத்தில் ஆட்சி புரிந்தவனாதலின் பரகேசரி பட்டம் பெற்றானேயொழிய கண்டராதித்தனுக்கடுத்த பரி

கேசரி பட்டம் பெற்றானில்லை என்பர் சாத்திரியார்.[48] சிறந்த சமயத் தொண்டுகளை இவன் தாயும் இவனும் செய்துள்ளனர். சோழர் கல்வெட்டுக்களிலேயே புதுமையான செய்தியமைப்பினைக் கொண்ட கல்வெட்டுக்கள் இவன் காலத்தனவாயுள்ளன. அவற்றுள்,

''ஸ்வஸ்திஸ்ரீ கண்டராதித்த தேவர் தேவியார் மாதேவரடிகளான ஸ்ரீ செம்பியன் மாதேவியார்,

தம்முடைய திருமகனார் ஸ்ரீமதுராந்தக தேவரான ஸ்ரீ உத்தம சோழர் திருராஜ்யசெய்த

ருளா நிற்கத் தம்முடையார் ஸ்ரீகண்டராதித்த தேவர் திருநாமத்தால் திருநல்லமுடையாருக்கு

த்திருக்கற்றளி எழுத்தருளிவித்து இத்திருக்களிற்றளியிலேயே திருநல்லமுடையாரைத் திருவடித்தெ

ாழுகின்றாராக எழுந்தருளிவித்த ஸ்ரீகண்டராதித்த தேவரிவர்'' என்பதொன்றாகும்.[49]

இவனைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்,

> ''நிலைத்த குருட்டு இருட்டினைப் படைத்த பெருவலியுடைய கலியினை அழித்து அரசாட்சி ஏற்க வேண்டப்பட்ட போதும் அரசியல் நடவடிக்கைகளை நன்குணர்ந்தவனாதலின் அருண்மொழிவர்மன் அரசேற்பதனை மனத்திலும் சிந்தியாதிருந்த போது அவனது சிற்றப்பன் (மதுராந்தகன்) அவ்வரசினை ஆவலோடு எடுத்துக் கொண்டான்''

என்கிறது.[50]

16 ஆண்டுகள் ஆட்சிசெய்த இவன் இறுதியில் மக்களின் ஒருமித்த எண்ணத்திற்'கேற்ப ''திருமாலின் பொலிவுடைய'' இராசராசனையே வாரிசாக்கிச் சென்றனன். சமயத் தொண்டுகளில் சிறந்த இவன் ''அந்தணர்க்குச் செல்வத்தை வழங்கியே உலகைப் பெற்றவன்'' என்பன போலும் சிறப்புரைகள் இவனுக்குரியனவாயுள்ளன.[51]

இவனைக் கரந்தைச் செப்பேடுகள் குறிப்பிடவில்லை.

72. இராசகேசரி முதல் இராசராசன் (அல்லது) அருண்மொழி வர்மன்

திருமாலுக்குரிய சங்கு, சக்கரக் குறிகளோடு கூடிய உடல் படைத்தவன்.[52] சோழப் பேரரசின் தலையாய பொற்காலம் இவன்

காலமே எனலாம். பெரு வெற்றியாளன். மெய்க்கீர்த்திகளின் தோற்றம் இவனது கல்வெட்டுக்களாலேயே காணப்படுகின்றது. காந்தளூர்ச்சாலை முதல் ''செழியரைத்தேசுகொள்'' அளவிற்கு இவன் பெற்ற வெற்றிகள் மிகச் சிறந்தன. அவற்றுள் புதுவிளக்கங்காணும் சிலவே கரந்தைச் செய்திவழி இவன் கூறப்பட்டுள்ளன.

1. மேலைச்சளுக்கியப் போர்

கி.பி. 1000 முதல் 1015க்குள் சோழர்களுக்கும், மேலைச் சளுக்கியருக்கும் நடந்த போர் பற்றிய தெளிவான செய்தி இதுகாறும் உறுதிசெய்யப்பெறவில்லை. சாத்திரியாரும், பண்டாரத்தாரும், இராசராசனது ஆட்சிக்காலத்தில் மேலைச்சளுக்கிய மன்னன் ''இரவிபெதங்க சத்தியாசிரியனு''டன் போரிட்டவன், முதல் இராசேந்திரசோழனே யாவன் என்பதனை, ஹொரட்டூர்க் கல்வெட்டினைக் கொண்டு நிறுவுகின்றனர்.[53] இப்போரினைப் பற்றிய தெளிவான விளக்கத்தினை ''கரந்தைச் செப்பேடுகள்'' தருகின்றன. இராசராசனே சத்தியாசிரியனுடன் நேருக்கு நேர் போரிட்டு வெற்றி பெற்ற நிகழ்ச்சியை இச்செப்பேடுகள் குறிப்பது அறியத்தக்கதாகும். இராசேந்திர சோழனும் அடுத்து மேலைச் சாளுக்கியரோடு போரிட்டுள்ளான். 15 ஆண்டுகளுக்குள் சோழர்கள் மேலைச்சளுக்கியரோடு மும்முறை போரிட்டுள்ளனர் ,எனும் விளக்கத்தை இனிக் காணலாம்.

முதற்போர்

''ஹொரட்டூர்'' கல்வெட்டு மேலைச்சளுக்கிய சத்தியாசிரியனின் கல்வெட்டாகும். இதன் காலம் கி.பி. 1007 ஆகும்.[54] தைலன் IIன் மூத்த மகனாகிய இரிவிபெதங்க சத்தியாசிரியன் கி.பி. 997 முதல் ஆட்சி செய்தவனாவன்.[55]

இக்கல்வெட்டு, 9,00,000 படைவீரர்களோடு சளுக்கிய நாடு புகுந்து நாடு முழுதையும் எரித்தும், அழித்தும், கொள்ளையிட்டும் பெண்கள், குழந்தைகள் அந்தணர்களையும் கொலைசெய்தும், பெண்களைக் கற்பழித்தும் சூறையிட்ட ''நூர்மடிச் சோழன்'' என்பவனைத் தடுத்துத் தெற்கே விரட்டியடித்தவன் என்று, சத்தியாசிரியனின் வீரத்தைப் புகழ்கிறது.[56] எனவே இப்படையெடுப்பு கி.பி 1007க்கு முன்னர் கி.பி. 1005 அல்லது 1006 ல் நிகழ்ந்ததாகும்.

இரண்டாம் போர்

இராசேந்திரன் இளைஞனாயினும் தன் தந்தையின் படையினை நடாத்தித் தந்தைக்காகப் பல போர்க்களங்களில் வென்றவன். அவனே

சத்தியாசிரியனை இரத்த ஆறுகள் சூழ்ந்த போர் முனையினின்றும் ஒரே நொடியில் ஓடச்செய்து, அவனது தோள்வலியால், ஈட்டப்பட்ட மதம் பொருந்திய யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், பெண்கள், குடைத்தொகுதிகள், கொடிகள், இவை யாவற்றையும் பறித்துக் கொண்டான்''.

எனச் சத்தியாசிரியனை இராசராசன், போர்க்களத்தே நேரில் புறங் கண்டதையும் இச்செய்தி அழகுறப் புலனாக்குகின்றது.[60]

ஆயினும் மேலைச்சளுக்கிய நாட்டை அவனால் முழுமையாக வெற்றி கொள்ள முடியவில்லை என்பதனை, பிற செய்திகளால் அறிய முடிகின்றது. சத்தியாசிரியன் புறங்கொடுத்தானேயொழிய அழிய வில்லை என்பதே இதன் உட்பொருளாகும்.

இவ்விரண்டாம் போர் கி.பி. 1009ல் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பதனைத் தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டுக்களைக்கொண்டு உறுதி செய்யலாகும்.

> ''சத்தியாசிரியனை எறிந்து எழுந்தருளி வந்து
> ஸ்ரீபாத புஷ்பங்களாக அட்டித் திருவடி தொழுதன''

எனுங் கல்வெட்டுத் தொடர்கள் கி.பி. 1010க்குரியன.[61] ஏனெனில் தஞ்சைப்பெருங்கோயில் கி.பி. 1010ல் நிறைவு பெற்றுள்ளது.[62] அப்போதே திருப்பணி முடிவுற்றுக் கடவுண் மங்கலமும் நடைபெற் றுள்ளது.[63] கடவுள் மங்கல விழாவிற்குப் பின்னரே

''ஸ்ரீபாத புஷ்பங்களாக அட்டித் திருவடி தொழுதிருக்க'' வேண்டும். ஆதலின் இச் சத்யாசிரியப்போர் 1008-09ல் நடைபெற் றுள்ளது என்பது தெளிவுறுகின்றது. ஒரே குதிரையுடன் கையில் வாளேந்தி இராசராசனே போரிட்டு சத்தியாசிரியனை நேரில் புறங் கொண்ட நிகழ்ச்சி இதுகாறும் வெளிவராத புதிய வரலாற்றுண்மை யாக அமைந்துள்ளது.

மூன்றும் போர்

சத்தியாசிரியனைப் புறங்கண்டானாயினும், மேலைச்சளுக்கிய நாட்டினைக் கைப்பற்றவில்லையே, என்ற ஏக்கமும் இராசராசனுக்கு மிகுந்திருக்கின்றது. தனது வாழ்வில் வெற்றி பெற்றும், சாளுக்கிய நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளாததை அவமானமாகவே கருதிய தால்,

"மான்யகேடத்தை நான் பிடிக்காத வரையில்
கிரிஹர விகாரம் செய்வதில்லை" (செய். 51)

எனச் சூளுரை செய்து, சிறப்பு மாளிகையில் தங்காமல் வாழ்ந்த உறுதியினை கரந்தைச் செப்பேடுகள் நன்கு புலனாக்குகின்றன.[64] கருதிய எண்ணம் கைகூடற்கு முன், தனது முதுமையினால் தன் மகனுக்கு ஆட்சி வழங்கியுள்ளான். கி.பி.1012ல் அரசேற்ற இராசேந்திரன் தனது ஆட்சியின்போது கி.பி. 1014 வரை உயிருடன் வாழ்ந்து வந்த தன் தந்தையின் சூளுரையை நிறைவேற்றி வைப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளான். எனவே, கி.பி. 1014க்குள் மீண்டும் மேலைச் சளுக்கியத்தின் மீது படையெடுத்துச் சென்றுள்ளான்.

"மிகுந்த ஆற்றலோடு மான்யகேடத்தைக்
கைப்பற்றித் தன் தந்தையின் சூளுரையினை
நிறைவேற்றி வைப்பதற்கு அப்பட்டணத்தைப்
பிடிப்பதற்கு ஆவல் கொண்டான்" (க. செய். 51)

துணிந்தவாறே கைப்பற்றி, அந்நகரை எரிகொளுவி அழித்துள்ளான்".[65] இதனை,

"அந்தப்பட்டணம் எவனுடைய (இராசேந்திரனின்) சேனைகளால் எறியப்பட்ட தீயில் பல்லாயிரக்கணக்கான ஜ்வாலைகளால் கொளுத்தப்படும் போது, கிளர்ந்தெழுகின்ற இந்திர நீலக்கல் போன்ற ஒளியையுடைய புகை மண்டலங்களால் மறைக்கப்பட்ட மேல்மாடங்களில் இங்குமங்கும் அடிக்கடி ஓடிக்கொண்டிருக்கிற அழகிகள், மேகக் கூட்டத்தின் நடுவில் மின்னல்கள்போல் பிரகாசித்தனர்" (செய். 53)

என்பது போன்ற அழகிய ஏழுசெய்யுட்களில் கரந்தைச் செப்பேடுகள் விளங்கக் குறிப்பிட்டுள்ளன.[66] இதனால் இராசராசன் செய்த சூளுரை நிறைவேற இராசேந்திரன் சாளுக்கியத் தலைநகரான மான்யகேடத்தை அழித்த வெற்றிச்செயலை அறியமுடிகின்றது. மற்றும்,

"மக்களின் கண்களையும் மனத்தையும் கவர்ந்த போரில் அழிக்கும் விளையாட்டைச் செய்து கொண்டு விளங்குகின்ற அவ்வீரன் (இராசேந்திரன்) தனது புயங்களால் தன் தந்தையான இராசராசனை நிறைவேற்றப்பட்ட சூளுரையை உடையவராகச் செய்தான்" (செய். 57)

என்னும் செய்யுள் தரும் செய்தியினால் தந்தையின் சூளுரையினை மகன் இராசேந்திரன் நிறைவேற்றியிருப்பது தெளிவாகும்.[67] தன் மகன் இராசேந்திரனால் நிறைவேற்றப்பட்ட சூளுரை உடையவனாகவே இராசராசன் கி.பி. 1014ல் இறந்திருக்கின்றான்.

இராசராசனது 29ஆம் ஆட்சியாண்டுத் திருவிசலூர்க் கல்வெட்டு, இவன்தன் அரசமாதேவி ஒலோகமாதேவியுடன் இரணிய கருப்பம் புகுந்ததனைச் செப்புகின்றது.[68]

''மான்ய கேடத்தைப் பிடிக்காதவரை கிரிஹர
விகாரம் செய்வதில்லை''

என்ற தன் சூளுரை, தன் மகனால் நிறைவேற்றப்பட்ட மேன்மையின் பின்பே இவன் இரணியகருப்பம் புகுந்து மகிழ்ந்துளானெனவுங் கொள்ளலாம். ஆதலின், இம்மூன்றாம் போர் கி.பி. 1014க்கு முன் இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் கி. பி. 1012-1013க்குள் குறிப்பாக 1013இல் நிகழ்த்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டினைச் சார்ந்த (கி.பி. 1014) ''உதாத்தூர்க் கல்வெட்டு'' இக்கருத்தினை உறுதி செய்கிறது. இராசேந்திரனது ஆணை வழி மேலைச்சளுக்கிய அர்சனது யானையைக் கொல்ல முயன்ற ''இராசமல்ல முத்தரையன்'' என்பான் இறந்துபட்டதை இக்கல்வெட்டு குறிக்கின்றது.[69]

இதுகாறும் தெளிவற்ற நிலையில் இருந்த மேலைச்சளுக்கியப் போர் குறித்த செய்திகள் கரந்தைச் செப்பேடுகளால் மேற்கண்டவாறு உறுதி செய்யப்படுகின்றன.

73. பரகேசரி இராசேந்திர சோழன் (அல்லது) கங்கை கொண்ட சோழன் (அல்லது) மதுராந்தகன்

இராசராசனின் ஒப்புயர்வற்ற மகன். இவனது ஆட்சியே சோணாட்டின் பேராட்சியாகும். கடல்கடந்தும் தமிழாட்சியைப் பரப்பியவன்.[70]

வடக்கே கங்கை வரையிலும் வெற்றிகண்ட பின்னர், கடல் கடந்து, ஜாவா, சுமத்ரா, கடாரம், ஸ்ரீவிஜயம், இலங்கை போன்ற தேயங்களிலும் தன்னாட்சியைப் பரப்பிய பெருவீரனாகிய இவ்வரசனைப் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகள் கரந்தைச் செப்பேடுகளினால் அமைகின்றது.

இவனது வடபுலப்படையெடுப்பு ஒரு புனிதயாத்திரை போன்றதே என்பர் சாத்திரியார்.[71] ஆனால் இக்கருத்தினை, திரு. ச. திருஞானசம்பந்தம் அவர்கள் தம்முடைய ''சோழர் வரலாற்றில் சில சிக்கல்கள்'' எனுங் கட்டுரையில் மறுத்து அப்படையெழுச்சி, பலநாடுகளை, வங்காளத்து மகிபாலனுள்ளிட்ட பலரை வென்று திரும்பிய வெற்றி நிகழ்ச்சியேயாம் என வரைவர்.[72]

''அருமைத்தாகிய வலியுடைய இவனது ஆற்றலை நட்பாகப் பெறவேண்டி காம்போஜ தேசத்தரசன் சிறந்த வெற்றித்தேரை இவனுக்குப் பரிசிலாக அளித்தான்'', எனுங் கருத்தினை[73] திரு. லட்சுமிநாராயணராவ் அவர்கள் வங்காளத்து அரசன் இவ்வாறு தேரளித்தான் போலுமென்பர்.[74] காம்போஜம் மலாய் தேசப் பகுதியே எனவும் அக்காம்போஜ அரசனே இராசேந்திரனின் கடற்படை வலிமையைக் கண்டு நட்பு வேண்டியுள்ளான் எனவும் திரு. நீலகண்ட சாத்திரியார் குறிப்பர்.[75]

இதனையே ''அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்தி'' என்கிறது மெய்க்கீர்த்தி.[76] தமது ''கிழக்கத்திய கடல் வலிமை'' எனும் நூலில் ''எல்ரிட்சு'' என்பார், தூரக்கிழக்கு நாடுகளுடனும் தொடர்பு கொண்ட பெருங்கடற்படை, வலிமையுள்ளநாட்டுச் சோழர் களுக்கிருந்ததைக் குறிப்பர்.[77] கி.பி. 1033ல் சோழனால் சைனாவிற்கு அனுப்பப்பட்டது பற்றிய ''சுங்கிங்'' என்பாரின் குறிப்பினையும் இந்நூல் குறிக்கும்.[78]

> ''வித்தையாகிய அன்னப்பேட்டிற்கு விளையாடும் ஏரிபோன்ற வனும், தருக்க இலக்குமிக்கு பரந்த விளையாட்டிடமான வனும், தைரியம், நுட்பமான மதி, அன்பு, செல்வம், இரக்கம் இவைகட்குப் பிறப்பிடமானவனும் புலவர்களுடைய குழாங் களில் பண்டிதர்களை அளந்துகாட்டும் உரைகல்லால் இருப் பவனும், இம்மைக்கும் மறுமைக்கும் ஆன வேதமார்க்கமாகிற குகையின் தத்துவத்தைக் காட்டும் ஞானவிளக்காய் இருப் பவனும், வணங்கிய அரசர்களுடைய கிரீடங்களால் பளபள வென மின்னுகிற பாதபீடத்தை உடையவனுமான'' (செய். 72)

என இராசேந்திரனின் கல்வி, ஞானம், வீரம், பண்பு, ஆகியன இச் செப்பேட்டுச் செய்யுளால் நன்கு புலப்படுகின்றன.[79]

இதனால் முதல் இராசேந்திரன் சோழர் வரலாற்றைப் பீடுபெற வைத்தவன் என்பதில் ஐயமில்லை. இவனது 8ஆவது ஆட்சியாண்டில் எழுந்த இக்கரந்தைச் செப்பேடுகளின் துணைகொண்டு இயலும் வகையில் சோழர் மரபில் குறிப்பிடத்தக்க செய்திகளை ஒப்பியல் நோக்கில் ஆய்ந்ததில், முதற் பராந்தகன் வென்ற பல்லவ அரசன் பற்றிய குறிப்பும், சுந்தரசோழன் செய்த சேவூர்ப் போர் பற்றிய விளக்கமும், ஆதித்த கரிகாலனைப் பற்றிய புதிய சில செய்திகளும், முதல் இராசராசன் காலத்தில் கடந்த மேலைச்சளுக்கியப் போர் பற்றிய புதிய விளக்கமும், புலப்படுத்தப்படுகின்றன.

மேற்கோள் நூல்கள்

1. பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப 17.
2. ,, ,, ப. 15.
3. சி.கோவிந்தராசனார், தமிழக வரலாற்றுச் செய்திகள், "விசயாலயன் எடுத்த துர்கைக்கோயில்", ப. 5.
4 வி.சோழ. உலா, கண். 15.
5. S.I.I. Vol. III, No.206.
6. Ep. Ind. XVIII, No.2.
7. பி. சோ. வர. ப. 26.
8. South Indian Inscriptions, Vol. II, No. 69.
9. ,, Vol. II, No. 76.
10. Journal of Archaeological Society, Vol. III. No.34, verses-55.
11. S. I.I. Vol . III, No. 89.
12. "செந்தமிழ்" தொகுதி 16. ப. 394.
13 திருவேங்கடத்தந்தாதி பாடல் 65.
14. கரந்தைச் செப்பேட்டுச் செய்யுள் 16.
15. S.I.I. Vol.V.No.595.
16. ,, Vol.III No,142.
17. க.செ.செய். 18
18. ,, செய். 18,19,20,21.
19. Travangore Archaeological Series, Vol III, No.34.
20. S.I.I. Vol. II, No.99.
21. Colas, p.124.
22. க.பரணி, 8:23.
23 க செ.செய், 17.
24. Archaeological Report of Indian Epigraphy for 1949-50,p.3.
25. பி.சோ.வர. ப. 60.

26. Ep.Ind. Vol.VI, p.51.
27. Colas, p.134.
28. Ep. Ind. Vol.VI, p.51.
29. தி.செ.செய். 54.
30. Ep. Ind. Vol. XXII, No.34.
31. Ins. 540 of 1920.
32. Colas, p.152, Ins. 200 of 1904.
33. A.R.E. 1921 II 61.
34. S.I.I. Vol. III, No.15,16,17.
35. Ep. Ind. Vol. XV.No.5, V.26.
36. க.செ.செய். 24,25.
37. Ep. Zeylanica, Vol. I p.30.
38. Colas, p 157.
39. S.I.I. Vol. II.
40. தி.செ.செய். 67,68.
41. S.I.I.Vol. III No.115, Colas, p.147.
42. ,,
43. Ep.Ind Vol. XXI, p.165.
44. Colas, pp.146-147, 157-159.
45. S.I I. Vol. XIII, 72, 74, 144, 170, 332 Vol.III No. 146-147.
46. ,,
47. பி.சோ.வர. ப. 67.
48. Colas, p.147.
49. S.I.I.Vol. III, No.146.
50. தி.செ.செய். 69.
51. S.I.I.Vol. III, No.205, p.420.
52. ,, செய். 61 ப. 420.
53. Colas, p.175.

54. Ep. Ind. Vol. XVI, pp. 73-74.
55. 'A History of Carnataka' Desai, P.B.P.158.
56. Ep. Car. Vol. Sr. 125.
57. பி.சோ.வர.ப.109.
58. க.செ.செய். 27,28,29.
59. ,, 30,31.
60. ,, 32.
61. S I.I. Vol.II, No.II.
62. பி சோ.வர.ப. 125.
63. ,,
64. க.செ.செய். 51.
65. ,, 65.
66. ,, 53.
67. ,, 57.
68. S I.I.Vol. VIII, No.237.
69. Kanarese Dynasties, Dr. Fleet, p.433.
70. Manual of Pudukkottai State, Vol.II, Part I.
71. Colas.
72. Thirugnana Sambandam S.-,Some problems of Chola History, All India Oriental Conference 18th Session, 1955, p. 300.
73. க. செ. செய். 48.
74. Lakshminarayana Rao, Some new facts about Chola History, J.O. R. M. Vol. 19, p. 148.
75. Colas P. Indian Art and letters, Vol. IX, p. 14.
76. ,,
77. The Eastern Sea Power - Elridge F, B., Ch. III. p. 31.
78. ,,
79. க. செ. செய். 72.

12

பிற்காலச் சோழ மன்னர் மரபு (இராசேந்திரன் I வரை)

கி. பி. 9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டுவரை மூன்று நூற்றாண்டுகள் தமிழகத்தின் தனிப்பெரும் ஆட்சியாக விளங்கியது சோழராட்சியாகும். இக் காலத்தில் வெளியான பொறிப்புக்கள், இலக்கியங்கள் ஆகிய சான்றுகளில் இச் சோழ மன்னர்களின் மரபு குறிக்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க 'சோழர் வரலாறு' பற்றி ஆயத் தனித்த சான்றாக விளங்கும் இத்தகைய சான்றுகளில் கரந்தைச் செப்பேடுகளும் இடம் பெறுகின்றன. இச் செப்பேட்டுத் தொகுதி குறிப்பிடும் "சோழ மன்னர் மரபினை" ஏனைய சோழர் காலத்திய செப்பேடுகளோடும் பின்னர் இலக்கியங்களோடும் ஒப்பிட்டு இவண் விளக்கங் காணலாகும். செப்பேடுகள் எவ்வாறு வரலாற்றுச் சான்றுகளாக மதிக்கப்படுகின்றனவோ, அதனை ஒத்தே இலக்கியங்களும் வரலாற்றுக் குறிப்புக்களாகவே காணப்படுதலையும் இந்நோக்கில் அறியமுடிகின்றது. திருமால் முதலாக முதல் இராசேந்திர சோழன் முடிய இவ் ஆய்வு நிகழ்கின்றது.

செப்பேடுகளில் காணப்படும் மரபுப் புகழ்ச்சி அனைத்தும் வடமொழியின் கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழிலக்கியங்களோ இச் சோழ மரபுப் புகழ்ச்சியினைச் செந்தமிழ்ச் செய்யுட்களால் குறிப்பிடுகின்றன. செப்பேடுகளின் வடமொழிக் குறிப்பும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளது. செப்பு ஏடு - பனை ஏடு, கிரந்தம் - தமிழ் எனும் வேறுபாடுகளைத் தவிர நுதலும் செய்திகளிலேயோ, செய்யுள் வடிவிலேயோ இச்செப்பேடுகளும் இலக்கியங்களும் ஒரே அமைப்பினையே பெற்றுள்ளன.

கவிஞரின் கற்பனைத்திறத்தினையும் அறிவாற்றலையும் வெளிப்படுத்தத் தக்க அழகிய செய்யுள் வடிவ இம்மன்னர் மரபுப் புகழ்ச்சியுரைகள் காப்புக் கடவுளாகிய திருமாலையே சோழர்குல முதல்வ

னாகக் குறிப்பிடுகின்றன. திருமால் முதலாகத் தொடங்கும் இச்சோழர் மரபினை நான்கு பகுதிகளாகப் பார்க்கலாம். அவை :-

1. புராண காலச் சோழர்குடி
2. சங்க காலச் சோழர்குடி
3. இடைக்காலச் சோழர்குடி
4. பிற்காலச் சோழர்குடி.

என்பனவாம்.

இவற்றுள் தெளிவான வரலாற்றுக்குரித்தாக பிற்காலச்சோழர் பற்றிய குறிப்புக்களே முறையாகவுள்ளன. ஏனைய புராண, சங்க, இடைக்காலச் சோழர்கள் ஒவ்வொரு செப்பேட்டிலும், இலக்கியத்திலும் வேறு பட்ட எண்ணிக்கையில் குறிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் குறிப்பிடப்பட்டசோழர்களைப்பற்றிய செய்திகள் பெரும்பாலும் ஒற்றுமையுடையனவே. இம் முக்காலச் சோழருள் இன்றியமையாதவர்கள் மட்டும் எல்லாச் சான்றுகளிலும் ஒத்த அமைப்பில் புகலப்படுகின்றனர்.

கரந்தைச் செப்பேடுகளின் மன்னர் மரபுரை சூரியன், மனு, இட்சுவாகு, மாந்தாதா, முசுகுந்தன், சிபி, சோழன், இராசகேசரி, பரகேசரி, சுரகுரு எனும் புராண காலச்சோழரையும், விஜயாலயன், ஆதித்தன்-1, பராந்தகன்-1, அரிஞ்சயன், சுந்தரசோழன், இராசராசன்-1, இராசேந்திரன்-1 எனப் பிற்காலச் சோழரையும் குறிக்கின்றது. இம்மரபுக்குறிப்பு சூரியன் முதலாக முதல் இராசேந்திரன் முடிய 20 சோழ குலத்தோன்றல்களை விளக்குவதாக அமைந்துள்ளது.[1]

ஆனால், இக்கரந்தைச் செப்பேடுகள் வெளியிடப் படுவதற்கு ஓராண்டிற்கு முன்பாக இராசேந்திர சோழனால் வெளியிடப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகளோ சூரியன் முதலாக, முதல்இராசேந்திரன் வரை 52 சோழகுலத்தோன்றல்களைக் குறிப்பிடுகின்றன.[2] முதல்இராசேந்திரன் காலத்திலேயே அடுத்தடுத்து அவரால் வெளியிடப்பட்ட இச்செப்பேடுகளுள்ளும் இத்தகு வேறுபட்ட எண்ணிக்கை அரச மரபில் இடம் பெற்றதேன்? இரு செப்பேடுகளின்மரபுரைகளையும் இருவேறு கவிஞர் எழுதினாரில்லை. சங்கராரியரின் மகனாகிய நாராணயன் எனும் கவிஞரே இவற்றை இயற்றியுள்ளார்.[3] எனவே, ‘அறியார் போன்ம்’ எனும் அமைதிக்கு இடமில்லை.

‘அவரவர் எண்ணத்திற்கும் கற்பனைக் கேற்பவும் இம்மரபுரைகள் தோற்றம் பெற்றன’ என்பாரின் கூற்றும் பொருந்துவதாயில்லை. ஆதலின் புதிய விளக்கம் வேண்டப்படுகின்றது.

திருவாலங்காட்டுச் செப்பேடுகள் 'தேவதானம்' பற்றியது. கரந்தைச் செப்பேடுகளோ 'பிரமதேயம்' பற்றியனவாகும். 'தேவதான' விளக்கம் சுருக்கமாக ஆணையினையும், இறையிலியினையும் புலப் படுத்துவதாதலின் 'அரசமரபுப்புகழ்ச்சி' கூறுவதற்குத் திருவாலங் காட்டுச் செப்பேடுகளில் வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே 10 செப்பேடுகள் அரசமரபினையும் 21 ஏடுகள் தேவதானம் பற்றியும் விளக்குகின்றன. கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியில் பாதியளவு இருப்பினும் 794 வரிகளையே உடையன.

கரந்தைச் செப்பேடுகள் 1080 அந்தணர்க்குத் தானம் அளிப்ப தோடு, கோயில்கள், கல்வித்துறைகள் முதலியவைகட்கும் அரசன் அளித்த இறையிலிப் பங்குகளையும் விளக்குகின்றன. 51 ஊர்க ளோடு சில புறப்பகுதிகளையும் உள்ளடக்கிய பெரும் ''சதுர்வேதி மங்கலம்'' தானமாக்கப்படுகின்றது. இச்சதுர்வேதி மங்கலத்தின் எல்லை விளக்கப்பகுதியே 20 ஏடுகளாற் குறிக்கப்படுகின்றது. அந்தணர் பெறும் உரிமையும், தானத்தை உறுதி செய்த அதிகாரிகளின் பெயர்க் குறிப் பும் 2 ஏடுகளைப் பெறுகின்றன. தானம் பெற்ற 1080 பிராமணர் களின் பெயர்களைக் குறிக்கும் மூன்றாம் பகுதி ஒன்றே 30 ஏடு களைக் கொண்டு 31 ஏடுகளையே தொகுதியாகக் கொண்டு இலங்கும் திருவாலங்காட்டுச் செப்பேட்டினை ஒத்திருக்கின்றது. அதற்கு மேலும் இச்சதுர்வேதி மங்கலத்துள் அடங்கிய கோயில்கட்கும் சமுதாயத் தொழிலாளர்க்கும், கல்விக்கும் அளிக்கப்பட்ட இறையிலிப் பங்குகள் 2 ஏடுகளைப் பெறுகின்றன. 54 ஏடுகளளவிற்குப் பரந்துபட்ட செய்தி யினை உடையதாயிருப்பதால் கரந்தைச் செப்பேடுகளில் ''மன்னர் மரபுரை'' சுருங்க 78 செய்யுட்களால் 8 ஏடுகள் அளவிலும், செய்தி குறைவாயிருத்தலால் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் 271 வரிகளில் 137 செய்யுட்களால் விளக்கமாக 10 ஏடுகள் அளவிலும் கூறப் படுகின்றன. எனக்கொள்ளலாம். எனவே ''செய்திகட்கேற்பவே'' மன்னர் மரபுரைகள் சுருக்கமாகவும், பெருக்கமாகவும் கூறப்பட்டிருக் கலாம் எனத் தோன்றுகின்றது.

பிறிதொரு ஆய்விற்கான ஏதுவொன்று கரந்தைச் செப்பேடு களின் 'மன்னர் மரபில்' காணக்கூடும். பிற்காலச் சோழருள் விட்டுத் தொடர்ந்த அரசனான உத்தம சோழனும் அவனது தந்தை கண்டரா தித்தனும் இம்மரபுரையில் குறிக்கப்படவில்லை. பிற சோழர் செப்பேடுகளையும் இக்குறிப்போடு ஒப்பிடும்போது சில செப்பேடுகள் இவர்களைக் குறித்தும் சில இவர்களை விடுத்தும் மரபு கூறுகின்றன. இம்மாறுபாடு ஏன் நிகழ்ந்துள்ளது? எனும் ஐயம் எழுகின்றது.

புராண, சங்க, இடைக்காலச் சோழர் பற்றிய தெளிவான வரலாற்றறிவு இக்காலத்தார்க்கும் புலனாவதில்லை. ஆதலின் சோழர் காலத்திலும் தாமறிந்த நிலையிலேயே கவிஞர் இம்முக்காலச் சோழரையும் ஒருவருக்கொருவர் சிறிது மாறுபட்டு அவரவர் அறிந்த அளவில், குறித்துள்ளனர். ஆனால் 20ஆம் நூற்றாண்டிலேயே தெளிவாக அறியப்படும் பிற்காலச்சோழர் குலம் சோழர் காலத்தில் மிகத் தெளிவாக அறியப்பட்டிருத்தல் இயல்பு. ஆதலில் ஓரிரு தலைமுறைக்குள்ளான இவ்விருவரையும், இன்றுஞ் சில அரசரையும் அறியாதிருந்தமையின் இவர்கள் குறிப்பிடப்படவில்லை எனும் அமைதி ஏற்புடைத்தன்று.

இராசாதித்தன், ஆதித்த கரிகாலன் ஆகியவர்களும் சில செப்பேடுகளில் இடம்பெறவில்லையாதலின் உத்தம சோழனும் அவன் தந்தை கண்டராதித்தனும் விடுக்கப்பட்டுள்ளதில் உட்கோளேதுமில்லை எனக் கொள்வதற்கும் பின்வருஞ் சான்றுகள் இடமளிப்பனவாயில்லை.

பிற்காலச் சோழர்களின் செப்பேடுகளில் பழமையானது சுந்தர சோழனின் அன்பிற் செப்பேடுகளே. இவை விஜயாலயனையும் ஆதித்தனையும், பராந்தகனையும் குறித்த பிறகு 'ஆனைமேற்துஞ்சிய' இராசாதித்தனையோ, 'மேற்கெழுந்தருளிய' கண்டராதித்தனையோ குறிக்காமல் அரிஞ்சிகனைக் குறித்துப் பின் அவன்மகன் சுந்தர சோழனைக் குறிப்பிடுவதோடு நிறைவுறுகின்றது.[4] இம்மரபுரையில் கண்டராதித்தன் குறிக்கப்படாதது ஏன்? எனும் வினாவிற்கு 'இராசாதித்தனும்' குறிக்கப்படவில்லையாதலின் நேர் வாரிசு முறையில் சுந்தர சோழனும் அவன் தந்தை அரிஞ்சயனும், அவன் தந்தை பராந்தகனும் குறிக்கப்பட்டுள்ளமையே இச்செப்பேடுகளின் நுதல் பொருள் ஆதலின் இவ்விடுப்பு நேர் வாரிசு முறைக் குறிப்பால் விலக்கப்பட்டிருக்கலாம் என விடை காணலாம். இவ்விடைக்கு முரணாகத் தொடர்ந்த சான்றுகள் விளங்கி இக்கருத்தினை மறுக்கின்றன. மேலும் அரியணை ஏற்று ஆட்சி புரிந்த மன்னனாகக் காணப் (கி,பி. 949-56 வரை) படும் கண்டராதித்தனும் இளவரச நிலையிலேயே தன் தந்தை பராந்தகன் 1 உயிருடன் ஆட்சிபுரியும்போதே கி.பி. 949இல் தக்கோலப்போரில் இறந்துபட்ட இராசாதித்தனுக்கும் வேறுபாடுளதாகிறது.[5] உத்தம சோழனின் செப்பேடுகளில் சோழர் மரபுப்பகுதி இல்லை. எனவே அடுத்து இராசராசன் காலத்தில் ஆணையிடப்பட்டு முதல் இராசேந்திரனின் ஆட்சியில் (கி.பி. 1015)

வெளியிடப்பட்ட ஆனைமங்கலச் செப்பேடுகளின் மரபுரை இடம் பெறுகின்றது. விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன், பராந்தகனின் இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சிகன் எனும் மக்கள், அரிஞ் சயனின் மகன் சுந்தரசோழன், சுந்தரசோழனின் மூத்த மகன கரிகாலன் கண்டராதித்தனின் மகன் மதுராந்தகன், சுந்தர சோழனின் இளைய மகன் இராசராசன், இராசேந்திரன் எனத் தொடர்ந்த முறையான சோழர் குடியினை இப்பகுதி குறிக்கின்றது.

இராசராசன் காலத்தில் இராஜாதித்தன், கண்டராதித்தன், உத்தம சோழன் ஆகியவர்களையும் சோழ அரசர் மரபில் வைத்துச் சிறப்பிக்கத்தக்க நிலை அரசியல் சூழலில் அமைந்திருக்கின்றது. ஆயினும் இச்செப்பேடுகள் இராஜாதித்தனை "பராந்தகன் இறந்தபின் இராசாதித்தன் அரசனானான்"[6] எனக்குறிப்பது புனைந்துரையே. ஏனெனில் தக்கோலப்போரில் இரண்டாம் பூதுகன் விடுத்த அம்பால் ஆனை மேற்றுஞ்சியவன் இவன். தக்கோலப்போர் கி. பி. 949ல் நிகழ்ந்திருக்கின்றது. பராந்தகனோ கி. பி. 953வரை ஆட்சி செய்திருக் கின்றான்.[7]

எனவே பராந்தகன் இறந்தபின் இராசாதித்தன் அரசேற்றான் என இச்செப்பேடு குறிப்பிடுவது புனைந்துரையேயாகும். இக்கருத்தினைப்போன்றே உத்தமசோழன் இறந்தபின் இராசராசன் ஆட்சி ஏற்றான் என்பதனை "தேவருலகைக் காப்பாற்ற இவ்வரசன் சென்றபோது இராசராசன் இவ்வுலகைத் தாங்கினான்" (ஆ.செ. 30) எனக்கூறும் கூற்றும் இதனையொத்தேயுள்ளது. மேலும் இம்மரபுப்பகுதி, சிந்தனைக்குரித்தாகும் ஆழ்ந்த பொருள் பொதிந்த சொற்களால், ஆய்விற்குரிய,

1. ஆதிக்க கரிகாலனை
   "பராந்தகன் தேவருலகை ஆளும்போது ஆதித்தன்
   பூவுலகை ஆண்டான்
   வீரபாண்டியனோடு யானையோடு சிங்கம் விளையாடுவது
   போல விளையாடினான்"[8] எனவும் (செ. 27, 28)
2. "இவன் இறந்தபின் கண்டராதித்தரது குமாரன்
   பெருவலிபடைத்த மதுராந்தகன் மகேந்திரனைப்
   போல அரசாண்டான்."[9] என உத்தம சோழனையும் (செ. 2)
3. "தேவருலகைக் காப்பாற்ற அவன் சென்றபோது
   இராசராசன் இவ்வுலகைத் தாங்கினான்"[10] என இராச
   ராசனையும் (செ.30)
   குறிப்பிடுகின்றது.

உத்தம சோழனைப் "பெருவலி படைத்தவன்" என இச்செப் பேடுகள் எந்தப் பொருளில் வழங்கின என்பது சிந்தனைக்குரியது. அவனதாட்சியில் குறிப்பிடத்தக்க எத்தகைய போரும் நடந்ததாக இதுகாறும் சான்றிலது.[11] ஆணை இராசராசன் காலத்ததாயினும் இராசேந்திரனின் ஆட்சியின் முதற்சிலவாண்டுகளில் வெளியிடப் பட்டதாதலின் இத்தொடர் ஆய்வுக்குரியதென்பது இயல்பாகின்றது. இச்செப்பேடுகளின் காலம் கி.பி. 1015 எனக் கொள்ளலாகும். ஏனெனில் இவ்வானை மங்கலச் செப்பேட்டு மரபுரையின் 36, 37-ஆவது செய்யுட்கள் இராசராசன் இறந்தபிறகே இராசேந்திரனால் இச்சாசனம் வெளியிடப்பட்டதென்பதை,

> "தனது பிதாவாகிய சக்கரவர்த்தியாற் கொடுக்கப்பட்டு
> அவன் சொர்க்காரோகணமானபின்
> அச் சிங்காதனமேறிய மதுராந்தகன் எனும்
> பெயருடைய அவனது புத்திரன் இச்சாசனம்
> செய்து கொடுத்தான்" என்கிறது.[12] (செ 36, 37)

"இராசராசன்" கி.பி.1014ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை அடைந்தான் என்பது தேற்றம்" என்பர் பண்டாரத்தார்.[13] அத்தொகு செப்பேட்டு வளையமும் முகப்பில் இராசேந்திரனின் "அனுஷ்டுப்" செய்யுளுடன் விளங்கி இக்கருத்தை அரண் செய்கிறது. ஆணையும் இராசேந்திரனது ஆணையேயாகிறது.

முதல் இராசேந்திரனின் ஆறாவது ஆட்சியாண்டின் நிறைவில் கி.பி.1019ல் வெளியிடப்பட்ட திருவாலங்காட்டுச் செப்பேடுகள், அடுத்து ஆய்வுக்குரிய இலக்காகின்றன.

விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன், இராசாதித்தன், கண்ட ராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்த கரிகாலன், உத்தம சோழன், இராசராசன், இராசேந்திரன் என ஆனை மங்கலச் செப் பேடுகளை ஒத்தே இம்மரபு கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆனைமங்கலச் செப்பேட்டு மரபுரை இயற்றியவர் "கொட்டையூர் வசிஷ்ட கோத்ர நந்த நாராயணன்" ஆவர். திருவாலங்காட்டுச் செப்பேட்டு மரபுரை தந்தவர் சங்கராரியரின் பிள்ளையான நாரயணன் என்பாரேயாவர். இவரே கரந்தைச் செப்பேடுகளின் மரபுரையினையும் படைத்தவராவர் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் புகலும் மரபும் முழுமையாயினும், கண்டராதித்தனையும், சுந்தரசோழனையும், ஆதித்த கரிகாலனையும், உத்தமசோழனையும், முதல்இராசராசனைப் பற்றியும் இதுவும் ஆழ் பொருளுடைய சொற்களால், ஆனைமங்கலச் செப்பேட்டு மரபினை

விடச் சற்று விளக்கமாக, ஆனைமங்கலச் செப்பேட்டு மரபின் கண் எழுந்த ஐயத்திற்கு விடையளிப்பனபோல் கூறப்பட்டுள்ளது.

"அரசர்களால் வணங்கப்பெற்றவன்"[14]

எனக் கண்டராதித்தனும்,

"அரசருள் அரசன்"[15]

என அரிஞ்சயனும், பாராட்டப்பட்டபின்,

"கலியின் வலியைச் சிதைக்கும் மனுவை ஒத்தவன்"

அதாவது "இன்னாமையினை இனிமையால் தீர்க்க முயன்றவன்"[16] என சுந்தரசோழனும்,

"வீரபாண்டியனை வென்றவன். சொர்க்கத்தைக் காணச் சென்றதுபோல் மறைந்தவன்"[17]

என ஆதித்த கரிகாலனும்,

"இராசராசனின் சிற்றப்பன் அருண்மொழிவர்மனுக்குரிய ஆட்சியினை ஆவலுடன் முயன்று அடைந்தவன்; அந்தணர்க்குச் செல்வத்தை வாரி வழங்கிச் சிறந்தவன்; உலகைப் பெற்றவன்"[18]

என உத்தமசோழனும்;

"கலியின் கொடுமைகளை உலகினின்றும் நீக்கியவன்
துலாக்கோல் போன்றவன்"[19]

என இராசராசனும் இச்செப்பேடுகளிற் குறிக்கப்பட்டுள்ளனர்.

இராசேந்திரனின் ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தினைச்சார்ந்த ஆனைமங்கலச் செப்பேடுகள் "பெருவலிபடைத்த மதுராந்தகன்" எனும் உத்தம சோழனைப்பற்றிய குறிப்பினைப்பற்றிய சிந்தனைக்கு மேல், உத்தம சோழனுக்கு முன்னும் பின்னுமாக "கலியின் பெருவலி" "கலியின் கொடுமை" என சுந்தரசோழன் காலத்திலும், இராசராசன் காலத்திலும் இருந்த அரசியல் சூழலைக் குறிப்பால் வெளிப்படுத்துகின்றன இத்திருவாலங்காட்டுச்செப்பேடுகள்.

இனி, முதல்இராசேந்திரனின் 8ஆவது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட கரந்தைச் செப்பேடுகள் உத்தமசோழனை சோழர் மரபிலே

சேர்த்துக் குறிப்பிடாததோடு, அவன் தந்தை கண்டராத்தித்தனையும், கொலைப்பட்ட ஆதித்த கரிகாலனையும் இராஜாதித்தனையும் குறிப்பிடவில்லை.[20]

கி.பி. 1015இலும், கி.பி. 1019இலும், கி.பி. 1020 இலும் ஆக முதல் இராசேந்திரன் ஆட்சியின் முற்பகுதியிலேயே மிகக்குறைந்த ஆண்டு இடைவெளிகளில் வெளியான இப்பெருஞ்செப்பேடுகள் மூன்றும் படிப்படியாக இவ்வாய்விற்குரிய அரசர்பற்றி வேறுபட்டுப் புகல்வது ஆயத்தக்கது.

முன்னிரு செப்பேடுகளிலும் ஆழ்பொருளுடைச் சொற்களால் அவ்வரசர்கள் குறிப்பிடப்படினும் கரந்தைச் செப்பேடுகளில் விடப்பட்டது ஏன்? இதனைத் ''தவறுதல்'' என ஏற்க இயலவில்லை. ஒரே கவிஞராகிய நாராயணன் திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் சோழர் மரபினையும், கரந்தைச் செப்பேட்டுச் சோழர் மரபினையும் வரைந்திருக்க இதனைத் தவறுதல் எனக்கொள்ள முடியாது. அதுவும் ஓராண்டு இடைவெளிக்குள் இத்தகைய மாற்றம் குறிக்கப்பட வேண்டுமாயின் ஏதோ ஓர் இன்றியமையாத செயல் இவ்விடையாண்டில் அஃதாவது இராசேந்திரனின் 8ஆவது ஆட்சியாண்டில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

இராசேந்திரனின் முதல் மகன் இராஜாதிராசனின் கல்வெட்டு ஒன்று ''இராசேந்திர சோழ தேவர்க்கு எட்டாவதில் கலி கடிந்த பட்சத்தில்'' கொங்குநாட்டு உத்தமசோழபுரத்திலுள்ள கரபுரஈசுவரர்க்கு நிவந்தமொன்றை அளித்த குறிப்பினைத் தருகின்றது.[21]

இராசேந்திரனின் 8ஆவது ஆட்சியாண்டு ''கலிகடிந்த'' ஆண்டாக அவனாலும் அவனது மரபுளோராலும் குறிப்பிடப்படுகின்றது. கலி என்பதற்குத் 'துன்பு தரத்தக்க கோளாகிய சனி' எனப்பொருள் காணலாகும். கலி என்பதற்குப் 'பஞ்சம்' என்பதாகப் பொருள் கொள்ள ஏலவில்லை. ஏனெனில் சோழ நாட்டின் சிறந்த, வலிய அரசோச்சிய மூவர் சுந்தர சோழனும், முதல்இராசராசனும், முதல்இராசேந்திரனும் ஆவர் என்பது தெளிவு. அவர்கள் காலத்தே சோழ நாட்டுமக்கள் நீடித்த கடும் தொல்லைக்கு அல்லது வறுமைக்கு ஆளாகியதாகக் கருத இதுகாறும் வரலாற்றில் இடமில்லை. மேலும்

> ''கலியின் வலியைச் சிதைக்கும்'' என சுந்தர சோழனும்,
> ''கலியின் கொடுமைகளை உலகினின்றும் நீக்கியவன்'' என

இராசராசனும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளாற் குறிக்கப்படுதற்கும் ஏதோ ஒரு பொருள் இருத்தல் வேண்டும். உலகினின்றும் கலியின்

கொடுமை நீக்கியவன் என்றால் துன்பங்களை உலகினின்றும் நீக்கியவன் எனப் பொருள்கண்டு அமைதியடைவது தொடர்ந்த 'கலி' கடிதற்குப் பொருத்தமுடைத்தன்று 'உலகு' என்பதனை இவன் "சோழமண்டலம்" என்றே கருத வேண்டியுள்ளது. இராசராசன் காலத்திய கல்வெட்டுக்கள் சோழமண்டலத்தை அளந்து நில அளவைச் செம்மை செய்த அதிகாரியை "உலகளந்தான்" எனக் குறிப்பிடுவதால் இக்கருத்துப் பொருந்துகின்றது.[22]

சுந்தரசோழன், முதல்இராசராசன் ஆகிய அரசர்களது ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த கடுமையான துன்பச்செயல் ஆதித்த கரிகாலனது கொலையேயாகும். இதனை அடுத்து முறைவிட்டுத் தொடர்ந்து அரசு பெற்ற உத்தம சோழனது ஆட்சிக் காலமும் இடம் பெறுகின்றது. அரச குடும்பத்தினை அலைக்கழித்த துன்பச் செயல்-ஆதித்த கரிகாலனின் கொலையைவிடப் பிறிதொன்றில்லை. இக்கொலைக்குரிய வஞ்சகர்களின் ஆதிக்கத்தினையே 'கலி' என இவ்இராசேந்திரன் காலத்திய இச்செப்பேடுகள் குறிக்கின்றனவோ? என்றே பொருள் கொள்ளத் தோன்றுகின்றது.

அதற்குத் தக,

சுந்தர சோழன் உயிருடன் இருக்கும்போதே கி.பி 969ல் ஆதித்த கரிகாலன் கொலைப்பட்டிருக்கின்றான் (பி. சோ. வ. ப.79)[23] கொலைக்குரியவர்களின் ஆற்றலை சிதைத்துக்கொண்டிருந்த சுந்தர சோழனும் பொன்மாளிகையில் உயிர் துறந்தான்.[24] அடுத்து, கலியின் கொடுமைகளை உலகினின்றும் நீக்கியவனான இராசராசனின் இரண்டாவது ஆட்சியாண்டில் உடையார் குடியில் கிடைக்கும் கல்வெட்டு ஒன்று,[25]

1. ஸ்வஸ்திஸ்ரீ. கோராஜகேசரிவர்மற்கு யாண்டு 2ஆவது வடகரை பிரமதேயம் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம் பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான சோமன்...... நம்பி

2. ரவிதாசனான பஞ்சவன் பிரம்மாதிராஜனும் இவன்றம்பி பரமேசுவரனான இருமுடிச்சோழ பிரம்மாதிராஜனும் இவர்களுடப் பிறந்த மலையனூரானும் இவகள் தம்பிமாரும் இவகள் மக்களிதும் இவர் பிரமணிமார் பேராலும் இ .....றமத்தம்.

3. பேரப்பன் மாறிதும் இவகள் மக்களிதும் இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமன் மாரிதும், தாயொடப் பிறந்த மாமன் மாரிதும்

இவகள் கூடப்பிறந்த பெண்களை வேட்டாரினவும், இவகள் மக்களை வேட்டாரினவும் ஆக இவ்வனைவர முறியும் நம் மாரணைக்குரியவாறு கோ

4. ட்டையூர் பிரம்ம ஸ்ரீ ராஜனும் புள்ளமங்கலத்து சந்ரசேகர பட்டனையும் பேர்த்தந்தோம். தாங்களும் இவகள் கண்காணரி யோரும் இவகள் சொன்னவாறு நர்மாரணைக்குரியவாறு குடியோடு குடிப்பேரும் விலைக்கு விற்று தளத்திடுக. இவை குறுகாடி கிழான் எழுத்தென்று இப்பரிசு ரை இ.

5. ஸ்ரீ முகத்தின் மேற்பட்ட மலையனூ ரானான பார்ப்பனச்சேரி ரேவதாச கர்மவித்தனும் இவன் மகனும் இவன்றே பெரிய நங்கைச் சாணியும் இம்மூவரிதுமான நிலம் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்து மீய்ப்படாகை தேவன் மங்கலமான் பட்டில நிலம். ஸ்ரீ வீர நாராயணச் சதுர்வேதி

6. மங்கலத்து சபையார் பக்கல் வெண்ணையூர் நாட்டு வெண்ணை யூருடையான் நக்கன் அரவணையானான பல்லவமுத்தரைய மகன் பரதனான வியாழகஜமல்லப் பல்லவரையனேன் இந்நிலம் பழம்படி இரண்டே முக்காலே ஒரு மாவும் அகமனையாரும் ஆக இந்நிலமும் இம்மனையும் நூற்றொரு பத்தி

7. ருகழஞ்சு பொன்குடுத்து விலைகொண்டிவ்வூர் திருவனந்தே சுவரத்து பட்டாரகர் கோயிலிலே இவ்வாட்டை மேஷ நாயறு நாயற்றுக்கிழமை பெற்ற பூரத்தாடி நான்று சக்ராதித்யவத் ஆழ்வார்கோயில் முன்பு மூவாயிரத்தறு நூற்றுவனான நிலையம் பலத்து தண்ணீரட்டும் பிராம்மணன் ஒருவனுக்கு நிச

8. தம் படி நாழி நெல்லும் ஆட்டை வட்டம் ஒரு காசும் நிசதம் பதினைவர் பிராமணர் உண்பதற்குமாக. பதினாறு இவருளே ஐவர் சிவயோகிகளுண்ணவும் வைத்தேன் அரையன் பரதனான வியாழகஜமல்லப் பல்லவரையனேன் இதர்மம் ரக்ஷிக்கின்ற மஹா சபையார் ஸ்ரீ பாதங்களென் தலைமேலான.

என வஞ்சகத் தோன்றல்களான இக்கொலைக் குற்றவாளிகளின் உடமைகளை எடுத்துக்கொண்டு நாட்டினின்றும் நீக்கியமையினைக் குறிக்கின்றது. இச்செயலுக்கொப்ப ''கலியின் கொடுமைகளை உலகினின்றும் நீக்கியவன்'' எனக் கூறப்பட்டிருப்பது இக்கருத்தினை உறுதி செய்வதாக உள்ளது. உலகினின்றும் அவ்வஞ்சகர்களில் சிலரை நீக்க முடிந்ததே ஒழிய இராசராசனால் அவர்களின் மறைமுகமான

எதிர்ப்பினை அழிக்க முடியாது போயிருக்கலாம். எனவேதான் தொடர்ந்து அரசு பெற்ற முதல்இராசேந்திரன் தனது ஆட்சியின் முதற் பருவத்திலேயே முயன்று அக்கலியினைக் கடிந்திருக்கின்றான்; அதாவது அக்கொலையாளிகளின் மறைமுகமான பெரும் எதிர்ப்பினை முற்றிலுமாக அழித்திருக்கின்றான். அவ்வாறு அவ்வஞ்சகத்தினை முற்றிலுமாக இராசேந்திரன் அழித்த ஆண்டு அவனது 8ஆவது ஆண்டேயாதலின் குறிப்பிடத்தக்க அவ்வாண்டை அவன் தமது "கலிகடிந்த" ஆண்டாகவே குறித்துக் கொண்டுள்ளான். என்றே கருத முடிகின்றது.

முதல்இராசேந்திரனுக்குப் பிறகு அவன் மகன் வீரராசேந்திரனின் சாரலச் செப்பேடுகளும்,[26] கன்னியாகுமரிக் கல்வெட்டும்[27] கண்டராதித்தனையும், உத்தம சோழனையும் விடுத்தே சோழர் மரபு கூறுகின்றன. எத்தகைய ஐயறவுச் சொற்களையும் கொள்ளாது நேரிடைப் பொருளிலேயே அரசர்களையும் புகழ்கின்றன.

இவற்றை ஒருசேர எண்ணுகின்றபோது சுந்தர சோழனின் ஆட்சிக்காலத்தில் உத்தமசோழன், தான் சோழ அரியணை ஏற முயன்றதனையும் உளங்கொளல் வேண்டும். இக்காலத்திலேயே சுந்தர சோழனால் கி. பி. 966ல் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றிருக்கின்றான். ஆதித்த கரிகாலன், தொண்டைமண்டலத்திலும் தனது ஆளுமையோடு இருந்திருக்கின்றான். கி. பி.969ல் அவன் கொலையுண்டபின் மதுராந்தகனே வாரிசாக அமர்ந்து கொண்டதனை நீலகண்ட சாத்திரியார் குறிப்பார்.[28] அரசியலதிகாரிகளிடையே ஆதரவு பெற்று அரியணை பெற முயன்ற இவனது 'வலியினையே' ஆனைமங்கலச் செப்பேடுகள் "பெருவலிபடைத்தவன்" என இவனைப் புகழ்வதாகக் குறிப்பன. உத்தம சோழனைத் 'திருவயிறு வாய்த்த' செம்பியன் மாதேவியின் சீரிய தொண்டுகளாலும், திருப்பணிகளாலும், இவ்வாதரவு இவனுக்குக் கூடுவது இயல்பேயாகும். எனவேதாம் இவனைத் திருவாலங்காட்டுச் செப்பேடுகள்,

"அந்தணர்க்குச் செல்வத்தை வாரிவழங்கிச் சிறந்தவன்" எனக் குறிக்கின்றனபோலும். ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்களோ அந்தணர் குலத்தைச் சார்ந்த, பிரம்மாதிராஜன் எனும் பெரும் அரசியற் பட்டம் பெற்ற சோழ அரசியல் அதிகாரிகள் ஆவர். எனவே இக்கூற்றுக்களிடையே தொடர்பிருப்பது போலப் புலப்படுகின்றது. இதனை ஓர்ந்தே நீலகண்ட சாத்திரியார் தமது 'சோழர்களில்' ஆதித்த கரிகாலனின் கொலையில் உத்தமசோழனுக்கும் பங்கிருத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளார். இக்கருத்திற்குச் சான்றாக

உத்தம சோழனின் 16 ஆண்டு ஆட்சியில் இக்கொலைபற்றிய வழக்கு விசாரணையே இடம் பெறாதிருந்தமையினைச் சுட்டிச் செல்வார்.[29]

ஆனால் பண்டாரத்தார் இக்கருத்தினை மறுக்குமுகத்தான் 'மறைவில் நிகழ்ந்த அக்கொலையில் தொடர்புடையவர் யாவர் என்பதை ஆராய்ந்து பார்த்து அனைவர்க்கும் தண்டனை விதிப்பதற்குள் சில ஆண்டுகள் கழிந்திருத்தல் கூடும். அதற்குள் உத்தமசோழன் ஆட்சி முடிவெய்திருக்கலாம் அதனால் இராசராச சோழன் ஆட்சியில் எஞ்சியோர்க்குத் தண்டனை விதிக்குப்படி நேர்ந்தமை இயல்பேயாகும். ஆதலால் அக்கொலைப்பற்றி உத்தமசோழன் ஒருவருக்கும் தண்டனை விதிக்கவில்லை என்று எத்தகைய ஆதாரமுமின்றி எவ்வாறு கூறமுடியும்?'' (பி.சோ.வ.ப 81) என்பர்.

உடையார் குடிக் கல்வெட்டு இராசராசனின் 2ஆவது ஆட்சியாண்டினதாகும். உத்தமசோழனின் 16 வருட ஆட்சியாண்டுகளோடு இராசராசனின் 2 ஆண்டு ஆட்சியுமாகத் தொடர்ந்து 18 ஆண்டுகள் ஒரு கொலைவழக்கு, அதுவும் அரசன் ஒருவனது கொலை பற்றிய வழக்கு, அதுவும் மகனாகவும், அண்ணனாகவும் முறையுடைய இருபெரும் அரசர்கள் காலத்தில், முடியாட்சியில் நிகழ்ந்தது எனக் கொள்வதைவிட, உத்தமசோழனின் 16 ஆட்சியாண்டுகளில் மறைக்கப்பட்ட, விசாரிக்கப்படாத இக்கொலைக்குற்றத்தை இராசராசன் தாம் ஆட்சிக்குவந்த முதல் வருடத்திலேயே தலைச்செயலாகத் தொடங்கி ஆய்ந்து, கண்டுபிடித்த சிலரையே தண்டித்திருக்கின்றான் எனக் கொள்ளல் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

இராசராசனாலும் கொலைக்குற்றவாளிகளில் சிலரையே கண்டு பிடிக்க முடிந்திருக்கின்றது. எனவே ஏனையோர்க்கு அரசியல் அதிகாரிகளுள்ளேயோ அன்றி அரச குடும்பமபத்தினுள்ளேயோ மறைமுகமாகப் பாதுகாப்பு, மறைவிடம் கிடைத்திருக்கின்றது எனக் கொள்ள முடிகின்றது. கி.பி.984க்குப்பிறகும் இராசராசனின் ஆட்சியில் கி.பி.1001வரை உத்தமசோழனைத் திருவயிறு வாய்த்த செம்பியன் மாதேவி வாழ்ந்துள்ளார்.[31] (பி.சோ.ப 93) ஆதலின் இவர் காலத்திலும் உத்தமசோழன் வாழ்ந்திருந்தானா? என்பது ஐயத்திற்குரியதாகவேயுள்ளது. அப்படி இவன் உயிர் வாழ்ந்திருப்பின் எஞ்சிய குற்றவாளிகட்குப் புகலிடமாக இருந்திருப்பானோ எனும் ஐயமும் அமைகின்றது. இராசராசனால் தண்டிக்கப்பட்டவர்களும் எளிய ஒறுப்புக்கே உள்ளாகியுள்ளனர். அரசனைக்கொன்ற இவர்களை இராசராச

னாலும் மரணதண்டனை போன்ற கொடுந்தண்டனைக்குள்ளாக்க முடியவில்லை. மேலும் அவர்கள்மீது இராசராசனின் நேரடியான ஆணையும் செலுத்தப்படவில்லை. அவனதாணை வழிப்பட்ட கோட்டையூர் பிரம்ம ஸ்ரீராஜனும் புள்ளமங்கலத்து சந்ரசேகரனும் அக்குற்றவாளிகளின் நிலங்களை விலைகொடுத்துப் பறிமுதல் செய்து திருவனந்தேசுவரத்து இறைவர்க்குரிமைப்படுத்துவதாகக் கல்வெட்டுச் சான்று காணப்படுகின்றது.[32] இந்நிலைக்குக் காரணம்,

1. அவர்கள் அந்தணர்களாயும்[33]
2. சோழ அரசியல் அதிகாரிகளாயும்
3. மலையனூர் எனும் ஊரைச்சேர்ந்தவராயும் இருப்பதாலும் (இது செம்பியன் மாதேவியின் ஊர்)
4. சமுதாயத்திலும், அரச குடும்பத்திலும் குறிப்பிடத்தக்க ஆதரவு பெற்றிருந்தமையுமே

எனக்கொள்வதில் தடையேதும் இல்லை.

உள்நாட்டுக்குழப்பங்களை ஏற்படுத்தும் அளவிற்கு வலிவுற்ற இவர்தம் கூலிகுறித்தே இராசராசன் சிலரை மட்டும் எளிய தண்டனைக்குட்படுத்தியிருக்கின்றான் எனக்கொள்வது பேரரசு ஒன்றை ஆட்சிபுரியும் அரசியல் கோட்பாட்டிற்கு ஒத்தே வருகின்றது. அரசியல் அதிகாரிகளே ஒரு அரசனைக் கொலை செய்ததாகவோ, அரச பதவிக்கு முயன்றதாகவோ பிற்காலச்சோழர் வரலாற்றில் எத்தகை நிகழ்வும் கிடையாது. உத்தம சோழன் ஒருவனே பிற்காலச் சோழர் வரலாற்றில் மிக முயன்று அல்லது விட்டுத்தொடர்ந்து அரசாட்சி பெற்ற மன்னவனாக உள்ளான். இவன் அரசபதவிக்கு முயன்றபோதே ஆதித்தகரிகாலனின் கொலை நிகழ்ந்திருக்கின்றது. ஆதித்த கரிகாலனே சுந்தரசோழனின் தேர் வாரிசாக பட்டமும் சூட்டப்பட்டு சோணாட்டின் சில பகுதிகளின் தலைவனாகவும் இருந்திருக்கின்றான். அவன் கொலையுண்டபின் அவனது இடத்தினையே உத்தம சோழன் அடைந்திருக்கின்றான். ஆதித்த கரிகாலனை நீக்கினாலொழிய உத்தம சோழனுக்கு அரசபதவி கிடைத்திருக்காது. ஆதலின் அரசியல் அதிகாரிகளிலேயே சிறுகச் சிறுக பலரைத் தமக்குத் துணையாகக் கொண்டு அவர்களில் சிலரைக்கொண்டே ஆதித்த கரிகாலனின் மறைவுக்கு இவன் வழி கோலியிருக்கலாம் எனுங்கருத்துக்கொள்ள இடமுண்டு.

தனது விருப்பத்திற்கேற்ப 16 ஆண்டு அரசாண்டபின், மக்களின் ஒருமித்த விருப்பத்தால், மக்களால் அரச பதவியினை ஏற்குமாறு

வேண்டப்பட்ட முதல் இராசராசனுக்கு[34] இவன் அரசினை விடுக்க வேண்டிய சூழலமையினும், இராசராசனின் ஆட்சிக்காலத்திலும் உயிரோடும், குறிப்பிடத்தக்க ஆற்றலோடும் வாழ்ந்திருக்கின்றான். எனவே தான் இராசராசன் ஆதித்த கரிகாலக் கொலைக் குற்றவாளிகளை எளிமையாகத் தண்டித்திருக்கின்றான்.

ஆனால் இராசேந்திரன் காலத்தில் இவ்'வன்மை' சிறிது சிறிதாக நெகிழ்த்தப்பட்டிருக்கின்றது. எனவேதான் கி. பி. 1015ல் வெளியான ஆனை மங்கலச் செப்பேடுகளில் உத்தமசோழனும் அவன் தந்தை கண்டராதித்தனும் சோழர் மரபில் இராசேந்திரனுக்கு முன்னோராகவே குறிக்கப்பட்டுள்ளனர். உத்தமசோழனை ''பெருவலி, படைத்தவன்'' என மறைமுகமாகப் பழிசாற்றும் இச்செப்பேட்டுக்காலத்திலும் உத்தம சோழனுக்கான ஆதரவு அரசியலில் அதிகம் இருந்திருக்கின்றது.

அடுத்த 4 ஆண்டுகள் கழித்து கி.பி.1019ல் வெளியான திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் காலத்தில் அவ்வாதரவு பெரும்பாலும் அழிக்கப்பட்டுள்ளது. எனவேதான் நேரடியான முறையில் 'கலி' என்பதாக ஆதித்த கரிகாலக் கொலைக்குரியாரையும், உத்தம சோழனை

> ''இராசராசனின் சிற்றப்பன். அருண்மொழிவர்மனுக்குரிய ஆட்சியினை ஆவலுடன் முயன்று அடைந்தவன். அந்தணர்க்கு செல்வத்தை வழங்கி உலகைப் பெற்றவன்''

என நேரிடையாக உண்மையினைப் புகன்றும் அவனை மரபினுட் படுத்தியும்,

அவனது ஆதரவோடு கொலை நிகழ்த்தியோரைத் தண்டித்த இராசராசனை ''கலியின்[35]கொடுமைகளை உலகினைவிட்டு நீக்கியவன்'' எனவும் அச்செப்பேடு குறிக்கின்றதெனலாம்.

கி.பி. 1020ல் இராசேந்திரன் அக் ''கலியின்'' வலிமையினை முற்றிலுமாகக் கடிந்துவிட்டான். ஆதலின் அக் ''கலிகடிந்த'' ஆண்டில் வெளியிடப்பட்ட கரந்தைச் செப்பேடுகள் ''கலி''யாகக் கருதப்பட்ட உத்தம சோழனையும், அவன் தந்தை கண்டராதித்தனையும் கலியின் கொடுமைக்கிலக்கான ஆதித்த கரிகாலனையும் சோழர்குடியினின்றும் விடுத்து ஏனையோரையே குறித்துச் செல்கின்றதெனலாம்.

இக்கருத்துக்குச் சான்றாக இராசேந்திரனுக்குப் பிற்பட்ட சோழ மன்னர் உத்தமசோழனையும் கண்டராதித்தனையும் தம் மரபினராகவே

யாண்டும் குறிப்பிடவில்லை என்பதனையும் வீரராசேந்திரனின் சாரலச் செப்பேடுகளாலும், கன்யாகுமரிக் கல்வெட்டாலும் அறிய முடிகின்றது.

எனவேதாம் கரந்தைச் செப்பேடுகள் இராசேந்திரனின் தோற்றத்தினைக் குறிப்பிடும்போதுகூட,

''கலியின் வலியைச் சிதைப்பதற்காகத் திருமாலே
உலகில் பிறந்துவிட்டார் என்று எவனைச் சிறப்பித்துச்
சொல்லுவார்களோ அப்படிப்பட்டவனும் மனுக்குலத்திற்கு
ஆணியாய் விளங்குகின்றவனுமான மதுராந்தகன் (இராசேந்திரன்)
என்னும் அரசனைப் புத்திமானான அவ்வரசன் (இராசராசன்)
தோற்றுவித்தான்'' (செ. 39)[35]

எனச் சிறப்பித்துப் புகழ்பாடுகின்றது. கலிகடிந்து அரசாண்ட இவன தாட்சியில் சோணாட்டுச் சிறப்பினை ''கதிரவன்போல் செயல்புரியும் இராசேந்திரன் தன் பெரும் புயத்தினால் பூமியின் பாரத்தைத் தாங்கியபோது இவ்வுலகம் கலி எனும் இராகுவினுடைய முகப்பாழியினின்றும் வெளிப்பட்ட சந்திரமண்டலம் போல விளங்கிற்று'' (செ.45)[36] எனவும் விளக்குகின்றது.

''இராகு எனும் குறைகோளாகிய நச்சரவத்தால் விழுங்கப்பட்டு இருளியமதி, சின்னேரங்கழித்து அவ்வரவம் விழுங்கியதைத் தானே சிறிது சிறிதாக வெளிப்படுத்தும்போது எவ்வாறு முன்னிலும் அதிக ஒள்ளிய ஒளியுடன் வெளிப்பட்டு இருண்மை நீக்கி மகிழ்விக்கின்றதோ அதுபோல் என்பிலதனை வெயில்போலக் காய்பவனாகிய இராசேந்திரனின் ஆட்சியில் சோழமண்டலம் எனும் நிலவு, கலி எனும் குறைகோள்வாய்ப்பட்டு இருளிய தன்மை நீங்கி, சிறிது சிறிதாக மிக்க ஒளியுடன் வெளிப்பட்டு சிறந்தது'' எனும் இச்செய்யுள் மிகத் தெளிவாக மேற்பொருளை எலாம் ஒருங்கே விளக்குகின்றது.

'பங்காளிப்பகை' என்பது நந்நாட்டிற்குப் புதிதல்ல. மிகச் சிறந்த சமயவாதியாயினும், நாட்டாட்சி சிறக்க நாளும் தொண்டுகள் ஆற்றியவனாயினும் அரசு ஏற்பதில் உத்தம சோழன் விருப்பங் காட்டியது மனித இயல்பேயாகும். அவனும் அரச குடும்பத்திலே பிறந்தவன் ஆதலின் இது தவறல்ல. வெளிநாட்டரச வரலாறுகளை

ஒப்பிட்டுப்பார்க்கும்போது இதுபோன்ற நிகழ்ச்சிகள் மிக எளியவை என்பது புலனாகும். இங்கிலாந்து வரலாற்றில் வேலைக்காரர்கள்கூட அரசனைக்கொன்று பதவி பெற்றுயர்ந்துள்ளனர்.[37] எனவே விட்டுத் தொடர்ந்து ஆட்சிபெற்ற உத்தமசோழன் உறவினனேயாயினும் அவனைப் பங்காளியினர் வெறுப்பது இயல்பே. ஆயினும் உத்தம சோழனின் நல்லாட்சியில் 16 ஆண்டுகள் சோணாடு அமைதியாக வாழ்ந்த காலத்து அவன்பெற்ற ஆதரவிற்கு எதிராக அவனை வெளிப்படையாக வெறுப்பது குழப்பத்திற்கு வித்திடுவதாகும். எனவே தான் குறைகோள் எனும் இராகு எனவும் கலி எனவும் உத்தம சோழனை மறைமுகமாகப் பொருளுடைச்சொற்களால் இச்செப்பேடு களாற் குறித்தும், ''கலிகடிந்த ஆண்டில்'' அவனைத் தம்மரபுள்ளே சேர்க்காதே மரபு துணித்தும் சென்றனர் என ஏற்பது பொருத்தமாக உள்ளது.

இனி இப்பொறிப்புக்கள் தரும் சோழர் மரபினை ஒத்தே சில தமிழிலக்கியங்களும் சோழர் மரபினைத் தருகின்றன. செப்பேடுகள் எவ்வாறு சிறப்புக்கருதி புராண, சங்க, இடைக்காலச் சோழரைக் குறிக்கின்றனவோ அதனையொத்தே அதனோடே பிற்காலச் சோழர் மரபிலும் சிறப்பான அரசர்களை மட்டுமே இவ்விலக்கியக் கவிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்கவிஞர்கள் அரசவைக் கவிஞராகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது

செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியும் ஒட்டக்கூத்தரின் மூவருலாவும், சங்கர சோழனுலாவும் இத்தகைய பரபுகளைத் தருகின்றன.

பிற்காலச் சோழர் மரபினராக குலோத்துங்க சோழன் உலா ஒன்றைத்தவிர ஏனையன விஜயாலயன், பராந்தகன், இராசராசன் இராசேந்திரன் எனும் நால்வரையே இராசேந்திரன் முடிய குறிப்பிடு கின்றன. ஆதித்தன் குலோத்துங்க சோழனுலாவில் குறிப்பிடப் பட்டுள்ளான்.

மூன்று உலாக்களைப் பாடிய ஒட்டக்கூத்தரே இரண்டு உலாக்களில் ஆதித்தனைச் சேர்க்காது குலோத்துங்க சோழனுலாவில் மட்டும் பாடியிருப்பது ''அமையச் சிறப்பு'' பற்றியே அமைந்த தெனலாம். எனவே ஏனைய விடுபட்ட அரசரை இப்புலவர் ''அறி யார் போன்ம்'' என்று கூறவியலாது. தௌகத்ய பரம்பரைச் சோழர் காலத்திய இப்புலவரிருவரும் இராசேந்திரன் காலமுதல் விடுபட்ட உத்தமசோழனுள்ளிட்ட அரசரையும் விடுத்தே சென்றுள்ளனர்[38] என்பதும் கருதத்தக்கது.

மேற்கோள் நூல்கள்

1. க. செ. மரபு, பிற்சேர்க்கை
2. தி. செ. மரபு, ,,
3. க. செ. தொகுதி II பகுதி I. செ.76, S.I.I. Vol.III.
4. அ. செ. மரபு. பிற்சேர்க்கை, Ep. Ind. XV. p.46.
5. Ep. Ind. Vol. XXII. No. 34.
6. செந்தமிழ். தொகுதி 26. பகுதி 5. பக். 251.
7. பி. சோ. வர. பக். 56.
8. செந்தமிழ், தொகுதி 26 - பகுதி 5, ப. 251.
9. , ,, ,,
10. ,, ,, ,,
11. பி. சோ. வர. பக். 87-92.
12. செந்தமிழ், தொகுதி 26- பகுதி 5, ப.252.
13. பி. சோ. வர. ப. 122.
14. S.I.I. Vol. III No. 205.
15. Ibid.
16. ,,
17. ,,
18. ,,
19, ,,
20. க. செ.மரபு, பிற்சேர்க்கை.
21. A.R. 61 of 1888.
22. S. I. I. Vol. III. No. 222, 223.
23. பி. சோ. வர. ப. 79.
24. S. I. I. Vol, 205: 65-66, 142.
25. Ep. Ind. Vol. XXI, No. 27.
-6. ,, Vol. XVIII. p. 21-55.

27. Ep. Ind Vol. XXV. No. 25.

28. Colas, p. 147.

29. p. 157.

30. பி. சேர. வர. ப. 81.

31. ,, ,, ப. 93.

32. Ep. Ind. Vol. XXI. No. 27.

33. இராசராசன் கொலைகாரனா? 'புலமை',

34. S. I. I. Vol. III. No. 205.

35. க. செ. தொகுதி. III.

36. ,, ,,

37. British History.

38. க. சொ. ஓராய்வு, பிற்சேர்க்கை, மரபுப்பட்டியல்.

13

முடிவுரை

''திருமகளை உடைய திருமாலின் திருக்கரங்கள் உமக்கு வேண்டிய செல்வங்களை வழங்குவதாக'' எனும் வாழ்த்துடன் தொடங்கும் கரந்தைச்செப்பேடுகள் தமிழக வரலாற்றுள், புது வருகை புரிகின்றது. இதுவே இவ்வாய்வேட்டின் நிறைந்த கொடையாகும்.

ஆய்வுரைகள் வழி கீழ்க்காணும் மெய்ம்மைகள் புலப்படுத்தப் பட்டுள்ளன.

1. 'தமிழ் எழுத்துக்கள்' என்னும் முதற் கட்டுரை பண்டைத் தமிழெழுத்தின் வளர்ச்சி நிலைகளை விளக்குவதுடன், வட்டெழுத்தே தமிழின் தொன்மைக்குரியது என்பதனைச் சான்றுகளுடன் நிறுவ முற்பட்டுள்ளது.

2. பதினோராம் நூற்றாண்டுக்குரிய தமிழெழுத்தின் வடிவங்கள் இச்செப்பேடுகளிலமைந்த எழுத்து வடிவங்களைக் கொண்டு விளக்கப் படங்களுடன் காட்டப்பட்டுள்ளன.

3. புத்தூரில் செப்பேடுகள் புதையுண்ட காரணத்தினை, திரு புவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்தை யொட்டியுள்ள ஊர்களில் கிடைத்துள்ள கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு ஆய்ந்து சோழ நாட்டில், கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பாண்டிய அரசு ஏற்பட்டதன் விளைவாக உண்டான குழப்பமும் சமயப் பூசலும் காரணங்களாகு மென்பது சான்றுகளுடன் புலப்படுத்தப் பெற்றுள்ளது.

4 கரந்தைச் செப்பேடுகள் கிடைத்த பின்னர் தொடர்ந்த நிகழ்ச்சிகளை, அவற்றின் வரலாறாகத் தொகுத்து, அத்தொகுப்பு தமிழ்க் கல்வெட்டு வரலாற்றிற் சேர்க்கத்தகும் புதுச் செய்தியாகக் காட்டப் பட்டுள்ளது.

5. செப்பேடுகளின் வடிவத்துடன், செப்பேட்டுச் சாசன அமைப்பு முறையும் தெளிவு செய்யப்பெற்றுளது. முகப்பிலுள்ள 'அனுட்டுப்' எனும் அரச வாழ்த்து விளக்கப்பட்டுளது.

6. இந்தியத் தொல்பொருள் துறையினரின் அறிக்கைத் கருத்துக்குத் திருத்தமாக 57 ஏடுகளும் ஒரே தொகுதிக்குரியவை எனும் உண்மை அச் சான்றுகளுடன் புலப்படுத்தப்பட்டுள்ளது

7. முகப்பிலச்சினையிலமைந்த புலி வடிவத்துடன் ஏனைய சோழர் காலச் செப்பேடுகளின் முகப்பிலச்சினைகளிலமைந்த புலி வடிவங்களை ஒப்பிட்டாய்ந்த சோழர் கொடியிலும், அரச இலச்சினை யிலும் பொறிக்கப்பட்ட புலி உருவம் ''புள்ளிகளுடன் கூடிய பெருஞ்சிறுத்தைப் புலியே'' என்பதை எடுத்துக்காட்டுவதுடன், அதனை வலியுறுத்தும் சங்க இலக்கியச் சான்றுகளும் தரப்பட்டுள்ளன.

8. சிறுத்தையும், இருகயல் மீன்களும் ஒத்த மதிப்பில் இலச் சினையில் பொறிக்கப்பட்டுள்ள நோக்கினை ஆய்ந்தும், முதல் இராச ராசன் மதிப்பு தனது மெய்க்கீர்த்தியில், பாண்டியரை வென்ற சிறப்பினை மதிப்புடன் அமைத்துக் கூறும் குறிப்பினைச் சுட்டியும் ''சோழ பாண்டியம்'' என்னும் தலைப்பில் சோழனது பெருந்தன்மை விளக்கப்பட்டுள்ளது.

9. சோழன் என்ற இயற்பெயர் கொண்ட அரசன் பெயரே பின்னர் மரபுப் பெயரானதும், இராசகேசரி, பரகேசரி என்ற அரசர் களின் இயற்பெயர்களே, அவர்கட்குப்பின் வந்த அரசர்களுக்கு விருதுப்பெயர்களாக அமைந்ததும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

10. முதுமக்கள் தாழியினை முதல் முதல் அமைத்த சோழன் சுரகுரு, காவிரியைக் குடகு நாட்டினின்றும் சோழ நாட்டிற்குக் கொணர்ந்து வளம்பெருக்கிய கவேரன், புலியுருவைக் கொடியில் இலச்சினையாகப் பொறித்த புலிகேசி, வானவூர்தியை அமைத்த புட்பகேது, வானவூர்தியில் இயங்கியவர்களாகிய உபரி சரவசு, கரிகாலன், இலங்கையுடன் தமிழகத்தை இணைத்திருந்த நிலத் தொடர்பை, வெட்டி நீக்கி, இருகடலையும் இணைத்த சமுத்திரசித்து,

எனச் செயற்கரிய செய்து புகழ் நிறுவிய சோழ மன்னர்களைச் செப்பேட்டின் மெய்க்கீர்த்திப் பகுதியாலும் பிற இலக்கியச் சான்று களாலும் இவ்வாய்வுரை வெளிப்படுத்தியுள்ளது.

வரலாற்றில் கரிகாலனின் தந்தை இளஞ்சேட் சென்னியே என்பதனையும், பல்லவத் தோற்றத்திற்கு முதல்வன் கோக்கிள்ளி என்பதனையும், பிற்காலச் சோழர் முதல்வனாகிய விசயாலயனின் தந்தை சீகந்தனென்றும் குமாரங்குசன் என்பதனையும், தக்க சான்றுகளுடன் இவ்வாய்வு தெளிவாக்கியுள்ளது.

11. பண்டைச் சோழரின் இயற்பெயரை விடுத்து, அவர்தம் சிறப்புப் பெயர்களாலேயே வடமொழியாளர் அவர்களைக் குறிப்பிடும் வழக்கு இருந்ததென்பது சான்றுடன் காட்டப்பட்டுள்ளது.

12. சோழ மரபு பற்றிய இரண்டாம் பகுதியில் விசயாலயனின் தோற்றம், முதல் பராந்தகன் வென்ற பல்லவன், சேவூர்ப் போரின் விளக்கம், ஆதித்த கரிகாலன் 16-ஆண்டுகள் ஆட்சி செய்த அளவில் பிராமண அதிகாரிகளால் கொல்லப்பட்ட நிகழ்ச்சி, ஆகிய வரலாற்றுப் பகுதிகள் மேலும் ஆய்வு செய்யப்பட்டிருப்பதும்,

முதல் இராசராசன் சத்தியாசிரியனுடன் தனித்துப் போரிட்டு வென்ற திறமை, முதல்இராசேந்திரன் மான்ய கேடத்தை அழித்து தந்தையின் சூளுரையினை நிறைவேற்றிய ஆண்மை, ஆகிய புதிய வரலாற்றுச் செய்திகளின் வெளிப்பாடும் இச்செப்பேட்டாய்வின் பயனாகும்.

13. முதல் இராசேந்திரன், தன் தாயின் பெயரால் திருபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலம் அமைத்துப் பிரமதேயமாக வழங்கிய அறவிளக்கம் தரப்பட்டுள்ளது. சைவ சமயத்தவனான இராசேந்திரன் 1080 வைணவ அந்தணர்கட்கு நிலதானம் வழங்கியுள்ள சமயப் பொது நோக்கினைச் சுட்டிக்காட்டும் நல்லசான்றுகளாகும் இச் செப்பேடுகள்.

14. ''பொருட்பாகுபாடு'' எனும் தலைப்பில் செப்பேட்டுச் செய்திகளே ஆய்வுக்குரியதாகக் கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதியில், சோழர் கால அரசியல், சமுதாயம், சமயநிலை, ஆட்சிமுறை, நாட்டு முறைமைகள், பிரமதேயம், கிராமப் பணியாளர்கள் ஆகியவற்றை ஆய்ந்து விளக்குவதுடன்,

முதல் இராசேந்திரன் ஆட்சியில் வாழ்ந்த வைணவ பிராமணர் களின் கோத்திர சூத்திரங்கள் செப்பேடு தரும்-1080 வைணவப் பிராமணர்க்குரிய கோத்திர சூத்திரங்களைக் கொண்டு தொகுத்து ஆய்வுவிளக்கமுடன் தரப்பட்டுள்ளன.

15. இராசேந்திரன் ஆட்சியிலமைந்த பல்வேறுபட்ட அரசிய லதிகாரிகளின் பெயர்களுடன், அவ்வவர்க்குரிய பணி, பணி விளக்கம் ஆகியன தெளிவு செய்யப்பட்டுள்ளன.

16. இராசேந்திரன் சோழ ஊர்களை ஒன்றாக இணைத்துப் பிரமதேயமாக்க இட்ட ஆணை, எம்முறையில் ஆய்வுகளும், தணிக்கைகளும் பெற்றுச் செயல்படுகின்றது என்பதும் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து, எல்லை காணும் முறை, தானம் நிறைவு பெற ஊர்ப் பெருமக்கள் தரும் சான்று, அரசன் ஆணையை அதிகாரிகள் படிப்படியாக நிறைவு செய்யும் ஒழுங்கு, இச்செயலில் ஊர்ச்சபையார் பெறும் முதன்மை, ஆகிய சோழர்கால அரசியல் நடைமுறைகளும் ஆய்வுரைகளுடன் அமைந்துள்ளன.

இவ்வாறமைந்த சோழர்கால வரலாற்றுச் செய்திகட்குத் துணையாகும் சான்றுகள் பின்னிணைப்பாக இடம் பெற்றுள்ளன.

காப்புச் செய்யுட்கள் (அனுஷ்டுப் ஸ்லோகங்கள்)

சுந்தரசோழன் (இராசகேசரி)

"சாஸ்வத் விஸ்வாம்பர நேத்ரம் லக்ஷ்மிஜெய சரோருகம்
சாசனம் சாஸ்வதம் ஸ்ரீமத் ராஜகேசரி வர்மன :"

—அன்பிற் செப்பேட்டு வளைய முகப்பு

"இராசகேசரி வர்மனின் இந்த சாசனம்
அழகிய தாமரையின்கண் அகன்ற திருவிழிகளால் அருட் செய்து அமர்ந்துள்ள
விஜயலட்சுமியின் திருவருளால் நிலைபெற்று விளங்குவதாக".

உத்தமசோழன் (பரகேசரி)

"நியாயானாம் சாசனம் குர்வத்சாசனம் சக்ர பூப்ரிதா
சாசனம் பூபதே ஏதத் பரகேரி வர்மன :"

—சென்னைக் காட்சியக செப்பேடு முகப்பு

"பரகேசரி வர்மனால் செய்யப்பட்ட இச் சாசனம் அவன தாட்சியில்
அவனது ஆணையால் செலுத்தப்பட்ட உண்மையான சாசனமாகும்".

இராசராசன் I (இராசகேசரி)

"ஏதத் விஸ்வ ந்ருபஷ்ரேணி மௌலி மாலோபலாலிதம்
சாசனம் ராஜராஜஸ்ய ராஜகேசரி வர்மன :"

—தஞ்சைக் கல்வெட்டுத் துவக்கம்-ஆனைமங்கலச் செப்பேட்டு வளைய முகப்பு

"அரசர்கட்கெல்லாம் அரசனான ராஜகேசரி வர்மனால் செய்யப்பட்ட இச்சாசனம், பகைவர்களை அழிக்கும் பெருந்திறம் வாய்ந்து, அரசர்களது மணிமுடி வரிசைகளில் செலுத்தப் பட்டது".

இராசேந்திரன் I (பரகேசரி)

"ராஜத் ராஜஸ்ய மகுடஸ்ரேணி ரத்நேஷு சாசனம்
ஏதத் ராஜேந்ர சோளஸ்ய பரகேசரி வர்மன :"

—ஆனைமங்கல, திருவாலங்காடு, கரந்தைச்செப்பேட்டு முகப்புக்கள்

"பரகேசரி வர்மனாகிய இராசேந்திர சோழனின் இச்சாசனம் அரசர்களின் ரத்னங்கள் பதிக்கப்பெற்ற மணிமுடி வரிசையின் மீது செலுத்தப்பெற்றது."

வீரராஜேந்திரன் (இராசகேசரி)

"விஸ்வயிற் வஸிச்யவாம் பராதீஸந் நந்திதயேர் வந்திதம்-இதம் சாசனம் வீரராஜேந்திர ராஜகேசரி வர்மன:"

—சாராலச் செப்பேட்டு வளைய முகப்பு

"பகைவர்களை அழிக்கும் பேராற்றல் வாய்ந்த, வணங்கத்தக்க வீரராஜேந்திர வர்மனால் இச்சாசனம் செய்யப் பெற்றது."

குலோத்துங்கன் I (இராசகேசரி)

"புண்யம் க்சோனீஸ்வர சபா சூடா ரத்னாயாய சாசனம் ஸ்ரீ குலோத்துங்க சோளஸ்ய இராசகேசரி வர்மன:"

—சிறிய இலெய்டன் செப்பேட்டு வளைய முகப்பு

"இராசகேசரி வர்மனாகிய ஸ்ரீ குலோத்துங்க சோழனின் இவ்வறம் நாளோலக்க அரசர்களின் மணிமுடி ரத்னங்களின் மீது செலுத்தப்பெற்றது."

சோழ மன்னர் மரபு — வரிசை முறை

(இராசேந்திரன் I கி.பி.1020) கரந்தைச் செப்பேடுகள்

1. சூரியன்
2. மனு
3. இட்சுவாகு
4. மாந்தாதா
5. முசுகுந்தன்
6. சிபி
7. சோழன்
8. இராசகேசரி
9. பரகேசரி
10. சுரகுரு (அல்லது) மிருத்யுஜித்
11. உபரிசரவசு
12. கரிகாலன்
13. எண்ணற்ற வேந்தர்கள்
14. விசயாலயன்
15. ஆதித்தன்-I

16. பராந்தகன் I
17. அரிஞ்சயன்
18. பராந்தகன் II
19. இராசராசன் I
20. இராசேந்திரன் I

சுந்தரசோழனின் அன்பிற் செப்பேடுகள்

1. விஷ்ணு
2. பிரம்மா
3. மரீசி
4. காசியபன்
5. ஆரியமன்
6. மகாவீரன்
7. ருத்ரசித்
8. சந்ரஜித்
9. உசீநரன்
10. சிபி. (செம்பியன்)
11. சோழன்
12. சென்னி, கிள்ளி முதலியோர்
13. கோச் செங்கண்ணான் (சிவன்கோவில்கள் பல கட்டியவன்)
14. நல்லடிக்கோன்
15. வளவன்
16. ஸ்ரீகந்தன்
17. விசயாலயன்
18. இராசகேசரி (ஆதித்தன்-I) (காவிரிக் கரையில் சிவாலயங்கள் எடுப்பித்தவன்.)
19. வீரசோழன் (பராந்தகன்) (மதுரையை அழித்ததுடன் பல்லரசரை வென்றவன். பழுவேட்டரையர் மகளை மணந்தவன்.)
20. அரிஞ்சிகன் (வைதும்ப அரசன் மகள் கல்யாணியை மணந்தவன்).
21. சுந்தரசோழன் (பாண்டியரை வென்றோன். அழகியோன்.)

பெரிய ஆனைமங்கலச் செப்பேடு

(முதலாம் இராசேந்திரன் கி.பி. 1015)

1. ஆதித்தன்
2. மநு
3. இக்ஷ்வாகு
4. மாந்தாதா
5. முசுகுந்தன்
6. வல்லவன்
7. சிபி
8. சோழன்
9. இராசகேசரி
10. பரகேசரி
11. சுரகுரு (அல்லது) இராசேந்திரன் அல்லது மிருத்யுஜித்
12. வியாக்ரகேது அல்லது புலிகேசி (புலிக்கொடியினை முதன்முதற் கொண்டவன்)
13. கரிகாலன்
14. கோச்செங்கண்ணான்
15. கோக்கிள்ளி
16. விஜயாலயன்
17. ஆதித்தன் I
18. பராந்தகன்-I (தில்லையைப் பொன்வேய்ந்தான், நகர்களை) உருவாக்கினான்.

19. இராசாதித்தன் (கன்னரதேவன் III உடன்பொருது வென்று மார்பில் அம்பு ஏற்று ஆனை மேற்துஞ்சினவன்)

20. கண்டராதித்தன் (காவிரியின் வடகரையில் கண்டராதித்தமங்கலத்தை தோற்றுவித்தவன்)

மதுராந்தகஉத்தம சோழன் (பெருவலி படைத்தவன்)

21. அரிஞ்சயன்

22. இரண்டாம் பராந்தகன் அல்லது சுந்தரசோழன் (சேவூர்ப் போரில், பெருவீரம்விளைத்து வீர பாண்டியச்சுரம் இறக்கினவன். அழகியவடிவத்தன். நன்னீதியன்)

23. ஆதித்தன் II (அல்லது) ஆதித்தகரிகாலன் (அல்லது) பார்த்தி வேந்திரன் (வீரபாண்டியன் தலைகொண்டவன்)

24. இராசராசன் I (பாண்டிய துளுவ கேரள மேலைச்சளுக்கிய அரசரை வென்று இந்திரனைப் போல வாழ்ந்தவன். ராஜாசிரயன் எனும் பெயருடையோன். தன் 21 ஆவது ஆட்சி ஆண்டில் ஆனை மங்கலத்தை நாளக சூடாமணி விகாரத்திற்குப் பள்ளிச் சந்தமாக வழங்கினோன்.)

25 இராசேந்திரன் I அல்லது மதுராந்தகன்

திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

(முதலாம் இராசேந்திரன் - கி.பி. 1019)

1. சூரியன்
2. மனு
3. இட்சுவாகு (தேவர்கட்குத் துணை நின்றவன்)
4. விகுக்சி
5. புரஞ்சயன் அல்லது ககுத்தன்
6. காக்சீவதன்
7. ஆரியமன்
8. அநலப்பிரதாபன்
9. வேனன்
10. பிரீது
11. துந்துமாறன்
12. யுவனாசுவன்
13 மாந்தாதா
14. முசுகுந்தன் [காலயவனன் எனும் அசுரனை அழித்து முகுந்தனை (விஷ்ணுவை) மகிழ்வித்தவன்]
15. வளவன் (வலபிநகரை உருவாக்கியவன்)
16. பிரிதுலாக்ஷன் (திருப்பாற்கடலைக் கடைய மந்தர மலையைக் கொணர்ந்தவன்)

17. பார்த்திவ சூடாமணி
18. தீர்க்கபாகு
19. சந்திரசித்தன் (சந்திரனை அடக்கியவன்)
20. சங்கிருதி (கிரேதாயுகத்தவன்)
21. பஞ்சபன் (மன்மதனை வென்று இந்திரனுடன் அமர்ந்தவன்)
22. சத்தியவிரதன் (அசுவமேதயாகக் குதிரையைக் காத்து, காசியரசனால் வெல்லப்பட்டவன்; ருத்ரனை வென்றதால் ருத்ரகித் எனும் பெயரைப்பெற்றான்.)
23. உசீநரன்
24. சிபி (புறாவுக்கு நிறை புக்கோன்)
25. மருத்தன்
26 துஷ்யந்தன்
27. பரதன் அல்லது துஷ்யாந்தி
28. சோழன் அல்லது சோழவம்மன்
29. ராஜகேசரிவர்மன்
30. பரகேசரிவர்மன்
31. சித்ரரதன்
32. சித்ராசுவன்
33. சித்ரரதன்வன் (பகீரதன் கங்கையை அழைத்து வந்ததைக் கேட்டு இவனும் காவேரி எனும் பெயரில் ஆகாசகங்கையை அழைத்து வந்தவனாவன்.)
34. சுரகுரு அல்லது மிருத்யுசித் (காலனை வென்றவன்)
35. சித்ரார்த்தன் அல்லது வியாக்ரகேது (புலிக்கொடி தந்தவன்)
36. நரேந்திரபதி (இவனுடன் திரேதாயுகம் முடிந்தது)
37. வசு அல்லது உபரிசரன் (இந்திரன் கொடுத்த ரதத்தில் வேகமாகச் செல்பவன்)
38. விஸ்வஜித் (துவாபரயுகக் கடைசி காலத்தவன்)
39. பெருநற்கிள்ளி (விஞ்ஞானக் கலைகளில் தேர்ந்தவன்)
40. கரிகாலன் [காஞ்சி நகரை உருவாக்கி, காவிரிக்குக் கரை கண்டவன், யானைகட்கு (கரி) எமனை (காலனை) ஒத்தவன்]

41. கோச்செங்கண்ணான் (சிலந்தி உருவத்திலிருந்து சிவனருளால் அரச வடிவு பெற்றோன்.)

42. விஜயாலயன் (தஞ்சாவூரைக் கைப்பற்றி அங்கு நிசும்ப சூதனிக்கு கோயில் கட்டியவன்.)

43. ஆதித்தன் I (பல்லவ அபராசிதனை வென்று தொண்டை நாட்டை சோணாட்டிற்குட்படுத்தியவன்.)

44. பராந்கதன் I (பாண்டிய சிங்களரை வென்றவன்; தில்லையம் பலத்தைப் பொன்னால் வேய்ந்தவன்.)

45. இராசாதித்தன் (கிருஷ்ணராஜனை வென்று ஆனைமேற் துஞ்சினோன்)

46. கண்டராதித்தன்

47. அரிஞ்சயன் (அரசருள் அரசன்)

48. பராந்தகன் II (அல்லது) சுந்தரசோழன் (கலியின் வலியைச் சிதைக்கும் மனுவை ஒத்தவன்; எமனை ஒத்தவன்; அழகுமிக்கோன்.)

49. ஆதித்த கரிகாலன் (அல்லது) வீரபாண்டியனை வென்றவன்; மறைந்தவன்.)

50. மதுராந்தகன் (இராசராசனின் சிற்றப்பன். அருண்மொழி வர்மனுக்குரிய ஆட்சியை ஆவலுடன் முயன்று அடைந்தவன். பிராமணர்களுக்கு செல்வத்தை வழங்கிச் சிறந்தவன்.)

51. இராசராசன் I (அல்லது) அருண்மொழிவர்மன்

(கலியின் கொடுமைகளை உலகினின்றும் நீக்கியவன். துலாபாரம் புக்க துலாக்கோல் போன்றோன். அமரபுயங்கனை வென்று, விழிஞத்தைக் கைப்பற்றி, தன் படைத்தலைவனால் ஈழத்தை எரிகொளுவியவன். சத்யாஸ்வரயனைப் புறங்கண்டு யமனை வென்றவன் கேரளத்தை வென்று கங்க, கலிங்க, வங்க, மகத, ஆரட்ட, ஒட்ட, சௌராட்டிர, சளுக்ய அரசர்களை வெற்றிபெற்று சீருற்றவன்.)

52. இராசேந்திரன் I (அல்லது) மதுராந்தகன் (அல்லது) உத்தம சோழன்

(பாண்டியனை வென்றான். தன் மகன் இராஜாதி ராஜனை சோழ பாண்டியனாக்கியவன். கேரளத்தை வென்றான். மே.சளுக்ய ஜெயசிம்மனை வென்றான். தன் படைத்தலைவர்களைக் கொண்டு கங்கைக்கரை அரசர்களை வென்றான். இந்தரதன், ரணசூரன், தர்மபாலன் முதலிய அரசர்களை வென்று கங்கையை அடைந்தனர். மஹிபாலனை வென்று கங்கை நீர் கொணர்ந்த படைத்தலைவர்களை கோதாவரிக் கரையில் இராசேந்திரன் வரவேற்றான். ஒட்டதேசத்தை வென்றபின் கடகத்தைக் கடல் கடந்து வென்றான். சோழ கங்கம் எனும் ஏரியை வெட்டுவித்தான்.)

சாராலச் செப்பேடுகள்

(வீரராஜேந்திரசோழன்)

1. திருமால்
2. விரிஞ்சன்
3. மரீசி
4. காஸ்யபன்
5. விவாஸ்வன்
6. மனு
7. இட்சுவாகு
8. விகுக்சி
9. புரஞ்சயன் }
10. ககுத்தன் }
11. பிரீது
12. யுவனாசுவன்
13. மாந்தாதா
14. முசுகுந்தன்
15. சகரன்

16. பகீரதன்
17. ரிதுபரணன்
18. திலீபன்
19. இராம இலட்சுமண பரத சத்ருக்கன்னன்
20. சோழன்
21. ராஜகேசரி
22. பரகேசரி
23. மிருத்யுஜித்
24. வீரசேனன்
25. சித்ரன்
26. வியாக்ரகேது
27. புட்பகேது
28. கேதுமால்
29. சமுத்ரஜித்
30. பஞ்சபன்
31. மனோரதன்
32. பெருநற்கிள்ளி
33. கரிகாலன்
34. வளவன்
35. வியாழபயங்கரன்
36. விஜயாலயன்
37. ஆதித்யவர்மன் I
38. பராந்தகன் I
39. அரிந்தமன்
40. பராந்தகன் II
41. ராஜராஜன் I
42. மதுராந்தகன் அல்லது இராசேந்திரன் I
43. ராஜாதிராஜன் I
44. ராஜேந்திரதேவன் II
45. வீரராஜேந்திரன்

வீரராசேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டு

1. விசுவாதிநாதர் (திருமால்)
2. பிரம்மா
3. மரீசி
4. காசியபர்
5. விவாசுவன் (சூரியன்)
6. மனு
7. இட்சுவாகு
8. விகுக்சீசரவன்
9. காகுத்தன் அல்லது புரஞ்சயன்
10. பிரீது
11. குவாலாசுவா
12. மாந்தாதி
13. முசுகுந்தன்
14. அரிச்சந்திரன்
15. சகரன்
16. பகீரதன்
17. ரிதுபரணன்
18. திலீபன்
19. இராமன், இலட்சுமணன், பரதன், சத்ருக்கன்னன்
20. சோழன் (முதன்முதலாக ஆரியவர்த்த தேசத்தினின்றும் பிராமணக் குடும்பங்களை அழைத்துக் கொண்டு தென்னாடு போந்து புதிய அரசினைத் தோற்றுவித்தவன்.)
21. இராசகேசரி
22. பரகேசரி
23. மிருத்யுஜித் (காலனை வென்றவன்)
24. வீரசேனன்

25. சித்ரா (தன்புலிக்கொடியால் இந்திரனையும் காத்தவன்)

26. புட்பகேது

27. கேதுமாலன்

28. பஞ்சவன் (ஐந்து யட்ச விருந்தினர்க்கு அமுதமாகத் தன் இரத்தக் குழாயினை அறுத்து இரத்தத்தை வழங்கியவன்.)

29. நிரிமுருதன் (காலனை வென்ற பரமேசுவரனுக்கு உதவியவன்.)

30. மனோரதன் (இளஞ்சேட்சென்னி)

31. கரிகாலன் (காவிரிக்குக் கரை கண்டவன்.)

32. வளவன்

33. சகதேவமல்லன்

34. வியாழபயங்கரன்

35. விஜயாலயன் (பிற்காலச் சோழமுதல்வன்; தஞ்சை கொண்டு தலைநகராக்கியவன்.)

36. ஆதித்தன் I (அல்லது) கோதண்டராமன் (அபராசித பல்லவனை அழித்துத் தொண்டைநாடு பரவினவன்)

37. பராந்தகன் I (பாண்டியனை வென்று, செல்வங்களைக் கைப் பற்றி மதுரையைத் தீக்கிரையாக்கி மதுராந்தகன் எனும் பெயர் பெற்றவன். மேலைச் சளுக்கிய மூன்றாம்கிருஷ்ணனை வென்றதனால் வீரசோழன் எனும் பெயர் பெற்றவன். கடல் கடந்து சிங்களனை வென்று சிங்களாந்தகன் எனும் பெயர் பெற்றான். வீரநாராயணபுரம், வீரநாராயன ஏரி என்பன போலும் ஊர்களையும் ஏரிகளையும் உருப்பெறச் செய்தவன்.)

38 அரிந்தமன்

39. பராந்தகன் II (அல்லது) சுந்தரசோழன்
(சேவூர்ப்போரில் வீரபாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமான்.

40. இராசராசன் I (பல அரசர்களை வென்றவன்; பல யாகங்களைச் செய்தவன்; சத்தியாசிரயனை வென்று எழுந்தருளியவன்.)

41. இராசேந்திரன் I (அல்லது) மதுராந்தகன்

(குந்தளரைவென்று, மான்யகூடத்தைத் தன் படையின் விளையாட்டுத் திடலாக்கி, அடல்புரிந்தவன். இவனது படைத்தலைவர்கள் குலுத, உத்கல மன்னர்களை வென்று, வங்க கலிங்க மன்னர்களை வென்று, மேலும் வென்ற மன்னரின் தலையில் கங்கை நீரைக் கொணர்ந்தனர். இவனது படை கடலைக் கடந்து கடக நாட்டு மன்னனை வென்று அந் நகரைத் தீக்கிரையாக்கியது.)

இராசாதிராசன் I (கல்யாணபுரத்தை அழித்து ஆகவமல்லனை வென்றவன்)

இராசேந்திரன் II

வீரராசேந்திரன் (வீரசோழன், கரிகாலன் எனும் பெயர்களைப்பூண்டு வேங்கி, கலிங்க நாடுகளை வென்றதோடு கடல் சங்கமப் போரில் ஆகவமல்லனை வென்றவன். சிதம்பரம் நடராசரின் திருமுடியில் ''திரைலோக்யா சரயம்'' எனும் உயரிய இரத்தினத்தைப் பொதுக்கியோன்.)

கலிங்கத்துப்பரணி

1. திருமால்
2. பிரமன்
3. மரீசி
4. காசிபன்
5. சூரியன்
6. மனு (பசுங்கன்றிற்காகத் தன்மகனைத் தானே தேர்க்காலிலிட்டவன்) சிலம்பு 20:55, மணி22:210, பழமொ:242, பெ.பு. திருவாரூ 44)
7. இட்சுவாகு
8. சசாதனன் அல்லது விகுட்சி
9. ககுத்தன் அல்லது புரஞ்சயன் (இந்திரனை யானையாக்கி, அதன் மேல் அமர்ந்து அசுரரை வென்றவன். கம்.ராமா.குல.நா.குலோ.உலா.5,6.)

10. மாந்தாதா (புலியும் மானும் ஒருதுறையில் நீருண்ண வைத்தவன்)

11. முசுகுந்தன் (இமையோரைப் புரந்தவன்) சிலம்பு: 7;
கம்ப ராமா. குலமுறை: 6.

12. பிருதுலாட்சன் (வானவர் உண்ண அமுது தந்தவன்) கம்ப ராமா.
குலமுறை: 4

13. சிபி (புறாவின் பொருட்டுத் துலையிற் புக்கவன்)
சிலம்பு 27: 166-168;
கம்ப ராமா. திருவவ. 65.

14. சுராதிராசன் அல்லது சுரகுரு

15. சோழன் (சோழமண்டலத்தை நிறுவியவன்)
க.பரணி: இராச. பார. 14.

16. இராசகேசரி

17. பரகேசரி

18. கிள்ளிவளவன் (காலனுக்கு வழக்குரைத்து வென்றவன்)
குலோ. உலா. 11-12; வி.உலா 13-14.

19 கவேரன் (காவிரிப்புனல் கொணர்ந்தவன்.)
வி.சோ. உலா: 23-24.

20. இராசேந்திரன் அல்லது மிருத்யுஜித் (காலனை வென்றவன்

21. வியாக்ரகேது (அல்லது) சித்திரன் (இந்திரனையே புலியாகக்
கொடியில் பொறித்துக் கொண்டவன்.)

22. சமுத்ரஜித் [மேல்கடலையும் கீழ்க்கடலையும் கலக்க பூசந்தி
(பாக்ஜலசந்தி) வெட்டியவன்.]
க.பரணி. 8:16; வி. சோ. உலா. 17,18: இ. உலா:
27,28.

23. பஞ்சபன் அல்லது திலீபன் (தன் உதிரத்தை ஐந்து இயக்கர்
கட்கு விருந்தாக்கி மகிழ்ந்தவன்.)

24. வளியைவென்றவன் (காற்றை வென்றவன்) க.பரணி 8;16;
புறம்:66.

25. தொடித்தோட்செம்பியன் (தூங்கெயில் எறிந்தவன்)
சிலப்பு 29; அம்மானை 1; புறம்:39; மணி 1:4;பழமொழி 155; சிறு. பா. ஆ. 81,82)

26. உபரிசரன் (விமானத்தில் வானத்தே பறந்தவன்) வி.சோ. உலா.11.

27. பாரதப்போரில் பாண்டவர்க்கு (தருமனுக்கு) உதவிய சோழ அரசன். வி.பாரதம் 17ஆம் போர் 67,68.

28. கிள்ளி வளவன் II அல்லது சூரவர்க்கன் (நாகப்பட்டினத்துச் பிலத்துவாரத்தில் நாகலோகத்தே சென்று நாககன்னிகையை மணந்தவன்.)
பெரும்.பா.ஆற். 30-37 நச்சர் உரை.
வி.சோ.உலா. 19 20; இ.சே.உலா.

29. கோச்செங்கட்சோழன் அல்லது செங்கணான் (கழுமலம்-சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைப் படுத்தி பொய்கையார் எனும் புலவரின் ''களவழி நாற்பது'' எனும் நூலிற்காகச் சேரனின் கால்தளையை விடுவித்து, விடுதலை செய்தவன்.) புறம் 74 அ.குறிப்பு.

30. கரிகாலன் (முதற்குடக்கோ நெடுஞ்சேரலாதனை வென்றவன்; திரிலோசனனை அழித்தவன். காவிரிக்குக் கரைகண்டவன். குருமி எனும் நாட்டை வென்றவன், பதினாறாயிரம் பொன் கொடுத்துப் பட்டினப்பாலை பெற்றவன்.)

31. பகைவர்களை ஒடுக்கிய வெற்றிச்சோழன் அல்லது விஜயாலயன்

32. முதற்பராந்தகன் (ஈழமுந் தமிழ்க் கடலும் வென்றவன்.)

33. இராசராசன் I (சேரநாட்டில் சதயநாள்விழாவைக் கொண்டாடச் செய்தவன். உதகை வென்றவன்.)

34. இராசேந்திரன் I (கங்கையில் தன் யானைகளை நீருண்ணச் செய்தவன். மண்ணையில் கோபத்துடன் உலவியவன்; கடாரங்கொண்டவன்.)

35. இராசாதிராசன் I

36. இராசேந்திரன் II

37. இராசமகேந்திரன்

38. வீரராசேந்திரன்

39. முதற்குலோத்துங்கன்

விக்கிரம சோழன் உலா

1. திருமால்
2. பிரமன்
3. காசிபன்
4. மரீசி
5. சூரியன்
6. மனு
7. மாந்தாதா
8. உபரிசரன் மாகவிமானந்தனிலூர்ந்த மன்னவன்) வி. சோ. உ. 6
9. முசுகுந்தன்
10. கிள்ளிவளவன் (காலனொடு வழக்கிட்டு வென்றவன், வரி 7)

 அல்லது

 செம்பியன்

 அல்லது

11. பெருநற்கிள்ளி
12. தராபதி அல்லது சுரகுரு (முதுமக்கட்சாடி கண்டவன், வரி 8)
13. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
14. சமுத்ரஜித்
15. கிள்ளிவளவன் II (பிலத்திற் சென்று நாககன்னியை மணந்தோன், வரி 10)
16. சிபி. (புறாவுக்கு நிறைபுக்கோன், வரி 11)
17. கவேரன் (குடகுமலையைக் குடைந்து காவிரியைச் சோணாட்டிற் கொணர்ந்தவன், வரி 12)
18. கரிகாலன் (இமயத்தில் புலிபொறித்து, காவிரிக்குக் கரை கண்டவன், வரி 13)
19. கோச்செங்கணான் (பொய்கைப் புலவரின் களவழிகொண்டு சேரன் கணைக்காலிரும்பொறையை விடுதலை செய்தவன்)
20. விஜயாலயன் (96 விழுப்புண் பெற்றவன், வரி 15)

21. முதற்பராந்தகன் (தில்லையம்பலத்தைப் பொன் வேய்ந்தவன்)
22. இராசராசன் I (பதினெட்டுக் குறும்புகளையும், மலைநாட்டையும் கொண்டவன்.)
23. இராசேந்திரன் I (கங்கை, கடாரம் கொண்டோன்)
24. இராசாதிராசன் I (கல்யாணபுரத்தை மும்முறை அழித்தவன், வரி 19)
25. இராசேந்திரன் II
26. இராசமகேந்திரன் (அரங்கநாதர்க்கு வைரங்களாலியன்ற பாம்புப் படுக்கை அளித்தோன், வரி 21)
27. வீரராசேந்திரன் (கூடல் சங்கமத்தில் வென்றவன், வரி 22)
28. அதிராஜேந்திரன் (வரி 23, அங்கவன்பின் காவல் புரிந்து அவனி காத்தவன்)
29. குலோத்துங்கன் I
30. விக்ரமசோழன்

குலோத்துங்க சோழனுலா

1. சூரியன்
2. மனு (வரி 2)
3. ககுத்தன் (இந்திரனை யானையாக ஊர்ந்தவன், வரி 2)
4. முசுகுந்தன் (தேவருலகைக் காத்தவன், வரி 4)
5. திலீபன் (இந்திரனுடன் சரியாசனம் பெற்றவன்)
6. பெருநற்கிள்ளி வளவன் (காலனொடு வழக்குரைத்தோன்)
7. மாந்தாதா (புலியும் மானும் ஒருதுறை நீருண்ணச் செய்தவன்)
8. பகீரதன் (முன்னோர் உயிர்பெற ஆகாச கங்கையை அழைத்து வந்தவன்)
9. தசரதன் (பத்துத்தேர்களை ஒரு தேரால் வென்றவன்)
10. இராமன் (இராவணனின் பத்துத் தலைகளை வெட்டுவோன்)
11. மீளி-கூளி-தலைகொண்டகோன் (பேய்களைக் கொன்றோன், கரிகாலன் அல்ல)
12. சுரகுரு அல்லது நாபகன்- (முதுமக்கட் சாடிகள் பலன்)
13. தூங்கெயில் எறிந்தோன் (இட்சுவாகு, மூவருலா உரை-வரி 13.)

14. சமுத்ரஜித் (மேல்கீழ் கால் கலந்தவன்)
15. கவேரன் (மலையைக் குடைந்து காவிரியைக் கொணர்ந்தவன், வரி 15)
16. பிருது (மலைகளைத் தன் வில்லால் உடைத்தவன்)
17. சிபி
18. கரிகாலன் (காவேரிக்குக் கரைகட்ட வராதோனாகிய முகரி என்பானை அழித்தவன்) ப.18.
19. கிள்ளிவளவன் (நாக கன்னியை மணம் புணர்ந்தோன்)
20. கோச்செங்கணான் (களவழி ஏற்று சேரனை விடுத்தவன், வ.20)
21. விஜயாலயன் (56 விழுப்புண் பெற்றவன்)
22. ஆதித்தன் I (தில்லையைப் பொன் வேய்ந்தவன், 22)
23. பராந்தகன் I (ஈழமும் தமிழ்க்கடலும் கொண்டோன்)
24. இராசராசன் I (உதகை வென்றோன்)
25. இராசேந்திரன் I (கங்கை கடாரம் கொண்டோன்)
26 குலோத்துங்கன் I (சுங்கந்தவிர்த்தோன்)
27. அகளங்கன் (விக்கிரமசோழன்) (ஒட்டக்கூத்தரின் கலிங்கத்துப் பெரும்பரணி எனும் நூலின் பாட்டுடைத்தலைவன். இந்நூல் அழிந்ததுபோலும். வரி 27,28)
28. குலோத்துங்கன் II

இராசராச சோழனுலா

1. திருமால்
2. பிரமன்
3. காசிபன்
4. சூரியன்
5. மனு
6. திலீபன் (அவன் புறவாழி முட்டப் புரந்தோன், வரி 9)

7. அரிச்சந்திரன் (விசுவாமித்திரனிற்குத் தன் செல்வமனைத்தையும் கொடுத்தவன் - வாய்மைக்காக)

8. மாந்தாதா

9. சிபி

10. சகரன்

11. பகீரதன் (ஏழுகடல் தொட்டவன்)

12. ரகு (மரபிற்குத் தன்பெயரை அளித்தோன்)

13. ககுத்தன் (இந்திரனை யானையாக ஏறியவன்)

14. தசரதன்

15. இராமன் (அம்பால் கடலை வென்றவன்)

16. தூங்கெயில் எறிந்தோன் (வரி 13)

17. சம்கர்ஷணன் அல்லது
சமுத்ரஜித் (மேல்கீழ் கடல்களைக் கலக்கச் செய்தவன்)

18. கவேரன் (காவிரிக்காக மலைகளை உடைத்தவன், வரி : 15)

19. கிள்ளி வளவன் II (நாகவல்லியை மணந்தோன், வரி 16)

20. கரிகாலன் (பகை அரசர் மார்பிலும் மேருமலையிலும் புலி பொறித்தவன், வரி 17)

21. கோச்செங்கணான் (பொய்கைக் களவழி கொண்டு வில்லவன் காற்றளையை விட்டவன்)

22. விஜயாலயன் (96 புண்ணுடலான்)

23. பராந்தகன் I (ஈழமெறிந்தோன், வரி 20)

24. இராசராசன் I (உதகை வென்றவன், வரி 21)

25. இராசேந்திரன் I (கங்கை, நர்மதை, கோதாவரி, காவேரி நதி நீரில் தன் மனைவியுடன் நீராடியவன், வரி-22)

26. இராஜாதிராசன் I

27. ராஜேந்திரன் II

அல்லது

விஜயராஜேந்திரன் (கொப்பத்துப் போரில் வெற்றி கண்டவன், வரி 24)

28. வீரராஜேந்திரன் (கூடல் சங்கமத்துப் போரில் வென்றோன்)

29. குலோத்துங்கன் I (சுங்கம் தவிர்த்தான்)

30. அகளங்கன் அல்லது

விக்ரமசோழன் (ஒட்டக்கூத்தனின் கலிங்கப் பெரும்பரணியின் பாட்டுடைத் தலைவன், வரி 27)

31. குலோத்துங்கன் II

32. இராசராசன் II

சங்கர சோழன் உலா

1. திருமால்
2. பிரமன்
3. சூரியன்
4. மனு
5. மாந்தாதா
6. உபரிசரன்
7. புரந்தரன்
8. கிள்ளிவளவன் I
9. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
10. சமுத்ரஜித்
11. கிள்ளிவளவன் II
12. பாடல்வரி ஒன்றுக்கு 11000 பொன் பரிசிலாகக் கொடுத்தோன்
13. பதினாறு கோடிப்பொன்னைப் பாடல்வரி ஒன்றுக்குப் பரிசிலாகக் கொடுத்தோன்
14. சிபி
15. கவேரன்
16. கரிகாலன்
17. கோச்செங்கணான்

18. விஜயாலயன்
19. பராந்தகன் I
20 இராசராசன் I
21. இராசேந்திரன் I
22. இராசாதிராசன் I
23. ராஜேந்திரன் அல்லது II விஜயராஜேந்திரன்
24. இராசமகேந்திரன்
25 வீரராஜேந்திரன்
26. முதற்குலோத்துங்கன் (கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன்)
27. விக்ரமசோழன் (ஒட்டக்கூத்தனின் உலாப் பெற்றவன்)
28. குலோத்துங்கன் II (வல்லைக்கலிமடலை, பிள்ளைத் தமிழ் பெற்றவன்)
29. இராசராசன் II (உலாவின் ஒவ்வொரு வரிக்கும் 1000 பொன் பரிசளித்தவன்)
30. சங்கரராசன்

கையேடு

கலைக்காட்சிக்குழு இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, சென்னை 1968.

தமிழகத்து அளவை முறை -- சா. கணேசன்

பக். 273

1.	முந்திரி	1/320
2.	அரைக்காணி	1/160
3.	அரைக்காணி முந்திரி	3/320
4	காணி	1/80
5.	கால்வீசம்	1/64
6.	அரை மா	1/40
7.	அரைவீசம்	1/32
8.	காணி	3/80

9.	முக்கால்வீசம்	3/64
10.	ஒரு மா	1/20
11.	மாகாணி(வீசம்)	1/16
12.	இருமா	1/10
13.	அரைக்கால்	1/8
14.	மூன்றுமா	3/20
15.	மூன்று வீசம்	3/16
16.	நாலுமா	1/5
17.	கால்	1/4
18.	அரை	1/2
19.	முக்கால்	3/4
20.	ஒன்று	1
21.	இரண்டு	2
22.	மூன்று	3
23.	நான்கு	4
24.	ஐந்து	5
25.	ஆறு	6
26.	ஏழு	7
27.	எட்டு	8
28.	ஒன்பது	9
29.	பத்து	10
30.	இருபது	20
31.	முப்பது	30
32.	நாற்பது	40
33.	ஐம்பது	50

34.	அறுபது	60
35.	எழுபது	70
36.	எண்பது	80
37.	தொண்ணூறு	90
38.	நூறு	100
49.	ஆயிரம்	1,000
40.	பதினாயிரம்	10,000
41.	நூறாயிரம் (இலக்கம்)	1,00,000
42.	பத்து நூறாயிரம்	10,00,000
43.	நூறு நூறாயிரம்	100,00,000

வளைய முகப்பு - சோழர் இலச்சினை





௭௫ உ௰௧ பக்-௬. 41





ஏமு - கூ பக் - க



சண்டேச பதம்-கங்கைகொண்ட சோழபுரம்



கலைமகள் - கங்கைகொண்டபுரம்

பயன்படுத்திய நூல்கள்

1. அபிதான சிந்தாமணி,
   சிங்காரவேலு முதலியார், ஆ., குமாரசாமி நாயுடு சன்ஸ்,
   சென்னை-1934.

2. இறையனாரகப் பொருள்,
   கழகப் பதிப்பு, 1976.

3. கம்ப இராமாயணம் (பாலகாண்டம் இரண்டாம் பகுதி),
   அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1958

4. கல்வெட்டியல்,
   நாகசாமி இரா., காசிநாதன் நடன, முதலியோர்
   தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1972.

5. கல்வெட்டுக்களால் அறியப்பெறும் உண்மைகள்,
   சதாசிவ பண்டாரத்தார், த.வி., 1961.

6. கலிங்கத்துப்பரணி,
   கழக வெளியீடு, 1975

7. கலைக்களஞ்சியம், தொகுதி 11,
   தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1955.

8. சிலப்பதிகாரம்,
   சாமிநாத ஐயர், உ.வே.

9. சிறப்புப் பெயரகராதி,
   இராமசாமிப் புலவர், சு.அ, கழகப் பதிப்பு, 1970.

10. சோழமன்னர் வரலாறு,
    கோவிந்தராசன், சி.,
    செம்பியன் ஆன்சாம்பில் பப்ளிஷர்ஸ், திருச்சி, 1971.

11. சோழவமிச சரித்திரச் சுருக்கம்,
    கோபிநாதராவ், த.அ., 1906.

12. தமிழ்மொழி இலக்கிய வரலாறு,
    இராசமாணிக்கனார், மா., பாரி நிலையம், சென்னை, 1976.

13. தமிழக வரலாற்றுச் செய்திகள்,
கோவிந்தராசன், சி.,
சாந்தி நூலகம், சென்னை, 1962.

14. தமிழர் வீரம்,
சேதுபிள்ளை, ரா.பி., 1947.

15. தமிழ் இந்தியா,
பூரணலிங்கம் பிள்ளை, மு.ச., 1963,
கழகப் பதிப்பு, 1974

16. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள்,
சதாசிவம் செட்டியார்,
கழகப் பதிப்பு, 1974.

17. திருவாய்மொழி

18. திருக்குறள்

19. தென்னிந்திய கோயிற் சாசனங்கள்,
சுப்பிரமணிய அய்யங்கார், கே.வி.

20. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் 3 - பகுதி 2,
(ப.ர்) சந்திரசேகரன், டி., சென்னை, 1957.

21. தென்னிந்திய வரலாறு (முதற் பகுதி),
நீலகண்ட சாத்திரி,
(மொ-ர்) பெருமாள் முதலியார், மு.ரா.,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1973.

22. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம்,
அகத்திணை புறத்திணையியல்கள்,
கழக வெளியீடு, 1966.

23. தொல்காப்பியம் பொருளதிகாரம் இரண்டாம் பாகம்
பேராசிரியம்,
துரைசாமி ஐயர், வே., சோமசுந்தரம்பிள்ளை, ம.நா.,
சென்னை, 1935.

24. நந்திக் கலம்பகம்

25. பத்துப்பாட்டு நச்சர்உரை,
சாமிநாத ஐயர், உ.வே.,
சென்னை, 1934.

26. பல்லவர் வரலாறு,
இராசமாணிக்கனார், மா.,
கழகப் பதிப்பு, 1971.

27. பன்னிரு பாட்டியல்,
கோவிந்தராச முதலியார், கா. ர.,
கழகப் பதிப்பு, இரண்டாம் பதிப்பு, 1975.

28. பாண்டியர் செப்பேடுகள் பத்து,
தமிழ் வரலாற்றுக் கழகம், 1976.

29. பிங்கல நிகண்டு,
கழகப் பதிப்பு, 1968.

30. பிற்காலச் சோழர் வரலாறு பகுதி 1,
சதாசிவ பண்டாரத்தார், த.வி., 1954.

31. புறப்பொருள் வெண்பாமாலை,
சாமிநாத ஐயர், உ.வே., 1934.

32. பெரிய கெட்டி எண்சுவடி,
(வெ.டு) துரைசாமி முதலியார், மு., அண்ட் சன்.,
சென்னை, 1954.

33. மகாவம்சம்

34. மூவருலா,
கழகப் பதிப்பு, 1974.

35. மொழி வரலாறு,
வரதராசனார், மு.வ.,
கழகப் பதிப்பு, 1975.

36. ரிஷிகளும் கோத்திரங்களும்,
ஸிப்கோ பதிப்பகம், சென்னை, 1977.

37. வருண சிந்தாமணி,
கனகசபைப்பிள்ளை, (இரண்டாம் பதிப்பு), சென்னை, 1925.

38. விஷ்ணுபுராணம்,
ஸ்ரீநிவாசராகவாசாரியசர்,
சென்னை, 1921.

மலர்கள்

1. அனைத்திந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்க மலர்

2. செந்தமிழ்

3. தமிழ்ப் பொழில்

4 தமிழ்நாடு மாநில வரலாற்றுக் கருத்தரங்கு மலர்
(தமிழ்நாடு தொல்பொருள் துறை, 1977.)

BIBLIOGRAPHY

1. Barth, A. Tr. Wood — The Religions of India, 3rd Edn. London, 1891.
2. Burnell, A. C. — Elements of South Indian Paleography, 2nd Edn., London 1878.
3. Desai, P. B. — A History of Carnataka, Karnatak University, Dharwar, 1970.
4. Elridge, F. B. — The Background of Eastern Sea Power, Phoemix House, London, 1948.
5. Gopalan, R. — History of the Pallavas of Kanchi, University of Madras, 1928.
6. Hermann Oldenberg. — Tr. The Grigya Sutras-Rules of Vedic Domestic Ceremonies Part II, Oxford, 1892.
7. Hutton, J.H. — Caste in India, 3rd Edn. Oxford University Press 1961.
8. Jouvean - Dubreuil. Tr. Swaminatha Dikshitar, V. S. — Pallava Antiquities, Vol.II, Pondicherry, 1918.
9. Kanagasabai V. — The Tamil Eighteen Hundred Years Ago, Higginbothams, 1904.
10. Max muller. — Ed. Sacred books of the East, Oxford, 1879.
11. Nagasamy. R. — The Tantric Cult in Tamil Nadu. Ph. D. Thesis (Poona University, 1975).
12. Nilakanta Sastri, K.A. — Colas, 2nd Ed. of University 1955 Madras.
13. ,, — Studies in Chola History and Administration, Historical Series No. 7, University of Madras.
14. Pandey, R. B. — Indian Paleography, 1932.
15. Pangitar, F. E. — The Purana Text of the Dynasties of the Kali Age, Oxford, 1913.
16. Robert Sewell. — The Historical inscriptions of Southern India
17. Srinivasa Aiyangar, M. — Tamil Studies, Madras, 1914.

1. A Gazetteer of the Territories under Govt. of the East India Company - Edward Thornton, London, 1858.
2. A Manual of the Pudukkottai State - Ed. Venkatarama Iyer K.R. Vol. II Part I Pudukkottai, 1940.
3. A Statistical Atlas of Madras State, Govt. Press 1965.
4. Annual Report on Indian Epigraphy.
5. Archaeological Survey of India.
6. Censes of India 1971, Series 19 Part XB, Tamil Nadu District Census Hand-Book (Thanjavur District Vol. I), Chockalingam, K., 1972.
7. Epigraphia Indica.
8. Epigraphia Carnataka.
9. Epigraphic Zeylanika.
10. History of Land Revenue settlement and abolition of Intermediatory tenures in Tamil Nadu- Govt. Press, Tamil Nadu, 1977.
11. Indian Antiquary.
12. Indian Art and Lets Vol. IX, Pub. The Indian Society, London, 1935.
13 Indian Historical Quarterly, Vol. XIII, 1937.
14 Journal of Andhra Historical Research Society,
15. Journal of Indian History.
16. Journal of Oriental Research.
17. Journal of the University of Madras.
18. Mythic Society Journal.
19. Proceedings and Transactions of All India Oriental Conference 18th Session 1955-Ramanujachari, R,. Ed, Annamalai University, 1958
20. South Indian Inscriptions-Volumes.
21. Travancore Archaeological Series.